# கொல்லிமலை மக்கள் பாடல்கள்

*தொகுப்பாசிரியர்கள்*

முனைவர் லி. வேதவல்லி
எ.தே. இஸ்ரேல் ஆலிவர் கிங்
ம.சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம்

*பொதுப் பதிப்பாசிரியர்*

முனைவர் கோ. பாலசுப்ரமணியன்
ம.சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம்

*பதிப்பாசிரியர்*

முனைவர் சா. பாலுசாமி
தமிழ்த்துறை, சென்னைக் கிறித்தவக் கல்லூரி
தாம்பரம், சென்னை 600 059

ம.சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை - 600 113

# கொல்லிமலை மக்கள் பாடல்கள்
## (கொல்லிமலைவாழ் மக்களின் நாட்டுப்புறப்பாடல் தொகுப்பு)


| | | |
|---|---|---|
| வெளியீட்டு எண் | : | MSSRF/MG/01/12 |
| முதற் பதிப்பு | : | சனவரி, 2002 |
| உரிமை | : | ம.சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம்<br>தரமணி, சென்னை - 600 113 |
| தலைப்பு | : | கொல்லிமலை மக்கள் பாடல்கள் |
| வெளியீடு | : | ம.சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம்<br>தரமணி, சென்னை - 600 113 |
| தாள் | : | மேப் லித்தோ 80 GSM |
| பக்கங்கள் | : | 416 |
| விலை | : | ரூ.100/- |
| கணினியாக்கம் | : | அடையாறு மாணவர் நகலகம் - தாம்பரம் கிளை<br>35, இராஜாஜி சாலை, மேற்குத் தாம்பரம்<br>சென்னை - 600 045. |
| விற்பனை உரிமை | : | கலைஞன் பதிப்பகம்<br>19, கண்ணதாசன் சாலை<br>தி.நகர், சென்னை - 600 017 |
| முன்னட்டை | : | கருவாழை |
| பின்னட்டை | : | கருநெல் |
| புகைப்படங்கள் | : | எ.தே. இஸ்ரேல் ஆலிவர் கிங் |
| அட்டையாக்கம் | : | கிளாசிக் டிசைன்ஸ் |
| குறிப்பு | : | இந்நூல் வெளியீட்டின் மூலம் கிடைக்கும் நிதியின் ஒரு பகுதி, கொல்லிமலை வாழவந்தி நாட்டில் இயங்கிவரும் வல்வில் ஓரி அரசு பழங்குடியினர் உண்டுறை மேனிலைப் பள்ளியின் நூலக வளர்ச்சிக்கு வழங்கப்பெறும். |

# வாழ்த்துரை

மரபார்ந்த நாட்டுப்புறப் பாடல்கள் மெய்யறிவு, பொருட்செறிவு, இன்னிசை ஆகியன இணைந்தவை. கடந்த காலத்தில் இசையும் பாடலும் பண்பாட்டின் முதுகெலும்பாய் அமைந்தன. தற்போது தொகுக்கப்பட்டுள்ள கொல்லிமலை மக்களின் இப்பாடல்கள், அவர்களுடைய மரபுகளையும், சமூக மதிப்பீடுகளையும் காட்டுகின்றன. இதிலுள்ள வேளாண் பாடல்கள் பயிர் வளர்ப்பு, இயற்கையைப் பாதுகாத்தல் மற்றும் இயற்கை வளங்கள் ஆகியன பற்றிச் செறிவான சிந்தனைகளைத் தருகின்றன.

அறிவு, ஆன்மீகம் மற்றும் பண்பாட்டு வெளிப்பாடுகளான அத்தகைய விலை மதிப்பிட முடியாத மூலாதாரங்கள், துரதிஷ்டவசமாக அழியும் நிலையில் உள்ளன. வாய்மொழி மரபாகவே பல பாடல்கள் தலைமுறைகளாகப் பாதுகாக்கப்பட்டன. பண்டைய பண்பாட்டு மரபுகளுக்கும் புதிய கல்வி முறையால் விளைந்த மனநிலை மற்றும் முறைகளுக்குமிடையே நேர்ந்துள்ள பொருத்தமின்மை காரணமாக நாட்டுப்புற அறிவும் மரபுகளும் "இறக்கும் ஞானமாக" மாறிக் கொண்டிருக்கின்றன. தகவல், அறிவு, ஞானம் ஆகியவற்றின் வளமார்ந்த களஞ்சியங்களான அவை முற்றும் மறைவதற்கு முன்னால் தொகுத்துக் காக்கப்பட வேண்டும்.

இவ்வெளியீட்டிலுள்ள பாடல்களைப் பல்லாண்டுகள் கடுமையாக முயன்று தொகுத்த முனைவர் லி. வேதவல்லி, திரு.எ.தே. இஸ்ரேல் ஆலிவர் கிங் ஆகிய இருவருக்கும் நாம் மிகவும் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளோம். முனைவர் சா.பாலுசாமியின் கட்டுரை, இந்நாட்டுப்புறப் பாடல்கள் தற்காலத்திற்குப் பொருந்தும் பான்மையை வெளிப்படுத்துகிறது. இவற்றைப் படிக்கின்றபோது நமது பண்டைய பண்பாட்டு மரபுகளுக்காகப் பெருமைப்படுகிறோம்.

தங்களின் கடந்தகாலம் பற்றிய பெருமையை இளைய தலைமுறையின் மனங்களில் பதித்து நிகழ்கால மற்றும் கடந்த காலத்தின் சிறந்த தன்மைகளை இணைத்துப் பார்க்கவும், உறுதிபூணவும் இந்நூல் உதவும் என்பது என் நம்பிக்கை.

முனைவர் ம.சா. சுவாமிநாதன்

# அறிமுகவுரை

ம.சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் கொல்லி மலையிலும், கேரளத்திலுள்ள வயநாட்டிலும், ஒரிசாவிலுள்ள ஜெய்ப்பூரிலும் உயிர்ப்பன்ம (Bio-diversity) ஆராய்ச்சித் திட்டங்களைக் கடந்த எட்டு ஆண்டுகளாக நிகழ்த்தி வருகிறது. அவ்வாராய்ச்சித் திட்டங்களை அப்பகுதியில் வாழும் மக்களுடன் இணைந்து நடைமுறைப்படுத்த வேண்டும் என்னும் கொள்கையுடனும் செயல்பட்டு வருகிறது. அம்முயற்சியில் எங்கள் நிறுவனம் பெற்ற அனுபவங்கள் பலவாகும்.

உயிர்ப்பன்மப் பாதுகாப்பில் மக்களையும் இணைக்க வேண்டுமானால் அதற்குச் சில அடித்தளங்கள் தேவைப்படுகின்றன. பொருளாதாரம், சந்தை, தகவல் தொழில்நுட்பம், கல்வி ஆகியன உயிர்ப்பன்மத்தில் மாற்றங்களை ஏற்படுத்தும் என அறிவியலாளர்கள் கருதுகின்றனர்.

உயிர்ப்பன்மம் பாதுகாப்பதற்கு மக்களின் பண்பாட்டு வளங்களும் பாதுகாக்கப்பட வேண்டுமென்பது நாங்கள் கண்டறிந்த உண்மை. அதன் விளைவே இத்தொகுப்பு!

அப்பண்பாட்டு வளங்களின் வெளிப்பாடே நாட்டுப்புறக் கலைகளும் பாடல்களுமாகும். அவற்றை ஆழ்ந்து நோக்கும்போது நாட்டுப்புற மக்களுக்கும் உயிர்ப்பன்மத்திற்கும் இடையேயுள்ள உறவினை நன்கறிய இயலுகிறது.

குறிப்பாக, அருகிவரும் சாமை, தினை, வரகு, பனிவரகு, கேழ்வரகு முதலிய பண்டைய தானியங்களின் இன்றைய நிலையை அறிய முடிகிறது.

வாழ்வோட்ட முறையில் தொகுக்கப்பட்ட இப்பாடல்களை ஆராயும்போது மக்களின் பண்பாடும் இயற்கை வளங்களும் எவ்வாறு இரண்டறக் கலந்துள்ளன என்பதை உணர முடிகிறது.

ம.சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட இத்தொகுப்பு கொல்லிமலையின் இயற்கை வளங்களுக்கும் கொல்லிமலை மக்களின் பண்பாட்டு வளங்களுக்கும் தக்க சான்றாக அமையும் என்பதில் ஐயமில்லை.

முனைவர் கோ. பாலசுப்ரமணியன்

# நன்றியுரை

கொல்லிமலை மக்களின் பாடல்கள் தொகுக்கப்பெற வேண்டும் என்று தூண்டுதலளித்து, அனைத்து வகையிலும் ஆதரவு நல்கிய ஆராய்ச்சி நிறுவனத் தலைவர் முனைவர் ம.சா. சுவாமிநாதன் அவர்களும்,

அடிப்படை உதவிகளை அன்போடு அளித்த செயல் இயக்குநர் முனைவர் பா.செ.கேசவன் அவர்களும்,

கருத்துகள் கூறி ஊக்கமளித்த முனைவர் பெ.தமிழொளி அவர்களும்,

தேவையான அனைத்து உதவிகளையும் மனமுவந்து அளித்த திருமதி.ம.புவனேஷ்வரி, திருமதி.இரா.ரெங்காலட்சுமி, திரு.மு.சி.குபேரராஜ், முனைவர் தே.தனபால், திரு.கோ. அழகுக்கண்ணன், திரு. மு. கணேசன், திருமதி. ல. ஞானப்பழம், செல்வி மு. நவமணி முதலியோரும்,

இந்நூல் வெளிவருவதில் நெஞ்சார்ந்த ஆர்வம் காட்டிய சென்னைக் கிறித்தவக் கல்லூரி, தாவரவியல் துறைத் தலைவர் முனைவர் ப. தயானந்தன் மற்றும் அத்துறைப் பேராசிரியர் முனைவர் து. நரசிம்மன் ஆகியோரும்,

இப்பணியில் தன்னையும் உளப்படுத்திக் கொண்டு கணினியில் அச்சிட்ட அடையாறு மாணவர் நகலகத்தைச் சார்ந்த திருமதி. சரஸ்வதி மோகன் அவர்களும், உதவிய திரு. கு. பூபதி மற்றும் திருமதி.யாழினி அரசேந்திரன் ஆகியோரும்,

தொகுப்பினை மதிப்பிட்டுக் கருத்துகள் நல்கிய பாளையங்கோட்டை, தூய சவேரியார் தன்னாட்சிக் கல்லூரி நாட்டார் வழக்காற்றியல் துறைத்தலைவர் முனைவர் ஆ.தனஞ்செயன் அவர்களும்,

நினைக்க நெஞ்சுவக்கும் ஒத்துழைப்பு நல்கிய கொல்லிமலை மக்களும்,

நாட்டார் வழக்காற்றியலில் ஆர்வம் கொள்ளும் அனைவரின் நன்றிக்கும் உரியராவர்.

# பொருளடக்கம்


வாழ்த்துரை

அறிமுகவுரை

நன்றியுரை

I உருவான விதம்... 7

II பதித்த முறை 9

III கொல்லிமலை மக்களின் சூழ்நிலையும் வாழ்நிலையும் 15

IV கொல்லிமலை மக்கள் பாடல்கள் - சில அறிமுகக் குறிப்புகள் 57

1. தாலாட்டுப் பாடல்கள் 69

2. தொழிற் பாடல்கள்
   - i வேளாண் பாடல்கள் 85
   - ii ஆட்டுக்காட்டுப் பாடல்கள் 97

3. வழிபாட்டுப் பாடல்கள் 113

4. கொண்டாட்டப் பாடல்கள்
   - i நாட்டுக்கட்டு 145
   - ii சேர்வைப் பாடல்கள் 157
   - iii ஆண்டிக்கோலம் பாடல்கள் 167
   - iv கோமாளிப் பாடல்கள் 179
   - v குறவன் குறத்திப் பாடல்கள் 191
   - vi திருமணப் பாடல்கள் 209
   - vii கும்மிப் பாடல்கள் 223

5. ஒப்பாரிப் பாடல்கள்
   - i தாயாருக்குப் பாடுவது 289
   - ii தந்தைக்குப் பாடுவது 315
   - iii கணவனுக்குப் பாடுவது 341
   - iv பிள்ளைக்குப் பாடுவது 361
   - v உடன்பிறப்புக்குப் பாடுவது 365
   - vi மாமன் - மாமிக்குப் பாடுவது 375
   - vii கலைஞர் பாடல்கள் 381

பின்னிணைப்புக்கள்
   - i நாட்டுக்கட்டு - 1 386
   - ii நாட்டுக்கட்டு - 2 391
   - iii பாடியோர் குறித்து... 393
   - iv பாடல் திரட்டுக் குறித்த தகவல்கள் 416

# உருவான விதம்...

## எவ்வாறு தோன்றியது...

பொதுவாக, கடந்த இருபது, முப்பது ஆண்டுகளாகப் பாரம்பரிய உணவுப் பயிர்கள் விவசாய நிலங்களிலிருந்து மறைந்து வருகின்றன. கொல்லிமலையில் மலையாளி மக்கள் காலங்காலமாகத் தங்களுடைய விவசாய நிலங்களில் பயிரிட்டிருந்த சிறு தானியங்களும் இதற்கு விதி விலக்கன்று. சிறு தானியங்கள் பயிரிடுவதால் இருக்கும் பல நன்மைகள் கருதி மறைவதற்கான காரணங்கள் மற்றும் மீண்டும் பயிரிடுவதற்கான வாய்ப்புகளைப் பற்றி அறிந்துகொள்ள ஓர் ஆய்வுத்திட்டம் ம.சா.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டது.

அதன் பொருட்டு ஆண்கள் மற்றும் பெண்களுடன் 'குழு ஆலோசனை' ஆய்வு முறை மற்றும் தனிப்பட்ட நபர்களிடம் நீண்ட திறந்த முறை உரையாடல்களில் ஈடுபட்டும் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்விதம் நடைபெற்ற நீண்ட உரையாடல்களின்பொழுது மலையாளிச் சமூக பொருளாதாரத்தில் ஏற்பட்ட மாற்றங்களை விளக்க நாட்டுப்புறப் பாடல்களில் மேற்கோள் காட்டப்பட்டது. இதன் விளைவாக நாட்டுப்புறப் பாடல்களில் சிறு தானியங்கள் குறித்த பாரம்பரியச் செய்திகளும், கருத்துக்களும் சேகரமாகி இருக்கலாம் என்ற அனுமானம் தோன்றியது. இப்பாடல்களில் சிறு தானியங்கள் மலையாளிச் சமூகத்தில், உணவு மற்றும் பிற அன்றாட நடைமுறைகளில் கொண்டுள்ள பயன்பாடுகள், பயிர்ப் பாதுகாப்புமுறை குறித்த தகவல்கள் மற்றும் உயிர்ப்பன்ம முக்கியத்துவம் ஆகியவை பிரதிபலிக்க வாய்ப்புண்டு என்கிற எண்ணம் தோன்றியது. இதனடிப்படையில் கொல்லிமலை மக்களின் நாட்டுப்புறப் பாடல்களை முடிந்தவரை சேகரிக்க முடிவு செய்யப்பட்டது.

கணிசமான பாடல்கள் பல்வேறு பகுதிகளிலும், வகைமைகளிலும் சேகரமானதால் பாடல்களைத் தொகுத்துப் புத்தக வடிவில் வெளியிடுவது குறித்து ஆலோசிக்கப்பட்டது. இதில் பாடல்களைத் தவிரப் பாடியவர்களின் பெயர்கள், வயது, இடம் மற்றும் புகைப்படங்களைச் சேகரிப்பது, மேலும் பாடல்கள் பாடப்படும் சூழ்நிலைகள் பற்றிய தகவல்களை அளிப்பதின் மூலம் நாட்டுப்புறப் பாடல்கள் ஓரளவு எதற்காகப் பாடப்படுகின்றன என்பது தவிர பாடல்களின் அர்த்த ஆழங்களைப் புரிந்துகொள்வதற்கும் உதவியாக இருக்கும் என்கிற கருத்து முன் வைக்கப்பட்டது. இறுதியாகப் புத்தக வடிவில் பாடல்கள் தொகுக்கப்பட்டு வெளிவருகையில் அதற்கான 'பங்கு விகித சதவிகிதம்' (Royalty) கொல்லிமலை வாழவந்தி நாட்டில் இயங்கும் வல்வில் ஓரி அரசு பழங்குடியினர் உண்டுறை மேனிலைப்பள்ளிக்கு அளிக்கலாம் என்றும் உத்தேசிக்கப்பட்டது.

## உருவாக்கம் பெறுதல்...

மேற்கண்ட ஆலோசனைகளின் அடிப்படையில் பொருளடக்கம் தீர்மானிக்கப்பட்டது. புத்தகம் வெறுமனே பாடல்களன்றிப் பின்கண்டவாறு அத்தியாயங்களில்

- பாடல்கள் பாடும்பொழுது இருக்கக்கூடிய சூழ்நிலைகள் மற்றும் பாடும் விதம் குறித்து அடிப்படைத் தகவல்களை அளிப்பது;
- பாடல்கள் பதிப்பித்த முறையினையும், வகைமைப்படுத்தப்பட்ட விதமும் குறிப்பிட்ட சில பாடல்கள் பற்றிய சில குறிப்புகளும் அடங்கிய தனி அத்தியாயம் சேர்ப்பது;
- மேலும் வாசகர்கள் பாடல்களிடம் நெருங்கிச் செல்ல கொல்லிமலை மலையாளிச் சமூக, பொருளாதார வாழ்க்கையினைப் பற்றிய தகவல்கள் அடங்கிய அறிமுகக் கட்டுரை அளிப்பது;
- மேலும் இச்சிறு திட்டம் எவ்வாறு தொடக்கத்தில் கருக்கொண்டு தொடர்ந்து பல்வேறு படிநிலைகளைக் கடந்து வெவ்வேறு கருத்துக்களையும், பார்வைகளையும் உள்வாங்கி இறுதியாக இந்நிலையினை எட்ட மேற்கொண்ட செயல்முறைகளைப் பதிவு செய்து தனி அத்தியாயமாக வழங்குவது

என இப்புத்தகம் உருவாக்கம் பெற்றது.

## புத்தக வடிவம் சீரமைத்தல்...

மேற்குறிப்பிட்ட விதத்தில் சேகரிக்கப்பட்ட தகவல்கள் தொகுக்கப்பட்டு, பிரதிகளாக்கப்பட்டு ஓரளவு புத்தக வடிவம் பெற்றவுடன் நாட்டுப்புற ஆய்வில் நீண்டகாலமாய் ஈடுபட்டுள்ள வல்லுநர் ஒருவரிடம் மதிப்பீட்டுக்கருத்துரைகள் பெறப்பட்டது. அதன் அடிப்படையில் பாடல்கள் வகைமைப்படுத்தப்பட்ட விதம் மீண்டும் சிறிது மாறுதலுக்குட் படுத்தப்பட்டுப் புத்தகம் இறுதி வடிவம் பெற்றது.

**முனைவர் வி. வேதவல்லி**

**எ.தே. இஸ்ரேல் ஆலிவர் கிங்**

# பதித்த முறை

கொல்லிமலையில் உள்ள பதினான்கு நாடுகளில் எட்டு நாடுகளில் வாழும் மக்களிடமிருந்து இப்பாடல்கள் தொகுக்கப்பெற்றன. ஆண், பெண் என இருவகைப் பாலினரும், முதியோர் முதல் சிறுவர், சிறுமியர் வரை பலவகைப்பட்ட வயதினரும், கொல்லிமலை மக்களுக்குரிய பல்வேறு குலங்களைச் சார்ந்தோரும், மலையாளிக் கவுண்டர்கள், தாழ்த்தப்பட்டோர் என அமையும் இருவகைச் சாதியினரும் பாடும் பாடல்கள் உள்ளமையால் நாடு, பால், வயது, குலம், சாதி எனப் பல்வேறு பரிமாணங்களையும் உள்ளடக்கித் தொகுக்கப்பட்டுள்ளதாலும், பிறப்பு முதல் இறப்பு வரை அவர்கள் வாழ்வூடே நிகழும் வரலாறு, வழிபாடு, காதல், கொண்டாட்டம், திருமணம், தொழில் முதலிய படிநிலைகளில் இடம்பெற்று உறவாடும் பாடல்களைக் கொண்டுள்ளமையாலும் இத்தொகுப்பினை, கொல்லிமலையில் வழங்கும் நாட்டுப்புறப் பாடல்களுக்கு 'வகை மாதிரியாக'க் கொள்ளலாம்.

நிகழ்ச்சிகளின் போது, மக்கள் இயல்பாக இப்பாடல்களைப் பாடும் வேளைகளில் பதிவு செய்யும் வாய்ப்பு நேரவில்லை. ஆதலால் இவை மக்களைப் பல்வேறு சூழல்களில் சந்தித்து, பாடும்படி வேண்டிப் பதிவு செய்யப்பெற்றன. கொல்லிமலையில் மட்டுமன்றி, சென்னையை அடுத்த காட்டுப்பாக்கம் கால்நடை ஆராய்ச்சி நிலையத்துள் அமைந்திருந்த சுவாமிநாதன் ஆராய்ச்சிப் பண்ணைக்குக் கொல்லிமலை மக்கள் ஆய்வுத் திட்டத்தில் பங்கெடுக்க வந்திருந்தபோது ஒருமுறை பாடல்கள் பதிவு செய்யப்பட்டன. இவ்வாறு 1999-2000 ஆண்டிற்கு இடைப்பட்ட காலத்தில் பல்வேறு கட்டங்களில் இப்பாடல்கள் பதிவு செய்யப்பெற்று, பின்னர் ஒலிப்பதிவு நாடாக்களிலிருந்து பெயர்த்தெழுதப்பட்டன.

வாழ்வோட்ட முறையில் பிறப்பு முதல் இறப்பு வரை பாடப்படும் பாடல்களாக இவை விளங்கினும் வகைமைப்பாட்டின் ஓர்மை கருதிச் சூழலை அடிப்படையாகக் கொண்ட பகுப்பு வகைமை முறை கையாளப்பட்டுள்ளது. ஆகவே,

1. தாலாட்டுப் பாடல்கள்
2. தொழிற் பாடல்கள்
3. வழிபாட்டுப் பாடல்கள்
4. கொண்டாட்டப் பாடல்கள்
5. ஒப்பாரிப் பாடல்கள்

என வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

வாழ்வின் தொடக்கமான பிறப்போடு தொடர்புற்று இசைக்கப்பெறும் தாலாட்டுப் பாடல்கள் தொகுப்பில் முதலாவதாக இடம்பெற்றுள்ளன.

இதற்கு அடுத்த நிலையில் தொழிற்பாடல்கள் என்னும் பிரிவினுள் வேளாண் பாடல்களும் ஆட்டுக்காட்டுப் பாடல்களும் அமைகின்றன. பொன்னேர் கட்டி உழவு செய்தல், பறம்படித்தல், விதைத்தல், தானியம் புடைத்தல் முதலான பல நிலைகளிலும் பாடும் பாடல்கள் தொழில் முறையின் படிநிலை வரிசையில் அமைக்கப்பட்டுள்ளன. இதனுள் உட்பிரிவாக அமையும் ஆட்டுக்காட்டுப் பாட்டுகள் என்னும் பகுதியில் உள்ளனவற்றுள் பெரும்பான்மையும் மக்களின் காதல் உணர்வுகளைச் சொல்லுவனவாகும். இவை பெரும்பாலும் வேளாண்மையின் துணைத் தொழிலாக அமையும் கால்நடை வளர்த்தலின்போது பாடப்படுவதால், பாடும் சூழல் நோக்கித் தொழிற்பாடல் என்னும் பகுதியுள் இடம்பெற்றுள்ளன.

ஆட்டுக்காட்டுப் பாடல்களில் சில கொச்சைச் சொற்களும் நிகழ்வுகளும் வெளிப்படையாக இடம்பெற்றுள்ளன. ஆயினும் சில சிக்கல்களைக் கருதி அவை தொகுப்பில் இடம்பெறவில்லை. கிடைத்தவற்றுள் எந்தவொரு பாடலும் முழுதும் கொச்சையாக அமைந்திருக்கவில்லை. சில பத்திகள் மட்டுமே அவ்வாறிருந்தமையால் அவை மட்டும் நீக்கப்பட்டு, பாடலின் ஏனைய பத்திகள் மாற்றமின்றித் தரப்பட்டுள்ளன.

கொல்லிமலை மக்களால் 'சாமி பாடல்கள்' என்றழைக்கப்பெறும் வழிபாட்டுப் பாடல்கள் அவற்றின் பின் வைக்கப்பெற்றுள்ளன. கொல்லிமலைக்குரிய கொங்காயம்மன் முதலாகப் பலவகை வட்டார தெய்வங்கள் பற்றிய பாடல்கள், அவற்றின் சிறப்புத் தொடர்பு காரணமாக முன்னரும் விநாயகர், பெருமாள் போன்ற பொதுநிலைத் தெய்வங்கள் குறித்த பாடல்கள் அவற்றின் பின்னரும் வைக்கப்பட்டுள்ளன. வழிபாட்டின்போது அக்கினிச்சட்டி எடுத்துப்பாடும் பாடல்களும், குலவைப் பாடல்களும், பேயோட்டும்போது தெய்வங்களை வருந்தியழைத்துப் பாடும் பாடலும் அவற்றின் பின்னர் முறைப்படுத்தப்பட்டுள்ளன.

திருவிழா, பண்டிகை, திருமணம் போன்ற நிகழ்ச்சிகளின்போது பாடப்படும் பாடல்கள் கொண்டாட்டப் பாடல்கள் என்னும் உட்பிரிவில் அடுத்ததாக அமைகின்றன. இதில் மலையாளக் கவுண்டர்களின் கொல்லிமலைக் குடியேற்ற வரலாற்றினைச் சொல்லும் நாட்டுக்கட்டு முதலிலும், பொங்கல் பண்டிகையின் போது பாடப்படும் சேர்வைப் பாடல்கள், கம்பச்சேர்வைப் பாட்டு, ஆண்டிக்கோலம் பாட்டு, கோமாளிப்பாடல்கள் அடுத்ததாகவும், பண்டிகை, திருமணம், இறப்பு முதலிய பல்வேறு நிகழ்ச்சிகளிலும் குறவன் - குறத்தி வேடமிட்டுப் பாடும் பாடல்கள் அவற்றைத் தொடர்ந்தும் வைக்கப்பட்டுள்ளன. பின் திருமணப் பாடல்கள் அமைகின்றன. இதில் பெண்கேட்பது, பட்டம் கட்டுவது, ஏற்றி இறக்கிக் கேலி செய்வது, பெண்ணை மணமகன் வீட்டில் சேர்ப்பது, வாழ்த்துவது வரையிலான பல்வேறு நிலைகளில் பாடப்படும் பாடல்கள் அந்நிகழ்முறையை ஒட்டிக் கோவை செய்யப்பட்டுள்ளன. அவற்றின்பின் பல்வேறு சூழல்களிலும் பாடியாடப்படும் கும்மிப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. சிறுமியர் பாடும் பாடல்களைத் தொடர்ந்து பெண்கள்

பாடும் கும்மிப்பாடல்களும் அவற்றின் பின் ஆண்கள் பாடும் பாடல்களும் இடம்பெற்றுள்ளன.

'இழத்தல் பாடல்' என்று வகைப்படுத்தத் தக்க ஒப்பாரிப் பாடல்கள் இறுதியாக வைக்கப்பட்டுள்ளன. தாய், தந்தை, கணவன், பிள்ளை, உடன்பிறப்பு, மாமன்-மாமி ஆகியோர் உயிர் இழப்புக்குப் பாடும் பாடல்களைத் தொடர்ந்து இறப்புச் சடங்கின்போது பறை கொட்டும் கலைஞர்கள் பாடும் பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

பெரும்பகுதி உரைநடையாக உள்ள இரண்டு நாட்டுக்கட்டுகளும், பாடியோர் மற்றும் பாடல் திரட்டப்பட்ட இடங்கள் குறித்த தகவல்களும், புகைப்படங்களும் பின்னிணைப்புகளாகத் தரப்பட்டுள்ளன. பாடல் பதிவு செய்யப்பட்ட தேதிகளில் சில விடுபட்டிருந்த காரணத்தால் கொடுக்கப் பெறவில்லை.

***

பெரும்பாலான கும்மிப்பாடல்கள் ஒரே வகையான அமைப்பினை உடையன. ஒரு பாடலின் ஒவ்வொரு பத்தியும் ஒரே பொருளையே மீண்டும் உரைப்பன. எடுத்துக்காட்டாக, 'ஒரு கட்டுக் கரும்பாம்' என்று முதல் பத்தி தொடங்கினால், ஏனையவை ரண்டுகட்டு, மூணுகட்டு என்று பத்து வரை தொடர்கின்றன. எண்களைத் தவிர வேறு மாற்றம் ஏதுமில்லை. ஆதலால் நூலின் அளவுப் பெருக்கம் கருதி அத்தகைய பாடல்கள் அனைத்திலும் முதல் மூன்று பத்திகள் மட்டுமே கொடுக்கப்பட்டு, 'பத்து எண்கள் வரை பாடல்' தொடர்கிறது என்னும் தகவல் அடிக்குறிப்பில் சுட்டப்பட்டுள்ளது.

ஆனால் சில பாடல்களில் சொற்கள் மாறி வருகின்றன. எடுத்துக்காட்டாக 'ஆரஞ்சுப் பூத்தேர்' என்னும் பாடலில் ஒவ்வொரு பத்தியிலும் நாரத்தம்பூ, ஊமத்தம்பூ போன்ற வெவ்வேறு பூக்களின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன. ஆகவே அப்பாடலும் அதுபோல் சொல் மாற்றங்கள் உள்ள பாடல்களும் எண்ணிக்கை அடிப்படையில் அமையாத பாடல்களும் முழுமையாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

குறவன் - குறத்திப் பாடல்களைப் பாடியோரில் பலரும் ஏறத்தாழ ஒரே வகையான பாடல்களைப் பாடினர். ஆதலால் முழுமையாக உள்ளனவும் மிகுதியும் மீண்டும் வராதனவுமான பாடல்கள் மட்டும் இத்தொகுப்பில் இணைக்கப் பெற்றுள்ளன. ஒரு பெண், குறவன் - குறத்திப் பாடலில், குறத்தி பாடும் பகுதியை மட்டும் பாடியுள்ளார். மீண்டும் அவரைச் சந்தித்து குறவன் பாடும் பகுதிகளையும் சேர்த்துப்பாடும்படி கேட்டபோது, அவை தனக்குத் தெரியாதெனக் கூறினார். ஒரு பகுதியை மட்டும் தெரிந்து வைத்திருப்பதற்கான காரணமாக எதனையும் அவர் கூறவில்லை. வழக்கமாகக் குறத்தி வேடமிட்டுப் பாடும் யாரிடமிருந்தேனும், அப்பகுதி மட்டும் இவருக்கு வந்து சேர்ந்திருக்கலாம். எவ்வாறாயினும் அவர் பாடியவண்ணமே அப்பாடல் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளது. ஆயினும் முழுமையற்றதாகத் தோன்றும் சில பாடல்களும், பல பாடலடிகள் கலந்து

பாடியுள்ளதாகத் தோன்றுவனவும் ஆய்வுக்குப் பயன்படும் நோக்கில் அவர்கள் பாடிய வண்ணமே பதிவு செய்யப் பெற்றுள்ளன.

பாடலைச்சுட்டிக்காட்ட வாசகர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் பயன்படும் வகையில் ஒவ்வொரு பாடலுக்கும் அப்பாடலின் குறிப்பிடத்தக்க அடியோ, சொல்லோ தலைப்பாக வைக்கப்பட்டுள்ளது. சில பாடல்களுக்கு அவற்றின் அடிக்கருத்துகளைக் கொண்டும் தலைப்பிடப்பட்டுள்ளன. ஒரே பிரிவில் அடங்கும் வேறுபட்ட நிகழ்வுகளைச் சார்ந்த பாடல்களுக்கு அவை பாடப்பெறும் நிகழ்ச்சியை ஒட்டித் தனித்தலைப்பிடப்பட்டு, அத்தகையவற்றைத் தொகுத்துணர வாய்ப்பாகத் தனி எண்களும் தரப்பட்டுள்ளன. இவையன்றி நூல் முழுதுமுள்ள பாடல்களுக்கு வரிசை எண்கள் வழங்கப்பட்டுள்ளன. அடி, கண்ணி, பத்தி ஆகியன நோக்கி ஒவ்வொரு பாடலுக்கும் எண்கள் வழங்கப்பட்டுள்ளன. ஒருசில பாடல்களில் பத்தியமைப்புப் பகுக்கத்தக்கவகையில் தெளிவின்றிப் பாடப்பட்டிருந்த நிலையில் அடிநோக்கி எண்கள் இடப்பட்டுள்ளன.

ஒவ்வொரு பாடலின் தலைப்பின் கீழும் அப்பாடல் பாடியவர் பெயர், வயது, ஊர், நாடு முதலிய தகவல்கள் கொடுக்கப்பட்டுள்ளன. வரிசை எண்களைப் பயன்படுத்தி இதனைப் பின்னிணைப்பில் தரவியலுமெனினும் மக்களுக்கு முக்கியத்துவம் வழங்கும் தொகுப்பின் நோக்க அழுத்தம் நோக்கி, ஒவ்வொரு பாடலிலும் தகவல் தரப்பட்டுள்ளது. பாடலை இசைக்கருவியுடன் பாடினாலும், பலர் பாடினாலும், அவ்விபரங்கள் அடிக்குறிப்பில் தரப்பட்டுள்ளன.

பேச்சு வழக்குச் சொற்களும், மரூஉச் சொற்களும், ஆங்கிலச் சொற்களும் அவர்கள் பாடியுள்ள ஒலிப்பு முறையிலேயே எழுதப்பெற்றுள்ளன. வட்டார வழக்காற்றுச் சொற்களின் பொருள்கள் அடிக்குறிப்பில் இடம்பெற்றுள்ளன. இத்தகைய சொற்களில் பெரும்பாலானவற்றிற்குப் பாடல் பதிவின் போதே பொருள் விளக்கம் கேட்டு எழுதிக் கொள்ளப்பெற்றது. ஆனால் பாடல் பாடுகின்ற விரைவில் இவ்வகையான எல்லாச் சொற்களுக்கும் பொருள் கேட்பது இயலாததாக இருந்தது. ஆகவே பதிவுநாடாவிலிருந்து பெயர்த்து எழுதியபோது பல சொற்கள் பொருள் விளங்க மறுத்தன. பாடியவர்களை இதற்காக மீண்டும் சந்தித்துப் பொருள் விளக்கம் கேட்டுத் தெளிவு பெறப்பட்டது. அப்படியும் சில சொற்களின் பொருள் விளங்கவில்லை. பாடியவர்க்கே தெரியாதிருந்ததுதான் காரணம். எடுத்துக்காட்டாக 'நைனருக்கும்' (கும்மி: கொம்பானை) என்ற சொல்லின் பொருளைக் கேட்டபோது "அப்படித்தான் சொல்லித் தந்தார்கள்' என்று கூறியதுடன் அமைந்தார். ஆதலால் இது போன்ற சில சொற்களுக்குப் பொருள் தர இயலவில்லை.

பாடும்போது லகர, ளகர, ழகர வேறுபாடுகள் தோன்றப் பாடுவது பெரும்பாலும் இம்மக்கள் யாரிடமும் இல்லை என்றே தோன்றுகிறது. ளகர, ழகரங்கள் லகரமாகவே உச்சரிக்கப்பட்டுள்ளன. அதனைப் பாடிய

முறையிலேயே அச்சிட்டால் மிகுந்த பொருட்குழப்பமும் வாசிக்க இடையூறும் நேரும் என்பதால் எகர, ழகரங்களிட்டே அச்சிடப்பட்டுள்ளது.


மொழி முதலில் வரும் ஐகரம் பல இடங்களில் 'அய்' எனவே ஒலிக்கப் பட்டுள்ளது. மொழியிறுதி ஐகாரம் பெரும்பாலும் ஒலிக்கவே படவில்லை. ஆகவே ஐகாரம் இல்லாமல் முடியும் சொற்கள் அவர்கள் பாடிய வண்ணமே கொடுக்கப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, 'மலை' என்னும் சொல் 'மலை' என்றும் 'மல' என்றும், 'மால' என்றும் ஒலிக்கப்பெறும்போது அவ்வண்ணமே எழுத்திலும் பதிவு செய்யப்பட்டுள்ளது.


நாட்டுப்புறப் பாடல்களைப் பாடும்படி கேட்டபோது சிலர் கூத்தில் கேட்ட பாடல்களையும் சிலர் திரைப்படப் பாடல்களையும் பாடினர். அவை கண்டறியப்பட்டு நீக்கப்பட்டுள்ளன. ஆயினும் கூத்தில் பாடும் நகைச்சுவைப் பாடல்கள் சேர்வையில் கோமாளிப் பாடலாகப் பாடப்படுவதை அறிய முடிந்தது. கூத்துக்கதையுடன் தொடர்பற்றும், நகைச்சுவைப் பாடலாகத் தனித்தன்மை பெற்றும் உள்ளதால் அவை தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

பல்வேறு சாதிப் பெயர்கள் பாடல்களில் இடம்பெற்றுள்ளன. மக்களின் சமூக வரலாற்றாய்விற்குப் பயன்படும் நோக்கில் அவை பாடப்பட்ட வண்ணமே கொடுக்கப்பட்டுள்ளன.


பொதுவாகச் செய்யுள் இலக்கியங்களை அச்சிடும்போது மேற்கொள்ளும் அடியமைப்பு மற்றும் தனிச்சொல் அமைப்பு முறையினைப் பின்பற்றியே பாடல்களின் அடிகள் அச்சிடப்பட்டுள்ளன.

முனைவர் சா. பாலுசாமி




# கொல்லி மலை



# கொல்லிமலை மக்களின் சூழ்நிலையும் வாழ்நிலையும்

கொல்லிமலை, பல்வேறு ஆர்வங்களையுடைய பலதரப்பினரையும் கவரக்கூடிய சிறப்பு வாய்ந்த இடமாகும். 'தெய்வம் விரும்புகின்றதும் அகன்ற இடத்தை உடையதும் மிகப்பெரியதுமாகிய கொல்லிமலை' என்று கொல்லிமலையின் தோற்றம் போற்றப்பட்டுள்ளது. அதன் வரலாற்றுச் சிறப்பு மற்றும் இயற்கை எழில் வளங்கள் பற்றிய குறிப்புகள் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன. புலவர்கள் பலரால் பெருமைப்படுத்தப்பட்ட இம்மலை, பழமைக்கும், நிலைத்த தன்மைக்கும், சிறந்த ஆழ்ந்த நட்பிற்கும் உவமையானது.[1]

**வரலாற்றில் கொல்லிமலை**

தென்னிந்திய வரலாற்றுப் பின்னணியில் கொல்லிமலை முக்கியப் பங்கு வகிக்கிறது. சங்க இலக்கியங்களில் கொல்லிமலையைச் சுற்றியுள்ள சமவெளிகள் கொல்லிக்கூற்றம் என அழைக்கப்பட்டன. வரலாற்றுக் காலத்தில் இம்மலை இயற்கை அரணாகவும் கொங்கு மற்றும் சோழ ஆட்சிகளுக்கிடையே எல்லையாகவும் அமைந்திருந்தது. கிறித்துவ நூற்றாண்டுத் துவக்கத்தில் கொல்லிமலை, மழவர்கள் ஆதிக்கத்தின் கீழ் இருந்ததாகத் தெரிகிறது. மழவர்களின் மிகச் சிறந்த மன்னனும், கடை ஏழு வள்ளல்களில் ஒருவருமான ஆதன் ஓரி கொல்லிமலையை ஆண்டான். அம்மலை அவனுக்கே உரித்தாக இருந்தது என்பதைக் ''கொல்லியாண்ட வல்வில் ஓரி'' (புறம். 158,5) என்று பெருஞ்சித்திரனார் குறிப்பிடுவதிலிருந்து அறிகிறோம். வில்லாற்றலில் தேர்ச்சி பெற்றவனாதலின் வல்வில் ஓரி என்று சிறப்பிக்கப்பட்டான்.

ஓரியை வெற்றி கொண்டு சேரன் கொல்லிமலையைக் கைப்பற்றியதைச் சங்க இலக்கியக் குறிப்புகள் வாயிலாக அறிய முடிகிறது. கொல்லிமலை, சேர மன்னன் இரும்பொறையின் கீழ் சேர நாட்டின் பகுதியானதிற்கும், ஒன்பதாம் நூற்றாண்டில் சோழ நாட்டின் வெற்றிக்குப் பிறகு கொங்கு நாட்டின் பகுதியானதற்கும் சான்றுகள் உள்ளன. இலக்கியங்கள் கொல்லிமலையில் சேரன் ஆட்சி அமைத்தது பற்றிக் குறிப்பிடுகின்றன. ''கொல்லிப் பொருந'' (பதிற். 73) ''கொல்லியாண்ட

[1] ''கொல்லிபோலத் தவா அலியரோ நட்பே! அவள்வயின் அறாஅலியரோ''
(அகம். 338, 14-16)

குடவர் கோவே" (சிலப். 24) என்ற அடிகள் சேரனையே குறிப்பிடுகின்றன. கொல்லிமலையில் இன்றுள்ள அறப்பளீஸ்வரர் திருக்கோவிலில் சுந்தர சோழனுடனான தொடர்புகளுக்குச் சான்றுகள் உள்ளன.



*அறப்பளீஸ்வரர் கோவில்*
*வளப்பூர் நாடு*

பல்வேறு பழம் இலக்கியங்களும் கொல்லிமலை, பழந்தமிழ் நாட்டின் பகுதிகளுடன் கொண்ட தொடர்புக்குச் சான்றாய் அமைகின்றன. அறப்பளீஸ்வரர் கோவில், பாடல் பெற்ற தலமாகும். திருநாவுக்கரசர், அருணகிரிநாதர் போன்றோர் அறப்பளீஸ்வரரைப் போற்றிப் பாடியுள்ளனர். பௌத்த மற்றும் சமண மதத் துறவியரால் பல்வேறு சின்னங்கள் அமைக்கப் பட்டுள்ளன. இன்றும் தீர்த்தங்கரர் ஒருவரின் கல் சிற்பத்தை நாம் கொல்லி மலையில் காணலாம்.

## கொல்லிப்பாவை

கொல்லிமலை என்றதும் பலர் நினைவிற்கு வருவது கொல்லிப்பாவையாகும். சங்ககாலப் புலவர்கள் பலர் இப்பாவையைச் சிறப்பித்துப் பாடியுள்ளனர். இயற்கை எழில் நிறைந்த கொல்லிமலையில் தவமேற்கொண்ட முனிவர்களும், தேவர்களும் அரக்கர்களால் துன்புறுத்தப்பட்டனர். இது அரக்கர்களின் தொல்லையில் இருந்து விடுபடவும், அவர்களை அழிக்கவும் தேவர்களால் விஸ்வகர்மா என்ற தேவ சிற்பியைக் கொண்டு பேரழகான எழில் நங்கை போன்று வடிவமைக்கப்பெற்ற ஓர் இயந்திரப் பாவையாகும். மாய சக்தியால் இயங்கிய அப்பாவை தன் எழிலால் அரக்கர்களைத் தன்னிடத்தே கவர்ந்து, தன்னுடைய நகைப்பில் அவர்களை மதி மயங்கச் செய்து, வஞ்சனையால் அவர்களைக் கொன்றதாம். தீய சக்திகளை அழிக்கவும், விலக்கவும் உருவாக்கப்பட்ட இப்பாவை 'கொல்லிப்பாவை' என்று அழைக்கப்படக் காரணமாக இருந்திருக்கலாம். கொல்லிப்பாவை "கொல்லி குடவரைத் தெய்வம்" (குறுந். 39:4-5) என்றும் அழைக்கப்பெற்றது. இப்பெண் தெய்வம் ஓரியின் காலத்தில் இருந்ததை "வல்வில் ஓரி கொல்லிக்குக் குடவரைப்பாவை..." (குறுந். 100:5-6) என்னும் பகுதியால் அறியலாம்.

## கொல்லிமலையின் உயிரின வளம்- சங்க இலக்கியச் சான்று

ஓரி ஆட்சிபுரிந்த கொல்லிமலை, செல்வச்செழிப்புடன் இயற்கை வளங்களையும், எண்ணற்ற தாவரங்கள் மற்றும் விலங்கினங்களையும் தன்னிடத்தே பெற்றிருந்தமைக்குச் சங்ககாலப் பாடல்கள் பல சான்றுகளாக

விளங்குகின்றன. கொல்லிப்பலா சிறப்பு வாய்ந்தது என்பதைப் ''பல்பழப் பலவின் பயங்கெழு கொல்லி'' (அகம். 208; 21-22) என்று பரணரும், ''செவ்வேர் பலவின் பயங்கெழு கொல்லி'' (அகம். 203) என்று கல்லாடனாரும் பாடியுள்ளனர். பலாவைப் பற்றிக் கூறுவதோடு நில்லாமல், பரணர் கொல்லிமலையின் அடர்ந்த காடுகளையும், மயில் முதலான பறவைகளையும் மற்ற விலங்கினங்களையும் பற்றித் தன் பாடல்களில் குறிப்பிடுகிறார். நற்றிணைத் தலைவியின் எழிலுக்குக் கொல்லிமலை மயிலை[2] உவமையாக்கிப் பாடியுள்ளார். தலைவியின் அழகான கூந்தலின் மணம் கொல்லிமலையில் கார் காலத்தில் மலரும் மலர் போன்று மணம் வீசுகிறது[3] என்கிறார் சங்ககாலப் புலவர். இலக்கியங்களில் கூறுமளவிற்குக் கொல்லிமலை மல்லிகையும் அங்கு விளைந்த மூங்கிலும் சிறப்புடையனவாக இருந்திருக்க வேண்டும். பெண்ணின் தோளை விளக்க மூங்கிலை உவமை கூறுவது மரபு. மூங்கிலைப் போன்ற தோள்கள் என்று கூறாமல் 'கொல்லி மூங்கில் போன்ற தோள்கள்' [4] என்று கூறுவதிலிருந்து அம்மூங்கிலின் சிறப்புப் புலனாகிறது.

கொல்லி மலையில், குமிழ மரங்கள் பூத்துக்குலுங்குமாம். உதிர்ந்த பழங்கள் மான்களுக்கு உணவாகும் என்பதை ''அத்தக்குமிழின் கொடுமூக்கு விளைகனி எறிமட மாற்கு வல்சியாகும் வல்வில் ஓரி கானம்'' என்று நற்றிணைப் பாடல் ஒன்றில் குறிப்பிடுகிறார் பரணர். இயற்கை வளங்கள் நிறைந்த கொல்லிமலையில் வாழ்ந்த குடிமக்கள் உணவு கிடைக்காத வேளைகளில், யானைத் தந்தங்களை விற்று, உணவு பெற்று உயிர் வாழ்வர்[5] என்று குறுந்தொகை கூறுவதிலிருந்து அங்குச் செல்வச் செழிப்பிற்குக் குறையில்லை என்பது தெரிகிறது.

**பெயர் வரலாறு**

கொல்லிமலைத் தேனைப் பற்றிப் பல சங்கப் பாடல்கள் குறிப்பிடுகின்றன. உயரத்திலிருந்து பார்க்கும்போது நீள் சதுர வடிவப் பீடபூமியாகக் காட்சியளிப்பதால் சதுரகிரி என்றும் வழங்கப்படுகிறது. ரிஷ்யமுகபர்வதம், கோலேச்வரம், குடவரை போன்ற பெயர்களாலும் இம்மலை வழங்கப்படுகிறது. கொல்லிப்பாவையின் இருப்பிடமாக அமைந்துள்ளதால் கொல்லிமலை என வழங்கப்பெற்று இருக்கலாம். இன்று இப்பெயராலேயே இம்மலை அறியப்படுகிறது.

---

2 ''மாரி வண்மகிழ் ஓரி கொல்லிக் கலிமயில் கலாவத்து அன்ன இவள்'' (நற். 265:7-9)

3 ''பெருந்தண் கொல்லிச் சிறுபசுங் குளவிக் கடிபதம் கமழும் கூந்தல்'' (நற். 346:9-10)

4 ''கொல்லிக்குடவரை வேயொழுக் கன்ன சாயிறைப் பணைத்தோள்'' (அகம். 213:15-16).

5 ''காந்தள் அம் சிலம்பில் சிறுகுடி பசித்தென கடுங்கண் வேழத்துக் கோடுநொடுத்துண்ணும் வல்வில் ஓரி கொல்லிக் குடவரை'' (குறுந். 100).

## கொல்லிமலை இன்று



ஆகாய கங்கை அருவி

இந்நாளில் செம்மேட்டில் காணப்படும் ஓரியின் நவீன சிலை, ஓரி என்ற மன்னரையும் கொல்லி மலைக்கும் அவருக்கும் உள்ள தொடர்பையும் உணர்த்துவதாக அமைந்துள்ளது. மற்றும் சிலருக்குக் கொல்லிமலை என்றதும் அதன் மூலிகைச் செல்வங்களே நினைவுக்கு வருகின்றன. பலர் இன்றும் இம்மலையின் மூலிகை வளத்தைப் பெரிதும் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். சுற்றுலா நோக்கில் இங்கு வரும் சிலருக்கு கொல்லிப்பாவை, அறப்பளீஸ்வரர் திருக்கோயில் மற்றும் அங்குள்ள ஆகாயகங்கை என்ற அருவி ஆகியன மிகவும் மகிழ்வூட்டுவனவாகும். சில நூற்றாண்டுகாலமாக மலையாளர்[6] என்ற சமூகத்தினர் கொல்லிமலையை வாழ்விடமாகக் கொண்டுள்ளனர்.

கொல்லிமலை தமிழகத்தின் நாமக்கல் மாவட்டத்தில், கிழக்குத் தொடர்ச்சி மலையின் நீட்சியாக அமைந்துள்ளது. வடக்கேயிருந்து கிழக்கே 29 கி.மீ. நீளமும், கிழக்கேயிருந்து மேற்கே 19 கி.மீ. நீளமும் நீண்டுள்ளது. 3,500லிருந்து 4000 அடி உயரமுடையது. மிக உயரமான சிகரம், கடல் மட்டத்திலிருந்து 4663 அடி உயரத்தில் அமைந்துள்ளது. கொல்லி மலையின் கிழக்குப் பகுதியில் ஒரு பெரிய பள்ளத்தாக்கால் பிரிக்கப்பட்ட பச்சைமலை அமைந்துள்ளது. கிழக்கு மற்றும் வடகிழக்குப் பகுதிகள் துறையூர்ப் பள்ளத்தாக்கு அல்லது பெரியார் பள்ளத்தாக்கில் குவிகின்றன.

கொல்லிமலையில் அதிகபட்ச வெப்பநிலை இருபதிலிருந்து முப்பது டிகிரி அளவிலும் குறைந்தபட்ச வெப்பநிலை பத்திலிருந்து இருபது டிகிரிக்குள்ளும் அமைந்துள்ளது. சராசரி மழையளவு 1445 மி.மீ. அளவில் இருந்தாலும் கடந்த 12 ஆண்டுகளின் சராசரி மழையளவு 1043 மி.மீ. அளவில் உள்ளது. ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களைத் தவிர மழையளவு ஆண்டு முழுவதும் ஒரே அளவில் அமைந்துள்ளது.


கொல்லிமலையின் மொத்தப் புவியியல் பரப்பளவு 28,293 ஹெக்டேர் ஆகும். காடு, மொத்தப் பரப்பில் 44 விழுக்காட்டு இடத்தைக் கொண்டுள்ளது. விவசாயப் பணிகள் 51.6 சதவீதம் பரப்பளவு கொண்ட பகுதியில் நடைபெறுகின்றன. மற்ற வகைப்பகுதிகள் 5 சதவீதம்

---

[6] மலையை வாழவிடமாகக் கொண்டதால் மலையாளர் என்று இம்மக்கள் அழைக்கப்படுகிறார்கள்.

இடத்தையே கொண்டுள்ளன. காடுகள், இலையுதிர் மற்றும் வறண்ட இலையுதிர் காடு வகைகளைச் சார்ந்தவை. இன்றும் சில மழைக்காடுகள் நினைவுச் சான்றுகளாய் இருக்கின்றன. கொல்லி மலையில் காடுகளைத் தொடர்ச்சியாகக் காண்பது அரிதாகும். காடுகள் மலைச்சரிவுகளில் ஆங்காங்கே காணப்படுகின்றன. பெரும்பாலும் காடுகள் சேதமடைந்து குறைந்து இருந்தாலும், மலையின் மேற்குப் பக்கத்தில் ஓரளவிற்கு அடர்த்தியான பகுதியைப் பார்க்கலாம். இன்று இக்காடுகளில் யானைகள், மான்கள், மயில்கள் இல்லை. கரடி, முள்ளம்பன்றி போன்ற விலங்குகள் இருக்கின்றன.

1991 மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி கொல்லி மலையின் மொத்த மக்கள்தொகை 33,880. இதில் 32,080 பேர் மலையாள சமூகத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் 14 நாடுகளில் பரவி வாழ்கின்றனர். அவற்றுள் 16 வருவாய் கிராமங்களும் 251 சிற்றூர்களும் அடங்கும். 14 நாடுகளாவன: வாழவந்தி நாடு, திண்ணனூர் நாடு, சேலூர் நாடு, தேவானூர் நாடு, வளப்பூர் நாடு, அரியூர் நாடு, குண்டூர் நாடு, ஆலத்தூர் நாடு, குண்டணி நாடு, திருப்புலி நாடு, பெரக்கரை நாடு, சித்தூர் நாடு, எடப்புலி நாடு மற்றும் பயில் நாடு. நவீன போக்குவரத்து வசதிகளைப் பொறுத்த வரையில் வாழவந்தி நாடே நுழைவாயிலாக அமைந்துள்ளது. பெரும்பாலான அரசுத் துறைகள் வாழவந்தி நாட்டில் உள்ள செம்மேட்டில் அமைந்துள்ளன.


*பலாப்பாடி, ஆலத்தூர் நாடு*

## மலையாளிகள் கொல்லி மலைக்குக் குடியேறிய பின்னணி

மலையாளர்கள், சில நூற்றாண்டுகளுக்கு முன்னதாகத்தான் கொல்லி மலையில் குடியேறியதாகத் தெரிகிறது. இவர்கள் எதற்காக, எப்போது கொல்லி மலைக்கு வந்து நிலையாகத் தங்கினார்கள் என்பதற்குப் பல விதமான காரணங்கள் கூறப்படுகின்றன. நாட்டுக்கட்டு என அழைக்கப்படும் நாட்டுப்புறப் பாடல்களில் அவர்கள் குடியேறிய கதை எடுத்துரைக்கப்பட்டுள்ளது. குடியேற்றத்திற்கான காரணங்கள் பலவகையாக மாறுபட்டாலும் எழுதப்பட்ட இலக்கியத்திற்குச் சில நாட்டுக்கட்டுகளின் கூற்றுகளும் சான்றாக நிற்கின்றன.

புகழ்வாய்ந்த ஒரு பழங்கதையின்படி, மூன்று சகோதரர்கள் தத்தம் மனைவியருடன் காஞ்சிபுரத்தில் வசித்து வந்தனர். ஒருநாள் அவர்கள் தம் வேட்டைநாய்களுடன் வேட்டைக்குச் சென்றனர். பெரும் மழை பொழிந்ததனால் இரண்டு நாட்கள் வரையில் சகோதரர்களால் வீடு திரும்ப இயலவில்லை. ஆனால் அவர்களின் நாய்கள் மட்டும் தன் எசமானர்களை விட்டுத் தனியே வீடு திரும்பின. தம் கணவன்மார் இறந்துவிட்டனரோ என அஞ்சிய பெண்கள் உடனடியாகத் தீயில் வீழ்ந்து தம் உயிரை மாய்த்துக் கொண்டனர். மழை நின்ற பின்னர் வீடு திரும்பிய சகோதரர்கள், தங்கள் மனைவியரின் முடிவை உணர்ந்தனர். சகோதரர்கள் பின்னர் மறுமணம் புரிந்தனர். மூத்த சகோதரன் ஒரு கைக்கோலப் பெண்ணை மணமுடித்துக் கல்வராயன் மலையில் குடியேறினார். நடு அண்ணன் ஒரு வேடுவப்பெண்ணை மணமுடித்துப் பச்சை மலையில் குடியேறினார். இளைய சகோதரர் தேவேந்திர குலப் பெண்ணை மணந்து கொல்லி மலையில் குடியேறினார். இவ்வாறாக இம்மூன்று சகோதரர்களும் பெரிய மலையாளி, பச்சை மலையாளி மற்றும் கொல்லி மலையாளி என்ற மூன்று சாதி உட்பிரிவுகளைக் கொண்ட மலையாளர் மரபு வழியினைத் தோற்றுவித்தனர் என்று கருதப்படுகிறது.

இதிலிருந்து சற்றே மாறுபட்ட கதை ஒன்றும் நிலவுகிறது. அதன்படி தம் தாய் மாமனுடன் சண்டையிட்ட மூன்று சகோதரர்களும் காஞ்சிபுரத்திலிருந்து மலைத்தடத்தின் வழியே முன்னேறி, அச்சமயத்தில் அங்கு ஆதிக்கம் செலுத்தி வந்த வேடுவ குலத்தினரை வெற்றி கொண்டு மேற்கூறிய மூன்று மலைப்பிரதேசங்களிலும் குடியேறினர். பெரிய அண்ணன் அதாவது மூத்த சகோதரர் சேர்வராயன் மலையைத் தம் வசிப்பிடமாகத் தேர்வு செய்தார். நடு அண்ணன் அதாவது இரண்டாவது சகோதரர் பச்சைமலையில் குடியேறினார். சின்ன அண்ணன் அதாவது கடைசிச் சகோதரர் கொல்லிமலையைத் தம் இருப்பிடமாகக் கொண்டார். வாழவந்தி நாட்டின் சோளக்காடு பகுதியைச் சேர்ந்த சினுப்பக் கொங்கன் என்ற நபரின் கூற்றுப்படி, மூன்று சகோதரர்களும் முதலில் கொல்லி மலையில்தான் குடியேறினர். பின்னர், ஒரே இடத்தில் தங்கி மூவரும் பிழைப்பு நடத்துதல் இயலாது என்பதை உணர்ந்து வெவ்வேறு இடத்திற்குக் குடி பெயர்ந்தனர்.

தென் இந்தியாவில் மொகலாயர் ஆதிக்கம் வலுத்திருந்தபோது மலையாளர்கள் கொல்லி மலையில் குடியேறினர் என்பது மற்றுமொரு கூற்றாகும். தற்போது கொல்லி மலையில் வசிக்கும் முதியோர் சிலரின் கூற்றுப்படி, வீடுகளில் பன்றியை வளர்க்கும் வழக்கம் மலையாளர்களிடம் பரவியதும் மொகலாயரிடமிருந்து தற்காத்துக் கொள்ளும் ஓர் உத்தியாக இருக்கலாம்.

**உணவு**

மலையாளர்களின் மரபான உணவில் கேழ்வரகும், சாமையும் முக்கிய உணவுத் தானியங்களாகப் பயன்படுத்தப்பட்டன. இவைகளுடன் தினை, வரகு, பனிவரகு போன்ற தானியங்களும் மற்றும் மொச்சைப் பருப்பு வகைகளான அவரை மொச்சை, கருமொச்சை, செம்மொச்சைகளையும் தங்களுடைய அன்றாட உணவில் சேர்த்துக் கொண்டனர். கீரை வகைகளையும், சில காய்கறி வகைகளையும் பயன்படுத்தினர். அவ்வப்போது சிறிய பறவை வகைகளையும், காட்டுப்பன்றி, காட்டுக்கோழி, உடும்பு, முள்ளம்பன்றி போன்ற சிறிய விலங்குகளையும் வேட்டையாடி உண்கின்றனர். இன்றும் ஓரளவிற்கு இப்பழக்கத்தைக் கொண்டவர்களாக உள்ளனர். மலையாள மக்கள் விரும்பிச் சாப்பிடுவதில் பன்றிக் கறியும் ஒன்றாகும். பன்றிக் கறியைச் சிறப்பு விருந்துகளில், திருமணம் போன்ற நாட்களில், பண்டிகைக் காலங்களில் சேர்த்துக் கொள்கின்றனர். மலையாளர்களின் உணவில், மிக அரிதாகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட அரிசி, இன்று அவர்களுடைய முக்கிய உணவாக மாறியுள்ள நிலை ஏற்பட்டுள்ளது. மிகக் குறைந்த கால அளவில் அதாவது 15-20 வருடங்களில் கேழ்வரகு களி, சாமைச் சோறு, மொச்சைக்குழம்பு மிகவும் அரிதான உணவுப் பண்டங்களாக மாறிவிட்டன.

**உடை, அணிகலன்**

மலையாள மகளிரின் பாரம்பரிய உடை மிகவும் எளிமையான நான்கு முழம் அல்லது அதற்கும் சிறு கூடுதல் நீளமான வெள்ளைத்துணியாக இருந்தது. இளவயதினர் தொட்டு முதியவர்கள் வரை இந்த வெள்ளை ஆடையை உடலைச் சுற்றி மார்புக்கு மேலே கட்டிக் கொள்வர். இவ்வாறு கட்டிக் கொள்வதை முண்டாக் கட்டு என்றும் மார்க்கட்டு என்றும் கூறுவர். இரவிக்கை அணிவது அவர்களுடைய வழக்கத்தில் இல்லாமல் இருந்தது. இரவிக்கை அணிவது தெய்வ குற்றம் என்று கருதினார்கள். நாற்பது வருடங்களுக்கு முன்பு வரை பெண்கள் இரவிக்கை அணிந்தால், அவர்களிடம் "குத்தம்" வாங்குவது அவர்கள் ஊர்க் கட்டுப்பாடாக இருந்ததாகச் சில வயது முதிர்ந்த ஆண்களும், பெண்களும் குறிப்பிடுகின்றனர். வேட்டியும், துண்டும் ஆண்கள் அணியும் ஆடைகளாகும். ஆண்கள் துண்டைப் பயன்படுத்தித் தலைப்பாகை அணிந்து கொள்வர். இன்றும் இவ்வழக்கம் அவர்களிடையே காணப்படுகிறது.



*கொல்லி மலையாளிகள்*

இன்று பெரும்பாலும், வயது முதிர்ந்த மகளிரைத் தவிர, மற்றவர்களிடையே முண்டாக்கட்டு அல்லது மார்க்கட்டு உடை அணியும் வழக்கம் மாறி, சமவெளியில் உள்ள மகளிரைப்போல புடவை, இரவிக்கை அணியும் வழக்கம் மிகப் பரவலாகக் காணப்படுகிறது. இளம் பெண்கள் பாவாடை, தாவணி அணிந்து கொள்கின்றனர். நாகரிக உடைகளான 'மிடி' 'சல்வார்கம்மிஸ்' அணியும் பழக்கமும் ஆங்காங்கே காணப்படுகிறது. ஆண்களிடையேயும் உடை அணிவதில் மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. இளம் வயதினர் முழுக்கால் சட்டை அணிகின்றனர். வேட்டி அணியும் பழக்கமும் இன்றும் பரவலாகக் காணப்படுகிறது.

**சமூக நிறுவனங்களும் வாழ்க்கை நெறிமுறைகளும்**

மலையாளர் சமுதாயம் தந்தை வழியானது. தந்தை வழியுரிமை அவர்கள் சமுதாய அமைப்பின் ஒரு முக்கிய அம்சம். ஒருவரது பிறப்பினாலேயே அவரது வழியுரிமை நிர்ணயிக்கப்படுகிறது. ஒரு தந்தை வழியுரிமைச் சுற்றத்தினர் 'பங்காளிகள்' என்று வழக்கில் அழைக்கப்படுகிறார்கள். பொதுவாகக் கிராமங்களில் ஒரு வழியைச் சார்ந்தவர்களின் வீடுகள் ஒரே தொகுதியாகக் கூட்டாக அமைந்துள்ளன. வம்சாவழி என்பது தந்தைவழி உறவுடைய ஏறத்தாழ மூன்று தலைமுறைப் பங்காளிகள் அல்லது மரபு வழிக்கூட்டுரிமை கொண்டவர்களை உள்ளடக்கிய சுற்றமாகும்.

வம்சாவழிச் சுற்றம் என்பதைக் குறிக்க எந்த ஒரு பொது வார்த்தையும் இல்லை. சிலர் இதை வகையறா என்றும் வம்சம் என்றும் குறிப்பிடுகின்றனர். கிளை என்ற சொல்லும் அவ்வப்போது பயன்படுத்தப்படுகிறது. தந்தை வழிச்சுற்றம், சமுதாய மற்றும் அரசியல் அமைப்புகளில் முக்கியப் பங்காற்றுகிறது. மரபு சார்ந்த ஆட்சி அதிகாரம், சொத்துரிமை மற்றும் வாரிசுரிமைகளை ஆணின் வழியில்தான் அடைய முடியும்.

ஒரே வம்சாவழியைச் சார்ந்தவர்களுக்குப் பொதுவாக சாமி வீடு ஒன்று உண்டு. தமது கூட்டான வேண்டுதல்களை வழங்கச் சுற்றத்தின் உறுப்பினர்கள் குறிப்பிட்ட தருவாய்களில் ஒன்று சேர்வது வழக்கம். ஒரு வம்சாவழித் தலைவரின் மறைவுக்குப் பின்னர் வழிச்சுற்ற அமைப்பு மெதுவாகத் தத்தம் தந்தையரின் வழியில் பிரிந்து விடுகிறது.

வம்சாவழியைத் தவிர மலையாளர் சமுதாயஅமைப்பின் மற்றுமொரு முக்கிய அம்சம், 'மரபுக்குழு' அல்லது'குலம்' என்பதாகும். இது வம்சாவழியிலிருந்து தனித்து விளங்குவதாகும். மலையாளர்கள் பல

புறமணக் குலங்களாக ஒருங்கிணைந்துள்ளார்கள். இவற்றுள் சில குலங்கள் சகோதர பந்தக் குலங்கள் அதாவது அண்ணன் - தம்பி உறவு முறை கொண்டவை. சில குலங்கள் திருமண பந்தக் குலங்கள் அதாவது, மாமன் - மச்சான் உறவு முறை கொண்டவை. ஒரே குலத்தினுள் திருமணம் என்பது முறை தகாததாகத் தடை செய்யப்பட்டுள்ளது. அதேபோல, அண்ணன் - தம்பி உறவு முறை கொண்ட இரு குலத்திற்கும் ஒரு சில அண்ணன் - தம்பி உறவு முறை கொண்ட இரு குலத்திற்குள் திருமணம் தகாதது எனத் தடை செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு குலத்திற்கும் ஒரு சில அண்ணன் - தம்பி உறவு முறைக் குலக்குழுக்களும் ஒரு சில மாமன் - மச்சான் உறவு முறைக் குலக் குழுக்களும் உண்டு. எடுத்துக்காட்டாக, சினுப்ப குலத்திற்கு வளைஞ்ச, கல்தொட்டி, கவுரச, வாரப்ப, போக்காண்டி, மாதய்ய, கூத்தாடி போன்றவை மாமன் - மச்சான் உறவுக் குலங்கள். எனவே, ஒரு சினுப்ப குலப்பெண்ணிற்கோ ஆணிற்கோ மேற்கூறிய குலங்களுடன் திருமண உறவு மரபின்படி ஏற்கப்பட்டதாகும். ஆனால், கொந்துகாளி, தெத்துப்புள்ள, பச்சண, கோப்பைய, துப்புள மற்றும் கொலபாண்டி குலங்கள் சினுப்ப குலத்துடன் அண்ணன் - தம்பி உறவு முறை சார்ந்தவை. எனவே இக்குலங்கள் சினுப்ப குலத்துடன் திருமண உறவு கொள்ள முடியாது. ஒருவருக்குத் திருமண நேரத்தில் மட்டுமே அவர் எந்தக் குலத்தின் உறுப்பினர் என்ற ஒப்புகை அவசியமாகிறது. மற்றபடி, குல உறுப்பினர்களை ஒன்று சேர்க்கும் எந்த ஒரு செயலையும் காண முடியவில்லை.

மரபின்படி தந்தையின் சகோதரி மகன், தாயின் சகோதரர் மகள் போன்ற உறவுகளுடன் திருமணங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது. பொதுவாக மலையாளர்களின் ஒருதார மணம் அல்லது ஒரு நேரத்தில் ஒரு தாரம் என்ற முறையையே பின்பற்றுகின்றனர்.

திருமண உறவிலிருந்து பிரிவதும் வழக்கமாக உள்ளது திருமணமான இருவர் தமது பிரச்சனையைக் கிராமப் பஞ்சாயத்தின் முன் வழங்குவதன் மூலம் விவாகரத்துக் கோரலாம். பரவலாக இல்லையெனினும் தற்போது சிலர் நவீன நீதிமன்றத்தின் மூலமாகச் சட்டபூர்வமாகவும் விவாகரத்துப் பெறத்துவங்கியுள்ளனர். திருமண உறவிலிருந்தது பிரிவது அல்லது விவாகரத்துப் பெறுவது என்பது சம்பந்தப்பட்ட நபர்களுக்கோ, குறிப்பாகப் பெண்களுக்கோ அவர்களின் வாழ்க்கையைப் பெருமளவில் பாதிக்கும் நிகழ்ச்சியாக அமைவதில்லை. மலையாளர்கள், விதவையரை அமங்கலச் சின்னமாகக் கருதுவதில்லை. மற்ற பகுதி விதவையரைப் போலக் கொல்லிமலையைச் சார்ந்த விதவையருக்கு எந்தச் சமூக இழுக்கும் நேர்வதில்லை.

பெரும்பாலான ஆண்களும் பெண்களும் மறுமணம் செய்து கொள்கிறார்கள். ஒரு விவாகரத்துப் பெற்ற அல்லது கணவனை இழந்த பெண் தமது முந்தைய திருமண உறவின் குழந்தைகளுடனும் கூட மறுமணம் செய்து கொள்ளலாம். சில நேரங்களில் ஆண்களும் பெண்களும் நான்கைந்து முறை மறுமணம் செய்ததற்குச் சான்றுகள் இருக்கின்றன. வயது, திருமணத்திற்கு ஒரு தடையாக அமைவதில்லை. மலையாளர் சமுதாயத்தில் விதவையருக்கு அவர்கள் சமுதாயத்தின் பெரியவர்களே பார்த்து மறுமணம் செய்கின்றனர். இருபத்தைந்து முப்பது ஆண்டுகளுக்கு முன்பு, பெண்கள் குழந்தைகள் பெற்றிருந்தாலும் விதவையாகவே வாழ யாரும் உடன்படவில்லை.

குடும்பம் வசிப்பிடமாக அமைவது மட்டுமின்றி, உறவு முறை அமைப்புக்கும் அடித்தளமாக அமைகிறது. மலையாளர்கள் தந்தையின் வசிப்பிடத்தில் வாழ்பவர்கள். சில விதி விலக்குகள் நீங்கலாக, நெருங்கிய உறவினர்களே ஒரு குடும்பமாக வீட்டில் வசிக்கிறார்கள். ஏறத்தாழ 25-30 ஆண்டுகளுக்கு முன்பு வரையில் மலையாளர்கள் தம் மூத்த தலைமுறையினருடன் வழி வழியாக வசித்து வந்தனர். தற்போதுகணவன் மனைவி மற்றும் அவர்களின் மணமாகாத குழந்தைகள் மட்டுமே இணைந்து வசிப்பதைப் பரவலாகக் காண முடிகிறது.

இந்நாளில் திருமணத்திற்குப் பின்னர் மகன்கள் தம் பெற்றோருடன் வசிப்பதில்லை. பலர் திருமணத்திற்குப் பின்னர் தம் மனைவியுடன் தனியாக வசித்தாலும் தமது உறவினர் மற்றும் உறவு சார்ந்த கடமைகளைத் தொடர்ந்து போற்றிக் காக்கிறார்கள்.

பொதுவாகக் குடும்பத்தின் மூத்த ஆணைக் குடும்பத் தலைவராக அங்கீகரித்து, அவருக்கு உரிய மரியாதை வழங்குகிறார்கள். பெண்ணுக்கு இரண்டாவது நிலை தகுதியே வழங்கப்படுகிறது. குழந்தையைச் சமூகப் பழக்கத்திற்கு உட்படுத்துவதில் குடும்பம் முக்கியப் பங்கு வகிக்கிறது. இங்குத்தான் குழந்தை பரந்த சமுதாயத்தில் தன் உறவுக் குழுக்களின் பங்கினையும் நடவடிக்கைகளையும் ஒழுங்கு செய்து கட்டுப்படுத்தும் விதிமுறைகளைத் தனதாக்குகிறது. குழந்தை இங்குத்தான் சகோதர உறவுக்கும் திருமண உறவுக்குமான வேறுபாடுகளை அறிகிறது.

சமுதாய ஒற்றுமையில் உறவு முறை ஒரு முக்கியப் பங்கு வகிக்கிறது. பல சமுதாய மாற்றங்கள் நிகழ்ந்தாலும் வலுவான உறவுப் பிணைப்புகள் தொடர்கின்றன. திருமணம், இறப்பு, குடும்ப அளவில் குல தெய்வவழிபாடு போன்ற தருணங்களில் இப்பிணைப்புகள் வெளிப்படுகின்றன. பல்வேறு விவசாயப் பணிகளின்போதும், குறிப்பாக

நாற்று நடும்போதும் அறுவடையின்போது, உறவினர்கள் ஒருவருக்கொருவர் வேலைகளைப் பகிர்ந்து கொள்கின்றனர்.

உறவு முறைகளைப் பல்வேறு காரணிகள் ஒழுங்குபடுத்துகின்றன. வெவ்வேறு உறவுகளுக்கு வெவ்வேறு விதமான உறவுப் பண்புகள் உள்ளன. மரபுவழிப்படி சில உறவுகளிடையே தொடர்புகளைத் தவிர்த்தல் மற்றும் மதித்தல் என்ற பண்பு நிலைக்கிறது. உதாரணமாக, ஒரு திருமணமான பெண்ணிற்கு அவள் கணவரின் தந்தை (மாமனார்) மற்றும் மூத்த சகோதரருடன் (மச்சந்தா) இத்தகைய தவிர்த்தல் - மதித்தல் உறவே நிலவுகிறது. மணமான பெண் மேற்கூறிய உறவினருடன் இயல்பாக உறவாடுவது ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. அவர்களை நேருக்கு நேர் பார்த்துப் பேசுவதுகூட அனுமதிக்கப்படுவதில்லை. இது மிகுந்த மரியாதைக்குரிய உறவு முறைக்கான உதாரணம். இதேபோல ஓர் ஆணும் தன் மனைவியின் பெற்றோர் முன்னிலையில் ஒரு விதமான மதிப்புடன் நடக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இருப்பினும் பல விஷயங்கள் மாறியுள்ளன. முன்புபோல் எதுவும் வலியுறுத்தப்படுவதில்லை. சகோதர உறவுகள் மிகுந்த நட்பும் பாசமும் கொண்டுள்ளன.

சில உறவினர்களிடையே கேலியும் கிண்டலுமாகப் பேசும் உறவு முறை நிலவுகிறது. அத்தகையோர் திருமணம் செய்து கொள்வதற்குரிய மாமன் - மச்சான் உறவு முறை கொண்டவர்கள். அவர்கள் ஒருவருக்கொருவர் சடங்கு சம்பிரதாயத்திற்குட்பட்டவர்கள். மாமன் - மச்சான் உறவு கொண்டவர்களுக்குள் கேலி செய்வது வெகு சாதாரணமாக நிகழ்வதால் அதைச் சார்ந்த பல நாட்டுப் பாடல்கள் வழக்கத்தில் உள்ளன. திருமண வீட்டில் ஏற்றி இறக்கும் பாட்டின்போது மணமகள் மற்றும் மாப்பிள்ளை வீட்டார் ஒருவரையொருவர் கேலி செய்து பாடுவது இத்தகைய உறவினருக்கிடையேயுள்ள உறவு முறையின் வெளிப்பாடாகும். இத்தகைய உறவுமுறைப் பண்புகள் திருவிழாக்காலங்களில் ஆண்களால் பாடப்படும் கும்மிப்பாடல்களில் மாலை நேரங்களில் இளவயது பெண்கள் மற்றும் ஆண்களால் பொழுதுபோக்காகப் பாடப்படும் கும்மிப் பாடல்களில் வெளிப்படுகின்றன. இத்தகைய உறவுமுறைப் பண்புகள் வேளாண் சார்ந்த பணிகளில் ஈடுபடும்போது வெளிப்படுகிறது. அறுவடைக்குப் பின்னர் தானியங்களைத் தூற்றும்போது, தூற்றுபவர் முறத்தைத் தவறவிட்டால், மாமன் - மச்சான் முறைகொண்டவர் உடனடியாக ஓடி வந்து அந்த முற்றத்தின் மீது அமர்ந்து கொள்வார். முறத்தைத் தவறவிட்டவர் கீழ்க்காணும் பாடலைப் பாடும் வரையில், அவர் எழுந்திருக்க மறுப்பார்.

கல்லிலே எழுந்த மூங்கி
கருவறை அணைஞ்ச மூங்கி
ஓங்கி ஒரு வெட்டு வெட்டி
ஒரு பொள பொளந்து ஒரு சீவு சீவி
காணாங் கொறத்தி மக கால் கோட்டு செய்த மொறம்

என் கை அசந்து எமலோகம் ஓடிப்போன
பொன் மொறமே எந்திரி, எந்திரி பூ மொறமே

மேலே குறிப்பிட்டபடிக் கூறாவிட்டால் அன்றைய பொழுதின் கூலியை மாமன் - மச்சானிடமே கொடுத்துவிட நேரிடும். இத்தகைய உறவாடுதல்கள், உறவினர் ஒத்திருக்க வழி செய்வதோடு மட்டுமின்றி, களைப்புத் தெரியாமல் களிப்புடன் வேலைகளில் ஈடுபடவும் வழி வகுக்கின்றன.

**சமுதாயக் கட்டுப்பாடுகள்**

மரபு வழி அதிகாரங்கள் பஞ்சாயத்தின் மூலம் நடைமுறை படுத்தப்படுகிறது. மலையாளர் சமுதாயத்தை ஆள்வதற்கு ஏதும் எழுதப்பட்ட மரபுவழி கட்டுதிட்டங்களோ குறிப்பிட்ட விதிமுறைத் தொகுப்புகளோ இல்லை.

மரபுவழி ஆண்களிடம் அதிகாரங்கள் வெவ்வேறு நிலைகளில் அமைந்துள்ள கிராம ஆண்களிடம் அமைந்துள்ளன. அவர்களின் நிலையே அவர்களின் பங்கு மற்றும் செயல்பாடுகளைத் தீர்மானிக்கின்றன. பொதுவாக, பஞ்சாயத்துச் சார்ந்த பெரியோர்கள் மொத்தமாக ஊர் பெரியதனக்காரர் என்று அழைக்கப்படுகிறார்கள். தனிப்பட்ட முறையில் அவர்கள் பட்டக்காரர், நாட்டுக் கவுண்டர் மற்றும் பெரிய தனக்காரர் என்று அழைக்கப்படுகிறார்கள். நாட்டுக்கவுண்டரை, பெரிய கவுண்டர் என்றும் குறிப்பிடுகின்றனர்.

மரபுவழி அதிகார அமைப்புக் கீழ்க்காணும் வகையில் அமைந்துள்ளது. பட்டக்காரன், நாட்டுக் கவுண்டர், ஊர்க் கவுண்டர் மற்றும் கரக்காரர் ஆவர். தண்டல்காரர், இப் படிநிலை அமைப்பின் இறுதியில் அமைகிறார். பூசாரி என்றழைக்கப்படுபவரின் முக்கியப் பங்கு, சடங்கு சம்பிரதாயங்களையும் மதம் மற்றும் வழிபாடு சார்ந்த பணிகளையும் கவனிப்பதே! இவரும் கிராமப் பஞ்சாயத்துக் குழுவில் முக்கியப் பங்கு வகிக்கிறார். தண்டல்காரரைத் தவிர அனைத்துப் பொறுப்புகளும் மரபு வழி சார்ந்தவை. முன்னர்க் குறிப்பிட்டபடி இவை அனைத்தும் குறிப்பிட்ட வம்சாவழியைச் சார்ந்தவை. ஒவ்வொரு பொறுப்பிலிருப்பவரும் ஒருவருக்கொருவர் பரஸ்பர மரியாதை கொண்டிருக்கிறார்கள். இன்றும் கிராம விவகாரங்களில் கட்டுதிட்டங்களில் பாரம்பரிய வழிமுறைகளே பெரும் பங்குவகிக்கின்றன.

பட்டக்காரர், பெருமளவில் ஒரு சம்பிரதாயத் தலைவர் மட்டுமே. கொல்லி மலையில் மூன்று பட்டக்காரர்கள் இருக்கின்றனர். ஒருவரின்

அதிகார எல்லை, மூன்றிலிருந்து ஐந்து நாடுகள் வரையில் பரந்து விரிந்துள்ளது. அறப்பளீஸ்வரர் கோவிலில் ஆடிப்பதினெட்டு கொண்டாடப்படும்போது வளப்பூர்ப் பட்டக்காரர் முக்கியப் பங்கு வகிக்கிறார். ஆடிப்பதினெட்டின்போது வளப்பூர்ப் பட்டக்காரர், கோவில் வரை குதிரைமேல் ஏறி வந்து அறப்பளீஸ்வரரை வழிபடுவது வழிவழியாகக் கடைபிடிக்கப்படும் மரபாகும்.

ஒரு நபர் கவுண்டர் பட்டம் பெறும்போது பட்டக்காரர் அருகிலிருப்பது மிகவும் அவசியமாகும். பட்டக்காரன் என்ற தகுதியைப் பாரம்பரியமாக வளப்பூர், சேலூர் மற்றும் பெரக்கர நாட்டைச் சேர்ந்த பட்டக்காரர்கள் பெறுகின்றனர். ஒவ்வொரு நாட்டின் மரபுவழிப் பஞ்சாயத்திலும் ஒரு கவுண்டர், கரக்காரர், பூசாரி மற்றும் தண்டல்காரர் உள்ளனர்.

மேற்கூறிய தகுதிகள் ஒரு நாட்டில் உள்ள கிராமங்கள் அல்லது சிற்றூர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து ஒன்று அல்லது இரண்டாக இருக்கலாம். எடுத்துக்காட்டாக, வாழவந்தி நாட்டிற்கு வெவ்வேறு எண்ணிக்கையில் கிராமங்களைத் தம் அதிகார எல்லைக்குள் கொண்ட மூன்று கவுண்டர்கள் உள்ளனர். மேலும் வாழவந்தி நாட்டில் ஏழு கரக்காரர்களும் இரண்டு பூசாரிகளும், இரண்டு தண்டல்காரர்களும் உள்ளனர். இவ்விரண்டு தண்டல்காரர்களைத் தவிர ஒவ்வொரு பட்டி அல்லது ஊருக்கும் ஒரு தண்டல்காரர் உள்ளார்.

பொதுவாக ஒவ்வொரு பட்டி அல்லது ஊருக்கும் ஒரு பட்டி அல்லது ஊர் கவுண்டர் உள்ளார். கரக்காரரே ஊர் கவுண்டராக இருப்பதைப் பல ஊர்களில் காணலாம். சில சிற்றூர்களில் தண்டல்காரன் பட்டிக் கவுண்டராக இருப்பதைக் காணலாம்.

பல்வேறு மாற்றங்களின் தாக்கம் மலையாள சமுதாயத்தில் தென்பட்டாலும் மரபுவழிப் பஞ்சாயத்து இன்றும் மக்களின் அன்றாட வாழ்க்கையில் பெரும் முக்கியத்துவம் பெற்றுள்ளது. கிராமங்களுக்குள்ளும், குடும்பங்களுக்குள்ளும், தனி நபர்களுக்குள்ளும் உருவாகும் பல்வேறு உட்பூசல்கள் ஊர்ப் பஞ்சாயத்து அளவிலேயே தீர்க்கப்படுகின்றன. சில இளைஞர்களின் கூற்றுப்படி நவீன நீதிமன்றங்களில் வழக்குத் தொடுத்து, பலன்களோ தீர்வுகளோ கிடைக்காத அனுபவங்களின் அடிப்படையில் மீண்டும் பாரம்பரிய ஊர் பஞ்சாயத்தையே அணுகும் நிலைமை வந்துள்ளது. இருப்பினும் பெரியவர்களுக்கு 15-20 ஆண்டுகளுக்கு முன்பு கிடைத்த மதிப்பும் மரியாதையும் இப்போது இல்லை என்பதும் பலரால் கூறப்படுகிறது.

மேற்கூறிய ஆட்சியாளர்களைக் கொண்ட கிராமப்பஞ்சாயத்துக் குழு பல்வேறு பங்குகளையும் பணிகளையும் புரிகின்றது. ஊர்த் திருவிழா, திருமணம், இறப்பு போன்ற தருணங்களில் பெரியதனக்காரர் உடனிருப்பது இன்றியமையாததாகிறது.

வழக்கமாகக் கவுண்டரே பஞ்சாயத்துக் கூட்டங்களில் தலைமை வகிக்கிறார். கரக்காரர், பூசாரி, தண்டல்காரர் மற்றும் பஞ்சாயத்தின் ஆண் உறுப்பினர்கள் கூட்டங்களில் பங்கு வகிக்கின்றனர். பெரியோரும் பஞ்சாயத்துத் தலைவர்களும் தமது சமுதாயத்தின் மரபு மற்றும் வழக்கத்தின்படி செயல்படுகிறார்கள். பெருமளவிற்குப் பஞ்சாயத்துக்கள் அனைவரின் கருத்துக்கும் மதிப்புக் கொடுத்துச் செயல்படுகின்றது. இருப்பினும், திருமணம் போன்ற விஷயங்களில் மரபுவழியாகச் சமுதாய விதிமுறைகள் பெண்களுக்கு ஏற்ப முற்போக்காக இருந்தாலும் பெண்கள் அரசியல் அமைப்புகளில் இடம்பெறுவதில்லை. பெண்களின் வாழ்வில் இத்தகைய பங்கேற்புகள் அவசியம் என யாரும் கருதுவதில்லை. எனவே எந்தக் கூட்டத்திலும் அவர்கள் பங்கேற்பதில்லை. ஆனால் அவர்கள் குழு நடவடிக்கைகளைப் பார்க்கலாம். பெண்கள், பஞ்சாயத்துக் குழுவின் முன்னிலையில் நின்று தனது விவாதங்களை வழங்குவதற்கும், நிலையைத் தெளிவு செய்வதற்கும், கருத்துக்களைப் பிறர் உணரச் செய்வதற்கும் அவர்களுக்கு முழு உரிமை உண்டு. துயருக்குள்ளான ஒரு பெண்ணிற்கு மன ரீதியாக அங்கேயிருந்து ஆதரவளித்து அவள் பேசுவதற்குத் துணை நிற்க மற்றொரு பெண்ணும் பஞ்சாயத்துக் கூட்டத்திற்கு வருவதற்குத் தடை இல்லை.

பஞ்சாயத்துத் தலைவர்களும், மற்றவர்களும் கூட்டத்தில் வழங்கப்பட்ட ஒரு பிரச்சனை குறித்து ஒருமித்த கருத்துக்கு வருகிறார்கள். பொதுவாக, தொடர்புடைய நபர்கள், பஞ்சாயத்தின் முடிவுகளுக்குப் பணிந்து நடக்கிறார்கள். பஞ்சாயத்துக் குழு தீர்ப்பு வழங்குவதோடு நின்றுவிடாமல் தொடர்புடைய நபர்கள் தத்தம் கருத்து வேறுபாடுகளை மறந்து ஒற்றுமையுடன் நண்பர்களாக வாழவும் வழிவகை செய்கின்றது. பெரியதனக்காரர் முன்னிலையில் இரு குழுவினரும் தண்ணீர்ப் பரிமாற்றம் செய்து அதைக் குடிக்க வேண்டும். (மகிழ்ச்சிப் படுத்தி விடுவார்கள்). தவறுபவர்களை அபராதம் போட்டுத் தண்டிக்கப் (தண்டம்) பஞ்சாயத்திற்கு உரிமையுண்டு. அபராதத் தொகை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்படுகிறது. ஒன்று கவுண்டருக்கும், மற்றொன்று பாதிக்கப்பட்டவருக்கும் மூன்றாவது பகுதி கூட்டத்தில் கலந்து கொண்ட கிராம உறுப்பினர்களுக்கும் பிரித்து வழங்கப்படுகிறது. அபராதத்தைப் பிரிக்கும்போது தண்டல்காரருக்குக் கூடுதல் தொகை கிடைக்கும்.

தண்டனையும் அபராதமும் கோவிலிலோ, மந்தையிலோ சண்டை போடுபவருக்கு ஒரு விதமாகவும், திருமண உறவிற்கு நம்பிக்கைத் துரோகம் செய்யும் வகையில் முறையற்ற உறவில் ஈடுபடுவோருக்கு ஒரு விதமாகவும் அமையும். முதலில் கூறிய குற்றம், பஞ்சாயத்தில் 'தெவநாயம்' என வழங்கப்படுகிறது. (தெய்வ நியாயம்?) மக்களைப் பொருத்தவரையில் தெவநாயத்தில் ஈடுபடுவோர் தாமே தமது தவறை உணரும் நிலைக்குத் தெய்வசக்தி அவர்களைத் தள்ளிவிடும் என்று நம்புகிறார்கள். மந்தை போன்ற புனிதமான இடங்களில் சண்டையிடுவது மிகப்பெரும் குற்றமாக மலையாள சமுதாயத்தினரால் கருதப்படுகிறது.

ஊர்த்திருவிழா அல்லது ஊர் நோன்பு போன்ற கிராமத்தின் முக்கியமான கொண்டாட்டங்களைப் பற்றிப் பஞ்சாயத்துக் கூட்டம் கூட்டி முடிவு செய்கின்றனர். தேதி, பண்டிகையின் காலநேரம், அதற்கான செலவு, ஒவ்வொரு வீட்டாரின் பங்களிப்பு போன்ற விஷயங்களை முடிவு செய்தவுடன் கிராம மக்கள் பஞ்சாயத்தின் முடிவுகளுக்குக் கட்டுப்பட வேண்டும்.

திருமணம் போன்ற சமுதாய விழாக்களில் நாட்டுக்கவுண்டர் அல்லது ஊர் கவுண்டருக்கு முக்கியத்துவமும் மதிப்பும் வழங்கப்படுகிறது. சந்தனம் வைத்து வரவேற்பது, அமர்வதற்குப் பாய் வழங்குவது அதாவது முதல் பொட்டு, முதல் பாய் போன்ற முதல் மரியாதைகள் கவுண்டருக்கே வழங்கப்படுகின்றன. பின்னர் பூசாரி, கரக்காரர் மற்றும் பிற நாட்டுக்கவுண்டருக்கு (அவர்கள் வந்திருந்தால்) வழங்கப்பட்டு, இறுதியில் விருந்தினருக்கு வழங்கப்படுகின்றன. அன்பளிப்புகள் வழங்கும்போதும் (மொய் எழுதுதல்) கவுண்டரே முதலில் மணமகளுக்கும் மணமகனுக்கும் பரிசு வழங்குவார். திருமண நிகழ்ச்சியைத் துவங்கி வைப்பதற்கும், பரிசம் போடுவதற்கும் கூட அவர் இருப்பது அவசியம். மணமகளுக்குத் தரப்படும் பொருட்களும், நகைகளும் ஒரு காகிதத்தில் பட்டியலிட்டுக் கவுண்டரிடம் வழங்கப்படுகிறது. பின்னர் அதைக் கவுண்டர், மணமகன் வீட்டாரிடம் தருவார்.

சித்திரை மாதத்தில் நடத்தப்படும் உழுதல் சடங்கு (பொன்னேரு/ நல்லேரு கட்டுதல்) மற்றும் விதை விதைத்தல் (விதை மூர்த்தம்) சடங்குகள் நாட்டு/ ஊர்க் கவுண்டரால் நடத்தப்படுகின்றன. பின்னரே கிராமத்து மக்கள் அப்பருவத்துக்குரிய முதல் உழவையும் விதைப்பையும் தொடர்கிறார்கள். இதிலிருந்து மீறுவது குற்றம். மீறும் நபருக்குப் பஞ்சாயத்து அபராதம் விதிக்கும்.

கிராமத் திருவிழாக்கள் மற்றும் கிராம அளவிலான சடங்குகளின் போது கவுண்டர் மிக முக்கியப் பங்கு வகிக்கிறார். சேர்வைப் பாட்டு மற்றும் ஆண்டிக்கோலத்தில் ஈடுபடுபவர்கள் பெரியதனக்காரரின் ஆசியுடன் மந்தையிலிருந்து தம் பயணத்தைத் தொடர்வார்கள். மழையுடன் தொடர்புடைய சாணவேட்டு என்ற சடங்கும் மந்தையிலிருந்து கவுண்டர் அல்லது ஊர்க் கவுண்டர் சாமி வீட்டின் முன்பு பொங்கல் பானை வைத்த பின்னரே மக்கள் தத்தம் வீடுகளில் பொங்கலிடத் தொடங்குவார்கள். வழக்கமாகச் சாமி வீட்டில்தான் கிராம தெய்வத்தின் பொருட்கள் வைக்கப்படுகின்றன.

ஊரில் ஓர் இறப்பு நேர்ந்தாலும் கவுண்டருக்கு முதலில் தெரிவிக்கப்படுகிறது. கரக்காரருடன் சேர்ந்து சென்று அவரே பல்வேறு நடவடிக்கைகளையும் கண்காணிக்கிறார். அவர் முன்னிலையில்தான் இறுதிச் சடங்குகளுக்கான நாள் குறிக்கப்படுகிறது. பொங்கல் பண்டிகைக்கு முதல் நாள் கவுண்டரும் கரக்காரரும் அந்த ஆண்டில் இறப்பு நேர்ந்த வீடுகளுக்கெல்லாம் சென்று தமது இரங்கலைத் தெரிவிப்பார்கள். அது மட்டுமன்றித் துக்கத்தை மறந்து பண்டிகையைக் கொண்டாடும்படியும் ஆறுதல் கூறுவார்கள். வழக்கமாக, 'ஆனது ஆச்சு! சலுப்பு விட்டு விட்டு, வீட்டுக்கு வெள்ள அடிச்சுப் பொங்கல் கொண்டாடுங்க!'' என்று கூறுவார்கள்.

கரக்காரர் பொதுவாக, கவுண்டருடன் கிராமத்தின் அல்லது வீடுகளின் முக்கியக் கொண்டாட்டங்களுக்கு உடன் செல்வார். காரக்காரர், திருமணச் சடங்குகளில் மிக முக்கியப் பங்கு வகிக்கிறார். அவர் திருமணச் சடங்கை நிகழ்த்துகிறார். மணமகன், மணமகள் கழுத்தில் தாலியை வைப்பார். கரக்காரன்தான் அதைக் கட்டுகிறார். ஆனால் இந்நாட்களில் மணமகனே தாலியைக் கட்டுகிறார்.

தண்டல்காரர் ஒரு தகவலாளர். கூட்டம் திட்டமிடும்போது அறிவிப்பதும், கிராமத்தினர் அனைவருக்கும் தேவையான தகவலான நல்லேரு கட்டுதல் அல்லது ஊர் முகூர்த்தம் போன்றவற்றை அறிவித்து அந்நாட்களில் என்னென்ன செய்யலாம்; என்னென்ன செய்யக்கூடாது என்பதையும் அறிவிக்கிறார். முன்னரே குறிப்பிட்டபடி, இவர் வழிவழியாக இத்தகுதியை அடைவதில்லை. இவருடைய சேவைகளுக்குக் கட்டணமாக இவருக்குக் கிராமத்திலுள்ள குடும்பத்தினர், ஆண்டுக்கு இருமுறை பணமாகவோ பொருளாகவோ வழங்குகின்றனர்.

பூசாரிப் பதவிக்கான தகுதி குறிப்பிட்ட ஒரு வம்சாவழியினருக்கு மட்டுமே உள்ளதுதான். இருந்தாலும், தந்தைக்குப் பிறகு மகனுக்கு அல்லது

அண்ணனுக்குப் பிறகு தம்பிக்கு என இத்தகுதி கிடைப்பதில்லை. மாறாக, பூசாரியை ஒரு தெய்வீக சக்தியே அடையாளம் காட்டும். தெய்வ அருளால் ஆட்கொள்ளப்பட்ட நபர் அருள் கூறும்போது யாருக்குப் பூசாரியாகும் தகுதி இருக்கிறது என்பதைச் சூசகமாகச் சொல்வார் என்று மலையாள மக்கள் கூறுகிறார்கள். இத்தகைய அடையாளம் காட்டும் நிகழ்வை, 'சாமி தூக்கறது' என்றும் ''யாரைப்பாத்து சாமி தூக்கறதோ அவங்கதான் பூசாரியா வருவாங்க'' என்றும் பேச்சு வழக்கில் மக்கள் கூறுகிறார்கள்.

**மலையாளர்களின் நம்பிக்கை முறைகள்**

மலையாளர்கள், அதிக உள்ளூர்த் தெய்வங்களையும் தொன்மையான தெய்வங்களையும் வழிபடுகின்றனர். பெண் தெய்வங்கள் ஆண் தெய்வங்களைவிட அதிக எண்ணிக்கையில் உள்ளன. சாமி அழைத்தல் அல்லது தெய்வங்களை வருந்தி அழைத்தல் என்பது மலையாளர்களின் சமய வாழ்க்கையில் ஒரு முக்கிய அம்சமாகும். கொல்லி மலையில் சமுதாய அல்லது கலாச்சாரத் திருவிழா, பண்டிகைகளின்போது, கொல்லிமலைத் தெய்வங்களை வருந்தி அழைப்பது இவர்களின் வழக்கமாகும். பூசாரி தீய சக்திகளை விரட்டுவதற்கு முன்பு, பாடலின் மூலம் எல்லாத் தெய்வங்களையும் வந்தருளும்படி வேண்டுவார். இது பாமர மொழியில் பேய் ஓட்டுவது எனக் கூறப்படுகிறது. இதுபோலவே தெருக்கூத்துத் துவங்கும் முன்னரும் பங்கேற்பாளர்கள் கொல்லிமலைத் தெய்வங்களை அழைக்கிறார்கள்.

மலையாளர்களுக்குத் தங்கள் தெய்வங்கள் மிகவும் சக்தி வாய்ந்தவை என்றும் தவறு செய்பவர்கள் தம் தெய்வங்களிடமிருந்து தப்ப முடியாது என்றும், வலுவான நம்பிக்கை உள்ளது. ''கொல்லி மலைத் தெய்வங்கள் சும்மா விடாது'' என்பது இவர்கள் அனைவரும் அடிக்கடி கூறும் வாசகமாகும். தன் தவறை உணர்ந்து வருந்துபவருக்கு மன்னிப்புக் கிடைக்கும் என்ற நம்பிக்கையும் இங்கு நிலவுகிறது. சாமி குற்றம் புரிந்தவர் குற்றம் அல்லது அபராதம் கட்டி அதிலிருந்து விடுபடலாம் இல்லாவிடில் அவர் அமைதியின்றித் திரிவார். 'சாமி குத்தம் சும்மாவிடாது' என்று இவர்கள் அடிக்கடி கூறுகிறார்கள்.

எல்லாக் கிராமங்களிலும் பிள்ளையாருக்கென்று ஒரு கோவிலும் முக்கிய தெய்வமான ஊர் அல்லது கிராம தெய்வத்திற்கு ஒரு கோவிலும் உள்ளது. ஊர் சாமி என்பது மாரியம்மன், காளி அல்லது பிடாரி என எந்தத் தெய்வமாக வேண்டுமானாலும் இருக்கலாம். முக்கியப் பெண் தெய்வங்கள் ஏழு கன்னிமார் என அழைக்கப்படுகிறார்கள். வெவ்வேறு இடங்களில் உறையும் வெவ்வேறு கன்னிமார் பிடாரி, காளி, எட்டுக் கையம்மன்,

நாச்சியாயி, கொங்காயி, பொங்கலாயி என்ற பல்வேறு பெயர்களில் வழங்கப்படுகிறார்கள். முக்கிய ஆண் தெய்வங்கள் பெருமாள், பெரியசாமி மற்றும் அரங்கத்தப்பன் போன்றவர்கள். உள்ளூர்த் தெய்வங்கள் மிக எளிமையான அமைப்பின் கீழ் வசிக்கிறார்கள்; சில இடங்களில் மரத்தடியிலும் வெட்டவெளியிலும் உள்ளன. காடுகளிலும் காட்டு எல்லைகளிலும்கூடச் சில தெய்வங்கள் வசிக்கின்றன. வழக்கமாக, மலையாளிகள் வசிக்கும் கிராமங்களில் 'சாமி வீடு' என்று இருக்கும். பூசாரி அல்லது கவுண்டர் அல்லது கரக்காரர் பாதுகாப்பில் கோவில் திருவிழாக்களுக்குப் பயன்படும் பொருட்கள், இந்தச் சாமி வீட்டில் வைக்கப்படுகின்றன.



*கொங்காயி அம்மன் கோவில் விரகனூர்ப்பட்டி, சேலூர் நாடு*

கொல்லி மலை உள்ளூர்த் தெய்வங்களை வழிபடத் தம் வேண்டுதல்களோடு சமவெளியில் மலையின் கீழ் வசிக்கும் மக்களும் மேலே வந்து செல்கிறார்கள். இவற்றுள் மிகப் புகழ்பெற்ற தெய்வங்களாவன: சேலூர் நாட்டிலுள்ள விரகனூர்க் கொங்காயி அம்மன், குண்டூர் நாட்டின் அருகேயுள்ள நத்துக்குழியைச் சேர்ந்த மாசிப் பெரியசாமி கோவில், அரியூர் நாட்டின் மேல் கலிங்கத்திலுள்ள கொல்லிப்பாவை மற்றும் வளப்பூர் நாட்டின் அறப்பளீஸ்வரர் முதலியவையாகும்.

மலையாளர்களின் சமய வாழ்க்கையில் தூய்மை, தீட்டு போன்ற அம்சங்களும், சமயச் சடங்குகளில் அவற்றின் பங்கும் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளன. பெண்கள் தம் மாதவிலக்கின்போது கடவுள் வசிக்கும் இடத்தின் அருகே செல்வது தடை செய்யப்பட்டுள்ளது. கால்நடை மேய்ப்பதாயிருந்தாலும், விறகு சேகரிப்பதாயிருந்தாலும் தெய்வம் குடிகொண்ட இடத்தின் அருகே செல்வதை அவர்கள் விழிப்புடன் தவிர்க்கிறார்கள். கோவிலுக்குச் செல்லும் பாதையைக்கூட அவர்கள் நெருங்குவதில்லை.

திருவிழா நடக்கும் நாட்களில் பேறு காலம் மற்றும் மாதவிலக்கை எதிர்நோக்கும் பெண்கள் கிராமத்தில் தங்க அனுமதிக்கப்படுவதில்லை. அவர்கள் பக்கத்து ஊர்களிலுள்ள தம் உறவினர்களின் வீடுகளுக்குச் சென்றுவிடுகிறார்கள். தம் சமய வாழ்வில் மலையாளர்கள், தூய்மைக்கு எந்த அளவிற்கு முக்கியத்துவம் தருகின்றனர் என்பதற்கு இதுவே எடுத்துக்காட்டு. திருவிழாவிற்கு ஒரு வாரத்திற்கு முன் நடத்தப்படும் காய் வெட்டுதல் என்ற

சடங்கு, விழா நாட்களுக்குத் துவக்கமாக அமைகிறது. கிராமத்தினர் ஒருவரின் தோட்டத்திலிருந்து வாழைக்குலை வெட்டப்படுவதை இச்சடங்கு குறிக்கிறது. மேற்கூறிய பெண்கள் கிராமத்திலிருந்து செல்ல வேண்டும் என்பதை நினைவுறுத்தக் கீழ்க்காணும் அறிவிப்புச் செய்யப்படுகிறது. இது 'அறிக்கை விடுறது' என அழைக்கப்படுகிறது. கொங்காயி அம்மனை முக்கியத் தெய்வமாகக் கொண்ட சேலூர் நாட்டு விரகனூரில் 'ஓந்தன்' என்பவரால் இந்த அறிவிப்புச் செய்யப்படுகிறது. வழக்கமாகக் கீழ்க்காணும் அறிவிப்பு மறுநாள் காய் வெட்டுதல் நடக்கும் சூழலில் திங்கள்கிழமை நள்ளிரவில் செய்யப்படுகிறது.

சித்திரை பொறந்தது சிறுசெண்புக பூத்தது
அம்மனுக்குப் பச்ச கொல வெட்டனும்
பாதம் புடிக்கனும்
திரிகுல வெட்டணும்
திரிபாதம் புடிக்கணும்
காடு ஓடி பெண்கள் எல்லாம் காடு ஓடிப் போகணும்
ஈறு உயிரு பெண்கள் எல்லாம் எல்ல தாண்டிப் போகணும்

திருவிழாக்கள் 'ஊர் நோன்பி' என்றும் அழைக்கப்படுகின்றன. முதன்மைத் தெய்வத்தை, எடுத்துக்காட்டாக மாரியம்மா மற்றும் பிடாரியம்மாவைக் கௌரவிக்கும் விதமாக இவை ஆண்டுக்கு மூன்று அல்லது ஐந்து முறை அந்தந்தக் கிராமத்தின் வசதிக்கேற்ப நடத்தப்படுகின்றன. வழக்கமாக பங்குனி (மார்ச் - ஏப்ரல்) அல்லது சித்திரையில் (ஏப்ரல் - மே) கொண்டாடப்படுகிறது. இத்தகைய திருவிழாக்கள் மக்களுக்கு மன அளவில் பாதுகாப்பு உணர்வும், நிறைவும் வழங்குவதோடு மட்டுமின்றி உறவினர் ஒன்று கூடுவதற்கும் தத்தம் உறவை வலுப்படுவதற்கும் வாய்ப்பளிக்கிறது.

கிராமத் திருவிழாக்கள் (ஊர் நோன்பு) பெரும்பாலும் அதிகப் பொருட்செலவுடன் ஆடம்பரமாகக் கொண்டாடப்படுகின்றன. கிராமப் பஞ்சாயத்து நிர்ணயிக்கும் தொகையைக் கிராமத்தின் ஒவ்வொரு குடும்பத்தினரும் செலுத்துகின்றனர். கிராமத்தினர் அவரவர் நண்பர்கள் மற்றும் உறவினர்களையும் திருவிழாக்காலங்களில் தத்தம் வீடுகளுக்கு அழைக்கின்றனர்.


பொது வழிபாட்டைப் பொருத்தவரையில் ஆண்கள் தலைமைப் பொறுப்பு வகிக்கிறார்கள். பெண்கள் இரண்டாம் நிலையில் இணைப்பொறுப்பே வகிக்கின்றனர். சடங்குகளைத் துவங்கி, வழிநடத்திச்

செல்லும் மிக முக்கியப் பொறுப்பு வகிப்பவர் பூசாரிதான். பொதுவாகப் பாடல்கள் மற்றும் சடங்குகளின் மூலம் தெய்வங்களின் மனதைக் குளிரச் செய்கிறார்கள். முன்னர்க் குறிப்பிட்டபடி, தெய்வங்களை வருந்தி அழைத்தல் மலையாளர்களின் சமய வாழ்வில் முக்கியச் செயல்பாடாகும். பிள்ளையாரைப் போற்றிப் பாடுவதன் மூலம் துவங்கும் சடங்குகள், பின்னர் படிப்படியாக மற்ற தெய்வங்களையும் துதிப்பதாக அமைகின்றன. சடங்குகளையொட்டி வெவ்வேறு விதமான காணிக்கைகளும், நேர்த்திக் கடன்களும் செய்யப்படுகின்றன. அவையாவன: மாவிளக்கு, பொங்கல், தேங்காய், பழம் மற்றும் சில நேரங்களில் கால்நடைகளும் பலியிடப்படுகின்றன. சமயச் சடங்குகளின் போது ஆனைத்தழை மிக முக்கியப் பங்கு வகிக்கின்றது. அதாவது சமவெளி மக்கள் வேப்பிலையைப் பயன்படுத்துவது போல கொல்லி மலையில் இத்தழை பயன்படுத்தப்படுகிறது.

ஒரு வாரத்திற்குத் திருவிழாக் கொண்டாட்டங்கள் தொடர்கின்றன. அதைத் தொடர்ந்து கோவில் மந்தையில் பெரியதனக்காரர், ஊர்ப்பெரியவர்கள் மற்றும் கிராமப் பஞ்சாயத்துக் குழுவினரின் முன்னிலையில் பட்டாசுகள் வெடிக்கப்படுகின்றன. திருவிழா அல்லது நோன்பு முதல் நாள் விநாயகருக்கு விசேஷ பூசையுடன் துவங்கி, தேரில் ஊர் முழுவதும் மற்றும் மாரியம்மன் கோவிலைச் சுற்றிக் கொண்டு செல்வதுடன் நிறைவடைகின்றது. வழக்கமாக ஆடு அல்லது கிடா பலியிடப்படுகிறது. சம்பிரதாயச் சடங்குகள் அடிப்படையில் வெகு விமரிசையாகக் கொண்டாடப்படும் ஊர் நோண்பு 'ஆண்டு எடுக்கறது' என்று வழங்கப்படுகிறது.

திருவிழா என்பது மக்கள் இறைவனிடம் தம் வேண்டுதல்களுக்காகவும், தமது பிரார்த்தனைகளை நிறைவேற்றியதற்காகவும் நன்றிக்கடன் மற்றும் நேர்த்திக்கடன் செலுத்தும் நேரமாகும். சில பெண்கள் சீதக்குடம் எடுப்பர். ஆண்கள் காவடி எடுப்பர். ஆண்கள் தீச்சட்டி எடுத்து மாரியம்மனைப் புகழ்ந்து பாடல்கள் பாடுவது, தமது உடல் நலனுக்காகத் தெய்வத்திற்கு நன்றி செலுத்தும் ஒரு வழியாகும். குடும்பத்தினர் எவருக்கும் அம்மை நோய் தாக்கியிருந்தால் குறிப்பாக தீச்சட்டி எடுப்பதாக நேர்ந்து கொள்கின்றனர்.

பெரிய அளவில் பொருட்செலவில்லாமல் எளிமையாக ஒரு திருவிழா கொண்டாடப்பட்டால் அது 'சம்பர்ட்ட' என்று அழைக்கப்படுகிறது. சம்பர்ட்ட என்பது ஊர் முக்கியத் தெய்வம் அல்லது மாரியம்மன் கோவிலில் ஒரே ஒரு நாள் பூசையுடன் முடிகிறது. ஆனால் திருவிழாவின்போது ஊரிலுள்ள, மற்ற எல்லாக் கோவில்களிலும் சிறப்புப் பூசை செய்யப்படுகிறது.



*ஆடி 18 திருவிழா*
*அறப்பளீஸ்வரர் கோயில்*

மலையாளர்களால் கொண்டாடப் படும் முக்கியப் பண்டிகைகள் ஆடிப் பதினெட்டு, பொங்கல் மற்றும் தீபாவளியாகும். ஆடி நோன்பு அல்லது ஆடிப் பதினெட்டு மலையாளர்களுக்கான முக்கியமான பண்டிகையாகும். ஆடிப் பதினெட்டு அறப்பளீஸ்வரர் கோயிலில் மிக விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. ஆடி மாதம் முழுவதும் மிகச் சமயச்சிறப்பு வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. சமவெளி களிலிருந்து பெருந்திரளாக மக்கள் தமது வேண்டுதல்களைச் செலுத்த வருகின்றனர். ஆடி 17, 18 மற்றும் 19 கோவிலில் கொண்டாட்டத்திற்குரிய முக்கிய நாட்களாகும்.



*கம்பச்சேர்வை*

பொங்கல் பண்டிகை அடுத்த முக்கிய இடம் வகிக்கிறது. பொங்கல் பண்டிகை ஐந்து நாட்கள் கொண்டாடப்படுகிறது. பொங்கலின் போது அனைவரும் தமது உறவினர்களின் வீடுகளுக்குச் செல்கிறார்கள். பொங்கலின்போது அல்லது பொங்கலையடுத்து மலையாளர்களின் வீடுகளுக்குச் செல்பவர்கள் வெறுங்கையுடன் திரும்புவதில்லை. தேங்காய் அல்லது பழம் தந்து கௌரவிக்கப்படுகிறார்கள். பொங்கலின்போது வீட்டுத் தெய்வங்களுக்கும் மலையாளர்களின் முன்னோர்களுக்கும் பிரார்த்தனைகள் நடத்தப்படுகின்றன. பிற தருணங்களில் முன்னோர்களை நினைவு கூர்வதோடு மட்டும் நின்றுவிடுகிறார்கள். இந்தச் சமயத்தில் மட்டுமே வழிபடுகிறார்கள்.

கொல்லி மலையில் பொங்கல் பண்டிகை என்று நினைக்கும்போது கம்பச் சேர்வை மற்றும் ஆண்டிக் கோலம் என்ற மூன்று மிக முக்கிய அம்சங்கள் நினைவுக்கு வருகின்றன. பொங்கல் பண்டிகை நாட்களில் தெய்வாம்சம் பொருந்தியதாகக் கருதப்படும் ஒரு மாட்டை அலங்கரித்து அதை ஒவ்வொரு வீட்டிற்கும் ஆண்கள் கூட்டமாகப் பாடிக்கொண்டு அழைத்துச் செல்வர். இவ்வாறு சேர்ந்து செல்வதைச் சேர்வை என்றும், இப்பாடல்களைச் சேர்வைப் பாட்டு என்றும் வழங்குவர்.

சேர்வை மாடு மிகப் புனிதமாகக் கருதப்படுகிறது. ஏனென்றால், கொல்லி மலையாளர்களைப் பொறுத்தவரையில் அது கடவுள் பெருமாளின் வடிவமாகவே கருதப்படுகிறது. ஒவ்வொரு வீட்டாரும் தன் வீட்டின் முன் வாழையிலை விரித்து, மாட்டை அதன் மேல் நிற்கச் செய்து வரவேற்பார்கள். வீட்டிற்குப் பெரியவர் ஒருவர் சம்பிரதாயப்படி சேர்வை மாட்டின் காலைக் கழுவி விடும் சடங்கை நிறைவேற்றுவார். பின்னர் வீட்டின் நபர்கள் அனைவரும் அதன் நல்லாசிகளைப் பெறுவார்கள். குழந்தைப் பாக்கியம் இல்லாத பெண்கள் சேர்வை மாட்டை வணங்கினால், அதன் ஆசியால் அவர்கள் குழந்தை வரம் கிடைக்கப் பெறுவார்கள். அவரவர் விருப்பத்திற்கேற்பக் குடும்பத்தினர் சேர்வை மாட்டுக்குத் துண்டு, வேட்டி அல்லது புடவையை அரிசி, வாழைப்பழம் மற்றும் தேங்காயுடன் சேர்த்து வழங்குவார்கள். சேர்வைப் பாட்டைப் பாடிக்கொண்டே ஆண்கள் ஒரு குழுவாகச் சேர்வை மாட்டின் பின் செல்வார்கள். சேர்வையின் மற்றுமொரு களிப்பூட்டும் அம்சம், கோமாளி என்கிற நகைச்சுவைப் பாத்திரமாகும். கோமாளி, சேர்வை மாட்டைப் பின் தொடர்ந்து சென்று விழாவிற்குக் கலை சேர்க்கிறார்கள். கிராமத்தினர் கோமாளிக்குப் பரிசுகளும் வழங்குகிறார்கள். கோமாளி, அவர் பாடலின் மூலம் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அன்பளிப்புக் கேட்கிறார். அவரது பாடலில் ஏராளமான நகைச்சுவை உணர்வு ததும்புகிறது. ஆண்டிக்கோலம் என்பது ஒருவர் ஆண்டியாக வேடமிட்டு வீடு வீடாகக் குறி சொல்பவர் போல் வருவதேயாகும். இது மக்களுக்கு மிக்க களிப்பூட்டுவதோடு மட்டுமல்லாமல் வருபவரையும் செழிப்பாக்குகிறது. இந்த இரண்டிலும் சேர்வையைப் பொருத்தவரை சமய முக்கியத்துவம் மிகுந்துள்ளது. இவ்விரண்டு குழுக்களும் மக்களுக்குச் சோர்வு நீக்கி உற்சாகம் அளிக்கின்றன.

பொங்கலுக்கு முன்னர் மார்கழி மாதத்திலும் மக்கள் தமது மகள்கள், மகன்கள், சகோதரர்கள், பெற்றோர் போன்றோரைக் காணச் செல்கிறார்கள். இவ்வாறு செல்லும்போது அவர்கள் தயாரித்த தின்பண்டங்களையும் வாழைப்பழங்களையும் கொண்டு செல்கிறார்கள். தீபாவளியும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. தீபாவளியின்போது, சிறப்பாகப் பணியாரம் என்ற பலகாரம் தயாரிக்கப்படுகிறது. சித்திரைப் பொங்கலும் தமிழ் வருடப்பிறப்பும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

புரட்டாசி மாதம் சனிக்கிழமைகள் மலையாளிகளின் சமய வாழ்வில் மிக முக்கியமான நாட்களாகும். புரட்டாசி சனிக்கிழமைகளன்று விரதமிருந்து பெருமாளுக்குத் தமது சிறப்பு வழிபாடுகளை வழங்குகிறார்கள். இவ்வாறு விரதமிருப்பதை 'கிழமை புடிக்கிறது' என்று கூறுகிறார்கள்.

எல்லா முக்கிய நாட்களிலும் மலையாளர்கள் தம் முன்னோரை நினைவு கூர்ந்து சிறப்பான காணிக்கைகள் செலுத்துகிறார்கள். முன்னோர்களில் பெண்களை வீட்டிலேயே வழிபடுகிறார்கள். புதுத்துணி அல்லது புடவையை ஒரு மண் பானையில் வைக்கிறார்கள். இத்துணி இறந்துபோன முன்னோரைக் குறிக்கிறது. ஆண்களை வீட்டுக்கு அருகே திறந்தவெளியில் மரத்தின் கீழ் புதைத்து அதன் மேல் சூலம் வைக்கிறார்கள். இதற்குக் காரணம் கேட்டபோது வாழவந்தி நாடு ஐயன் பூசாரி உட்பட்ட பல நபர்கள் மிக சாதாரண தொனியில் கீழ்க்காணும் காரணத்தைக் குறிப்பிட்டார்கள். "ஏனென்றால் பெண்கள் வீட்டுக்குள்ளேயே இருக்கிறார்கள்; ஆண்கள் எப்போதும் வீட்டுக்கு வெளியே இருக்கிறார்கள்". ஆண் முன்னோர்களைக் கருப்பு என்றும் பெண் முன்னோர்களைக் கன்னிமார் என்றும் வழங்குகிறார்கள். ஒவ்வொரு வம்சமும் அவரவர் முன்னோரை நினைவூட்ட ஓர் இடத்தைத் தேர்வு செய்கிறார்கள். மக்கள் தமது வேண்டுதல் நிறைவேறியதற்காகவும் சூலத்தைக் கருப்பிற்குக் காணிக்கையாகச் செலுத்துகிறார்கள்.

மலையாள மக்கள் திருத்தலயாத்திரையாக பழனி, திருவரங்கம் மற்றும் திருப்பதிக்குச் செல்கிறார்கள். கூட்டமாகச் சபரி மலைக்குச் செல்வதும், இவர்களின் வழக்கம். நவீன போக்குவரத்து வசதிகள் இல்லாத நாட்களிலும் தொலைதூரப் பாத யாத்திரைகள் மேற்கொள்வது இவர்களின் வழக்கமாக இருந்திருக்கிறது. தமது முன்னோர்கள் இத்தகைய யாத்திரைகள் செல்லும்போது அரிவாள் கொண்டு செல்வது குறித்துத் தாம் கேள்விப்பட்டிருப்பதாகக் கூறினார்கள். தாங்கள் செல்லும் வழியில் எல்லாம் அறுவடை செய்து தங்கள் பிழைப்புக்கு வழி தேடிக்கொள்ளவே அரிவாள் கொண்டு சென்றதாகக் கூறினர். அவர்கள் வீடு திரும்பப் பல மாதங்கள் ஆகிவிடும் என்றும் குறிப்பிட்டனர்.

**சாமி சோலை**



*அய்யனப்பாட்டன் சோலை, படசோலை, திருப்புளிநாடு*

கிராமத்தைச் சுற்றியுள்ள பல இடங்களிலும் சிறு வனாந்திரங்களிலும் தானாகவே வளரும் பல வனச் செடி கொடிகள் மற்றும் மரங்கள் வளர்ந்துள்ளன. இதுபோன்ற இடங்கள் கொல்லி மலை மக்களின் தெய்வங்களுக்கு வசிப்பிடமாகக் கருதப்படுகின்றன. சேலூர் நாட்டின் விரகனூர்க் கொங்காயி அம்மன், அரியூர் நாட்டின் மேல் கலிங்கத்தின் எட்டுக்கை அம்மன் அல்லது கொல்லிப்பாவை, வளப்பூர் நாட்டின் கருவூரைச்சார்ந்த நத்தத்தம்மாள் போன்ற தெய்வங்கள்

சோலையுடன் தொடர்பு கொண்டவை. சோலைகளிலேயே இத்தெய்வங்கள் வசிப்பதாக மக்கள் நம்புகின்றனர். இக்காரணத்தால் இத்தகைய சாமி சோலைகளை அழிப்பதன் மூலம் தெய்வத்தின் சினத்திற்கு ஆளாக நேரிடும் என்று மக்கள் நம்புகிறார்கள். இங்குள்ள செடிகொடிகள் மற்றும் உயிரினங்களுக்குத் தீமை விளைவிப்பதும், விரும்பத்தகாத களிப்பூட்டும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதும் தெய்வங்களுக்கு எரிச்சலூட்டும் என்று நம்புகிறார்கள். பெண்கள் தமது மாதவிலக்குக் காலங்களில் சாமி சோலைகளின் அருகே கூடச் செல்வதில்லை. சில சாமி சோலைகளில் ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு மேல் பெண்கள் செல்வது அனுமதிக்கப்படுவதில்லை. வளப்பூர் நாட்டின் கருமூரைச் சார்ந்த நத்தத்தம்மாள் கோவிலுக்குச் செல்ல விரும்பும் பெண்கள் சில விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும். வெள்ளை நிறத்துணி உடுத்தியே அவர்கள் செல்ல வேண்டும். சட்டை அணிதல், பொட்டு வைத்தல், பூ வைத்தல் மற்றும் பல நகைகளை அணிதல் தெய்வத்திற்குப் பிடிக்காத செயல்கள் எனத் தடை செய்யப்பட்டுள்ளன.

சாமி சோலையைப் பற்றிய நம்பிக்கைகள், கருத்துக்கள் மற்றும் சமுதாயத்தின் கட்டுதிட்டங்கள் எல்லாம் ஓரளவிற்குச் சோலைகளின் அழிவைத் தடுத்துப் பராமரிப்பதற்கு உதவும் வகையிலேயே அமைந்துள்ளன. இருப்பினும் பல சோலைகள் முற்றிலும் அழியத் துவங்கி விட்டன. தேவானூர் நாட்டைச் சேர்ந்த அரிப்பலாப்பட்டியின் பிடாரி அம்மன் சோலை தற்போது ஒரு சில மரங்கள் கொண்ட தரிசு நிலமாகக் காணப்படுகிறது.

மக்கள், எத்தகைய பாதிப்புகள், அழிவுகள் நேர்கின்றன என்பதை உணர்ந்திருந்தாலும், தங்களால் ஏதும் செய்ய முடியாது என்ற இயலாமையை வெளிப்படுத்துகின்றனர். இருப்பினும் சாமி சோலைக்குச் சேதம் விளைவிப்பவர்கள், தெய்வத்தின் கோபத்திலிருந்து தப்ப முடியாது என்றும் எப்படியாவது தண்டிக்கப்படுவார்கள் என்றும் கூறுகின்றனர். சாமி சோலையிலுள்ள மரங்களை வெட்டியதால் இன்றும் அவதியுறும் குடும்பங்களைப் பற்றியும் கூறுகின்றனர்.

மலையாளர்கள் பொதுவாக நல்ல சகுனம், கெட்ட சகுனத்தை நம்புகிறார்கள். ஒரு முக்கியமான வேலை நிமித்தமாக வீட்டை விட்டுச் செல்லும்போது பூனை மற்றும் பாம்பு குறுக்கே போவது, விறகு, காலிப்பானை அல்லது புதுப்பானை எடுத்துக் கொண்டு போகின்றவர் எதிரே வருதல் மோசமான சகுனங்களாகக் கருதப்படுகின்றன. வெளியே வரும்போது தலை கூரையில் தட்டுவதும் மோசமான சகுனமாகக் கருதப்படுகிறது. வெளியே கிளம்பும்போது ஏதாவது கெட்ட சகுனம்

நேர்ந்தால் புறப்பட்டவர் மீண்டும் உள்ளே வந்து தண்ணீர் குடித்து விட்டுப் பிறகு புறப்படுகிறார். கெட்ட சகுனத்தை எதிர்கொள்ளும் சக்தி தண்ணீருக்கு உண்டு என நம்புகிறார்கள். பச்சை மரக்கிளை சாய்ந்து விழுவதும், அண்டங்காக்கை கரைவதும், ஆந்தை அலறுவதும் குடும்பத்திற்குத் துரதிர்ஷ்டம் சேர்க்கும் என நம்பப்படுகிறது. இதுபோலவே, சிலவற்றைப் பார்ப்பது நல்லதாகவும் கருதப்படுகிறது. தண்ணீர் நிறைந்த குடம், பழங்களைக் கொண்டு செல்லுதல், படுத்திருந்த நாய் உடலைச் சிலிர்த்துக் கொண்டு எழுதல், சாம்பல் நிறக் காக்கை கரைதல் போன்றவை நல்ல செய்தியைக் கொண்டுவரும் என நம்புகிறார்கள். யாராவது ஒரு முக்கிய நிகழ்ச்சியை விவரித்துக் கொண்டிருக்கும்போது காக்கை கரைவது நல்ல சகுனமாகவும் பேசிய விஷயத்திற்குச் சான்றளிப்பதாகவும் கருதப்படுகிறது.

மலையாளர்களுக்குச் சனிக்கிழமையும், செவ்வாய்க்கிழமையும் விசேஷமற்ற நாட்கள். இந்த இரு நாட்களில் அவர்கள் எந்த முக்கியச் செயலையும் துவங்குவதில்லை.

மழையைச் சார்ந்த சில நம்பிக்கைகள் இவர்களிடையே உள்ளன. சூரியனைச் சுற்றியுள்ள வட்டம் தொலைவிலிருந்தால் உடனடியாக மழை பெய்யும், விலகியிருந்தால் தாமதமாகப் பெய்யும் என்றும் நம்புகிறார்கள். மாசி, பங்குனி மாதங்களில் மேற்குத் திசையிலிருந்து பெய்யும் மழை பயிர்களுக்கு நல்லது என்றும், கிழக்குத் திசையிலிருந்து வரும் மழை 'வெள்ளாமையைக் கெடுக்கிற மழை' என்றும் கருதப்படுகிறது. வடக்கே மின்னல் வெட்டுவது மழைக்கு அறிகுறி எனக் கருதுகிறார்கள். கோழி தன் இறக்கைகளை விரித்து பூமியில் உட்கார்ந்து தாகத்தில் இருப்பது போலத் தன் அலகை விரித்து உட்கார்ந்திருந்தால் மழையை எதிர்பார்க்கலாம் என்று நம்புகிறார்கள்.

**வாழ்க்கைச் சடங்குகள்**

ஒவ்வொருவரின் வாழ்விலும் வெவ்வேறு கட்டங்களில் சடங்குகள் இடம் பெறுகின்றன. பிராமண குருமார்கள் திருமணம் போன்ற சடங்குகளை நடத்த அழைக்கப்படுவதில்லை.

குழந்தைப் பிறப்பு, குடும்பத்தினர் வரவேற்கும் ஒரு விஷயமாகும். குழந்தைக் கருத்தரிப்பையொட்டியோ, பிறப்பையொட்டியோ அல்லது பெயர் வைக்கும் நாளையொட்டியோ ஏதும் முக்கியமான சடங்குகள் இடம்பெறுவதில்லை. கொல்லி மலையாளர்கள் பெரும்பாலும் கீழ்க்காணும் பெயர்களை வைக்கிறார்கள். கொங்கன், வடமன், பிடாரி, ஸ்ரீரங்கன், சின்னமுத்து, பொன்னுசாமி, காளி என்று ஆண்களுக்கும், கொங்காயி,

வடமாயி, பொன்னம்மா, பாப்பாயி, பிடாரி, காளி போன்ற பெயர்கள் பெண்களுக்கும் சூட்டப்படுகிறது. தற்போது சினிமா நடிகர்களின் பெயர்கள் மலையாளர்களிடையே பிரபலமாக உள்ளன. பிறந்த உடன் எந்தச் சடங்கும் இல்லையெனினும் முதல் ஏழிலிருந்து பதினைந்து நாட்களுக்குத் தாயும் குழந்தையும் தூய்மையற்றவர்களாகக் (தீட்டுப்பட்டவர்களாக) கருதப்படுகிறார்கள். பிறப்புக்குப் பின் மூன்றாவது நாளில் தாய்க்கும் குழந்தைக்கும் ஒரு சம்பிரதாயமான குளியல் அளிக்கப்படுகிறது. தாய்க்குக் கோழிக்குழம்புடன் கேழ்வரகுக்களி அல்லது நெல் சோறு அளிக்கப்படுகிறது. இவ்வாறு குளிப்பாட்டி மேற்கூறிய உணவைத் தாய்க்கு அளிப்பது, மூணாம் நாள் தீட்டுக் கழிக்கிறது என்றழைக்கப்படுகிறது. இதுபோலவே ஏழாவது நாளும் தீட்டுக்கழிக்கப்படுகிறது. சில வீடுகளில் பதினைந்தாம் நாளும் இது தொடர்கிறது. குழந்தை பிறந்த பிறகு தாய்க்குத் தொடர்ந்து தினைக்கஞ்சி வழங்கப்படுகிறது. இது தாயின் வயிற்றைச் சுத்தப்படுத்த உதவுகிறது என்று கூறுகிறார்கள்.

குழந்தை பிறந்த பிறகு ஒரு குறிப்பிட்ட நாட்கள் வரை குடும்பத்தினருக்கும் குழந்தையின் நெருங்கிய தந்தை வழி உறவினர்களும் தீட்டுப்பட்டவர்களாகக் கருதப்படுகிறார்கள். குடும்பத்தினர் அல்லாதவர்கள் பெரும்பாலும் தீட்டுக் கொண்ட குடும்பத்திலிருந்து உணவு உட்கொள்வதில்லை.

ஐந்தாவது அல்லது நான்காவது மாதத்தில் சம்பிரதாயமான உணவு ஊட்டுதல் நடக்கிறது. அந்நாளில் இனிப்புப் பொங்கல் தயாரிக்கப்படுகிறது. கடவுளுக்குப் படையலிட்ட பின்பு பெரியவர்கள் குழந்தைக்கு இனிப்புப் பொங்கல் ஊட்டுகிறார்கள். குழந்தைக்கு உணவு ஊட்ட குறிப்பாக நல்ல மனம் கொண்டவர்களை அழைப்பார்கள். நெருங்கிய உறவினர்கள் மட்டுமே அழைக்கப்படும் இந்தச் சடங்கின் முடிவில் விருந்து வழங்கப்படுகிறது. ஓராண்டு நிறைந்த பிறகு எளிய முறையில் விருப்பத்திற்குரிய கோவிலில் குழந்தைக்கு மொட்டை அடிக்கும் சடங்கு நடைபெறுகிறது.

மலையாளர்கள் பெண் குழந்தைக்கும் ஆண் குழந்தைக்கும் காது குத்துவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். இது வழக்கமாகக் குழந்தைக்கு ஒன்றரை வயதாகும்போது செய்யப்படுகிறது. காது குத்தும் சடங்கு சமூக முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியாகும். இந்நிகழ்ச்சி ஓரளவிற்கு விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. விருந்திற்கு வரும் உறவினர்கள் குழந்தைக்குப் பரிசுகளோ மொய்ப்பணமோ வழங்குகிறார்கள். இந்நாளில் ஆண் குழந்தைகளுக்குக் காது குத்தப்படுவதில்லை. இச்சடங்கில் குழந்தையின் தாய்மாமனுக்கு மிக முக்கியப் பங்கு உண்டு.

பாரம்பரியமாக, பூப்படைதலையொட்டி ஆடம்பரமாகவோ விரிவாகவோ சடங்குகள் எதுவும் செய்யப்படுவதில்லை. ஏனென்றால் அது தீட்டுச் சார்ந்த விஷயமாகவே கருதப்படுகிறது. இது குடும்பத்தினருக்கும் பெற்றோருக்கும் ஒரு மகிழ்ச்சியான தருணமாகக் கருதப்படுகிறது. பூப்படைதலையொட்டிப் பெண்ணை 15-30 நாட்கள் தனித்திருக்கச் செய்கிறார்கள். தீட்டுக்குடிசை எனப்படும் ஒரு குடிலில் பெண்ணை இருக்கச் செய்கிறார்கள். பெண்ணுக்கு உளுத்தங்களி, முட்டை மற்றும் நல்லெண்ணெய் அளிக்கப்படுகிறது. தீட்டு நாட்களில் நெருங்கிய உறவினர்கள் நல்ல உணவுப் பொருட்களுடன் பெண்ணை வந்து சந்திக்கிறார்கள். வழக்கமாகப் புளிச்சோறு கொண்டு வருகிறார்கள்.

ஓடையிலோ கிணற்றிலோ அவளுக்குக் குளியல் அளிக்கப்படுகிறது. அன்று அவளுக்குப் புதுத்துணிகள் வழங்கப்படுகின்றன. இவ்வாறு மிக எளிமையாக இருந்த இச்சடங்கு இன்று அதிக ஆடம்பரமாக மாறி வருகிறது.

மூன்று மாதத்திற்குப் பெண்ணும் அவள் குடும்பத்தினரும் தீட்டுப்பட்டவராகக் கருதப்படுகிறார்கள். பெண் மூன்று மாதத்திற்கு அதிகமாக வெளியில் நடமாடுவதில்லை.

**திருமணம்**

மலையாளர்களின் மரபுப்படி திருமணம் மிக எளிய செலவற்ற சடங்குதான். இருப்பினும் உறவினர்களும் நண்பர்களும் ஒன்று சேரும் மிக மகிழ்ச்சியான சடங்காகக் கருதப்படுகிறது.

மாப்பிள்ளை வீட்டார் பெண்ணைக் கேட்பதைத் தொடங்குகிறார்கள். ஒரு நல்ல நாளில் மணமகனின் நெருங்கிய உறவினர்கள் ஊர் பெரியதனக்காரர் மற்றும் பெரியோருடன் சேர்ந்து பெண் வீட்டுக்குச் செல்கிறார்கள். பெண் வீட்டார் மகிழ்வுடன் உபசரிக்கிறார்கள். பெண் வீட்டார் மாப்பிள்ளை வீட்டாரை விசாரிக்கும் மரபுமிக இனிமையானது. பெண்வீட்டாரின் சார்பாக அந்த ஊர்ப் பெரியதனக்காரர் ஒருவர் மாப்பிள்ளையின் உறவினரைப் பார்த்து "என்ன கண்டு வந்தது உறவுமுறை?" என்று கேட்கிறார்கள். அங்கு வந்ததற்கு என்ன காரணம் என்பதையே இப்படிக் கேட்கிறார்கள்.

மாப்பிள்ளை வீட்டாரின் சார்பில் அந்த ஊர்க்கவுண்டர், "பெண்ணுள்ள வீட்டிற்குள் பூவுள்ள வீட்டிற்குள் புகுந்து பெண் கேட்க வந்தேன்" என்று கூறுவார். மீண்டும் முதலில் கேட்ட கேள்வியையே பெண்

வீட்டார் கேட்பார்கள். அதற்கு மாப்பிள்ளை வீட்டார், ''விக்னேஸ்வரனைக் கண்டு வந்தேன்'' என்று கூறுவார்கள். அதற்குப் பின்னரும் ஒரு முறை அதே கேள்வியைப் பெண் வீட்டார் கேட்கும் போது மாப்பிள்ளை வீட்டார், ''சந்திர சூரியனைக் கண்டு தேரடியில் உட்கார்ந்தேன். பெண்ணுப்பரிசத்தைச் சொல்லுங்க'' என்று கூறுவார்கள். இதற்குப் பின்னர் இரு வீட்டாரும் இணைந்து பரிசத்தொகைகளைப் பேசி முடிவு செய்வார்கள். பரிசத்தொகை என்பது பெண்ணுக்கு மாப்பிள்ளை வீட்டாரால் வழங்கப்படும் தொகை. அந்நாட்களில் அதாவது அறுபது ஆண்டுகளுக்கு முன் இத்தொகை ரூபாய் ஐந்து என்ற அளவில் இருந்ததாகப் பெரியவர்கள் நினைவு கூர்கிறார்கள். மரபுப்படி, பரிசப்பணம் என்பது பதினாறேகால் (ரூ.16.25) ரூபாய் என இருந்தது. ஆனாலும் அத்தொகை இதைவிடச் சில நூறு ரூபாய் அதிகமாகவும் இருக்கலாம். பரிசப் பணத்தைப் பொறுத்தவரையில் மற்றொரு குறிப்பிடத்தக்க விஷயம் என்னவென்றால் அதில் ஒரு பங்கு பெண்ணின் தாய்மாமனுக்கு வழங்கப்படுவதாகும். அதை உரிமைக்காரன் காசு என்று அவர்கள் வழக்கத்தில் கூறுவார்கள். சகோதரியின் மகளைத் திருமணம் செய்யும் உரிமை முதலில் தாய்மாமனுக்கு இருப்பதால் உரிமைக்காரன் காசு மாமனுக்கு வழங்கப்படுகிறது. இந்தப்பணத்தை வழக்கமாகத் தாய்மாமன், தன் சகோதரி மகளின் திருமணத்திற்கான சீர் சாமான்களை வாங்கப் பயன்படுத்துகிறார்.

இத்தகைய வழக்கங்கள் முடிந்த பிறகு ஒரு நல்ல நாள் திருமணத்திற்குக் குறிக்கப்படுகிறது. திருமணத்துக்கு முந்தைய தினம் பொதுவாகப் பெண் வீட்டுக் கல்யாணம் என வழங்கப்படுகிறது. திருமணத்திற்கு முந்தைய தினம் ஆடு, அரிசி, நெல், வெற்றிலை, பாக்கு, உப்பு, மிளகாய்,மஞ்சள், புளி போன்ற பொருட்களை மாப்பிள்ளை வீட்டார், பெண் வீட்டிற்கு எடுத்துச் செல்வார்கள். இந்த வழக்கம் ''ஆடு அரிசி அல்லது ஆட்டரிசி கொண்டு போவது'' என்று அழைக்கப்படுகிறது. ஆடு, அரிசி கொண்டு சென்ற பிறகு தான் பெண் எடுப்பது உறுதியானதாகக் கருதுகிறார்கள். அதுவரை திருமணம் நடக்கும் என்ற உத்திரவாதம் கிடையாது. ஆடும் அரிசியும் வந்த பிறகுதான் மணமகள் வீட்டார் உணவு சமைக்கத் துவங்குவார்கள். மாப்பிள்ளை வீட்டார் கொண்டு வரும் ஆட்டரிசியைக் கொண்டு சமைக்கும் உணவையே விருந்தினருக்கும் உறவினருக்கும் பரிமாறுவார்கள்.

பொதுவாகத் திருமணம் மாப்பிள்ளை வீட்டில் தான் நடக்கிறது. அண்மைக் காலம் வரை மலையாளிகளின் திருமணங்கள் கோவில் மந்தைகளில் தான் நடத்தப்பட்டன. 'செங்கூரிச் சேலை' எனப்படும் சேலையை மணமகளின் பெற்றோர் மணமகளுக்கு வழங்குகிறார்கள். இந்தப் பாரம்பரிய உடையுடன்தான் மணமகள் மணமகனின் வீட்டிற்கு வருவார். இதுபோலவே மாப்பிள்ளைக்கு அவர் பெற்றோர் 'முண்டாங்கி வேட்டி' என்ற

வேட்டியை வழங்குவார்கள். தாரை, தப்பட்டம் போன்ற இசை வாத்தியங்கள் முழங்க, நாட்டுப்புறப்பாடல்கள் பாடிக்கொண்டே மணப்பெண்ணை அழைத்துச் செல்வார்கள். மாப்பிள்ளையின் வீட்டை நெருங்கியவுடன், ஊர் பெரியதனக்காரர் மணமகளின் நெற்றியில் சந்தனப்பொட்டு வைத்து வரவேற்பார். அவரும் ஊரின் மற்ற பெரியோர்களும்

வலது கால எடுத்து வந்த பூத்த லச்சுமியே
எடது கால எடுத்து வச்சு எடுத்து வச்சு வந்த லச்சுமியே

என்ற பாடலைப்பாடி மணப்பெண்ணை வரவேற்பார்கள். மணமகன் வீட்டிற்குள் மணப்பெண் நுழைவது செல்வத்திற்குரிய தெய்வமான இலட்சுமியின் வருகைக்கு ஒப்பிடப்படுகிறது.

ஊர்க்கவுண்டரின் தலைமையில் திருமணச்சடங்கு நடைபெறுகிறது. கரக்காரர், திருமணச்சடங்குகளை நடத்தி வைக்கிறார். ஊர்க்கவுண்டர் மணமக்களை நெற்றியில் சந்தனப்பொட்டு வைத்து மணவறைக்கு வரவேற்கிறார்கள். சம்பிரதாயமாகத் தாய்மாமன், மணப்பெண்ணை மணவறைக்கு அழைத்துச் செல்கிறார். ஊர் பெரியதனக்காரரின் ஆசிகள் பெற்ற பிறகு தாலி கட்டும் சடங்கு நடக்கிறது. திருமணத்தின் அடையாளமாக அணிவிக்கப்படும் தாலி தங்கம் அல்லது வெள்ளியில் செய்யப்படும் அணிகலனாகும். தாலியை மாப்பிள்ளை கழுத்தில் வைத்தவுடன் கரக்காரர் முதல் முடிச்சைப் போட்டவுடன் மற்றதை மாப்பிள்ளை போடுவார். முகூர்த்தம் முடிந்த பின்னர்

ஆலு போல தளை தளைஞ்சு
அருகு போல வேர் ஊணி
கல்லிலே நீர் பூத்தாப்பல
கனத்த எரும பாலு கறந்தாப்பல
நெல்லுல நீர் பூத்தாப்பல
மூங்கி போல தள தளைஞ்சு
முறியாத வாந்திரு

என்ற பாடலைப்பாடி மணமக்களைப் பெரியதனக்காரர், ஊர்க்கவுண்டர் மற்றும் ஊர்ப்பெரியவர்கள் வாழ்த்துவர்.

தாலி கட்டுவதைத் தொடர்ந்து 'கெணங்காட்டப்போறது' என்ற ஒரு சடங்கும் நடத்தப்படுகிறது. இச்சடங்கின்படி மணப்பெண்ணை ஒரு குளம் அல்லது நீரோடைக்கு அழைத்துச் செல்கிறார்கள். மேள வாத்தியக்காரர்களும் உறவினர்களும் உடன் செல்வார்கள். தாரை தப்பட்டை முழங்க உறவினர்கள்

பாட்டுப் பாடிக்கொண்டே கூட வருவார்கள். கங்கண வெற்றிலையைத் தண்ணீரில் விடுவார்கள். கங்கண வெற்றிலை என்பது மஞ்சள் வைத்து கயிற்றில் ஊர்க்கவுண்டர் அவர்களால் பெண்ணிற்கும், மாப்பிள்ளைக்கும் கட்டப்படுவதாகும். இதைத் தண்ணீரில் விட்டபிறகு அரிசி முதலியவற்றை வைத்துச் சாமி கும்பிடுவார்கள். இதனைப் பிறகு மணப்பெண் தன் தலையில் ஒரு செம்பு நிறையத் தண்ணீரைச் சுமந்து கொண்டு வீட்டுக்குள் செல்வார்.

பின்னர் மாப்பிள்ளை வீட்டார் மணப்பெண்ணுக்குக் கூரைப்புடவை ஒன்றை அன்பளிப்பாக வழங்குவார்கள். இதைத் தன் பிறந்த வீட்டிற்குச் செல்லும்போது மணப்பெண் அணிந்து செல்வார். திருமண நாளன்றோ அல்லது மறுநாளோ மணப்பெண் தன் பிறந்த வீட்டிற்குச் செல்வார். மணப்பெண் தன் பெற்றோர் வீட்டுக்குச் செல்லும்போது 5 வல்லம் அரிசி, மணப்பெண் உடுத்தி வந்த புடவை மற்றும் பரிசப்பணத்தின் மீதத்தை ஒரு புதுக்கூடையில் வைத்து அனுப்புவார்கள். பணத்தைச் சீலை மடிப்பில் வைத்து அனுப்புவார்கள். புதுக்கூடையில் புடவையும் பாக்கிப் பணமும் தந்து அனுப்புதல் "வட்டி அரிசி கொண்டு போகுதல்" என்று வழங்கப்படுகிறது.

மலையாளர்களிடமுள்ள ஒரு முக்கியமான சடங்கு "சம்மந்தம் கலக்குறது" என்பதாகும். வட்டி அரிசி கொண்டு போன சில நாட்களில் சம்பந்தம் கலக்குதல் என்ற சடங்கு நடக்கிறது. இச்சடங்கின்படி மாப்பிள்ளை வீட்டார் சமைத்த அரிசியை ஒரு புதுக்கூடையில் வைத்து நடுவில் அச்சு வெல்லம் வைத்து எடுத்துச் செல்வார்கள். பின்னர் சமைத்த சோறு மணப்பெண்ணின் உறவினர்களுக்கும், அவர் ஊரைச் சேர்ந்தவர்களுக்கும் வழங்கப்படுகிறது. அதுபோலவே இன்னொரு நாள் மாப்பிள்ளை வீட்டார், மணமகள் வீட்டாருக்கும் மாப்பிள்ளையின் கிராமத்தைச் சேர்ந்தவர்களுக்கும் விருந்து வழங்குவார்கள். இரு வீட்டாரின் மூலமும் விருந்து வழங்கப்படுவதே சம்பந்தம் கலக்குறது என்று வழங்கப்படுகிறது. இதுவரை மணமகள் மற்றும் மணமகன் வீட்டார் ஒருவர் வீட்டிற்கு மற்றவர்கள் செல்வதில்லை.

கொல்லிமலையில் வசிக்கும் மலையாளர்களைப் பொருத்த வரையில் திருமண ஏற்பாடும் திருமணம் நடத்துவதும் இருவீட்டார் சார்ந்ததோ நெருங்கிய உறவினர்களுக்கு மட்டும் உரிய சடங்கோ கிடையாது. பாரம்பரியமாகவே ஊரார் அனைவரும் மொத்தமாகத் திருமண ஏற்பாடுகளில் கலந்து கொள்வார்கள். ஆண்கள் பந்தல் போடுதல் மற்றும் உறவினர்களுக்குத் திருமண அழைப்பிதழ் வழங்குதல் போன்ற வேலையைக் கவனித்துக் கொள்வார்கள். ஊரைச்சேர்ந்த பெண்கள் விருந்து தயாரிப்பில் ஈடுபடுவார்கள். உணவு பரிமாறுதல் போன்ற வேலைகளில்

ஆண்களும் பெண்களும் சேர்ந்து ஈடுபடுவார்கள். அண்மைக் காலம் வரை இரு வீட்டாரும் கிராமத்திலிருந்து வீடுகளின் எண்ணிக்கைப்படி, இரண்டு அல்லது மூன்று பன்றிகளை விருந்துக்காக வழங்குவது வழக்கமாக இருந்தது. பன்றிக் கறிக்காக அவற்றை வெட்டுவது, கிராமத்தைச் சேர்ந்த சிலருடைய பொறுப்பாகும். சமைக்காத பன்றிக்கறி கிராமத்திலுள்ள வீடுகளுக்கும் வழங்கப்படுகிறது. விருந்தினருக்குப் பரிமாறுவதற்காகக் கொஞ்சம் கறி வீட்டிலேயே சமைக்கப்படுகிறது. இத்தகைய வழக்கம் கொஞ்சம் கொஞ்சமாக மாறி வருவதாக ஊர் மக்கள் கூறுகிறார்கள்.

வெளியார் தொடர்பின் தாக்கமாயும், வளர்ச்சிகளின் காரணமாயும் மலையாளர்களின் திருமண முறை மாறி வருகிறது. உதாரணமாக மணப்பெண் தற்போது அவரின் பாரம்பரிய உடையை அணிவதில்லை. கொல்லி மலையாளர்களின் பாரம்பரிய மணமகள் உடையானது 6-10 சாண் அளவுள்ள வெள்ளைத் துணியாகும். இத்துணியில் ஒரு மெல்லிய சிவப்பு நிறக்கரை காணப்படுகிறது. இத்துணி பொதுவாக மணமகளின் மார்புக்கு மேலே குறுக்காகக் கட்டப்பட்டு, மேலும் ஒரு வெள்ளைத் துணி தோள்களின்மேல் போடப்படுகிறது. தற்போது இந்த உடை மறைந்து, மலைக்குக் கீழ் வசிக்கும் பெண் மக்கள் அணியும் சேலை, கொல்லி மலையிலும் பரவலாகி விட்டது. ஏறத்தாழ 15-20 ஆண்டுகளுக்கு முன்பு திருமணச் சடங்கு மூன்று நாட்கள் நீடித்தாலும் அது ஓர் எளிய சடங்காக இருந்தது. அதாவது விருந்து மற்றும் பிற செலவுகளைப் பொருத்தவரையில் எளிமையே நீடித்தது. அரிசிச் சோறும் பருப்புக் குழம்புமே விருந்தில் இடம் பெற்றன. ஆனால் இந்நாட்களில் கூட்டு, பொரியல், இனிப்பு, பாயசம், அப்பளம் என்று விரிவான விருந்தே வழங்கப்படுகிறது. வாழவந்தி நாட்டையொட்டிய சில பகுதிகளில் விருந்து சமைப்பதில் கிராமத்தினரின் பங்கேற்புப் படிப்படியாகக் குறைந்து வருகிறது. மற்ற சமவெளிப் பகுதி மக்களைப் போல சமையல் ஆட்களைப் பணியில் அமர்த்துகிறார்கள். அது போலவே திருமணத்திற்கு முந்தைய நாள் நிகழ்த்தப்படும் தெருக்கூத்திற்குப் பதிலாகத் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப் படுகின்றன. மற்றுமொரு சுவையான மாற்றம் என்னவென்றால் பரிசப் பணமாகத் தரப்படும் பதினாறேகால் ரூபாயைத் தவிர மணமகனின் பெற்றோர், மணமகளுக்கு நகைகளும் வழங்குகிறார்கள்.

ஆண், பெண் இருபாலருடைய இறுதிச் சடங்குகளில் வேறுபாடுகள் கிடையாது. இச்சடங்குகள் விரிவானவை அல்ல. மணமான ஆணின் மரணத்தையொட்டி பெண்ணுக்கு எந்த விரும்பத்தகாத சடங்கும் இல்லை. 'சலுப்பு' எனப்படும் இரங்கல் நாட்கள் மூன்று தினங்கள் மட்டுமே. மரணத்தின் மூலம் ஒருவர் ஆன்மாவாக மாறுகிறார். இறப்பு நேர்ந்தவுடன் இறந்தவர் தலைக்கருகே ஒரு விளக்கு ஏற்றப்படுகிறது. ஒரு தேங்காயும்

உடைக்கப்படுகிறது. இறந்த நபருக்கு மரியாதை செலுத்துவதற்காகவே இது செய்யப்படுகிறது. பட்டாசு வெடிப்பதன் மூலம் அருகிலுள்ள கிராமங்களுக்கும் இறப்பு அறிவிக்கப்படுகிறது. இதைத் தொடர்ந்து பறையடிக்கப்படுகிறது. மாமன் மச்சான் உறவு முறையில் மிக நெருங்கிய உறவினர்கள் கோடி என்ற துணியும், வாழைப்பழமும், வெற்றிலையும் அரிசியும் கொண்டு வருகிறார்கள். மற்றவர்கள் அரிசி மற்றும் பிற உணவு தானியங்களை மரியாதை நிமித்தமாகக் கொண்டு வருகிறார்கள்.

பெண் உறவினர்கள் இறந்தவரின் உடலருகே அமர்ந்து பெருத்த குரலோடு அழுகிறார்கள். இது ஒப்பாரி என அழைக்கப்படுகிறது. வரும் பெண்களும் இணைந்து கொள்கிறார்கள். இது மரணம் சம்பவிக்கும் எல்லா வீடுகளின் வழக்கமுமாகும். ஒப்பாரி இறந்தவர் மீது கொண்ட அன்பையும் மதிப்பையும் வெளிப்படுத்துகிறது. தற்போது தொழில் முறையில் ஒப்பாரி வைப்பவர்களின் ஒலிநாடாக்கள் பாடப்பட்டாலும் ஒப்பாரி மரபும் தொடர்கிறது.

இறந்தவரைக் குளிப்பாட்டிப் புது வேட்டி அணிவிப்பதும் ஒரு முக்கியமான சடங்காகும். வாய்க்கரிசி என்பது இறந்தவரை மயான பூமிக்கு எடுத்துச் செல்லும் முன் நடத்தப்படும் மற்றொரு முக்கியச் சடங்காகும். கட்டமொய் என்பது இறந்தவரின் தலையருகே உறவினரும் நெருங்கிய நண்பர்களும் பணத்தை வைக்கும் ஒரு மரபாகும். பெண்கள் மயான பூமிக்குச் செல்வதில்லை. இறந்தவர்கள் புதைக்கப்படுகிறார்கள். இறுதிச் சடங்குகள், பெற்றோரின் மூத்த மகனால் செய்யப்படுகின்றன.

இறப்புத் தீட்டு மூன்று நாட்களுக்கு மட்டுமே அனுசரிக்கப்படுகிறது. மரணத்திற்கு மூன்று நாட்களுக்குப் பிறகு காரியம் அல்லது கருமாதி செய்யப்படுகிறது. இந்தச் சடங்கு, கேழ்வரகு, களி மற்றும் பன்றிக்கறியை இறந்தவருக்குப் படைப்பதுடன் முடிகிறது. இந்தச் சடங்கிற்கு மிக நெருங்கிய உறவினர் மட்டுமே வருகிறார்கள். மரணம் நேர்ந்த வீட்டிற்கு ஒரு மாதம் வரை நெருங்கிய உறவினர்கள் ஆதரவு தரும் வகையில் உணவு கொண்டு செல்வது வழக்கமாகும். இதனைச் 'சலுப்புச் சோறு' என்பார்கள். சில வீடுகளில் இறந்தவரை ஒவ்வொரு ஆண்டும் நினைவு கூர்கிறார்கள். பொதுவாக மலையாளர்கள், பெரியவர்களைப் பொங்கலன்றும் மற்ற முக்கிய தினங்களிலும் நினைவு கூர்கிறார்கள். தம் மீது விழும் தீமைகளிலிருந்து தம் முன்னோர் தம்மைக் காப்பதாக மலையாளர்கள் நம்புகிறார்கள்.

இறப்பு நேர்ந்தால் மொத்த கிராமத்தினரும் இணைந்து ஆறுதல் வழங்குகிறார்கள். செய்தி தெரிந்தவுடன் பிறருக்குத் தெரிவிக்கும்

பொறுப்பை ஆண்கள் தாமாகவே ஏற்றுக் கொள்கிறார்கள். இறந்தவரின் உடல் மறுநாள் அடக்கம் செய்ய வேண்டி இருந்தால் கிராமத்தினர் ஒவ்வொருவரும் முறை எடுத்துக் கொண்டு உடன் விழித்துக் கொண்டிருப்பார்கள். மற்ற கிராமங்களிலிருந்து வருவோரின் உணவுத் தேவையைப் பெண்கள் பார்த்துக் கொள்கிறார்கள். ஆண்கள் இறந்தவரின் உடலை மயானபூமிக்குக் கொண்டு செல்வதற்குத் தேவையான தேரை உருவாக்குவது, குழி வெட்டுவது போன்ற உதவிகளைச் செய்கிறார்கள். உறவினர் அல்லாதவர்களும் இறுதியாத்திரைச் சடங்குக்குரிய தண்ணீர் கொண்டு வருகிறார்கள்.

சில வழக்கங்களைத் தவிர இறப்புச் சடங்குளில் பெரிய மாற்றங்கள் நேரவில்லை. இப்போதெல்லாம் கோடித்துணியாக வேட்டி கொண்டு வருவதற்குப் பதிலாகப் பணமாகவே தந்து விடுகிறார்கள். இறந்தவர்களுக்கு கேழ்வரகுக்களி, சம்பிரதாயத்திற்காகச் சிறிதளவு படைக்கப்படுகின்றது. பன்றிக்கறிக்குப் பதிலாகக் கோழிக்குழம்புப் படையலிடுகிறார்கள். பன்றிக்கறி அதிக விலையாகிவிட்டதே அதற்குக் காரணம். விருந்தினருக்குப் புளி சாதம் வழங்கப்படுகிறது.

**வேளாண்மை / பொருளாதாரம்**




கொசக்குழி, வளப்பூர் நாடு

மலையாளர் பொருளாதாரத்தின் அடிப்படை வேளாண்மையாகும். அவர்களின் வாழ்க்கை முறையே விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது. வேளாண்மையின் பல்வேறு செயல்பாடுகளிலும் குடும்ப உறுப்பினர்களே ஈடுபடுகின்றனர். மழை சார்ந்தது மற்றும் நீர்ப்பாசனம் சார்ந்தது என வேளாண்மை இரண்டு வகைப்படுகிறது. நீர்ப்பாசனம் என்பது முக்கியமாக இயற்கையான நீரூற்றுக்கள் மூலமாகவே நடைபெறுகின்றன. இத்தகைய பாசனத்துக்குட்பட்ட பகுதி மொத்த வேளாண்மைப் பகுதியில் 15% மட்டுமே ஆகும். இயற்கை நீரூற்றுக்கள் பாசனம் கொண்டு மலைப்பள்ளத்தாக்குகளில் வேளாண்மை செய்யப்படும் பகுதி வயல் என்று வழங்கப்படுகிறது. மழை நீர்ப்பாசனப் (மானாவாரி) பயிர்கள் மேட்டாங்காடு, கொல்லைக்காடு என்பது இருவகை நிலங்களில் பயிரிடப்படுகின்றன. இந்த இரு பிரிவுகளும் உழுதலை அடிப்படையாகக் கொண்டு பிரிக்கப்பட்டுள்ளன. மேட்டாங்காடு ஓரளவிற்குச் சரிவான நிலப்பகுதியாதலால் மாடுகளின் மூலம் உழவு செய்யப்படுகிறது. எனவே இது உழவுக்காடு என்றும் வழங்கப்படுகிறது. ஆனால் கொல்லக்காடு என்பது

செங்குத்தான கடினப் பாறைகள் கொண்ட நிலப்பகுதியாகும். எனவே இந்நிலத்தில் உழவு செய்யக் கோடாரி, கொத்துப் போன்ற கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. இதனால் இது கொத்துக்காடு என்றும் வழங்கப்படுகிறது. மலையாளர்கள் எல்லாவிதமான நிலப்பகுதிகளிலும் சரிவுக்கு ஏற்றவாறு படிப்படியாகப் பயிரிடும் முறையையே பின்பற்றுகிறார்கள்.

பொதுவாக, தென்மேற்குப் பருவக்காற்றினால் வைகாசி, ஆனி மாதங்களில் பொழியும் மழையைத் தொடர்ந்தே வேளாண் பருவம் துவங்குகிறது. வைகாசிப்பட்டமும், ஆடிப்பட்டமுமே பாரம்பரிய மேட்டு நில மானாவாரிப் பயிர்களுக்கு மிகச் சிறந்ததாகக் கருதப்படுகிறது.

நிலங்களின் தன்மையைப் பொருத்து விவசாயிகள் வெவ்வேறு பயிர் மற்றும் வேளாண் முறையைப் பின்பற்றுகிறார்கள். மானாவாரியாக ஆரியம், பயறு வகைகள், நெல் போன்ற தானியங்கள் மேட்டாங் காடுகளில் பயிரிடப் படுகின்றன. ஆனால் கொல்லைக்காட்டுப் பகுதியில்,சாமை, சோளம், திணை போன்ற குறைவாக நீர் தேவைப்படும் பயிர்கள் பயிரிடப் படுகின்றன.



*திணைப்புனம்*
*மருதாங்குளம், குண்டூர்நாடு*

பாரம்பரியத் தன்னிறைவு வேளாண்மையில், குடும்பத்திற்குத் தேவையான வெவ்வேறு விதமான உணவுப் பொருட்களும் வீட்டுப் பயன்பாடுகளான நார், கால்நடைத் தீவனம்,கூரை போன்ற பொருட்களும் கிடைத்தன. பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு வரையிலும் கூட மலையாளர்களின் ஒவ்வொரு உணவுப் பயிரிலும் மூன்று அல்லது நான்கு வகைகள் காணப்பட்டன.

இங்கு ஒரு மிக முக்கியமான, பிரபலமான விவசாய முறை கலப்புப் பயிர் வகையாகும். இதன் மூலம் உயிர்ப்பன்மப் பெருக்கத்தை மேம்படுத்த முடியும். ஆனால், இன்று கலப்புப் பயிரிலிருந்து ஒரே பயிரான மரவள்ளிக்கிழங்கு பயிரிடுதல் தோன்றியுள்ளது. எனவே பயிர்ச் சுழற்சிக்கு வாய்ப்பில்லாமல் போகிறது. கால்நடை உரத்தைப் பயன்படுத்துதல் போன்ற பாரம்பரியப் பழக்கங்கள் மாறி, நவீன உரங்கள் அவற்றின் இடத்தைப் பிடித்துள்ளன. பாரம்பரிய விவசாயப் பயிர்கள், அவற்றைப் பயிரிடும்

வழக்கம் அழிவதன் காரணமாகச் சூழலியல் பாதிப்புகளும் அழிவுகளும் பெருகியுள்ளன.

குறிப்பாகக் கடந்து இருபதுஆண்டுகளில் பாரம்பரிய விவசாய முறையில் வெவ்வேறு அளவில் மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. சாலைகள், போக்குவரத்து மேம்பாடு, கூட்டுறவுச் சங்கங்கள் போன்ற பல்வேறு வளர்ச்சிப் பணிகளே இத்தகைய மாற்றங்களுக்குக் காரணம்.



*சந்தை*
*தெம்பளம், அரியூர் நாடு*

கேழ்வரகு, சாமை, தினை, வரகு, நெல், பலவித மொச்சை போன்ற பொருட்களைத் தம் அன்றாட உணவுத் தேவை, நார்த்தேவை மற்றும் கால்நடைத் தீவனங்களுக்கும் பயிரிட்ட மலையக்கள், தற்போது அரிசியை மட்டுமே தமது ஒரே உணவுத் தேவைக்காகக் கொண்டுள்ளனர். எனவே பிற உணவுப் பயிர்கள் எல்லாம் தேவையற்றுப் போய்விட்டன. பலா, மாதுளை, வாழை போன்ற பழங்களும், எலுமிச்சை, சாத்துக்குடி, நார்த்தை போன்ற புளிப்புச்சுவை மிகுந்த பழங்களும் மலையாளர்களின் பாரம்பரியத் தோட்டப் பயிர்களாகும். பல காலமாகவே இப்பழங்கள் சந்தையில் விற்பதற்காகவே பயிரிடப்படுகின்றன. காப்பி, மிளகு போன்ற தோட்டப் பயிர்களும் மெதுவாகப் பரவி வருகின்றன.

மலையாளர்கள் அண்மைக் காலம் வரையில் தன்னிறைவு கொண்டிருந்தனர். அதனால் அவர்கள் சந்தையைச் சார்ந்திருக்கவில்லை. ஆனால் தற்போது சந்தைப் பொருளாதாரத்தின் தாக்கம் கொல்லி மலையாளர்களையும் விட்டு வைக்கவில்லை. உணவுக்கான வேளாண்மை பெருமளவில் மாறியதற்குக் காரணம் உயர் அடுக்கு நிலங்கள் அல்லது மேட்டுக்காடு என்ற நிலங்களில் மரவள்ளிக் கிழங்கும், கரடுமுரடான சரிவு நிலங்களான கொல்லைக் காடுகளில் அன்னாசிப் பழங்கள் பயிரிடப்படுவதுமேயாகும். பெரும்பாலான சதுப்பு நிலங்கள் அல்லது வயல்களில் இதுவரை சம்பா, மட்டகார், வெள்ளக்கார் அல்லது தூங்குற போன்ற பாரம்பரிய நெல் வகைகள் பயிரிடப்பட்டு வந்தன. ஆனால் தற்போது இந்நிலங்களில் அதிக விளைச்சல் தரும் அரிசி வகைகளான IR50, IR64, IR8, J13, பொன்னி போன்ற நவீன ரகங்கள் பயிரிடப்படுகின்றன. பாரம்பரியப் பயிர் வகைகள் ஏறத்தாழ, மலையாளர்களின் வேளாண்மையில் தம் இடத்தை இழந்து விட்டன. கிராய் என்று அழைக்கப்படும் மேய்ச்சல் நிலங்கள் மெதுவாக விவசாய நிலங்களாக மாற்றப்பட்டுள்ளன. மலையாளர்கள் தம் ஊட்டச்சத்துப் பாதுகாப்பையே பொருள் இலாபம் தரும்

பயிர்களுக்கு விட்டுக் கொடுக்கும் அளவுக்குச் சந்தைப் பொருளாதாரம் மற்றும் நவீன வேளாண்மையின் தாக்கம் மிக வலுவாக அமைந்துள்ளன.

பயிர்வளக் குறைவு, பாரம்பரிய வேளாண் முறைகளின் மறைவு, சந்தைப் பொருளாதாரத்தின் அழுத்தம் போன்றவை வளர்ச்சிப் பணிகளுடன் சேர்ந்து கொல்லி மலையின் உயிர்ப்பன்மம், சூழல் மற்றும் சமுதாயத்தின் மீது வலுவான தாக்கத்தை விளைவித்துள்ளன.

முப்பது ஆண்டுகளுக்கு முந்தைய மண் வளம், பயிர் விளைச்சல் மற்றும் செழிப்பைப் பற்றிப் பேசும்போது ஒரு நடு வயதுப் பெண்மணி தன் தந்தை மற்றும் பெரியோர் அந்நாளில் பாடும் ஒரு பாடலை நினைவு கூர்ந்தார்.

ஒரு கால் அறுத்து வந்தா
மறு கால் பயிராகும் மன்னவனுடைய சீமையிலே
மாடு கட்டித் தாம்பு வந்தா மாளாதுபோரு
யானைகட்டித் தாம்பு வரும் இந்த ஊரு சீமையிலே
ஆடு கட்டித் தாம்பு வந்தா ஆறாது போரு
யானை கட்டித் தாம்பு வரும் இந்த ஊருல.

ஒரு அறுவடை வருதற்குள் மறு விளைச்சல் தயாராகி விடும். மாடு அல்லது ஆட்டினால் போரடிக்க முடியாது. யானை கட்டித்தான் போரடிக்க முடியும் என்ற அளவிற்குப் பெருவளம் கொண்டது கொல்லி மலை.



*உழவுக்காடு*
*பெரும்பரப்புப்பட்டி, தேவானூர் நாடு*

கால்நடைச் செல்வம் கொல்லி மலையாளர்களின் வாழ்வில் முக்கிய அம்சம் வகித்தன. விவசாய முறை மாற்றங்களும், கல்வி பெறுதற்குரிய வாய்ப்புகளும், கால்நடைச் செல்வங்களின் எண்ணிக்கைக் குறைய ஒரு முக்கிய காரணமாயின. காளை மாடுகள், பாரம்பரிய முறையில் நிலத்தை உழுதற்குப் பயன்படுத்தப்பட்டன. கால்நடைகள் நிலங்களுக்கு உரங்கள் வழங்கின. ஆடு மாடுகள், கிடாக்கள் மற்றும் ஒரிரு பன்றிகள் கொல்லி மலையாளர்களின் கால்நடைகளுள் இடம் பெற்றன. அந்நாட்களில் பல வீடுகளில் எருமை மாடுகள் இருந்தன. மக்கள் கூற்றுப்படி கால்நடைகளின்

எண்ணிக்கை கடந்த 10-15 ஆண்டுகளில் பெருவாரியாகக் குறைந்துள்ளன. அண்மைக் காலம் வரையில் பல்வேறு வீடுகளிலும் வேளாண் நிலங்களை உழுதற்காக ஒரு ஜோடி காளை மாடாவது ஒவ்வொரு வீட்டிலும் இருந்தது. தற்போது காளை மாடுகளுக்குப் பதில் ட்ராக்டர்கள் காணப்படுகின்றன. அவை மாடுகளின் பணியைத் தற்போது செய்கின்றன. இவ்வாறு உழவு செய்யும் முறை மட்டும் மாறவில்லை. அதனுடன் சேர்ந்து அவ்வேலையின்போது பாடப்படும் நாட்டுப்புறப் பாடல்களும் மக்களின் நினைவிலிருந்து மறைந்து வருகின்றன. அதுபோலவே ஆட்டுக்காட்டுப் பாட்டு, மாட்டுக்காட்டுப் பாட்டு என ஆடு மாடுகளை மேய்ச்சலுக்குச் செலுத்தும்போது பாடப்படும் பாடல்களும் கடந்த கால நினைவுகளாகிவிட்டன. இத்தகைய பாடல்கள் அலுப்பு, சலிப்பிலிருந்து மக்களுக்கு விடுதலை அளிப்பதோடு மட்டுமல்லாமல், அவர்களுக்கு மன ஆறுதலும் அளித்தன. கடின உழைப்பு மற்றும் ஒரே வேலையினால் நேரும் சலிப்பு அவர்களை அதிகம் வருத்தாததற்கு இத்தகைய பாடல்களே காரணமாயிருந்தன.

வேளாண்மை மற்றும் பயிரிடும் காலங்களையொட்டி நிகழ்த்தப்படும் சடங்குகளை வைத்தே வேளாண்மையின் முக்கியத்துவத்தையும் அவை மலையாளர்களின் வாழ்வில் வகிக்கும் பங்கையும் உணர முடியும். சடங்குகள், காணிக்கைகள் மூலம் ஒவ்வொரு விவசாயப் பணி துவங்கும் முன்னரும் மக்கள் கடவுளை நினைவு கூர்கிறார்கள். சித்திரை மாதம் உழவு துவங்கும் போது பொன்னேரு கட்டுதல் என்ற சடங்குடன் துவங்குகிறார்கள். இது வேளாண் பருவத்தின் துவக்கமாகக் கருதப்படுகிறது. இதைத் தொடர்ந்து விதை விதைப்பது விதை முகூர்த்தம் என்ற சடங்கின் மூலம் துவக்கப்படுகிறது. முதல் பயிரை அறுவடை செய்யும்போதும் நாற்றும் நடும்போதும் சடங்குகள் நிகழ்த்தப்படுகின்றன.

சித்திரை மாதத்தில் ஒரு நன்னாளில் முதல் உழவு நாட்டுக் கவுண்டரால் நடத்தப்படுகிறது. உழவுச் சடங்கு மிகவும் எளிமையானதாகவும், முக்கியமானதாகவும் கருதப்படுகிறது. இது பொன்னேரு அல்லது செல்லேரு கட்டுதல் என்றும் வழங்கப்படுகிறது. இது ஊர் முகூர்த்தம் என்றும் வழங்கப்படுகிறது. இதைத் தொடர்ந்து, அதே மாதத்தில் மறு வாரத்தில் விதை முகூர்த்தம் என்ற சடங்கு நாடு/ ஊர்க்கவுண்டர் அல்லது பெரியதனக்காரர் என்பவரால் நடத்தப்படுகிறது. கிராமத்தினர் ஊர்ப் பெரியதனக்காரரால் மேற்கூறிய சடங்குகள் நடத்தப்படும்

வரை தமது நிலத்தில் உழவு செய்தல் முடியாது. இந்தப் பாரம்பரியத்தை அல்லது வழக்கத்தை மீறுபவர்கள் அபராதம் அல்லது குத்தம் ஊர்ப்பஞ்சாயத்துக்குச் செலுத்த வேண்டும்.

முக்கியப் பருவத்தில் முதல் பயிரை அறுவடை செய்தவுடன் தொடர்பு கொண்டுள்ள மற்றொரு முக்கியச் சடங்கு, 'சாமிக்குப்படி கட்டுவது' என்பதாகும். முற்றிய பயிருள்ள ஒரு நிலம் பெரியதனக்காரரால் அடையாளம் காட்டப்படுகிறது. அந்தப் பஞ்சாயத்து எல்லைக்குட்பட்டவர் எவர் ஒருவரின் நிலமாக அது இருக்க வேண்டும். ஒரு கட்டுப்பயிர் அறுவடை செய்யப்பட்டு ஊர்ப்பெரியதனக்காரர் முன்னிலையில் கிராம தெய்வத்திற்குக் காணிக்கையாகப் படைக்கப்பட்டு அந்த ஊர் எல்லைக்குட்பட்டோர் ஒவ்வொருவருக்கும் ஒரு கதிராவது வழங்கப்படுகிறது. இது அவரவர் வீட்டு வாசலில் கட்டித் தொங்கவிடப்படுகிறது. இந்தச் சடங்குக் காணிக்கை அல்லது படி கட்டுதலுக்குப் பிறகு பிற கிராமத்தினர் பயிரை அறுவடை செய்ய முடியும்.

மலையாளர்களின் விவசாயம் முக்கியமாக மழை நீரையே நம்பியிருப்பதால் போதிய மழை மிக அவசியமாகிறது. வளர்ந்து நிற்கும் பயிர்கள் மழையை எதிர்நோக்கியிருக்கும்போது தங்கள் தவிப்பைக் கடவுளுக்கு உணர்த்துவதற்குச் சாண வேட்டு என்ற சடங்கை நடத்துகிறார்கள். பெரியதனக்காரர் மற்றும் கிராமத்தினர் சம்மதத்தோடு சாண வேட்டு நடத்துவதற்கு ஒரு நாள் குறிக்கப்படுகிறது.

அந்நாளில் கிராமப் பட்டி விநாயகர் சிலை, அடையாளம் காண முடியாத அளவிற்கு மாட்டுச் சாணத்தால் பூசப்பட்டுத் திறந்த வெளியில் வைக்கப்படுகிறது. விநாயகரை வணங்கி ஊர்ப் பெரியவர்கள் ஆசிகளைப்பெற்ற பல ஆடவர்கள் குழுக்களாகப் பெட்டிகளில் மாட்டுச் சாணத்தை எடுத்துக்கொண்டு சுற்றியுள்ள ஊர்களுக்குச் செல்கிறார்கள். வயது, பாலின வேறுபாடின்றி அனைவர் மீதும் மாட்டுச் சாணத்தைத் தெளித்தும் வீசியும் விளையாடுகிறார்கள். குறிப்பாக மாமன்-மச்சான் உறவு முறை கொண்டவர்கள் மீது அதிக உரிமையுடன் வீசுகிறார்கள். இந்தச் சடங்கின் மூலம் சிறிதளவாவது மழை பொழியும் என உறுதியாக நம்புகிறார்கள். இதன் பின்னர், பிள்ளையார் சிலை மழை நீரால் கழுவப்படுதவற்காகத் திறந்த வெளியில் வைக்கப்படுகிறது. மக்களின் பரிதவிப்பை வெளிப்படுத்தும் சடங்காக இருந்தாலும், சாண வேட்டு வேடிக்கையாகக் கொண்டாடப்படுகிறது.

பஞ்சத்தோடு தொடர்புடைய மற்றொரு சடங்கு இருக்கிறது. இச்சடங்கில் எந்த வேடிக்கைக்கும் கூத்துக்கும் இடமில்லை. இது பெண்களால் மட்டுமே நடத்தப்படுகிறது. 'பஞ்சம் பொழைக்கறது' என்ற இச்சடங்கில், பசி, கோபம், இயலாமை, பரிதவிப்பு என்ற அனைத்து உணர்வுகளும் அடையாளம் காட்டப்படுகின்றன. மாதவிலக்குப் பருவத்தைக் கடந்த பெண்கள் குழுவாகக் கூடி ஒவ்வொரு வீட்டிலும் ஒரு கைப்பிடிச் சோற்றைப் பெற்றுத் திரட்டிக் கொண்டு ஒரு குறிப்பிட்ட இடத்தை வந்து அடைகிறார்கள். அங்கு ஆண் மற்றும் பெண் குழந்தைகள் கூடி இருப்பார்கள். பசி மற்றும் பாதுகாப்பின்மையை வெளிப்படுத்தும் விதமாகக் குழந்தைகள் அனைவரும் உச்ச குரலில் "அம்மா பசிக்குதே! அய்யா பசிக்குதே!" என்று கத்துவார்கள். பிறகு, பெண்கள் எரிச்சல், வெறுப்பு, ஆதங்கம் மற்றும் கோபத்தில் ஆற்றாமையில் குழந்தைகளைத் திட்டி அடிப்பது போல் பாவனை செய்வார்கள். பிறகு கஞ்சியை அங்குள்ள குழந்தைகளுக்குக் கொடுக்கிறார்கள். இதன் பிறகு பெண்களும், குழந்தைகளும் மழைக்காகவும், உணவுப் பாதுகாப்பிற்காகவும் கடவுளை வேண்டுவார்கள்.

மலையாளர்கள் தம் உணவுக்காக மட்டும் விவசாயத்தில் ஈடுபட்டபோது அவர்கள் சந்தைச் செயல்பாடுகளில் ஈடுபடாமல் பல்வேறு விவசாயம் சார்ந்த செயல்பாடுகளில் ஒன்றுபட்டு தமது உழைப்பின் பயன்களைக் கொண்டாடும் விதமாகப் பல்வேறு களிப்புகளில் ஈடுபட்டனர். 'கொட்டை நோன்பு' என்ற கொண்டாட்டம் சாண வேட்டு, பஞ்சம் பிழைப்பது போலல்லாமல் பொழுது போக்கையும் மன மகிழ்வையும் மையமாகக் கொண்டிருந்தது. மேலும் மலையாளர்களின் அன்றாட உணவில் கொட்டை, அதாவது பயறு - பருப்பு வகைள் பெறும் முக்கியத்துவத்தையும் இந்தச் சடங்கு குறிக்கிறது. கொட்டை அறுவடைக்குப் பிறகு மாசி மாதத்தில் இச்சடங்கு நடைபெறுகிறது. கொண்டாட்டத்திற்கு ஒரு நாள் குறித்த பிறகு, ஆண்கள் குழுவாகச் சென்று, தங்கள் கிராம எல்லைக்குட்பட்ட வீடுகளிலெல்லாம் கொட்டை சேகரிப்பார்கள். கிராமக் கோவிலுக்கு அருகில் ஒன்று கூடி அந்தக் கொட்டைகளையும் சமைப்பார்கள். இந்த நிகழ்ச்சியே பெரும் மகிழ்வும் வேடிக்கையும் நிரம்பியதாக இருக்கும். இரவு முழுவதும் தெருக்கூத்து, கும்மியாட்டம் போன்ற கொண்டாட்டங்கள் நடைபெறும். கொட்டைச் சாமியை உருவகப்படுத்த ஒரு சிறு கல்லும், சாமிக்குரிய தேரை உருவகப்படுத்த ஓர் ஆமணக்குச் செடியில் அமைக்கப்பட்ட ஒரு வடிவமும் பயன்படும். பின்னர் வேக வைத்த கொட்டை, கொட்டைச்சாமிக்குப் படைக்கப்படும். அதன்பின்னர் அங்குக் கூடியுள்ளவர்கள் அனைவருக்கும்

தாராளமாகக் கொட்டை வழங்கப்படும். மறுநாள் காலை, பெண்கள் தங்கள் பங்கான வேகவைத்த கொட்டைகளைப் பெற்றுக் கொள்வார்கள். ஆனால் இந்நாட்களில் கொட்டை நோன்பு கொண்டாப்படுவதில்லை. ஏறத்தாழ, பதினைந்து ஆண்டுகளாகக் கொண்டாடப்படவில்லை என்று வாழவந்தி நாட்டின் மக்கள் கூறுகிறார்கள். அவர்களுடைய பாரம்பரிய உணவுப் பயிர்கள் மறைந்து பயிரிடும் வழக்கத்தில் மாற்றங்கள் நேர்ந்திருப்பதையும் இது உணர்த்துகிறது.

**நாட்டுப்புறப் பாடல்கள்**

நாட்டுப்புறப்பாடல்கள், ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் வெவ்வேறு அம்சங்களையும் படம்பிடித்துக் காட்டுகின்றன. பெரும்பாலான பாடல்கள் குறிப்பிட்ட நோக்கத்தின் வெளிப்பாடாக இல்லாமல் ஏதாவது ஒரு சூழ்நிலை அல்லது நிலைமைகளின் இயல்பான வெளிப்பாடாக அமைந்துள்ள இப்பாடல்கள் எவ்வித விரிவான இசை அல்லது இசை வாத்தியமோ இல்லாமல் எளிமையாக அமைந்துள்ளன. மக்களின் உணர்வுகள், மனநிலைகள், எண்ணங்கள் மற்றும் சமூகச் சூழலையும் பாரம்பரியத்தையும் வெளிப்படுத்துவதாக இத்தகைய பாடல்கள் அமைகின்றன. பண்பாட்டுத் தொடர்பைத் தவிர இப்பாடல்கள் பொழுதுபோக்கு மதிப்பும் கொண்டுள்ளன.

கொல்லி மலையின் நாட்டுப்புறப் பாடல்கள் தம் பொருளிலும் வடிவத்திலும் மாறுபட்டுள்ளன. இப்பாடல்கள் சுவையாகவும் பயனுள்ள தகவல் வழங்குபவையாகவும் அமைந்துள்ளன. வழக்கமாக, நாட்டுப்புறப் பாடல்கள் பாடுபவர்கள் தங்கள் முன்னோரின் வழிமுறைகளையே பின்பற்றுகிறார்கள். நாட்டுப்புறப் பாடல்கள், மலையாளர் சமுதாயத்தின் வெவ்வேறு அம்சங்களிலும் இடம் பெற்றுள்ளன. அவை வெவ்வேறு நிலைகளில் பாடப்படுகின்றன. அவை தனிமனித உணர்வுகள் சார்ந்து அமைந்தாலும், சில நேரங்களில் குறிப்பிட்ட குழுக்களின் உணர்வுகளை வெளிப்படுத்தும் சூழ்நிலைகளிலும் பாடப்படுகின்றன. இப்பாடல்கள் சமய விழாக்களின் கொண்டாட்டங்களின் போதும், பொருளாதாரச் செயல்பாடுகளின்போதும், திருமணம், இறப்பு போன்ற பிற குறிப்பிட்ட சடங்குகள் அல்லது நிகழ்ச்சிகளின்போதும் பாடப்படுகின்றன. ஒருவர் வாழ்வின் வெவ்வேறு கட்டங்களில் தாலாட்டு, திருமணப்பாடல்கள் மற்றும் ஒப்பாரி என்ற வடிவங்களில் பாடப்படுகின்றன. விவசாயம் சார்ந்த பிரபலமான பாடல்கள் பொன்னேரு, நல்லேரு கட்டுதல் போன்ற ஏர் உழுதல் பாடல்களாகும். மற்ற பிரபலமான பாடல்கள் ஆட்டுக்காட்டுப்பாடல்

போன்றவை. கும்மிப் பாடல்கள், சாமி பாடல்கள், நாட்டுப்புறப் பாடல்களின் வரிசையில் சேர்கின்றன. நாட்டுக்கட்டு என்பது மலையாளர்கள் கொல்லி மலைக்குக் குடியேறிய கதையைக் கூறும் மற்றொரு நாட்டுப்புறப் பாடல் வகையாகும்.

சேர்வை மற்றும் ஆண்டிக்குலம் அல்லது ஆண்டிக்கோலம் பாடல்கள் என்பவை பொங்கல் திருவிழாவின்போது பாடப்படுகின்றன. சேர்வைப் பாடல்களோடு நெருங்கிய தொடர்புடையவை, கோமாளிப் பாடல்கள் ஆகும். இத்தகைய பாடல்கள் ஒன்றையே திரும்பத் திரும்பக் கூறுவதுபோல இருந்தாலும் தனி நபர்களுக்கும் குழுக்களுக்கும் மன நிறைவைத் தருகின்றன. காவப்பாட்டு போன்ற பாடல்கள் தொடர்ச்சியாக உடனுக்குடன் பதிலடி கொடுக்கும் பாடல்வகையைச் சேர்ந்தவை. இத்தகைய பாடல்களின் மூலம் மனத்தயக்கம் எதுவுமின்றிப் பேச முடியாத விஷயங்களையும் பேசலாம்.

நாட்டுப்புறப் பாடல்களை மக்களின் நம்பிக்கைகளையும் கோட்பாடுகள்/சித்தாந்தங்களையும் பிரதிபலிக்கின்றன. இப்பாடல்கள் மூலம் பல விருப்பங்களும் வெளிப்படுத்தப்படுகின்றன. உறவு முறைகளின் பண்புகளும் நடத்தைகளும் கும்மிப்பாடல்கள் போன்ற சில பாடல்கள் மூலம் பிரதிபலிக்கப்படுகின்றன. ஒப்பாரியின் மூலம் பெண்கள் தம் மனதின் உணர்வுகளையெல்லாம் கொட்டுகிறார்கள். மிக நெருக்கமானவர்களை இழந்த சோகம் ஒப்பாரிப் பாடல்களின் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றன.

மலையாளர் சமுதாயத்தில் நிகழும் வேகமான மாற்றங்களின் காரணமாக நாட்டுப்புறப் பாடல்களிலும் மாற்றங்கள் நிகழ்கின்றன. மலையாளர்களின் பொழுதுபோக்கிற்குத் தற்போது தொலைக்காட்சியும் வானொலியும் உதவுகின்றன. மலையாளர்களின் வாழ்க்கை முறையில் உருவாகியுள்ள மாற்றங்களைப் பற்றிக் குறிப்பிடும்போது சில முதியவர்கள் தம் இயலாமையையும், வருத்தத்தையும் வெளிப்படுத்தினர். சில இளைஞர்களும் மாற்றங்களை விரும்பாதவர்கள் போலப் பேசினர். வாழவந்தி நாட்டைச் சேர்ந்த கூத்தாடி சின்னமுத்து என்ற காரக்காரர் 25-30 ஆண்டுகளுக்கு முன்பு மாரியம்மன் திருவிழாவில் பாடப்பட்ட பாடலை நினைவு கூர்ந்தார். அப்பாடலில் கீழ்க்காணும் கும்மிப்பாடலில் மாறும் சூழலின் வெளிப்பாடு தென்படுகிறது.

நாகரீகம் பெருத்துப்போச்சு
நாட்டுமுறை தப்பிப்போச்சு
கோண கிராப்பு ஆச்சு
பௌண்டன் பேனா பாக்கெட்டில் ஆச்சு
ஸ்லாக் சட்டை ஆச்சு
ஏரோப்பிளேன் வந்தாச்சு.

வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் முன்னேற்றத்தின் தாக்கத்தைக் கொல்லி மலையில் பெருமளவில் உணர முடிகிறது. கொல்லி மலையாளர்களின் சமுதாய, பொருளாதார வாழ்க்கையை மேம்படுத்துவதற்காக, சாலை மற்றும் போக்குவரத்து மேம்பாட்டிற்காக அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளால், மலையாளர்களின் பொருளாதாரத்திலும் வாழ்க்கைப் பாங்கிலும் மாற்றங்கள் உருவாகியுள்ளன. மேலும் வெளியார் கொல்லி மலைக்கு வருவதும் எளிதாகியுள்ளது. கல்வி வாய்ப்புகள் மலையாளர்களின் கலாச்சார வாழ்வில் மாற்றங்களை உருவாக்கியுள்ளன. மாறுபட்ட கலாச்சாரத்தைக் கண்டவுடன் மலையாளர்களும் அதுபோலவே தம்மை மாற்றிக்கொள்ளத் துவங்கிவிட்டனர். சந்தை சார்ந்த பொருளாதாரமும் சமுதாய - பொருளாதார மாற்றங்களில் மட்டுமின்றி நிலப்பயன்பாட்டு முறையும் நெருக்கடிக்குள்ளாக்கி, கொல்லிமலையின் சுற்றுச்சூழலுக்கே அறைகூவலாக அமைந்துள்ளது.

**முனைவர் வி. வேதவல்லி**

# கொல்லிமலை மக்கள் பாடல்கள்
## - சில அறிமுகக் குறிப்புகள்

கொல்லிமலையில் வழங்கும் பாடல்களைத் தொகுத்துக் காணும்போது அவற்றில் கொல்லிமலைக்கே உரியனவற்றையும் பிற இடங்களிலிருந்து வந்து கலந்தனவற்றையும் அடையாளம் காண முடிகிறது.

பொதுநிலைத்தெய்வங்களையும், வட்டார தெய்வங்களையும் வணங்கி வருந்தி அழைத்து அவர்கள் பாடும் சாமி பாடல்களும் மலையாளிகள், கொல்லிமலைக்கு இடம்பெயர்ந்து குடியேறி, நாடுகளை அமைத்த வரலாற்றைச் சொல்லும் நாட்டுக்கட்டும் பொங்கல் திருவிழா மற்றும் மாரியம்மன் திருவிழாவையொட்டி நிகழும் நிகழ்ச்சிகளில் பாடப்படும் சேர்வை, ஆண்டிக்கோலம், கோமாளிப் பாடல், அக்கினிச்சட்டிப்பாட்டு முதலிய பண்டிகைப் பாடல்களும் வேளாண் தொழிலின் போது பாடப்பெறும் நாளேர்ப்பாட்டு, பறம்புப்பாட்டு முதலிய பாடல்களும் ஆட்டுக்காட்டுப் பாட்டும் திருமணத்தின்போது பாடப்பெறும் வழிநடைப் பாட்டும் கொல்லிமலைக்கே உரிய பாடல்களாகக் கருத இடமுண்டு. தாலாட்டு, கும்மி, ஒப்பாரி மற்றும் உதிரிப் பாடல்களில் இப்பகுதிக்கே உரியனவற்றை அறுதியிட்டுக் கூறுதல் எளிதன்று.

பிற பகுதிகளிலிருந்து வந்து கலந்துள்ள பாடல்களை

- குடியேற்றத்தால் வந்தவை
- வேலை காரணமாகச் செல்லுமிடங்களிலிருந்து வந்தவை
- மண உறவால் வந்தவை
- பிறபகுதி மக்களோடான தொடர்பால் வந்தவை

எனப் பாகுபடுத்திக் காணவியலும்.

தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்து ஈழத்தின் மலையகத் தேயிலைத் தோட்டங்களில் மக்கள் பணியாற்றச் சென்றது போலவே கொல்லிமலைப் பகுதிகளிலிருந்தும் சென்றுள்ளனர். அங்குச் சென்று பணியாற்றித் திரும்புவது, அங்கேயே குடியேறுவது என்னும் நிலைகளில் இருந்துள்ளனர். 1964ஆம் ஆண்டு வரை இந்த மலையகத் தொடர்பு மிகுதியாக இருந்துள்ளது. இதன் காரணமாக அங்கிருந்து 'காப்பித்தோட்டம்' குறித்த பாடல்கள் இங்கு வழங்குகின்றன. இப்பாடல்களில் ஈழம் தொடர்பான குறிப்பேதும் வெளிப்படையாகக் காணப்படவில்லை எனினும் தாங்கள் அங்கு இவற்றைக் கற்றதை இவற்றைப் பாடுவோர் உறுதி செய்கின்றனர்.

கேரளத்தில் உள்ள தோட்டங்களுக்கு இம்மக்கள் வேலைக்குச் செல்கின்றனர் அல்லது அங்கு வாழும் தங்கள் உறவினருடன் தொடர்பு கொண்டுள்ளனர். இவ்வகையிலும் அங்குள்ள பாடல்கள் கொல்லிமலைக்கு வருகின்றன. கொல்லி மலைக்கு நேரடியாகத் தொடர்பில்லாத புகைவண்டி, தொடர்பான பாடல்களும் 'ஓரானை வெள்ளானை' எனும் கும்மிப்பாடலும் இவ்வகையில் வந்து கலந்துள்ளன.

கொல்லிமலையாளர்கள் சத்தியமங்கலம், பொள்ளாச்சி போன்ற பகுதிகளில்பெண்களை மணம் செய்து கொள்வதும் வழக்கமாக உள்ளது. இதன் காரணமாகத் தாலாட்டு, கும்மி, ஒப்பாரிப் பாடல்களில் பலவும் அப்பகுதிகளிலிருந்து இங்கு வந்து கலந்துள்ளதை உணர முடிகிறது.

நாமக்கல், துறையூர் போன்ற பகுதி மக்களோடு கொள்ளும் தொடர்பாலும் பாடல்கள் கொல்லிமலைக்கு வந்துள்ளன. இத்தொகுப்பில் உள்ள 'ஒயில் கும்மிப்' பாடல்களை அடிவாரத்தைச் சேர்ந்த 'வாத்தியார்' ஒருவரை அழைத்து வந்து கற்றதாக அவற்றைப் பாடுவோர் தெரிவித்தனர்.

***

தாலாட்டுப் பாடல்களில் குழந்தையின் சிறப்பு, தாய் மாமனது அன்பு, தன் குழந்தையை இன்னும் சீராட்ட இயலவில்லை என்னும் தாயின் துயரம் ஆகியன வெளிப்படுகின்றன.

ஆணொருவன் தாயாக இருந்து செயல்படுவது என்று பொருள்படும் அம்மான் என்ற சொல்லினையும் "Malemother" என்று தாய்மாமன் ஆப்பிரிக்கச் சமுதாயத்தில் வழங்குவதையும் அறிஞர்கள் சுட்டிக் காட்டுவர். (தே.லூர்து, நாட்டார் வழக்காற்றியல் சில அடிப்படைகள், ப.170) தமிழகத்தில் ஏனைய பகுதிகளில் வழங்கும் தாலாட்டுப் பாடல்களின் சிறந்த உள்ளடக்கமாகிய இப்பகுதியே கொல்லிமலைப்பகுதியிலும் காணக்கிடைக்கிறது. கொத்தமல்லி, மல்லிகை, சேலை, பட்டுத்துணி ஆகியவற்றைப் பட்டணம், மதுரை, திருவரங்கம், கோட்டை ஆகிய இடங்களில் விற்றுப் பெறும் செல்வத்தால் குழந்தைக்கு மாமன் சிறப்புச் செய்ய வேண்டுமெனும் பெருவிருப்பு; 'கனவுகளின் இலட்சியக் குரல்' பாடலில் வெளிப்படுகிறது.

***

முழுதும் வேளாண்மை சார்ந்த வாழ்வுடையவர்கள் கொல்லிமலை மக்கள். வேளாண் தொடர்பான ஏர்பூட்டுதல், பறம்படித்தல், விதைத்தல், அறுவடை என அனைத்துச் செயல்களிலும் பாடல்கள் பாடப்படுகின்றன. மலைப்பகுதி வேளாண்மையின் கடின உழைப்பினைச் சிறிது மறந்திருப்பதும் மனதை மாற்றிச் செலுத்துவதுமே இவற்றின் மைய நோக்கம் என்றாலும் இவற்றிடையே விளங்கும் இவர்களுக்கும் இயற்கைக்குமிடையேயான உறவு வியக்கத்தக்கது. வேளாண் செல்வமாகிய காளையின் அழகும் அருமையும் புகழ்ந்து பேசப்படுகிறது. அதற்குப்

பூட்டப்படும் விதவிதமான கயிறுகளும் புதிய கலப்பைகளும் வருணிக்கப் படுகின்றன. தங்கள் குறிப்பறிந்து அவை நடந்து கொள்ளும் விதம் புகழப்படுகிறது.

பறம்படித்து நாற்று நடும்போது பாடும் பாடலில் பலவிதமான நெல் வகைகள் குறிப்பிடப்படுகின்றன.

***

இத்தொகுப்பிற்காக வரையறுத்துக் கொண்ட பகுதிக்குள் பாடல் பாடியவர்களிடம் தனித்த காதல் பாடல்கள் கிடைக்கவில்லை என்பது வியப்பளிக்கும் ஓர் உண்மையாகும். 'உன் கூந்தல் போர்வையாக' என்ற தலைப்பில் இடம்பெற்றுள்ள பாடல் பாடியவரே கட்டியதாகும். ஆட்டுக்காட்டுப் பாடல்கள் என்னும் தலைப்பில் உள்ளவை காதல் பாடல்களாகக் கொள்ளத்தகுவன. கால்நடைகள் மேய்க்கும்போது ஆண்களும் பெண்களும் பாடுவது என்று இவை குறிப்பிடப்படுகின்றன. எனினும் தற்போது இவை புழக்கத்தில் இல்லை எனத் தெரிகிறது. மேய்த்தல் தொழில் குறைந்துவிட்டது காரணம் எனக் கூறப்பட்டது. இப்பாடல்களில் மீதூர்ந்த காதல் உணர்வு கொச்சையான பாலுறவுச் சொற்களின் மூலம் பாடப்படுகின்றது. 'உச்சப்பாட்டு' என இவற்றைக் குறிப்பிடும் பெரியவர்கள் இவற்றை வெளிப்படையாகப் பாடவும் தயங்குகின்றனர். "பிறவகைப் பாடல்களை விடக் காதல் பாடல்களே பெரிதும் கிடைக்கின்றன. தமிழ்நாடு காதலை மறந்துவிடவில்லை' என்று நா.வானமாமலை குறிப்பிடுகிறார் (தமிழர் நாட்டுப்பாடல்கள், முன்னுரை, ப.31) ஆயினும் கொல்லிமலையில் இவ்வளவு அருகியுள்ளமைக்குக் காரணம் யாது எனப் புலப்படவில்லை. பிற பகுதிகளிலும் பாடல்களைச் சேகரித்து ஆய்வு செய்தல் பொருந்தும்.

***

களப்பணியின்போது, இம்மலை மக்கள் மிகுந்த தெய்வ நம்பிக்கை உடையோர் என்பதை அறிய முடிந்தது. இவர்களது தெய்வ நம்பிக்கை இருநிலைப்பட்டதாகும். அறப்பளீசுவரர், விநாயகர், முருகர், பெருமாள், அம்மன் முதலிய பொதுநிலை தெய்வங்களையும், மாசிப்பெரியண்ணன், நாச்சியம்மன், மாரியம்மன், பிடாரியம்மன், சேடக நாச்சியம்மன், சொரியபாட்டன், அய்யனப்பாட்டன் முதலான பல்வேறு வட்டாரத் தெய்வங்களையும் வழிபடுகின்றனர். தமிழகம் முழுதும் வழங்கும் நாட்டுப்புறத் தெய்வங்களுடன் கொல்லிமலைக்கே உரிய கொங்காயி போன்ற இவ்வட்டாரத் தெய்வங்களும், குல தெய்வங்களும், காவல் தெய்வங்களும் வழிபடப்படுகின்றன. தெய்வங்கள் மற்றும் அவற்றிற்கு வழங்கும் கதைகள் விரிந்த ஆய்விற்கு உரியனவாகும்.

பொதுநிலைத் தெய்வ வழிபாடு - வட்டாரத் தெய்வ வழிபாடு முதலியன சடங்களவில் வேறுபாடுகள் உடையனவேயன்றி, இவர்களது கருத்து நிலையில் பெரும் வேறுபாடுகள் அற்றவை எனலாம். இத்தெய்வ வழிபாட்டில் ஆகம நிலைப்பட்ட எண்ணங்கள், முறைகள் இவர்களிடம்

இல்லை. இத்தெய்வங்கள் தொடர்பான தொன்மக் கதைகளும் பாடல்களில் அரிதாகவே பயின்று வருவதைக் காண முடிகிறது. பெருமாள் வழிபாடு திருவரங்கத்தோடு நெருங்கிய தொடர்புடையது. இராமன் கதையே இவர்களால் பரவலாகக் கையாளப்படுகிறது.

கொங்காயி, பழனியம்மா முதலான ஏழு தெய்வங்கள் ஈரோட்டிற்கு அருகிலிருந்து கொல்லிமலை நோக்கி வந்ததாகவும் கொங்காயி கொல்லி மலையின் கருவாழை, கருநெற்சாதம் ஆகியவற்றுடன் செய்யப்படும் பூசையில் மகிழ்ந்து குடியேறியதாகவும் சுட்டப்படுகிறது.

கூத்துகள், சடங்குகள், பேயோட்டல் எனப் பிற நிகழ்ச்சிகளிலும் தெய்வங்களை வருந்தியழைத்துப் பாடுவதைக் காண முடிகிறது. இவற்றில் தெய்வங்களின் ஆற்றல் சுட்டப்படுகிறது. தங்கள் வேண்டுகோளுக்குச் செவிசாய்த்து வரவேண்டும் எனவும் மந்தையிலுள்ள கால்நடைகளைக் காக்க வேண்டும் எனவும் பில்லி, சூனியம் செய்பவரிடமிருந்து தங்களைக் காப்பாற்ற வேண்டும் எனவும் இப்பாடல்களில் வேண்டுகின்றனர்.

மலையாளிகளின் குடியேற்ற வரலாற்றினைச் சொல்லும் 'நாட்டுக்கட்டு' உரைநடையாகவும் பாடலாகவும் கூறப்படுகிறது. இங்குக் குடியேறி 'நாடுகளைக் கட்டிய வரலாறு' என்னும் பொருளில் இப்பெயர் சுட்டப்படுவதாகக் கொள்ளலாம். இதிலிருந்து வெளிப்படும் வரலாற்றினைக் குறித்து திரு.எப்.ஆர். ஹெமிங்வே விரிவாக எழுதியுள்ளார். (தென்னிந்தியக் குலங்களும் குடிகளும், தொகுதி நான்கு, ப.498). அதில்,

1. இவர்கள் காஞ்சிபுரத்தைச் சேர்ந்த பூசாரி மரபினர். உடன் பிறந்த அரசனுடன் ஏற்பட்ட மோதல் காரணமாகப் பூசாரி தன் ஆண்மக்கள் மூவருடனும் பெண்மகள் ஒருத்தியுடனும் கொல்லிமலை வந்தார்.
2. இங்கிருந்த வேடர், வேளாளரை வெற்றி கொண்டு குடியேறினர்.
3. மூத்த அண்ணன் சேலம் சேர்வராயன் மலையில் குடியேறினான். அவன் கைக்கோளர் சாதியைச் சேர்ந்த பெண்ணை மணந்தான்.
4. நடு அண்ணன் வேடர் சாதிப் பெண்ணை மணந்து, பச்சை மலையில் குடியேறினான்.
5. கொல்லிமலையில் குடியேறிய சின்னண்ணன் தேவேந்திரகுலத்திலிருந்து ஒரு பெண்ணை மணந்தான்.
6. உடன்பிறந்தவளைத் தொட்டியன் ஒருவனுக்கு, அவன் தந்த உணவுக்கு நன்றியாக மணமுடித்துத் தந்தனர்.

ஆகிய தகவல்கள் இடம்பெற்றுள்ளன. இத்தொகுப்பில் நாட்டுக்கட்டுப் பகுதியில் இடம் பெற்றுள்ள பாடலில் (1),

காஞ்சிபுரத்துக் கரிய பெருமாள் கோயில் வழிபாட்டில் ஏற்பட்ட தகராறு காரணமாகத் தாய் தந்தையரால் பகை தீர்த்துப் பின்னர் வந்து வழிபாடு செய்யும்படி அறிவுறுத்தப் பட்டதாக வரலாறு சொல்லப்பட்டுள்ளது.

கொல்லிமலைக்கு வந்து சேர்ந்தபோது, அப்பகுதியை ஆண்டுவந்த ஓரி மன்னனுக்கும் அவர்களுக்கும் சண்டை மூண்டதாகவும், அதில் ஓரி இறந்ததாகவும் ஒரு பாடல் குறிப்பிடுகிறது. (பின்னிணைப்பு: நாட்டுக்கட்டு 2) இது குடியேற்றத்தின் போது இங்கிருந்த பழங்குடிகளான வேடர்களுக்கும் வேளாளர்களுக்கும் இடையே நிகழ்ந்த சண்டையினைச் சுட்டுவதாகலாம். வேடர்கள், ஓரியின் பெயரால் சுட்டப்படுதலாகலாம் அல்லது பாடல் பாடியவரின் விருப்பத்தின் காரணமாகக் கால இடைவெளி கடந்து ஓரியின் பெயர் சுட்டப்பட்டிருக்கலாம்.

சவ்வாது மலையில் வாழும் மலையாளிகள தங்கள் தோற்றம் குறித்து வழங்கும் கதையினை வடார்க்காடு மாவட்டக் கையேட்டிலிருந்து திரு. எட்கர் தர்ஸ்டன் திரட்டித் தந்துள்ளார். (தென்னிந்தியக் குலங்களும் குடிகளும் தொகுதி நான்கு, ப.499). தங்கள் குலத்துப் பெண்களைத் தூக்கிச் சென்ற வேடர்களைக் கொல்லும் பொருட்டு காஞ்சிபுரத்தைச் சார்ந்த கார்காத்த வேளாளர் எழுவர் எழு நாய்களுடன் சென்றனர். நாய்கள் மட்டும் திரும்பி வந்தால் தாங்கள் இறந்ததாகக் கருதிக் கொண்டு இறுதிச்சடங்கு நிகழ்த்தும்படி மனைவியரிடம் கூறிச் சென்றனர். வெள்ளம் பெருக்கெடுத்தோடிய பாலாற்றினை அவர்களுடன் சேர்ந்து கடக்க முடியாமல் நாய்கள் வீடு திரும்பின. கணவன்மார் இறந்ததாகக் கருதி, தாலி களைந்து, சாவுச்சடங்குகளை அப்பெண்டிர் நிறைவேற்றினர். வேடர்களை வென்று திரும்பிய அவர்கள் நிகழ்ந்த விபரீதம் கண்டு, சாதியிலிருந்து தாங்கள் விலக்கப்பட்டவர்களானதைக் குறித்து வருத்தமுற்று, சவ்வாது மலையில் குடியேறினர்.

இவ்வரலாறு நாட்டுக்கட்டில் (2) கொல்லிமலையிலும் பாடப்படுவது தெரிகிறது. ஆயினும் இவர்கள் சவ்வாது மலைக்குச் செல்லாமல் கொல்லிமலைக்குத் தங்கையுடன் வந்ததாகப் பாடப்படுகிறது.

மற்றுமொரு நாட்டுக்கட்டில் (பின்னிணைப்பு: நாட்டுக்கட்டு 1) வேட்டைக்குச் சென்ற மூவரும் மழை வெள்ளத்தில் சிக்கித் திரும்பாத காரணத்தால் மனைவியர் கைம்மைக் கோலம் பூண்டதாகவும் மீண்டு வந்து நடந்ததை அறிந்தவர்கள் அவ்வூரில் வாழ விரும்பாமல் கொல்லிமலைக்கு வந்ததாகவும் தங்கையைத் தொட்டியனுக்குத் திருமணம் செய்து தந்ததாகவும் வரலாறு சொல்லப்பட்டுள்ளது.

பெரியண்ணன் வெள்ளாளப் பெண்ணையும், நடு அண்ணன் இடைச்சிப் பெண்ணையும், சின்னண்ணன் தேவேந்திரகுலப் பெண்ணையும் மணந்ததாக நாட்டுக்கட்டு (2) குறிப்பிடுகிறது.

சகோதரர்கள் வழிநடந்து வந்ததையும் அப்போது வேட்டையாடியதையும் கொல்லிமலையில் நாடுகள் பிரித்து வாழ்ந்ததையும் எல்லாப் பாடல்களும் சுட்டுகின்றன. ஆயினும் காஞ்சிபுரத்திலிருந்து இவர்கள் புறப்பட்டதற்கான காரணங்களில் வேறுபடுகின்றன. கொல்லிமலைக்கும் பிற மலைகளுக்கும் சமவெளியிலிருந்து 16ஆம் நூற்றாண்டில் முகமதியர் ஆட்சி மேலோங்கியபோது வந்து இம்மக்கள் குடியேறினார்கள் என்னும்

ஆய்வாளர் கருத்து (தென்னிந்தியக் குலங்களும் குடிகளும் ப.497) இப்பாடல்களில் நேரடியாக இடம்பெறவில்லை. இருப்பினும் அரசனுடன் நேர்ந்த தகராறு, வழிபாட்டுரிமை மறுக்கப்பட்டமை, பிற சாதியினருடன் நேர்ந்த போராட்டம் ஆகியவை வெவ்வேறு வகைகளில் இவற்றில் சுட்டப்படுவதாகக் கருத இடமுண்டு. வேடர்களுக்கும் இவர்களுக்கும் நேர்ந்த சண்டை குடிபெயர்வுக்குக் காரணம் என்பதினும் குடியேற்றத்தின்போது சண்டை நேர்ந்தது எனக் கருதுவது பொருத்தமுடையதாகத் தெரிகிறது. குடியேற்றத்தின்போது பல்வேறு சாதிகளுக்கும் இவர்களுக்கும் திருமண உறவின் மூலம் கலப்பு நேர்ந்த நிலையினையும் நாட்டுக்கட்டுக் காட்டுகிறது. இன வரலாறு கூறுவன எனும் வகையில் நாட்டுக்கட்டுப் பாடல்கள் முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதில் ஐயமில்லை.

***

சேர்வைப்பாட்டு, கோமாளிப்பாட்டு, ஆண்டிக்கோலம் போன்றவையும் மாவிளக்கு எடுக்கும்போதும் போடும் குலவையுடன் பாடும் பாட்டு, திருவிழாத்தொடங்கும்போது பாடும் பாடல், அக்கினிச்சட்டிப் பாட்டு போன்றவையும் பண்டிகைப் பாடல்களாகும். முதல் மூன்றும் பொங்கல் திருநாளை ஒட்டி நிகழ்த்தப் பெறுவன. அலங்கரிக்கப்பட்ட சாமி மாட்டுடன் பலர் கூடி ஊர் ஊராகச் சென்று இவற்றைப் பாடுகின்றனர். பாடலைப் பாடிய வண்ணம் ஆடி, வீட்டோரை வாழ்த்திப் பரிசுப் பொருட்களைப் பெறுகின்றனர். கோமாளி வேடம், ஆண்டி வேடம் அணிந்தவர்கள் பாட, பிறர் அதனைப் பின்பாட்டாகப் பாடுகின்றனர்.

பொங்கல் திருநாளின் சிறப்பும், தங்கள் குலப் பெருமையும், பாடப்படும் வீட்டோரின் பெருமையும் கூறப்பட்டு, பரிசு நல்குவதால் வளம் பெருகும் என்று வாழ்த்துவது இப்பாடல்களின் பொதுமரபாகும். சேர்வைப்பாடல் போலவே கம்பத்தைத் திருமாலாக உருவகித்து எடுத்துவரும் கம்பச்சேர்வைப் பாடலும் அமைகிறது. உறவு முறைகளின் ஒன்றுபட்ட தன்மைக்கும், பண்டிகைக் கால மனமகிழ்வுக்கும், ஒருவரை ஒருவர் வாழ்த்திக் கொள்ளும் பண்பிற்கும் இப்பாடல்கள் சிறந்த எடுத்துக்காட்டுகள்ாகும். பாடல்கள் ஒரே பொருளமைதியுடையனவாக இருப்பதில்லை. இசையும் ஆடலுமே முக்கியத்துவம் பெறுகின்றன. உற்சாகம் நல்கும் எப்பகுதியும் பாடலில் பாடப்படுகிறது. ஆடுகின்ற தன்மைக்கு இயைந்த தாளத்துடன் பாடல்கள் பாடப்படுகின்றன. கூத்தில் கோமாளி பாடும் பாடல்கள் கூட இதில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றன. தாளம் மட்டுமே வேறுபாடு. அறப்பளீசுரர், திருவரங்கநாதர், விநாயகர், மாரியம்மன், காளியம்மன், கொங்காயி, பிடாரியம்மன், நீலியம்மன் எனப்பல தெய்வப் பெயர்களும் அவற்றின் இருப்பிடங்களும் கதைகளும் பெருமைகளும் சுட்டப்படுகின்றன.

***

குறவன் - குறத்தி வேடமிட்டுப் பாடி ஆடும் பாடல்கள் கொல்லிமலை மக்களால் பெரிதும் விரும்பப்படுவன. பலரும்

இப்பாடல்களை மனதிலிருத்திப் பாடுகின்றனர். திருவிழாக்களின் போதும் கூத்தின் போதும் இவை பாடப்படுகின்றன. பழுத்த வயதில் இறப்பவரின் இறுதிச் சடங்கு நிகழும் இரவிலும் இப்பாடல்கள் பாடப்படுவது குறிப்பிடத்தக்கது. தமிழகத்தின் பல பகுதிகளிலும் பாடப்படும் பாடல்களே இங்கும் வழங்குவதாகத் தெரிகிறது. ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் கேலி செய்து பாடும் நகைச்சுவைக்காகவும், கவர்ச்சி மிக்க குறைந்த ஆடையுடன் பாடியாடும் பாலியல் கொச்சைத் தன்மைக்காகவும் இவை பெரிதும் இரசிக்கப்படுகின்றன.

***

திருமணப்பாடல்களில் பெண் கேட்டல், ஏற்றி இறக்கல், வழிநடைப்பாட்டு, வாழ்த்து ஆகியன முதன்மை பெறுகின்றன. தங்கை தன் அண்ணனிடம் பெண் கேட்டுப் பாடும் பாடல் நெருங்கிய உறவுக்குள் மண உறவு கொள்ளும் வழக்கத்திற்குச் சான்றாகிறது.

மண மேடையில் பெண்ணையும் மாப்பிள்ளையும் கேலி செய்து நகைச்சுவையாகப் பாடும் பாடல் 'ஏற்றி இறக்கும் பாட்டு' என்று இம்மக்களால் அழைக்கப்படுகிறது. அழகில்லாத மணப்பெண் தன் அண்ணனை மயக்கி மணம் செய்து கொண்டாள் என்று தங்கை கேலி செய்கிறாள். இதில் குறவர் வம்சம் இழித்தும், வெள்ளாள, பாப்பார வம்சம் உயர்த்தியும் கூறப்படுகிறது. கறுப்பு நிறம் தாழ்ந்தது, படிப்பறிவு இல்லாமை இழிந்தது, சமையல் செய்யத் தெரியாமை தாழ்வானது, தாழ்ந்த இனத்தவரோடு உறவு கொள்வது இழிவானது என்னும் எண்ணப்போக்குகள் இடம்பெறுகின்றன. இத்தொகுப்பில் உள்ள இப்பாடல்கள் தாய்-மகள் உறவுடைய இருவரால் பாடப்பட்டவை. இதில் தாய் ஈழத்தில் சிறிது காலம் வாழ்ந்தபோது கற்றதாகக் கூறினார். ஆனால் 15 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இப்பாடல்கள் கொல்லிமலையில் பாடும் வழக்கு அருகிப் போயிற்று எனத் தெரிவித்தார்.

பெண்ணை அழைத்துச் சென்றுமணமகன் வீட்டில் சேர்க்கும்போது வழியில் பாடும் பாடல் 'வழிநடைப்பாட்டு' என வழங்குகிறது. இதை ஒருவர் பாட, உடன் செல்லும் குழுவினர் ஒத்திசைந்து பாடுகின்றனர். பெரும்பாலும் நல்லதங்காள் கதை போன்ற பகுதிகள் பாடப்படுகின்றன. வீடு சென்று சேர்ந்ததும் கதை நிறுத்தப்படுகிறது. இப்பெண்ணால் அக்குடும்பம் செல்வவளமோங்கிச் சிறக்க வேண்டும்; பால் வளம் பெருக வேண்டும்; தெய்வத் தன்மை வீட்டில் குடிபுக வேண்டும் என்று வாழ்த்தப்படுகிறது.

பெண்ணழைத்து மெல்ல நடந்து செல்லும் இயல்புக்கேற்ப இப்பாடல்கள் நீண்ட ஓசையமைவுடன் பாடுவதும், குழுவினர் தொடர்ந்து பாடுவதும் குறிப்பிடத்தக்கது.

***

கொல்லிமலை மக்கள் பாடல்களில் கும்மிப் பாடல்கள் குறிப்பிடத்தக்க பகுதியாக அமைகின்றன. ஒப்பாரி, தாலாட்டிற்கு அடுத்த நிலையில் கும்மிப் பாடல்களையே பாடுகின்றனர். பண்டிகைக்

காலங்களிலும் பொழுது போக்காக நிலாக் காலங்களிலும் இவை பாடப்படுகின்றன. சிறுமியர், வயது முதிர்ந்த பெண்கள், ஆடவர்கள் என இவர்கள் பாடும் பாடல்கள் உள்ளடக்கத்தில் குறிப்பிடத்தக்க மாற்றங்களைக் கொண்டுள்ளன.

சிறுமியர் பாடும் பாடல்கள் பெரும்பாலும் பொழுதுபோக்குத் தன்மை உடையன. ஒன்று முதல் பத்து வரையிலான எண்களை வரிசையாகக் கொண்டு பாடும் பெரும்பாலான கும்மியின் பொதுத் தன்மையைக் கொண்டவை. அவற்றிடையே சொற்களைக் கோத்து ஓசை ஒழுங்கமையப் பாடும் முனைப்புடையன. மாமன் மீதும் தாங்கள் வளர்க்கும் சேவல் முதலான பறவைகள் மீதும் கொண்டுள்ள நேசத்தைப் புலப்படுத்துவன. கேரளத்தில் கற்றுவந்து பாடிய (வீசுறது மணிப்பிரம்பு) பாடல் பிறவற்றிலிருந்து வேறுபட்டு விளங்குகிறது. இதில் புகைவண்டிக்காக இருப்புப்பாதை அமைக்கும்போது 'முக்காத்துட்டு' மட்டும் கூலி கொடுத்துவிட்டு, பிரம்பால் அடித்து வேலை வாங்கிய கொடுமை பாடப்பட்டுள்ளது. பாம்பையும் அடிக்கக் கூடாது; அதனால் பாவம் வந்து சேரும் என்னும் நம்பிக்கை கொள்ளும் இயற்கையுறவினை ஒரு பாடல் உணர்த்துகிறது (பாவம் சுற்றும்).

சிறுமியர் என்னும் வயதினைக் கடந்த பெண்கள் பாடும் பாடல்களில் பலவகையான உள்ளடக்கங்கள் இடம்பெற்றுள்ளன. பல பாடல்கள் முருகன், மாரியம்மன், பிடாரி முதலிய தெய்வங்களைப் புகழ்ந்து பேசுகின்றன. வேறு பல பாடல்களில் வாழ்க்கைத் துயரம் சுட்டப்படுகின்றது.

வேதாம்பையன் என்னும் கொல்லனிடம் வாங்கிய அறிவாளால் வெட்டினாலும் வெட்டவில்லை என்ற பாடல் மேலெழுந்தவாரியாக எளிய பொருள் தந்தபோதும் உருவகமாக வாழ்வினையும் அதன் தோல்விகளையும் பாடுவதாகக் கொள்ளத்தகும். பலவகையான மேம்பாட்டு முயற்சிகளும் பயனின்றிப் போகும் தொடர்துயரம் இதில் சுட்டப்படுவதாகக் கொள்ளும்போது இப்பாடலுக்கு வேறொரு பொருட்பரிமாணம் கிடைப்பது உண்மை.

கொடிகளை அறுத்து, கூடை செய்து, பாதை அமைத்து காப்பித் தோட்டத்தில் கூலிக்காகக் காப்பிப்பழம் பறிக்கப் போனால், ஒரு பழம் பறிக்கத் தவறினாலும் வெள்ளைக்காரன் உதைப்பதை ஒரு பாடல் உருக்கமாகச் சுட்டுகிறது (ஒதைப்பானடி வெள்ளைக்காரன்) ஊரான் தோட்டத்தில் விளைந்த வெள்ளரிக்காய்க்கு வெள்ளைக்காரன் விலை நிர்ணயம் செய்யும் கொடுமையினைச் சொல்லும், பலரும் அறிந்த பாடலும் இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளது.

தங்கை முறை கொண்ட பெண்ணுடன் தகாத உறவுகொள்ள ஒருவன் முனைகின்றபோது, பூமி இதனைப் பொறுக்காது என்று சினந்து திட்டுகிறாள் ஒரு பெண் (பூமி பிளந்துவிடும்). இப்பாடல் தமிழகத்தில் பல வடிவங்களில் கிடைத்திருப்பதை டாக்டர் ஆறு. இராமநாதன் சுட்டிக்காட்டியுள்ளார். (நாட்டுப்புற இயல் ஆய்வுகள், ப.156).

ஆணும் பெண்ணும் கேலி செய்து பாடும் பாடல்களும் கொழுந்தனாரைக் கேலி செய்யும் பாடல்களும் கும்மி வடிவத்தில் பாடப்படுகின்றன.

ஆடவர்கள் பாடும் கும்மிப்பாடல்களாக இத்தொகுப்பில் உள்ளவை ஒயில் கும்மிப் பாடல்களாகும். ஆட்ட வேகத்திற்கேற்பச் சொற்கள் கோக்கப்பட்டுள்ள இப்பாடல்கள் வள்ளி கதை, காதல் நிகழ்ச்சி, தினையறுத்து மாவாக்கித் தேன் கலந்து அருந்தி மகிழ்தல், வளையல் விற்பவன் பாடுவது எனப் பல்வேறு பொருட்களில் அமைந்துள்ளன.

***

கொல்லிமலைப் பெண்கள் பாடும் பாடல்களில் தாலாட்டுப் போலத் தனியிடம் பெறுவது ஒப்பாரியாகும். உறவினை இழந்த நிலையில் வெளிப்படும் உணர்ச்சி வெள்ளம், கையறு நிலையினை உருக்கமாக எடுத்துரைப்பதாகும். தாய், தந்தை, சகோதரன், குழந்தை, மாமனார், பாட்டி என ஒவ்வொருவருக்கும் ஒப்பாரி பாடும் வழக்கமிருக்கிறது. தாயினை இழந்தவுடன் தனிக்கிருந்த அரவணைப்பை, சீராட்டை இழந்ததாகப் புலம்புவதும், தந்தையை இழந்ததும் பற்றுக்கோடு நீங்க, அண்ணியால் புறக்கணிக்கப்படுவதை எண்ணி நைந்து போவதும், தனக்கு நல்ல சோதிடனைப் பார்த்து மணம் முடிக்காததால் இன்று விதவையானதாகக் கணவனை இழந்த நிலையில் குற்றங் கூறிக் கலங்குவதும் இப்பாடல்களின் அடிக்கருத்தாகும். இறந்தவர்களின் அழகும், அதிகாரமும், செல்வ வளமும், அன்பும், சிறப்பித்துப் பாடுவதன் மூலமும் இழந்தது பேரிழப்பு என்பது உணர்த்தப்படுகிறது. ஒப்பாரி பலவற்றில் இடம்பெறும் உருவகங்களும், அஃறிணைப் பொருட்களை விளித்துப் பேசும் உத்திகளும் இவற்றின் கலைநயத்தை மிகுவிக்கின்றன. தமிழக வாழ்வியலில் உறவுகளைத் தவிர வேறு வகையற்ற நிலையில் பெண்களின் வாழ்வு இருப்பதற்கு அவர்களது ஒப்பாரிகளே சான்றுகளாகும். பாடல்களில் முதலில் இடம்பெறும் பத்தியின் பொருளமைவே தொடரும் பத்திகளில் வேறுவகையில் மாற்றி அமைக்கப்படுவது பொதுப்பண்பாகக் காணப்படுகிறது.

இறப்புச்சடங்கில், பறை முழக்குவோர் பாடும் பாடல்களில் வாழ்வின், தேடிய செல்வங்களின் பயன்படாத் தன்மை, நிலையாமை உணர்வு மீதூறப்பாடப்படுவது குறிப்பிடத்தக்கது.

அகால மரணமுற்றோரும், ஆசை நிரம்பப் பெறாது உயிர் விட்டோரும் பேய்களாக இருந்து பிறரைப் பற்றுவர் என்பது இம்மக்களின் நம்பிக்கையாகும். பேய் பிடித்தவரை அமர்த்தி, உடுக்கடித்துப் பாடிப் பேய் விரட்டுவர். அப்போது தெய்வங்களை வருந்தியழைப்பர். தொடர்ந்து ஒவ்வொரு தெய்வமாக வேண்டி அழைக்கும் இப்பாடல்கள் அளவில் நீண்டவை.

***


கொல்லிமலை மக்களின் வாழ்வியலும் கொல்லிமலையின் இயற்கையும் இப்பாடல்களில் பெறும் இடத்தினைச் சுட்டுவது அவசியமானதாகும். வாழ்வியலில் இம்மக்களின் இறை நம்பிக்கையும் அடிப்படைத் தொழிலான வேளாண்மையும் சிறப்பிடம் பெறுகின்றன. பொதுநிலைத் தெய்வ வழிபாட்டுக் கூறுகள் இவர்களிடம் இருந்தபோதிலும், வட்டாரத் தெய்வ வழிபாடே முதன்மை பெறுகிறது எனலாம். கொல்லிமலையின் ஒவ்வொரு நாட்டிலும் ஏராளமான வட்டாரத் தெய்வங்கள் வழிபடப் படுகின்றன. முந்தை வாழ்ந்தோர், அவர்களுள்ளும் ஏதேனும் குறிப்பிடத்தக்க காரணத்தால் வாழ்ந்து முடித்தோர், தெய்வங்களாக உயர்த்தி வழிபடப் படுகின்றனர். இவர்களுள்ளும் பெண் தெய்வங்களே முதன்மை பெறுகின்றன. இத்தொகுப்பிலுள்ள பாடல்களில் கொங்காயி, காளியம்மன், இளையநாச்சி, நாச்சியம்மன், பெரிய பிடாரி, கன்னிமார், குருவப்பிடாரி, பெரியநாச்சி, நல்லசெல்லி, கடகத்தம்மன் முதலிய தெய்வங்கள் பலவகைகளில் குறிப்பிடப்படுகின்றன. தங்களது வாழ்வு வளம் பெறவேண்டும், பில்லி சூனியங்களிலிருந்து காக்கப்பட வேண்டும், தங்கள் கால்நடைகள் காப்பாற்றப்பட வேண்டும், பேய்களை விலக்க வேண்டும் என்னும் வேண்டுதல்கள் இவற்றிடம் வைக்கப்படுகின்றன. வேளாண்மை தொடர்பான பாடல்களில் காளைகளின் அழகும் பொலிவும் விதந்து பேசப்படுகின்றன. உழவுக்குப் பயன்படும் கயிறுகள், கலப்பைகள் முதலியவற்றைச் செய்யத் தேர்ந்துகொண்ட மூலப்பொருட்களின் சிறப்பும் அவற்றை வடிவமைத்த தச்சர்களின் தொழில்நுட்பத் திறனும் சுட்டப்படுகின்றன. கொல்லிமலையின் நீர்வளமும் நிலம், நீருடன் இணையும் உழைப்பால் விளையும் பயிர்களின் சிறப்பும் புனைவியல் தன்மையுடன் பேசப்படுகின்றன. ஏர் நடத்தும் போது ஒருவர் மற்றொருவருக்கு இவற்றை எடுத்துச் சொல்லுவது கூட்டுத் தன்மையுடன் வேளாண் முயற்சியில் ஈடுபடுவதற்கும் ஒத்த கருத்தினர் ஆவதற்கும் வழிகோலும் தன்மையுடையன. எந்திரத் தொழில் நுட்பம் பயன்பாட்டு வேளாண்மையில் காணவியலாத சிறந்த கூறுபாடாக இதனை எண்ணுவது பொருந்தும்.

கொல்லிமலையில் முதன்மை பெறுவன மலை, வனம், பறவை, விலங்கு, தாவரங்கள் முதலிய இயற்கைப் பொருட்களாகும். தங்கள் வாழ்வின் அடிப்படையான கொல்லிமலையை விதந்துபாடும் தனிப்பாடல்கள் கிடைக்கப் பெறாவிடினும் கொல்லிமலையையும் அங்குள்ள ஊர்களையும் தொடர்புபடுத்திப் பாடும் பாடல்கள் மிகுதியாகக் கிடைக்கின்றன. தன் குழந்தைக்குத் தொட்டில் கட்டும் தாய் கொல்லிமலை மூங்கிலில் கோளாறாகத் தொட்டில் கட்ட விரும்புகிறாள். கொல்லிமலையின் தனிச்சிறப்பான கருவாழைப் பழத்துக்கும் கருநெல்லுச் சோற்றினுக்கும் விருப்பங் கொண்டே கொங்கலாயி கொல்லியினைத் தேர்ந்தெடுத்து அமர்ந்ததாகச் சிறப்பிக்கப்படுகிறது. ஏற்றம் மிக்க கொல்லிமலையிலிருந்து இறக்கத்திலுள்ள புளியஞ்சோலை தூரமாக இருந்தபோதும் இருவரும் சேர்ந்து நடந்து பார்ப்போம் என்று காதலன் காதலியை அழைக்கிறான். தான் எங்கெங்கு உன்னைக் காதலித்தேன் எனும்போது கொங்கலாயி பாறை, காக்கொலையாங்காடு, மஞ்சப்பாறக்கிராய், பூவாண்டிக்கிராய்,

வண்ணாந்துறை, திண்டத்திபாறை என்று தன் சொந்தப் பகுதிகளைப் பெருமையுடன் குறிப்பிடுகிறான். மேலும் பல்வேறு காரணங்களுக்காக விரகனூர், சேலூர், பரியூர், பின்னாத்தி, வாளரம், சேட்டூர், சூலவந்தி, கருமூர், சேத்தூர், அலியநாடு, பெரியகோயிலூர், அசக்காட்டுக் கோயிலூர், சிந்தரப்பட்டி, அடுக்கம்புள்ளமெதி, எடப்புளி, சித்தூர், திருப்புளி, திண்ணனூர், வளப்பூர், தேவானூர், வாழவந்தி, பனஞ்சாடு, பெருங்கிராய்ப்பட்டி, கரையங்காடு முதலியன குறிப்பிடப்படுகின்றன. மக்கள் தம் வாழிடம் மீது கொண்ட பெருவிருப்பிற்கு இவை சான்றுகளாகும்.

தங்கள் வாழ்வின் தேவைகளுக்காக வனப்பகுதிகள் பலவற்றை விளை நிலங்களாக்கி வாழும் வேளாண் மக்களேயாயினும் சாமிகாடுகள் என்னும் புனிதக்காடுகளை அமைத்துத் தெய்வ நம்பிக்கையையும் இயற்கையையும் காத்தும் வளர்த்தும் கொள்ளும் இயல்புடையோராவர். பூங்கவனச் சோலையின் குளிர்ந்த நிழலில் அமர்ந்திருக்கும் நாச்சியம்மனைச் சிறப்பித்துப் பாடும்போதும் ரிஷிகள் தங்கள் வனங்களில் தங்கியுள்ளதாகப் பாடும்போதும் வனத்தைப் புனிதமாகக் கருதிப் போற்றும் இவர்களது இயற்கை நேயம் விளங்குகிறது. மேலும் மாடு, ஆடு, கடமான், செந்நாய், நாகம் ஆகிய விலங்குகளையும் கொன்றை, மூங்கில், மருதாணி, எலுமிச்சை, அத்தி, ஆல், புன்கு, புளி, வன்னி, மாதுளை, பொருசம், மாத்தி, மா, வேம்பு, நாரத்தை, இலந்தை, கொய்யா, பப்பாளி, வாழை, தென்னை, செண்பகம் முதலிய மரங்களையும் ஏலம், மல்லி, அரளி, இஞ்சி, மஞ்சள் முதலிய பிற தாவரங்களையும் சிறப்பித்துப் பாடுகின்றனர். தங்கள் உணர்வு வெளிப்பாட்டுக்குக் கருப்பொருளாகப் பாடல்களில் பயன்படுத்துகின்றனர். கிளி, மயில், குயில், சேவல் முதலிய பறவைகளும் இவர்தம் வாழ்வில் கலந்து நிற்பதையும் பாடல்கள் காட்டுகின்றன.

இவ்விடத்தில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்க செய்தி ஒன்று உண்டு. இப்பாடல்களைச் சேகரித்து எழுதி வரும்போது பல இடங்களில் கருவாழை, கருநெல் என்ற பெயர்கள் இடம்பெற்றிருந்தன. குறிப்பாக, கொல்லி மலையின் புகழ்பெற்ற வன தெய்வம் கொங்காயி அம்மனுக்குப் பூசையின்போது படைக்கப்பெறுவதாக இவை குறிப்பிடப்பட்டன. இதுவரை அறியப்படாதிருந்த இவ்விரு வகைகளும் அறியப்பட வேண்டும் என்னும் ஆர்வம் எழுந்தது. கொல்லிமலை மக்கள் பலரிடம் வினவியபோது அவர்கள் பெயரளவில் தெரிந்து வைத்திருந்தார் களேயன்றி முழுமையாகவும் சரியாகவும் தகவல் தர இயலவில்லை. இருப்பினும் தேடுதல் தொடர்ந்தது. இறுதியாக ஐந்து நாட்டருகில் இருப்பதாகத் தகவலினை ஆலிவர் பெற்றார். இதனைத் தொடர்ந்து சென்றதில் பைல் நாட்டில் உள்ள நடுவளவு என்னும் ஊரில் முத்து என்பவரின் வீட்டின் தண்ணிக்கிராய்த் தோட்டத்தில் கருவாழை மரம் உள்ளதைக் கண்டறிந்தார். கருவாழை



*கருவாழைத்தார்*

மரம் சற்று உயர்ந்து, பருத்து, அடர்ந்த நிறமுடையதாகக் காணப்பட்டது. இது தங்களிடம் மட்டும் உள்ளதாகவும் 'தீட்டு' இருக்குமிடத்தில் வாராதென்றும், வருடத்திற்கு ஒருமுறை சேலூர்நாடு கொங்காயி அம்மன் பூசைக்கு வந்து வாங்கிச் செல்வதாகவும் அவ்வீட்டினர் கூறினர். மிகுந்த மணமும், இனிய சுவையும் கொண்டதும், தற்போது அழியும் தருவாயில் உள்ளதுமான முக்கியமான ஒரு தாவரத்தைக் கண்டறிய இத்தொகுப்பாக்கம் துணையானது மகிழ்வூட்டும் செய்தியாகும்.

மலை நிலத்திற்கு உரிய தினை, சாமை, வரகு முதலியனவும் பாடல்களில் சிறப்பிக்கப்படுகின்றன. தினைப்பயிர் ஓரிலை, ஈரிலையாக வளர்வது தொடங்கி, காவல் காத்து வளர்க்கப்படுவதும், கவனமாக அறுவடை செய்யப்படுவதும், மாவாக்கப்பட்டுப் புகழ்வாய்ந்த தேனுடன் கலந்து புசிக்கப்படுவதும் சுட்டப்படுகின்றன. சம்பா என்ற மிகப்பழமையான நெல்வகையைக் குறித்த இவர்களது நேயத்தை அழகுச்சம்பா, குருவச்சம்பா, ஈக்கிஞ்சம்பா, எருக்கிச்சம்பா, முத்துச்சம்பா, மிளகுச்சம்பா, இருகிச்சம்பா, சீரகச்சம்பா, உளுந்துச் சம்பா, குருக்கச் சம்பா, குத்துச்சம்பா, செட்டிச்சம்பா, மணிச்சம்பா, சாயச்சம்பா, ஆறுசம்பா, கோடிச்சம்பா என்றமையும் அடைமொழிகள் அறிவிக்கின்றன. சாமைக்காடும் தினைக்காடும் இவர்களுடைய உணர்வுத் தளத்தில் ஆற்றும் பங்கிற்குப் பாடல்களில் சான்றுகள் உள்ளன. மேலும் கருமொச்சை, கொள்ளு, கடலை, எள் முதலிய தானியங்களும் தொடர்புறுத்திச் சிறப்பித்துப் பேசப்படுகின்றன.

கொல்லிமலையில் காப்பி பயிரிடப்பட்டபோதும் அவை குறித்த பாடல்கள் கிடைக்கப்பெறவில்லை. தொகுப்பில் காப்பியைக் குறிப்பிடும் பாடல் ஈழத்திலிருந்து வந்து கலந்துள்ளதாகத் தெரிகிறது.

பழமையான தாவர வகைகளுடன் அண்மைக்காலத்தில் கொல்லிமலைக்கு அறிமுகமான அன்னாசியையும் ஒரு பாடல் குறிப்பிடுகிறது. ஆனால் சந்தைப் பயிர்களில் ஒன்றானதும் மிகுதியாக அண்மைக் காலத்தில் இடம்பெறுவதுமான குச்சிக்கிழங்கைப் பாடல் ஏதும் குறிப்பிடவில்லை. ஆயினும் ச்வ்வரிசி தாலாட்டுப் பாடலொன்றில் இடம்பெறுகிறது.

வேளாண் விளைபொருள்களின் விற்பனை காரணமாகச் 'சந்தை' இவர்களுடைய பாடலில் இடம் பெறுகிறது. வெள்ளிச்சந்தை புதன் சந்தை ஆகியன குறிப்பிடப்படுகின்றன. வெள்ளிச் சந்தைக்குச் செல்லும்போது வெள்ளைக்காரனிடம் பிடிபட்டு அடிபடுவதையும் அவனிடம் வாக்குமூலம் கொடுத்துத் துயர்படுவதையும் ஒரு பாடல் குறிப்பிடுகிறது. அதிகார அமைப்பிற்கும் இம்மக்களுக்கும் நேர்ந்த முரண்பாடும் காரணங்களும் அக்காலகட்ட வழக்காறுகளுடன் சேர்த்து ஆராய இடம் தருவனவாகும்.

முனைவர் சா. பாலுசாமி

# தாலாட்டுப் பாடல்கள்



*மயிலுக் கறியாக்கி - உனக்கு*
*மணிச்சம்பாச் சோறாக்கி*
*வெங்கல வட்டெடுத்து - கண்ணே உனக்கு*
*வெளக்கிப்போட நேரமில்லே*

## 1. மாமன் கொண்டுவருவார்

அரசாயி, 55
விரகனூர்ப்பட்டி
சேலூர் நாடு

கொல்லிமலெ கண்ணே மூங்கவெட்டி - உங்களுக்குக்
கோளாறாத் தொட்டி கட்டி - எங்க கண்ணே
கோளாறாத் தொட்டியிலே - அங்கக்
கொழந்தைகளா தூங்குமய்யாவே - உனக்கு 1

பச்சமலெ கண்ணே மூங்கவெட்டி
பாங்கான கண்ணே தொட்டிகட்டி
பாங்கான தொட்டியிலே - எங்க கண்ணே
பாலகனா தூங்குமய்யாவே - எங்க கண்ணே உங்க மாமனுக்குக் 2

கோட்டையில கூடாரம்
கொத்தமல்லி ஏவாரம்மாவே - அங்கக்
கொத்தமல்லி வித்தொடனே - எங்கண்ணே உங்கமாம(ன்)
கொலுசுசெஞ்சு வாராராம் 3

மதுரயில கூடாரம் - எங்கண்ணே உம்மாமனுக்கு
மல்லியப்பூ ஏவாரம் - கண்ணே
மல்லியப்பூ வித்தொடனே - கண்ணே
மாலசெஞ்சு வருவாங்க 4

சீரங்கத்து வீதியிலெ - எங்கண்ணே உங்க மாமனுக்குச்
சீலவெல ஏவாரமாவே - அங்க
சீலவெலயாச்சோ - எங்கண்ணே உன் மாமன் அங்கச்
செலம்பு செஞ்சு வாராராம் - அங்க 5

பட்டனத்து வீதியிலெ - எங்க கண்ணே உன் மாமனுக்குப்
பட்டுவெல ஏவாரமா - அங்க
பட்டுவெலயாச்சோ - அங்க கண்ணே உன் மாமன்
பதக்கஞ் செஞ்சு வாராராம் 6

## 2. யாரடிச்சாரோ

சரஸ்வதி, 27
நரியங்காடு
சித்தூர் நாடு

ஆராரோ கண்ணே ஆரிரோ ஆராரோ 1

அடிச்சாரச் சொல்லியழு - எங்கண்ணே
அவுதாரம் போட்டிடலாம் - உன்னத்
தொட்டாரச் சொல்லியழு - கண்ணே நா
தோள்விலங்கு மாட்டிடுவேங்ஙள்! 2

ஆராரோ ஆரீரோ - எங்கண்ணே
ஆரடிச்சு நீயழுதே 3

அத்தை அடிச்சாரா - எங்கண்ணே
அரளிப்பூ செண்டாலே
மாம(ன்) அடிச்சாரா - எங்கண்ணே
மல்லியப்பூ செண்டாலே 4

யாரடிச்சு நீயழுதே - எங்கண்ணே
ஆராரோ ஆரீரோ
பாட்டி அடிச்சாரா - எங்கண்ணே உன்னப்
பாலூட்டும் சங்கடையில் 5

அடிச்சாரச் சொல்லியழு - எங்கண்ணே
அவுதாரம்[2] போட்டிடலாம் 6

ஆராரோ ஆரீரோ - எங்கண்ணே
ஆரீரோ ஆராரோ 7

கண்ணுறங்கு கண்ணுறங்கு - எங்கண்ணே நீ
கண்மணியே கண்ணுறங்கு 8

நீயழுத கண்ணீரு - கண்ணே
இஞ்சிக்கு இரிஞ்சோடும்
எலுமிச்சை வேரோடும்
மஞ்சளுக் கிரிஞ்சோடும் - கண்ணே நம்ம தோட்டத்தில்
மருதாணி வேரோடும் 9

ஆராரோ ஆரீராரோ - எங்கண்ணே
ஆரடிச்சு நீயழுதே 10

அடிச்சாரச் சொல்லியழு - எங்கண்ணே
அவதாரம் போட்டிடலாம் - உன்னத்
தொட்டாரச் சொல்லியழு - எங்கண்ணே
தோள்விலங்கு மாட்டிடலாம் 11

கண்ணுறங்கு கண்ணுறங்கு - கண்ணேஎங்
கண்மணியே நீ கண்ணுறங்கு
ஆராரோ ஆரிராரோ - எங்கண்ணே
ஆரிரண்டு தூரிராரோ 12

*[1] மாட்டிடுவேங்ஙள் - மாட்டிடுவேன் என்பதுடன் ங்க, கள் என்னும் மரியாதை விகுதிகள் சேர்த்துக் கூறுவதாகத் தெரிகிறது.*
*[2] அவுதாரம் - அபராதம்.*

## 3. வெளக்கிப்போட நேரமில்லே

**சிவகாமி, 40**
**வெண்டலப்பாடி**
**சேலூர்நாடு**

வெள்ளி மணிசெலம்பே வெளையாடும் பொன்சிலம்பே
ஆரீராரிரோ ஆராரோ - நீ
விளையாடி வீடுவந்தா - நாவளத்துங் கண்ணாடியே - உனக்கு
வெள்ளிரதங் கூடவரும் 1

ஆரீராரிரோ - கண்ணே
ஆராராரோ 2

தங்கமணி செலம்பே - நீ
தாலாடும் பொன்செலம்பே - நீங்க
தாலாடி வீடுவந்தா - நா வளங்குங் கண்ணே - உனக்குத்
தங்கரதம் கூடவரும் (ஆரிராரிரோ... 3

கொல்லிமல மூங்க வெட்டி - உனக்குக்
கோளாறா தொட்டசீவி
கோளாறா தொட்டலிலே - நாவளத்துங்
கொளந்தையே கண்ணுறங்கு (ஆரிராரிரோ... 4

பச்சமலெ மூங்கவெட்டி - உனக்குப்
பாங்குடனெ தொட்டசீவி
பாங்குடனெ தொட்டலிலே - நா வளத்தும்
பாலகனே கண்ணே கண்ணுறங்கு (ஆரிராரிரோ... 5

மயிலு கறியாக்கி
மணிசம்பா சோறாக்கி
வெங்கால வக்கெடுத்து[1] - நா வளத்தும் கண்ணுக்கெல்லாம்
வெளக்கிப்போட நேரமில்லே - இன்னிக்கு
(ஆரிராரிரோ... 6

அத்தித்தூரி ஆலந்தூரி - உந்
தாய்மாம(ன்) கட்டுந்தூரி[2]
தாய்மாம(ன்) கட்டுந்தூரி - நாவளத்துங் கண்ணே எல்லாம்
கரிங்கண்ணு நித்திரையோ

நித்திரையோ சத்திருவோ - நா வளத்துங் கண்ணாடியே உனக்கு
நெனவே தடுமாறுதோ (ஆரிராரிரோ... 7

புங்காந்தூரி புளியாந்தூரி - கண்ணே உனக்குப்
பொன்மாம(ன்) கட்டுந்தூரி - அந்தப்
பொன்மாம(ன்) கட்டுந்தூரி - நா
வளத்துங்கண்ணே எல்லாம் உனக்குப்
பொய்க்கண்ணு நித்திரையோ
நித்திரையோ சத்திருவோ - எங்கண்ணே
நெனவே தடுமாறுதோ 8

*[1]வட்டிலெடுத்து [2]தொட்டில்*

# 4. மனமுவந்து நீயுறங்கு

செல்லம்மாள், 50
பள்ளக்குழி
சேலூர்நாடு

கண்ணே
ராரீரோ ரார்ரோ - எங்கண்ணே நீ
ராரீரோ ராரோ 1

எங்
கண்ணே கனியுறங்கு - எங்கண்ணே நீ
கானகத்து வண்டுறங்கு (ராரீரோ... 2

நம்ம
அல்லிகையாம் மல்லிகையாம் - எங்கண்ணே
அதுக்குமேல தூரிமெத்தே - நீ
தூரிமெத்தெ மேலாக - நீ
தோகையரே கண்ணொறங்கு (ஆரீரோ... 3

மல்லியப்பூ மெத்தெமேலே
மனமொவந்து நீயுறங்கு 4

நறுக்குஞ் சிறுமஞ்ச(ள்)
நன்னாரி பச்சமஞ்ச(ள்)[1] 5

அரைச்சு வழிச்சிங்களாம் - எங்கண்ணே நீ
அஞ்சுவகைக் கிண்ணியிலெ
தொட்டுக் குளிச்சிங்கன்னா - எங்கண்ணே நீ
தொரமகளாஞ் சோதிமின்ன (ஆரீரோ... 6

காசிக்கும் அந்தப்பொறம் - எங்கண்ணே நீ
காசுக்கொரு பூமாலயாம் - நீங்க
கண்டவரு வாங்கிவாங்க - எங்கண்ணே நீ
காசிராசன் பெத்தகண்ணுக்கு (ராரீரோ... 7

பழனிக்கும் அந்தப்பொறம் - எங்கண்ணே நீ
பணத்துக்கொரு பூமாலயாம் - நீங்க
பாத்தவிங்க வாங்கிவாங்க - எங்கண்ணே நீ
பாண்டியரு பெத்தகண்ணுக்கு (ராரீரோ... 8

செஞ்சிமலெ மேல - எங்கண்ணே
செலயாகக் கோயிலய்யாவே
செலக்கிரண்டு பூசசெய்யும் - எங்கண்ணே நீ
தேன்மொழியா நீபுறந்தே (ஆரீரோ... 8

பழனி மலெமேல - எங்கண்ணே நீ
படியாலே கோயிலய்யாவே - நீ
படிக்குரண்டு பூசசெய்யும் - எங்கண்ணே நீ
பாலகனா நீபுறந்தே 9

தாய்மாம(ன்) அல்லையிலே[2] - கண்ணே இன்னிக்கு
தாராவும் மேயுங்கண்ணே - நீங்க
ஓடிவிரட்டுங் கண்ணே - கண்ணே நீ
ஒருகாலு செலம்பவியவே[3] 10

மாமாம(ன்) அல்லையிலே - எங்கண்ணே
மாடுவந்து மேயுங்கண்ணு - நீங்க
மாவிலங் கொம்பொடிச்சு - நீங்க
மாட்டெ வெரட்டுங்கய்யாவே 11

[1] நன்னாரி மஞ்சள் - கஸ்தூரி மஞ்சள்.
[2] அல்லையிலே - தோட்டத்திலே
[3] செலம்பவியவே - சிலம்பொலிக்கவே

## 5. சோறூட்ட நேரமில்லை

**சிவகாமி, 40**
**வெண்டலப்பாடி**
**சேலூர்நாடு**

சாதம் கம்மியா வைப்பே(ன்) - நா வளத்துங்கண்ணாடியே - உனக்குச்
சமச்சகறி கூடவைப்பே(ன்) - கண்ணே
ஆரிரோ ஆரிராரோ - உனக்குச் 1

சோறு கம்மியா வைப்பே(ன்) - நா வளத்தும் கண்ணாடியே உனக்குச்
சுத்துக்கறி கூடவைப்பே(ன்)
ஆரிரோ ஆரிரோ - கண்ணே
ஆரிரோ ஆரிரோ - உனக்குப் 2

பச்சரிசி ஆகாதுன்னு - நா உனக்குப்
பாலரிசி கல்பாப்பே(ன்) - கண்ணே
ஆரிரோ ஆரிரோ - கண்ணே
ஆரிரோ ஆரிரோ - உனக்குச் 3

சம்பாரிசி ஆகாதுன்னு - கண்ணே
சவ்வரிசி கல்பாப்பே(ன்) - கண்ணே
ஆரிரோ ஆரிரோ - கண்ணே
ஆரிரோ ஆரிரோ - உனக்கு 4

மயிலுக் கறியாக்கி - உனக்கு
மணிச்சம்பாச் சோறாக்கி - நா
வெங்கல வக்கெடுத்து
ஆரிரோ ஆரிரோ - கண்ணே
ஆரிரோ ஆரிரோ - உனக்கு
வெளக்கிப்போட எனக்கு நேரமில்லே - உனக்கு
ஆரிரோ ஆரிரோ - கண்ணே
ஆரிரோ ஆரிரோ 5

வெள்ளி மணிசெலம்பே - இன்னிக்கு
வெளயாடி வீடுவந்தா - நா வளத்துங் கண்ணாடியே உனக்கு
வெள்ளிரதம் இப்போ கூடவரும் 6

ஆரிரோ ஆரிரோ - கண்ணே
ஆரிரோ ஆரிரோ 7

தங்க மணி செலம்பே - கண்ணே
தாலாடும் பொன்செலம்பே - நீங்க
தாலாடி வீடுவந்தா - நாவளத்துங் கண்ணாடியே உனக்குத்
தங்கரதம் இன்னிக்குக் கூடவரும் - கண்ணே 8

ஆரிரோ ஆரிரோ - கண்ணே
ஆரிரோ ஆரிரோ 9

# 6. இராணிமுத்து

தனபாக்கியம், 47
எம்.ஜி.ஆர். நகர்
வாழவந்திநாடு

ஆராரோ ஆராரோ - எங்க கண்ணே நீ
ஆரிராரோ ஆராரோ 1

கண்ணுக்குக் கண்ணுறங்கும் - எங்க தம்பி நீங்க
காணாத மயிலுறங்கும் - எம் 2

முத்துலயும் முத்துக்கண்ணா - எங்க கண்ணேநீங்க
முதிர வெளஞ்சமுத்து - எம்
ஆயிரம் முத்துலயியும் - எங்க தம்பி நீங்க
ஆய்ஞ்செடுத்த ராணிமுத்து - எம் 3

பத்துகள[1] முத்துலயும் - எங்க தம்பி நீங்க
பாத்தெடுத்த ராணிமுத்து - எம்
எட்டுகள[2] முத்துலயும் - எங்க தம்பி நீங்க
எண்ணியெடுத்த ராணிமுத்து 4

ஆட்டாட்ட ராட்டனமே - எங்க தம்பி நீங்க
அதுநடுவ சீரங்கமோ - எஞ்
சீரங்க ராயரோடு - எங்க தம்பி நீங்க
சரிசான[3] பெத்தவரே - எஞ் 5

செட்டி மவனாநீ - எங்க தம்பி நீங்க
சிலம்புச் செட்டி தன்மவனா - எங்க தம்பி நீங்க
எங்கண்ணா மவனா நீ - எங்க தம்பி நீங்க
கருத்த செட்டி தன்மவனா - எங் 6

கோட்டயில கூடாரமா - எங்க தம்பி உங்க மாமா
கொத்தமுல்லி ஏவாரமா - அந்த
கொத்தமல்லி வித்தவுடனே - எங்க தம்பி உங்கமாமா
கொலுசுபண்ணி வாராரோ 7

எம்மதுரயிலே கூடாரமா - எங்கதம்பி உங்க மாம(ன்)
மல்லியப்பூ ஏவாரமா
மல்லியப்பூ வித்தொடனே - எங்க தம்பி உங்க மாம
மாலவாங்கி வாராரோ 8

சுருட்டுப் புளியாமரம் - எங்கதம்பி உங்களுக்குச்
சூதாடும் நந்தவனம் -
சூதாடி வெளிய வந்தா
சூரியனே கையெடுக்கும் 9

பரட்ட நல்ல புளியாமரம் - எங்கதம்பி உங்களுக்குப்
பந்தாடும் நந்தவனம்
பந்தாடி நீங்கவந்தா - உங்களுக்குப்
பார்வதியே கையெடுக்கும். 10

[1] *பத்துக் களம்* [2] *எட்டுக்களம்* [3] *சரிசமமாக*

## 7. கொல்லிமல மூங்கவெட்டி

துறையூர் சின்னம்மா, 85
எம்.ஜி.ஆர். நகர்
வாழவந்திநாடு

கொல்லிமல மூங்கவெட்டி - எங்கண்ணே உனக்குக்
கோளாறாத் தொட்ட கட்டி
கோளாறாத் தொட்டிலிலே - எங்கண்ணே நீ
கோவுலராக் கண்ணுறங்கு - உனக்குப் 1

பச்சமல மூங்கவெட்டி - சாமி உனக்குப்
பாங்குடனே தொட்டகட்டி - இந்தப்
பாங்குடய தொட்டயிலே - நா வளர்த்த
பாண்டியரே நீ கண்ணுறங்கு 2
கட்டித்தூரி ஆலந்தூரி - நம்மதாய்மாமா
கட்டுந்தூரி - உனக்குப்
பொங்கந்தூரி புளியந்தூரி - எங்கண்ணே
பொன்மாமா கட்டுந்தூரி. 3

## 8. அள்ளித் திணை விதைத்து

பழனியம்மாள், 40
விரகனூர்ப்பட்டி
சேலூர் நாடு

ஆரிரோ ஆராரோ - எங்க கண்ணே நீ
ஆராரோ ஆராரோ 1

எந்
தால ஒருமழதா - எங்கண்ணே
தலப்புத்தல ஆயிரமா
தலசுத்திப் பூவெடுக்க - இங்க
தருமரய்யா உம்மாம(ன்) 2

எங்
குன்னே ஒருபுறமாற - எங்கண்ணே
குனப்புத்தளம் ஆயிரமாம்
குன்னச்சுத்திப் பூவெடுக்க - எங்கய்யா உனக்குக்
கோவிலராம் உன்மாம 3

எஞ்
சங்கு மொழங்குதம்மா - இங்க அம்மா
சாமி மலமேல
இன்னும் மொழங்குதம்மா - எங்கண்ணே நம்ம
ஈஸ்பரனார் கோயிலிலே 4

ஏ...
ஆரடிச்சா நீயழுதே - இங்க அம்மாநீ
அடிச்சவுங்க சொல்லிடம்மா
நீட்டி அடிச்சாளோ - எங்கண்ணே உனக்கு
நெய்வார்க்குஞ் சங்காலே 5
எம்
பாட்டி அடிச்சாளோ - இங்க கண்ணே
பால்வார்க்குஞ் சங்காலே
எம்
மாமே அடிச்சாரோ - எங்கண்ணே உன்ன
மல்லியப்பூச் செண்டாலே 6

வடக்கே மழபொழியும் - எங்கண்ணே
　　வைய ஆத்துத் தண்ணிவரும் - எம்
வையஆத்துத் தண்ணியிலே- எங்கண்ணே ரண்டு
　　வாள மீனு துள்ளிவரும் - எம்
துள்ளிவந்த மீனுக்கெல்லாம் - எங்கண்ணேநீ
　　தூண்டியல போட்டவராம் 7

தெக்கே மழபொழியும் - எங்கண்ணேரண்டு
　　தென்னாத்துத் தண்ணிவரும் - எந்
தென்னாத்துத் தண்ணியிலே - எங்கண்ணேரண்டு
　　கெண்டமீனு துள்ளிவரும் - எந்
துள்ளிவந்தோ மீனுக்கெல்லாம் - எங்கம்மா உனக்கு
　　தூண்டியல போட்டவராம் 8

எம்
அள்ளி தெனவிதச்சு - எங்கண்ணே உன்ன
　　அருங்கிளியோர் காவவைச்சு - எம்
அள்ளி வெதச்சதென - இங்க கண்ணே உனக்கு
　　அறுக்கோ பதமாச்சா 9

எம்
கிள்ளி தென விதச்சு - எங்கண்ணேரண்டு
　　கிளிமூக்கே காவவைச்சே - எம்
கிள்ளி வெதச்சதின- எங்கண்ணே உனக்கு
　　கிள்ளோ பதமாச்சா 10

நாலு நறுக்குமஞ்ச - எங்கண்ணே உனக்கு
　　நன்னாரி பச்சமஞ்ச - எ
அறைச்சு வழிப்பிங்கைய - எங்கண்ணே
　　அஞ்சுவகைக் கிண்ணியிலே
நீங்க
தேய்ச்சி குளிப்பிங்கலோ - எங்கண்ணே மதுர மீனாட்சி
　　தெப்பக்குளந் தண்ணியிலே 11
பச்ச மூங்கிவெட்டி - எங்கண்ணே உனக்குப்
　　பால்வடிய தொட்டிகட்டி - எம்
பால்வடியுந் தொட்டியிலே - எங்கம்மா உன்ன
　　பாலயிலே போட்டாட்ட 12

எங்
கொல்லிமலெ மூங்கிவெட்டி - எங்கண்ணேஉனக்குக்
கோளாறாத் தொட்டிகட்டி - எந்
தொட்டிகட்டித் துரையும் - எங்கண்ணே உன்னத்
துரைமகனே போட்டாட்டி 13

எம்
பாலு அலுப்பலம்மா - எங்கண்ணே நீ
பாலகனார் தொட்டியிலே - எம்
பாலாற பாலாற - எங்கண்ணே நீ
பாலம் பசி தானாற 14

எம்
பச்சமண்ணு சுட்டடுப்பு - எங்கண்ணே உனக்குப்
பால்காச்சப் போட்டடுப்பு - எம்
நீலமண்ணு சுட்டடுப்பு - எங்கண்ணே உனக்கு
நெய்காய்ச்சப் போட்டடுப்பு 15

சுருட்ட புளியமரம் - எங்கண்ணே உனக்குச்
சூதாடும் நந்தவனம் - நீங்க
சூதாடி வெளியவந்தா - எங்கண்ணே உனக்குச்
சூரியனார் கையெடுப்பார் 16

பரட்டே புளியமரம் - எங்கண்ணே உனக்குப்
பந்தடிக்க நந்தவனம் - நீ
பந்தடிச்சு வெளிய வந்தா - எங்கண்ணே நீ உனக்குப்
பரமசிவங் கையெடுக்கும் 17

எம்
வாசலிலே வன்னிமரம் - எங்கண்ணே நம்
வம்முசமா ராசகொலம் - எ
ராசகொலம் பெத்தெடுத்த - எங்கண்ணே நீ
ரத்தினமே நித்திரையும் 18

பொட்டுவைக்க வந்த மாமா - எங்கண்ணே அவர்
பட்டினியா போறாரம்மா - நீ
பூப்பூட்டு அழைங்கலம்மா - எங்கண்ணே உன்
கொணமுள்ள தாய்மாமன் 19

வெள்ளாள வீதியெல்லாம் - எங்கண்ணே நீ
வெளயாடப் போவையிலே - அவ
வெள்ளாளச்சி கண்ணுப்பட்டு - எங்கண்ணே உனக்கு
வெளயாடச் சுண்டயில்லே 20

கோமுட்டி வீதிக்கெல்லாம் - எங்கண்ணே நீ
குண்டடிக்கப் போகையில - நா
கோமுட்டிச்சி கண்ணுப்பட்டு - எங்கண்ணே உனக்கு
குண்டடிக்கச் சுண்டயில்லே 21

பாப்பார வீதிக்கெல்லாம் - எங்கண்ணே நீ
பந்தடிக்கப் போகையிலே - அந்த
பாப்பாத்தி கண்ணுப்பட்டு - எங்கண்ணே உனக்குப்
பந்தடிக்கச் சுண்டயில்லே 22

ஆரிராரோ ஆராரோ - எங்கண்ணே நீ
ராரிராரோ ரரராரோ 23

எம்பாடியார் மலகுறத்தி - கண்ணுக்கு
வழிபண்ணியா காதுகுத்த - நீ
குத்தம்மா காதேநீ - எங்க அம்மாளுக்கு
கூலிபடி நா தாரே 24

எங்க
அத்தம்மா காதேநீ - எங்கம்மாளுக்கு
அரிசிபடி நாந்தாரேன் - அடி
போடி பொங்குறத்தி- எங்கம்மாளுக்குப்
புறந்தநாள் பத்தாது 25

தூங்காத கண்ணுக்கெல்லாம் - எங்கய்யா உனக்குத்
துரும்புகொண்டு மையெழுதி
உறங்காத கண்ணுக்கெல்லாம் - எங்கய்யா உனக்கு
ஓலகொண்டு மையெழுதி 26

ஆரிராரோ ராராரோ...

## 9. முத்துக்குத்திச் சோறாக்கி

குப்பாயி, 42
சித்தூரணிப்பட்டி
வாழவந்திநாடு.

யாரடிச்சா கண்ணே நீயழுதே - கண்ணே
அடிச்சவிங்க சாமி சொல்லிவாடா - கண்ணே
அடிச்சவிங்க கண்ணேநீ சொல்லிவந்தா- நாங்க
அடிக்கடியே வாங்கிருவம் 1

கண்ணே
மூக்குருட்டி கண்ணே பூப்பூக்கும் - சாமி
முத்துவர தேனெறங்கும் - கண்ணேநீ
முத்துவர தேனெறக்க - கண்ணே நீ
மொதலாளியே மும்புறந்தே 2

கண்ணே உனக்குக்
காக்கிருட்டி பூப்பூக்கும் - கண்ணேநீ
கல்லுவர தேனெறங்கும் - கண்ணே நீ
கல்லுவர தேனிருக்க - கண்ணே நீ
கருத்ததழிய மொம்பொறத்தே 3

தூரி தூரி தூரி தூரி ஏ....

கண்ணே நா
வாழ வெட்டி நார்வாங்கி - கண்ணே
வடபொறமா தொட்டகட்டி - கண்ணே நீ
வடபொறத்துத் தொட்டலுலே-சாமி
வலஞ்சொடும் பாலகனா 4

கண்ணே நா
தென்னவெட்டி நார்வாங்கி - நாங்க
தெம்பொறம் தொட்டகட்டி - சாமி நீ
தெம்பொறத்துத் தொட்டலுல - நீ
திரும்பிடும் பாலகனா 5

கண்ணே உனக்கு
முப்பாட்டே அல்லயிலே - சாமி உனக்கு
முத்துவந்து விக்குதடா - உனக்கு
முத்து வெலகூற - சாமி
மூணுபேரு தாய்மாமே....ஏ 6

கண்ணே உனக்கு
நாபாட்டே அல்லயிலே- சாமி உனக்குச்
செலம்புவந்து விக்குதின்னா - உனக்குச்
செலம்பு வெலகூற - கண்ணே உனக்கு
நாலுபேரு தாய்மாமே... ஏ 7


கண்ணே உனக்கு
முத்திலே அரிசிவரும் - சாமி
மொறமாமே சீருவரும் - கண்ணே உனக்குத்
தட்டத்திலே அரிசிவரும் - கண்ணே உனக்குத்
தாய்மாமே சீருவாரும் ... ஏ 8

தூரி தூரி...தூரி தூரீ... ஏ

கண்ணே நீ
தூங்காத கண்ணுக்கெல்லாம் - மாம
துரும்பு கொண்டு வருவாண்டா
தூரி தூரி தூரிதூரீ... 9

சாமி உனக்குக்
கடல கலந்துவரும் - சாமி உனக்குக்
காவேரி பொங்கிவரும் 10
உனக்கு
முத்துகுத்தி சோறாக்கி - சாமி
மொலப்பாலு நெய்யுருக்கி - கண்ணே உனக்கு
மொலப்பாலுநெய்யி பத்தலன்னு - சாமி
பூமியிலே பெறண்டமுதே 11

# தொழிற் பாடல்கள் :
## வேளாண் பாடல்கள்



குறவனோட பொட்டியெடுத்து
குளுகுளுன்னு வெதச்சு வாங்க
பொட்டியில வெதயெடுத்து
பொது பொதுன்னு வெதச்சு வாங்க

### ஏர்ப் பாட்டு - 1

## 10. பூட்டுங்கடா பொன்னேர

அறப்பளிக் கவுண்டர், 80
பொன்னுசாமி, 48
நத்துக்குழிப்பட்டி
குண்டூர்நாடு

காலயில எந்திருச்சு
காலுகையச் சுத்தம் பண்ணி
தூங்கி எந்திருச்சு - எங்காள
துய்யகனா கண்டெழுந்து
அலறி எந்திருச்சு - எங்காள
அன்னகனா கண்டெழுந்து
கண்ணியத் தெறிச்சு விட்டா - காள
காதம்போயி நிக்கும்

இங்கிருந்து போகும்வாலு
வடக்கவுறு வாழநாரு புதுப்பூட்டு
இங்கிருந்து போயி
எடவலமே தெரியுல
நல்லய்யா உங்கழுத்து
எடுத்துவைப்போம் நாம் திரிநுகத்தெ - அய்யோ
பூட்டுங்கடா பொன்னேர
ஓட்டுங்கடா மின்னாலே

மூரிவளை தேஞ்சுபோனா
நாகனே எங்கிருப்பே
மூரிவளை தேஞ்சு சந்தனமோழிமேல
சாஞ்சுபடுப்பே கொஞ்சநாளா

*ஏர் நடத்தும் ஒருவர் பாட, பிறர் அவ்வடிகளைத் திரும்பப் பாடிய வண்ணம் உழவு செய்கின்றனர். இது ஏர்ப்பாட்டு, ஏரோட்டும் பாட்டு, நல்லேர்ப்பாட்டு, பொன்னேர்ப்பாட்டு, காளேர்ப்பாட்டு, செல்லேர்ப்பாட்டு, மூத்தேர்ப்பாட்டு என்றெல்லாம் அழைக்கப்படுகிறது.*

ஏர்ப் பாட்டு - 2

## 11. காளக்கண்ணெ அழகு பாத்து

முத்துசாமி, 65
நெல்லுக்குழி
வளப்பூர்நாடு

சித்துரதா[1] காளக்கண்ணு பொறந்ததய்யா ஏ... ஏ... ஏங்
காளக்கண்ணே செல்லேரா பொன்னையா நாம கட்டுமோடா ஏ...

எங்
காளக்கண்ணே நாளுல்லா பொன்னைய நல்லநாளா... ஏ... - எங்
காளக்கண்ணே நல்லநாளா பொன்னய்யா
பொதங்கிழம... ஏ... - எங்
காளக்கண்ணே காலப்பாத்து பொன்னய்யா
மோழி வெட்டி... ஏ... - எங்
காளக்கண்ணே கையப்பாத்து பொன்னையா
கலப்ப வெட்டி.... ஏ... பா... பா... பா... ஏங்
காளக் கண்ணே தஞ்சாவூரு ஆசாரியண்ட ... ஏ - எங்
காளக்கண்ணே தட்டிநல்ல
கலப்படிங்க ஏ... ஏ... பா... பா... - எங்
காளக்கண்ணே ஆத்தூருதா பொன்னய்யா
நம்ம ஆசாரி ஏ... ஏ... - எங்
காளக்கண்ணே அழகுபாத்து பொன்னையா
எங்கலப்ப சேரு ஏ... ஏ... - எங்
காளக்கண்ணே துத்திநாரு உனக்கு
நம்மளுக்கு வடக்கவுரு ஏ... ஏ - எங்
காளக்கண்ணே துப்புநாரு உனக்குப்
புதுப்பூட்டு ஏ... ஏ...
கட்டினாரு காளக்கு உனக்கு அத்திநாரு வடக்கவுரா... பா.. பா.. ஏ-எங்
காளக்கண்ணே உனக்கு ஆலநாரு உனக்குப்
பொற்பூட்ட ஏ... ஏ... - எங்
காளக்குப் பூட்டுங்கடா எம்பொன்னய்யா
நம்மபொன்ன ஏரா... ஏ... ஏ... - எங்

காளக்கண்ணே ஓட்டுங்கடா
காளக்கன்ன நம்ம மின்னாலே ஏ... பா... பா... - எங்
காளக்கண்ணே புள்ளி மாட்டு
நம்முளுக்கு மாட்டுக்காளே ஏ... - எங்
காளக்கண்ணே போதுருவா[2] பொன்னையா
நீ ஓட்டுமுடா ஏ... ஏ... ஓ... ஓ... - எங்

காளக்கண்ணே நம்முளுக்குப் புதுப்பழக்கம் ஏ... - எங்
காளக்கண்ணே காடுகள பொன்னையா
நம்முளுக்கு மடுப்புமுதி ... பா... பா... பா... - எம்

மாடுநல்லா பொன்னையா
நம்முளுக்கு நடக்குதடா... ஏ... - எங்
காளக்கண்ணே மடுப்பங்காலு[3] பொன்னையா
நம்ம நடக்குதடா... ஏ... எனக்குப்
பொன்னைய்யா துடிக்குதடா... ஏ... எங்

காளக்கி நல்லமாடு பொன்னையா
பிள்ளக்கொம்பு[4] ... ஏ... எங்
காளக்கண்ணு நடயுலதா - பொன்னையா
சிவப்புக்காள ஏ... ஏ...

[1] *சித்திரை* [2] *பொறுமையாக*
[3] *கால்கள் ஓய்கின்றன* [4] *நல்ல கொம்பு*

**ஏர்ப் பாட்டு - 3**

## 12. நல்ல நாளு பொறந்துதடா

**சின்னக்காளி, 75**
**கூச்சக்கிராய்**
**வாழவந்திநாடு**

ஏ....

சித்திர பொறந்ததிதே ஏ...
சிறுசம்புகையும் பூத்துதே - நல்லய்யா
ராஜாவே நாயகனே
சித்திர புறந்துதே

சிறுசம்புகையும் பூத்துதே ஏ...
நல்லநாளு பொறந்துதடா ஏ... எங்
காளாக்கிச் சித்துளி கொண்டுதா -
சிறுவாச்சி கொண்டுதா ஏ...
காவில பூந்துதாண்டா
கையப்பாத்து கலப்பவெட்டி
கையப்பாத்து கலப்பவெட்டி
காலப்பாத்து மோழிவெட்டி
சித்துளி கொண்டு தா
சிறுவாச்சி கொண்டுதா ஏ... நல்லய்யா
சிறுவாச்சிகொண்டுதா
காளக்கி கலப்பையே மூட்டிடு ஏ...
கொல்லனே கொண்டுதா - எங்காளைக்கு
கொழுவுதா கொண்டுவந்தே ஏ... நல்லய்யா
புதுகலப்பதா சேத்துதா - எந்நல்லய்யா இன்னிக்கு
நல்ல நாளு பொறந்ததின்னு - காளைக்கு
எடுத்து வைக்குந் திரிநோம்பு
ஆனயிடி புள்ளியாரே அரசடி நாயகனே
கொன்னையடி புள்ளியாரே - நீ
கொளத்தங்கர நாயகனே
பச்சரிசி பழந்தேங்கா - ஏ காளைக்கு இன்னிக்குப்
பாங்குடனே நாம்படச்சே ஏ...
வாழ வடக்கவுரு - நல்லய்யா
வாழ நாடு பொம்பூட்டு ஏ... நல்லய்யா
தென்னயா தெங்கவுரு - இன்னிக்கு
தென்னாரு பொம்பூட்டு - நல்லய்யா
ஆனயடி புள்ளயாரு
அரசடி நாயகரே
முக்கண்ணு தேங்காயி
ராசாக்கு தானுடச்சே ஏ...

திருவிளக்க நாச்சிகொண்டு - நா
திஞ்சரணும் மிஞ்சரணும்
பதனாறு சரணமாக
ஆனயடி புள்ளயாரே
அரசடி நாயகனே

நஞ்சரணம் பிஞ்சரணம் பண்ணிதானே
எடவலந் தெரியாதே
எடுத்து வெச்சான் திரிநொகத்தே ஏ... காளைக்கு
கொண்டைக்கி கொக்கிதா ஏ - எங்காளைக்கு
காலுக்குப் பரதண்டும் ஏ... காளைக்கு
காலுக்குப் பிரதண்டும்
கண்ணுக்கு மைக்கூஞ்சி ஏ...
இளமூறிலே போட்டுப்போன - எங்காளைக்கு
எடதுவலம் எடுத்துப்போடும் ஏ...
வலந்துபுறம் சாஞ்சிபோன - எங்கரளைக்கு
எடதுபுறம் எடுத்துவைக்கும் ஏ...
எடதுகாலு எடுத்து வெய்க்கும் - இன்னிக்கு
எடதுவலஞ் தேஞ்சிபோனா
இளமூரி தேஞ்சுபோனா - எங்காளைக்கு
வலதுபொறம் எடத்துவெக்கும் - நல்லய்யா

வெள்ளி மொளச்சீது - நல்லய்யா
வெடியக்காலம் ஆயிட்டிது ஏ காளைக்கு
எடதுபுறம் தேஞ்சிபோனா - எங்காளைக்கு
வலதுகால எடுத்துவைக்கும்
வலதுகால எடுத்துவெச்சா நல்லய்யா எங்காளைக்கி
வந்துபூந்த லட்சுமியே
எடதுகால எடுத்துவெச்சா - நல்லய்யா எங்களெக்கி
எழுந்துவந்த லட்சுமியே

### ஏர்ப் பாட்டு - 4

## 13. ஓட்டுங்கடா

கொங்கன், 70
கோப்பைய செல்லப்பன், 60
சித்தூரணிப்பட்டி
வாழவந்திநாடு

காளேரு...
முந்திமுந்தி நாயகனே... ஓ... ஓ...
முக்கண்ணே தேவர்களே... ஓ
ஆனயடிப் பிள்ளையாரே
அரசரடி நாயகரே...
கொன்னையடி பிள்ளையாரே

கௌத்தங்கர நாயகரே
எடவலம் தெரியாமலே
எடுத்துவச்சே கட_நொகத்தே
மின்னாலதா போகுங்காள
மீட்சிதா காளக்கன்னு
நடுவாலதா போகுங்காள
நாதுமாட்டு காளக்கன்னு
பொறவாலதா போகுங்காள - இந்த
மொம்மி மாட்டுக் காளக்கன்னு ... ஓ...
மொம்மி மாட்டுக் காளக்கன்னே- நல்லா
தட்டிமாட்டு ஓட்டுங்கடா
நாகமாட்டுக் காளக்கன்னே
நடத்திக்காட்டி ஓட்டுங்களே
பொம்மிமாட்டுக் காளக்கன்னே - நீங்க
நடத்திக்காட்டி ஓட்டுங்களே... ஓ...
கால நல்லா வெடியையிலே...
கரிக்கோழி கூவயிலே... ஓ...
பொழுதுநல்லா வெடியையிலே - நல்லையா
பொம்மிமாட்டுக் காளக்கன்னே
பொம்மிமாட்டுக் காளக்கன்னே
கோசுருவா ஓட்டிவாடா
கூருக்கொம்பு பெரிய எருதே - நல்லய்யா நீங்க
குத்திக்கிட்டு ஓட்டுங்கடா - இந்தச்
சாட்டக்கொம்பு பெரியெருத்தே - என் நல்லய்யா நீங்க
தட்டியுட்டு ஓட்டுங்கடா

பறம்புப் பாட்டு - 1

## 14. ஆனகட்டிச் சேறு கலக்கி

பிடாரன், 65
அறப்பளிக் கவுண்டர், 80
நத்துக்குழிப்பட்டி
குண்டூர்நாடு

போகுதிடா போகுதிடா... ஏ... ஏ... - அடே
போகுதிடா போகுதிடா... ஏ... ஏ... - நாங்க
இங்கிருந்தே வயிலுசேத்தி... ஏ... - இப்போ
அழகான நந்துவனம் .... ஏ... - நம்ம
நந்துவனம்

இஞ்சிவெட்டி வெயிலுசேத்தி... ஏ... - நாங்க
இஞ்சி வெட்டி எலுமிச்சங்காத் தோப்பாக்கி ... ஏ... - நாங்க இப்போ
மஞ்சி வெட்டி வயிலுதெட்டி
மாதளங்கா உண்டுபண்ணி
இஞ்சிக்கு எறைக்குந்தண்ணி - சாமி
எலுமிச்சங்கா இப்போ போய்ப் பாயுது - நாங்க
மஞ்சிளுக்கு எறைக்குந் தண்ணி
மாதளங்கா பாயுது
பூந்தோட்டம் இப்போ
புதுக்கெணறு... ஏ... ராவி - அந்த
புதுக்கெணத்தே தண்ணி - நம்ம
பூராக்காடும் பாயுது
ஆனகட்டிச் சேறுகலக்கி
அழகுசம்பா நாத்துவிட்டு
அழகுசம்பா நெல்லுப்பாக்கத்தா
அசலாளு ஒன்னுவேணும்
குதுரகட்டி சேறுகலக்கி
குறுவச்சம்பா நாத்துவிட்டு
குறுவச்சம்பா நாத்தப்பாக்கத்தா
கூலியாளு ஒன்னு வேணும்.

பறம்புப் பாட்டு - 2

## 15. சம்பா நாத்துகள்

சின்னக்காளி, 75
கூச்சக்கிராய்
வாழவந்திநாடு

காடுவெட்டி வயிலு சேத்தே
சீனிச்சம்போ நாத்தறுத்தே ஏ...
போரவெட்டி வயலுசேத்தே - அதுல
குறுவச்சம்போ நாத்தறுத்தே... ஏ - இதில
வயிலுசேத்தே பண்ணிதானோ ஏ... - இதில

ஊஞ்சேரு ஓட்டுதானோ - அதுல
ஓடுநல்ல மாடுரண்டோ ஒரு
சேஞ்சேறு போடுதல்லே - அதுல
சேந்துநல்லே மருகடிதே - இதுல
ஈங்கிஞ்சம்போ இறுதிச்சம்போ
இருகிலயோ இறுகிசம்போ - அது
முத்துச்சம்பா மொளக்குச்சம்போ -
மூல சீமயும் சிறுகுச்சம்போ - அந்த
மொளக்குச்சம்போ பண்ணபாத்து - அது
புத்திருந்தும் பெத்தாங்களே - அதுல
சிறுகுச்சம்போ பண்ணப்பாத்தே - அது
சீறாளந்தா தாம்புறந்தார் - அதுல
ஓடிநல்ல மலயறுத்தே - அதுல
உளுந்துச்சம்போ நெல்லறுத்தே - அதுல
ஆத்த நல்லா குறுக்காட்டிதா - ஒரு
அழகுச்சம்போ நெல்லறுத்தே -
அழகுசம்பா பண்ணப்பாத்தே -
அருக்கலியே தாம்புறத்தோம்
கொளத்த நல்லா குறுக்கட்டிதா
குறுக்கச்சம்போ நாத்தறுத்தே

குறுகச்சம்பா பண்ணப்பாத்தே - ஒரு
கோவிலறப் பெத்தெடுத்தம் -
ஈக்கிஞ்சம்பா இறுகிச்சம்போ
இறுகிநல்லோ இறுகுச்சம்போ
குத்துச்சம்பா மொளகுச்சம்போ
மொளிக்குதய்யா சிறுகுச்சம்போ
சேடுவெச்சே வயலுசேத்தே
செட்டிசம்பா நாத்தறுத்தே
செட்டிசம்போ பண்ணப்பாத்தே
சீராளனே பொறந்தானே

பறம்புப் பாட்டு -3

## 16. குதிரை கட்டிச் சேறு கலக்கி

கொங்கன், 70
கோப்பைய செல்லப்பன், 60
சித்தூரணிப்பட்டி
வாழவந்திநாடு

சாமி தஞ்சேறே போகுதல்லோ... ஏ - சாமி
தாங்கி மடையடைங்கோ ... ஏ - சாமி
ஆனகட்டி சேற்கலக்கி... ஏ சாமி
அழகுச்சம்பா நாத்தறிந்தா - ஏ
ஆனயடி பிள்ளையாரே ... ஏ - என்னோட
அரசங்கர நாயகரே - சாமி
கொன்னயடிப் பிள்ளையாரே ... ஏ
கொளத்தங்கர நாயகனே... ஏ
முந்தி முந்தி நாயகனே ... ஏ - என்னோட
முக்கண்ணே தேவரே - நீ ஒரு
கந்தருக்கே மும்புறந்த - என்னோட
கருமொழியே நாயகரே... ஏ
பெருச்சாளி வாகனரே - சாமி நீங்க ஒரு
தங்கச்சம்பா நெல்லெடுத்தே - ஏ
தனித்தனியா காயவெச்சே - நீ ஒரு
வெய்யிலிலே காயவெச்சு - சாமி
எளவெயிலேகாய வெச்சே - நீங்க
தங்குங்கடா பறம்புவேல ... ஏ... சாமி
மறுகாலப் பயிரறுத்தே ... ஓ ... ஓ... ஓ...

சாமி ஆனகட்டி சேற்கலக்கி
அழகுச்சம்பா நாத்தெறிஞ்சே
குதிரகட்டி சேற்கலக்கி - நானு
கோடிச்சம்பா நாத்துறத்தே - நீங்க ஒரு

நாத்தப் புடுங்கடா - இன்னிக்கி
ஞாயிறோ திங்கிளோ - சாமி
நல்ல புதிங்கெழம - இன்னிக்கு
வெள்ளிக் கெழமையடா - நீங்க
ஒரு பொட்டில வெதயெடுத்தே ஏ...
எடத்து வெளக்க ஏத்தித்தாண்டா - உங்கோ
சிவனே வணங்கித்தானே... ஏ... நீங்க
பொட்டீல வெதவெதச்சு...

## 17. உழுது விதை

குழந்தையம்மாள், 75
ஏ. தண்ணிமாத்திப்பட்டி
வாழவந்திநாடு

வாழநல்ல வம்பூட்டம்
வழிப்பாத்து பூட்டுங்க
தங்கநல்ல செம்பூட்டும் - அங்க
தட்டியே ஓட்டுங்க
தங்கக் கொம்பு வெள்ளெருத்தெ - அங்க
வலப்பொறத்த ஓட்டுங்க
[1]வகுநாரம் சொல்லுது

குறவனோட பொட்டியெடுத்து
குளுகுளுக்குன்னு வெதச்சு வாங்க
பொட்டியிலே வெதயெடுத்து
பொது பொதுன்னு வெதச்சு வாங்க
புண்ணியமுள்ள எஞ்சாமி

[1] *வெகுநேரம்*

# 18. தானியம் தூய்மை செய்து

குழந்தையம்மாள், 75
ஏ. தண்ணிமாத்திப்பட்டி
வாழவந்திநாடு.

குத்துனேனே ரண்டுகுத்து
பொடச்சேனே ரண்டுபொட
குத்துனேனே மூணுகுத்து
பொடச்சேனே மூணுபொட
குத்துனேனே நாலுகுத்து
பொடச்சேனே நாலுபொட
குத்துனேனே ஐஞ்சுகுத்து
பொடச்சேனே ஐஞ்சுபொட
குத்துனேனே ஆறுகுத்து
பொடச்சேனே ஆறுபொட

*தானியம் குத்திப் புடைக்கும்போது பாடும்பாடல். புடைத்து முடியும்வரை எண்கள் தொடர்கின்றன.*

# ii. ஆட்டுக்காட்டுப் பாடல்கள்



தூக்கம் வந்த நேரமெல்லாம்
ஏக்கம் வந்து எழுப்புதடி

### ஆட்டுக்காட்டுப் பாட்டு - 1

## 19. ஆளக்கண்டாக் கூவுது

சின்னமணி, 17
பெரியகோயிலூர்ப்பட்டி
வளப்பூர் நாடு

பரிதிலே பில்லறுத்து லே தங்கம்
பக்கம்பக்கம் கட்டுக்கட்டி லே தங்கம்
பாறையில போற பய லே தங்கம்
பாத்துவிடு இந்தக் கட்டே லே தங்கம் 1

தூரந்தூரம் போறபய லே தங்கம்
தூக்கிவிடு இந்தக்கட்டே லே தங்கம்
ஆலப்பொறம் ரண்டுகிளி லே தங்கம்
ஆளக்கண்டா கூவுதில்லே லே தங்கம் 2

கம்மங்காட்டு மூலயில லே தங்கம்
கடிச்சபாக்கு குடுத்தமச்சா லே தங்கம்
கடிச்ச பாக்கத் தின்னுதின்னு
நித்த நித்தம் சண்டபோட்டே 3

சோளக்கட்டு மூலயில லே தங்கம்
சொக்கப்பாக்கு குடுத்தமச்சா லே தங்கம்
சொத்தபாக்கத் தின்னுதின்னு லே தங்கம்
நித்தநித்தம் சண்டை போட்டே லே தங்கம் 4

ஆட்டுக்காட்டுப் பாட்டு - 2

## 20. பதறுதடி எம்மனசு

மூலிகை செல்வராஜ், 37
குளவங்கிராய்
வளப்பூர் நாடு,
மலையசாமி, 39
பெரியகோயிலூர்
வளப்பூர் நாடு

ஆத்துக்குத்தா அந்தப்பக்கம் தன்னானே னன்னே
ஆடு ஓட்டிப் போறதங்கம் தில்லாலே லல்லே
ஆட்டநல்லா நிறுத்திவெச்சு தன்னானே னன்னே
ஆதரவு சொல்லிவாடி தில்லாலே லல்லே 1

கொளத்துக்கு அந்தப்பக்கம் தன்னானே னன்னா
குட்டியோட்டிப் போறதங்கம் தில்லாலே லல்லே
குட்டியத்தா நிறுத்திவெச்சு தன்னானே னன்னா
குளுந்த வார்த்த சொல்லிப்போடி தில்லலே லல்லே 2

கட்டக்கட்டக் குச்சியொடிச்சு தன்னானே னன்னா
கச்சிதமா பாலஞ்சேத்து தில்லாலே லல்லே
பாலத்திலே போறபெண்ணே தன்னானே னன்னா
பதறுதடி எம்மனசு தில்லாலே லல்லே 3

ஆட்டுக்காட்டுப்பாட்டு - 3

## 21. போற புள்ள நமக்காகுமா?

மலையசாமி, 39
பெரியகோயிலூர்
வளப்பூர்நாடு

ஆண்: பாப்பாட்டங் கொடியழகாம் - ஏ எந்தோழி
சின்னப்பொண்ணே
பச்சப்புள்ள நெறமழகாம் - ஏ பெண்ணே
கூப்பிட்டா கேக்குதாடி - உங்கண்ணம் போட்ட
அரசு கொப்பே... ஏ.... ஏ... 1

பெண்: ஏ... மச்சா நா
பாப்பாட்டங் கொடியழகாம் - நா
பச்சப்புள்ளி நெறமழகுமில்லையடா
எங்கண்ணந்தா போடவில்லே - எனக்குக்
காதமே கேக்குதடா... 2

ஆண்: எந்தோழி சின்னத் தங்கம்
பாதாள மரத்தடிலே - ஏ பொண்ணே
மோதரம் அங்க குடுத்த தங்கம் - ஏ எந்தோழி
சின்னப்புள்ளே
தங்கம் வாங்க முடியாமலதா
தாயாண்ட சொல்லிச் சொல்லி தரவுசொல்லி
அனுப்பரடி 3

பெண்: ஏ... சாமி...
மலையிலதா மாடுமேச்சே(ன்) - ஏ சாமி
மடுவில தண்ணிகாட்டி - அங்க
மடுகுத்தண்ணி பத்தாமதா - ஏ சாமி இப்போ
மலையேறித்தா போகுதடி 4
ஏ.... சாமி...
முன்னிலே மாடுமேச்சே - ஏ சாமி
கொளத்தில இப்போ தண்ணிகாட்டே - ஏ சாமி
கொளத்துத்தண்ணி பத்தாமதா
குன்னேறிதா சாமி போகுதடா 5

ஆண்: ஏ... தங்கம்
மரமா மரமாகமா
மாத்திமரம் இப்போ நெலவாகுமா - ஏ தங்கம்
பொருசமரம் கதவாகுமா
போறபுள்ள இப்போ நமக்காகுமா? 6

ஏ... பெண்ணே
வீச்சருவா கைப்பிடித்தே
வெறகுக்குமே தங்கம் போறயேடி - ஏ எந்தோழி
சின்னப்பொண்ணே
வெரலுக்கெல்லாம் இப்போ சேதமாடி 7

முட்டமுட்ட ஏ தங்கம் புளியமரம்
முட்டாயிதா இப்போ காய்க்குமரம் - ஏ தங்கம்
முட்டாயே இப்போ தின்னபுள்ள
மொகஞ்சோந்து இப்போ நிக்குதடி 8

கட்டக்கட்ட இப்போ புளியமரம் - ஏ தங்கம்
கலுக்கண்டே இப்போ காய்க்குமரம்
கலுக்கண்டு தின்னபுள்ளே
கருகுருகி இப்போ நிக்குதடி 9

## ஆட்டுக்காட்டுப்பாட்டு - 4
# 22. பட்டணந்தா போறதங்கம்

மலையக்கவுண்டர், 60
பனஞ்சாட்டுப்பட்டி
அரியூர் நாடு

லால லல்லலல்ல லல்லோ லல்லலோ லாலல்லோ லல்லலோ
லால லல்லலல்ல லல்லோ லல்லலோ லாலல்லோ லல்லலோ

மன்னவரு எல்லாருந்தா மாடு ஓட்டே - இப்போ
மாடு ஓட்டே - ஒருமேச்சதா
மேஞ்சிடுத்தே - இப்போ
மேஞ்சிடுத்தோ 2

ஒரு கொண்டவிந்தா மாடுபோட - இப்போ
மாடுபோட - இப்போ
கோடி நேரஞ் செல்லுதப்போ - இப்போ
சொல்லுதப்போ - ஒரு 3

மன்னவிந்தா மாடுசுட - இப்போ
மாடுசுட - இப்போ
மதியானந்தா ஆகுதப்போ- இப்போ
ஆகுதப்போ - ஒரு 4
சிறுகொழ சத்தங்கொண்டே

சத்தங் கொண்டே - நீ ஒரு
சீறுமலதா மாடு போச்சே - இப்போ
மாடு போச்சே - ஒரு 5

புல்லாங்கொழ சத்தங்கொண்டே - இது
சத்தங் கொண்டே - இப்போ
புதுமலதா மாடுபோச்சே - இப்போ
மாடு போச்சே - ஒரு 6

புல்லாங்கொழ கைபுடிச்சே
கைபுடிச்சே - இருப்போ
புதுமலதா மாடு போச்சே
மாடு போச்சே 7

ஒரு மலமலதா மாடுஓட்டே - இங்கே
மாடு ஓட்டியே - இங்கே
மடுவுக்குத்தா தண்ணிக்கே அடிச்சுடே - இங்க ஒரு
மடுவுத்தண்ணி பத்தாம -
பத்தாமோ
மலயேறிதா இப்போ போகுதே
இப்போ போகுதே - இங்க 8

குன்னுக்குன்னா மாடோட்யே
மாடோட்யே - இங்கே
கொளத்துக்குத்தா தண்ணிக்கே அடிச்சுடே - இங்க
குளத்துத் தண்ணி பத்தாமே - இப்போ
குன்னேறிதா போகுதே - இப்போ
போகுதே - நா 9

மாடுநல்ல மலயிலோ -
மலயிலோ - நா
மாட்டுக்காரந் தங்கலோ - இப்போ
தங்கலோ 10

பட்டுச்சீல புடிச்சுதே
பட்டணந்தா போறதங்கம் - இப்போ
போறதங்கம் - இப்போ
பட்டணந்தா பேயுமழ - ஒரு
பட்டு எல்லாந் தோஞ்சுதே - இப்போ
தோஞ்சுதே - நீங்க ஒரு 11

சீலமேல சீல உடுத்தி -
உடுத்தி
சீரங்கந்தா போற தங்கம்
போற தங்கம் - ஒரு
சீரங்கந்தா பேயுமழ - இங்க
சீலயெல்லாந் தோஞ்சுதோ - இப்போ
தோஞ்சுதே 12

பொண்ணே நல்ல கரமேலோ
கரமேலோ
கொழந்தப்பழம் பழுத்திதோ
பழுத்திதோ -
ஓடிப்போடி பொறுக்கித்தா - ஒரு
பழந்தாடி தின்னுமாத்தே
தின்னுமாத்தே 13

பொண்ணே
பொன்னேருது பிள்ளக்கொம்பு
பிள்ளக்கொம்பு - இப்போ
விலமதிக்கப் போறாண்டி -
போறாண்டி - இங்க
கொம்பெருத்த வித்துப்போட்டு
வித்துப்போட்டு - இப்போ
கொமுரியக் கூட்டிப்போறாண்டி - இப்போ
போறாண்டி 14

புளியஞ்சோல அருவாவாங்கி இங்க
அருவா வாங்கி - இங்கே

பூப்போலதா தீட்டிதோ - இப்போ
தீட்டிதோ - இங்கே
பூவளரி காட்டுக்கோ - இப்போ
காட்டுக்கோ - ஒரு
பூப்பொறுக்கு வாங்காயக் குடுத்தினே - லலா 15

பொண்ணே
அரிவாரில்லா குருவிழக
குருவழகோ - இப்போ
ஆத்தங்கரத் தோப்பழக - இப்போ
தோப்பழக - அங்க ஒரு
குருவிதின்ன நகப்பழம்
நகப்பழம் - இங்க
கொத்தோடதா சோம்புதே - இப்போ
சோம்புதோ 16

பொண்ணே
வீச்சரிவா தோளில் வெச்சு
தோளில் வெச்சு - இங்க
விறகுக்குதா போறதங்கம்
போறதங்கம் - ஏன்

வீச்சரிவா தவிறினாலும்
தவிறினாலும் - உனக்கு
விரலுகண்ணு சேதமடி
சேதமடி 17

சந்தனந்தா காடு பூந்து
காடுபூந்து- நீங்க

உல்லசல்ல வெறகுவெட்டி
வெறகுவெட்டி - ஒரு
வந்தனமா கொடியறுத்து

கொடியறுத்து - பொண்ணே
கொடியறுத்து சுரணகோட்ட
சுரணகோட்ட - இங்க
சொமரி மல கூட்டம் போட்டு
கூட்டம் போட்டு - எ பொண்ணே 18

அடவிலதா சீலபோட்டு
சீலபோட்டு - நீங்க
கடவழியா போற தங்கம்
போற தங்க - ஒரு
தலசீலதா ஒதுக்கிவெச்சு
ஒதுக்கிவெச்சு - நாங்க
தங்கஞ்சொல்லி நீனுவாயே - பொண்ணே
நீனுவாயே 19

மண்டயில சீலபோட்டு - நீங்க
சீல போட்டு
மருகிலியும் போற தங்கம்
போற தங்கம்
மண்டச்சீல ஒதுக்கிவெச்சு
ஒதுக்கிவெச்சு - நீங்க
உறுதிசொல்லி நீனுவாயே
நீனுவாயே (லல்லல்ல) 20

வெத்திலலே மையெழுதி - நீங்க
மையெழுதி
வெய்யலில காயப்போட்டு - நீங்க
காயப்போட்டு
வெய்யுருக மையுருக
மையுருக - உன்னு
மனமுநல்லா உருகுதடி
உருகுதடி - பொண்ணே 21

வட்டவட்டப் பொட்டுக்காரி
பொட்டுக்காரி - நீங்க

வகுநாளத்து உறவுக்காரி
    உறவுக்காரி - இங்க
ஒருநாளத்துச் சண்டயில
    சண்டயில - இப்போ
உட்டுதாடி உன்னொறவு
    உன்னொறவு (லல்ல...) 22
பொண்ணே
வெள்ள வெள்ளச் சீலக்காரி
    சீலக்காரி - இப்போ
வெள்ளிரிக்கா கூடக்காரி
    கூடக்காரி - ஒரு
கோம்பக்காட்டு வெள்ளிரிக்கா - இப்போ
வெள்ளிரிக்கா
கொண்டுவாடி தின்னே பாப்போம்
    பாப்போம் 23

சித்தாத்துதா மொடக்குலதா - பொண்ணே
    சீலவெளுக்குஞ் சின்ன தங்கோ - பொண்ணே நீ
வெளுக்கும் வெள்ள சீல - பெண்ணே
    நின்னுநல்ல மேங்கிதாடி 24

கல்லுக்காட்டு ஓரத்திலே - பொண்ணே
பில்லுக்கட்டப் போறே தங்கோ(ம்) - உன்ன
பில்லுக்கட்ட எறக்கி வெச்சே - பொண்ணே
புதுரு சொல்லிப் போடி 25

பொண்ணே
உழுதுநல்ல புழுதி லிதே - பொண்ணே
உப்புக்கொண்டு போறே தங்கோ(ம்) - ஒரு
உப்ப நல்லா எறக்கி வெச்சே - இங்கே
புதுரு சொல்லி நீனு வாடி 26

### ஆட்டுக்காட்டுப்பாட்டு - 5

## 23. ரம்பம் போட்டு அறுக்கும் சொல்

திருமாக்கவுண்டர், 70
அரிப்பலாப்பட்டி
தேவானூர் நாடு

குன்னுல மாடு மேச்சு
கொளத்துல தண்ணிகாட்டி
கொளத்துத்தண்ணி பத்தாம
குன்னேறிப் போகுதே 1

வட்டவட்டப் பொட்டுக்காரி
வகுநாளத்து ஒறவுக்காரி
ஒருநாளத்துச் சண்டையோட
உட்டுதாடி உன்னொறவு 2

ஆத்துல ஊத்துத் தோண்டி
நீயும் நானும் பல்வெளக்கி
ராத்திரி சொன்ன சொல்லு
ரம்பம் போட்டு அறுக்குதே 3

வண்ணவண்ணச் சீலக்காரி
வெள்ளரிக்காக் கூடக்காரி
கோம்பைக்காட்டு வெள்ளரிக்கா
கொண்டுவாடி தின்னுப்பாப்போம் 4

ஆசைக்குக் கிளிவளத்து
ஆத்தோரம் நாயவிட்டு
தாய்ப்பொண்ணு சொன்னசொல்லு
பறந்ததே பச்சக்கிளி 5

பாப்பட்டாம் பல்லழகி
பச்சப்புள்ள நெறமழகி
கூப்பிட்டா கேக்கலயோ
கொன்னப்பூ நெறமழகி 6

மரமா மரமாகுமா
    மாமரம் நெலவாகுமா
பொறத்தி கதவாகுமா
    போற பொண்ணு நமக்காகுமா 7

## ஆட்டுக்காட்டுப்பாட்டு - 6

## 24. பதறுதடி என் மனம்

இளையான் 26,
பெரியகோவிலூர்
வளப்பூர் நாடு

ஆத்துக்கு அந்தப்பக்கம்
    ஆடுஓட்டிப் போறபுள்ள
ஆட்டை நிறுத்தி வெச்சு
    ஆதரவச் சொல்லிப்போடி 1

கொளத்தங்கரை ஓரத்திலே
    குட்டியோட்டிப் போறபுள்ளே
குட்டியத்தான் பாப்பனா
    உன்னையத்தான் பாப்பனா 2

கட்டக்கட்டக்குச்சொடிச்சி
    கச்சிதமாப்பாலஞ்சேத்து
பாலத்தில போறபெண்ணே
    இப்பப்பதறுதடி எம் மனம் 3

சாயச்சருகுச்சீல
    சாமியுத்த பட்டுச்சீல - ஏ பொண்ணே
ஆருகொடுத்த சீல - பெண்ணே ஒனக்கு
    ஆலவட்டம் போடுதடி 4

மலையே மலைக்கொறங்கு
    மழ வந்தா எங்கிருப்பே - நா
குறுக்கத்தான் சோலையிலே
    குறுகுறுன்னு நானிருப்பேன் 5

குன்னுல மாடுமேய்ச்சு
    குட்டையிலே தண்ணிகாட்டி
குட்டைத் தண்ணி பத்தாம
    குன்னேறிப் போகுதடி 6

பருதியிலே மாடுமேச்சு - ஏ கண்ணு
    பாலிலே தண்ணி காட்டி
பாலுத்தண்ணி பத்தாம
    பாதயேறிப் போகுதடி 7

பருதியிலே மாட்டக்கண்டேன் - ஏ
    மக்கியா நாலு ஒன்னக் கண்டேன்
உன்னக்கண்ட நேரமெல்லாம்
    ஏக்கம் வந்து எழுப்புதடி 8

படுத்தா ஒறக்கம் வல்லே
    பாயிபோட்டா தூக்கம் வல்லே
தூக்கம் வந்த நேரமெல்லாம்
    ஏக்கம் வந்து எழுப்புதடி. 9

ஆட்டுக்காட்டுப்பாட்டு - 7

## 25. உன்னக் கண்ட நேரமெல்லாம்

மலையசாமி, 39
பெரியகோயிலூர்
வளப்பூர்நாடு

பச்சபச்ச பல்லழகி
    வயலுல போட்ட அனச்சே - ஏ தங்கம்
பச்சப்புள்ள போட்ட போடு
    காயுமெல்லாம் ஒங்க நாத்தமனா ஓய்
ஏ போடு போடு போடு போடேய் 1

பா பா பூச்
பா பா பா
பா பா முத்துப்பிள்ளை மீனாச்சி பா 2

மலையில மாட்டக்கண்டேன் - ஏ தங்கம்
மக்காநாளே ஒன்னக்கண்டேன் - ஏ தங்கம்
ஒன்னக்கண்ட நேரமெல்லாம்
நானு உருகிருந்தேன் சருகுபோல
ஏ போடு போடு போடு போடேய் 3

நானும் பருதியிலே மாடு மேச்சு - ஏ தங்கம்
கழனியிலே தண்ணி காட்டி - ஏய் தங்கம்
கழனித்தண்ணி பத்தாமத்தான்
மலையேறிதா தங்கம் போகுதடா
ஏ போடு போடு போடு போடு 4

*மேய்ச்சலுக்காகக் கால்நடைகளை மலைக்கு ஓட்டிச் செல்லும்போது இதுபோன்ற பாடல்கள் பாடப்படுகின்றன. பாட்டு, எதிர்ப்பாட்டு என்ற நிலையில் ஆடு, மாடு மேய்க்கும் ஆணும், பெண்ணும் மாறி மாறிப்பாடுவதாக இவை அமைந்துள்ளன. ஆட்டுக்காட்டுப்பாட்டு, மாட்டுக்காட்டுப் பாட்டு, காவப்பாட்டு என்றெல்லாம் இவை அழைக்கப்படுகின்றன. சில இடங்களில் இது மிகுந்த கொச்சைப் பாலுறவுச் சொற்களுடன் அமைந்துள்ளன. இவற்றை 'உச்சப்பாட்டு' என்று கூறிப் பாட மறுக்கின்ற நிலையினையும் காண முடிகின்றது. கால்நடை மேய்த்தல் தொழில் மிகவும் குறைந்து கொண்டிருக்கும் நிலையில் இப்பாடல்களைப் பாடுவது மிகவும் அருகி வருகின்றது.*

## 26. உன் கூந்தல் போர்வையாக

ஜெகன்நாதன், 20
விரகனூர்ப்பட்டி
சேலூர்நாடு

கொங்கலாயி பாறையிலே குள்ளநரி ரண்டுகண்டேன்
கொங்கலாயி பாறையிலே குள்ளநரி ரண்டுகண்டேன்
கண்ணம்மா - எங்க
கண்ணாட்டி - உனக்கு
கருமொச்ச வாங்கித்தாரே(ன்) பெண்டாட்டி 1
(கொங்கலாயி)

குள்ளநரி ஓடிப்போச்சு கொமரிப் பொண்ணு உன்னக்கண்டே
கண்ணாட்டி - ஏ
கண்ணாட்டி - உனக்கு
கருமொச்ச வாங்கித்தாரே(ன்) பெண்டாட்டி

ஏ...

காக்கொலையாங் காட்டுக்குள்ளே
காட்டுமல்லி பூத்திருக்கு
கண்ணம்மா
கண்ணம்மா - நீ
நாகமல்லிப் பூவெடுத்து
ராகம்போட்டுப் பாடிவாடி
நாகம்மா - நா
நாலுநாளாத் தூங்கலையே நாகம்மா 2

ஏ...

மஞ்சப்பாறக் கெராயில மாடுமேய்க்கப் போகயில
மச்சினியும் உன்னக்கண்டு மருதாணி பூசவாறே(ன்)
மாஞ்சோலைக் குயிலே - நீ 3
மறக்காம வாடி மயிலே

ஏ...

பூவாண்டிக் கெராயில பூப்பறிக்கும் பொன்மயிலே
பூவாண்டிக் கெராயில பூப்பறிக்கும் பொன்மயிலே
பூவான உன்கூந்தல் போர்வையாகப் போனதடி செல்லம்மா 4

ஏ...

வண்ணாந்தொற ஓரத்தில வரவரிசி தீட்டயில
வண்ணாந்தொற ஓரத்தில வரவரிசி தீட்டயில
வஞ்சிக்கொடி உன்னக் கண்டே கண்ணம்மா - நீ
வாளமீனு நீந்திரியே பொன்னம்மா - நானு
வாடாத மரிக்கொழுந்து செல்லம்மா 5

ஏ...

திண்டத்திப் பாறையில தினையரிசி தீட்டயிலெ
திண்டத்திப் பாறையில தினையரிசி தீட்டயிலெ
தூண்டா மணிவிளக்கு திரியில்லாத சரவெளக்கு
சரக்குமுறுக்கு இருக்கு - அது
சந்தோசமா அதுக்கு 6

*பாடலில் உள்ள இடங்கள் சேலூர் நாட்டில் உள்ளவை. இது இவரே கட்டிய கவி.*

## 27. பேசுங்கிளி

பழனியம்மாள், 40
விரகனூர்ப்பட்டி
சேலூர் நாடு

ஒருமரத்தெ வெட்டி வெட்டி
மாமரத்துல ஊஞ்சகட்டி
மாமரத்துல ஆடுங்கிளி
ஆண்கிளியோ பெண்கிளியோ

ஆண்கிளியோ இல்ல மச்சா(ன்)
பெண்கிளியோ இல்ல மச்சா
தானாக வளந்தகிளி
தர்மரோட பேசுங்கிளி

## 28. ஆடு மேய்க்கையில்

குழந்தையம்மாள், 75
ஏ. தண்ணிமாத்திப்பட்டி
வாழவந்திநாடு

வெள்ளக்கல்லு மேட்டுமேலே - சின்னண்ணா
வெள்ளாடு மேய்கையிலே
அறிவுகெட்ட அந்தமக - சின்னண்ணா
அரிக்கறானா தோட்டிவீட்ட 1

குண்டாங்கல்லு மேட்டுமேலே - சின்னண்ணா
கூறியாடு[1] மேய்க்கப்போனே
கூறுகெட்ட அந்தமக - சின்னண்ணா
கூட்டியுட்டா பெருஞ்சனங்க 2

வெங்கக்கல்லு மேட்டுமேல - சின்னண்ணா
வெள்ளாடு மேய்க்கப் போனே - இந்த
கூறுகெட்ட அத்தமக - சின்னண்ணா
அடிச்சாங்க தோட்டிவூட்ட 3

காரி எருதும் போச்சு - சின்னண்ணா
கவுண்டக ஜனமும் போச்சு
புள்ளி எருதும் போச்சு - சின்னண்ணா
போலிசு வேலயும் போச்சு 4

[1] குறியாடு.

# வழிபாட்டுப் பாடல்கள்



*அறியாத சிறு பாலனம்மா - உன்னை*
*அடிவணங்கித் தெண்டனிட்டேன்*

# 29. விரகனூர்க் கொங்காயி பாட்டு

மலையசாமி, 39
பெரியகோயிலூர்ப்பட்டி
வளப்பூர்நாடு
மூலிகை செல்வராஜ், 37
குளவங்கிராய்
வளப்பூர்நாடு

ஈரோடு தா சாமியே சமயபுரம்
இருந்ததொரு சாமியே கொங்கலம்மா - 1

ஈரோடுதா சாமியே சமயபுரம்
இருந்ததொரு சாமியே கொங்கலம்மா - அங்க 2

கட்டி சோத்தச் சாமியே கட்டிக்கிட்டு
தூசுருதா[1] சாமியே வந்தாங்கடா 3

அக்காதங்க சாமியே ஏழுபேரும்
அர்சுடைய[2] சாமியே வந்தாங்கடா 4

தூசுருதா சாமியே ஏரிக்கரை
நுண்ணிதமா சாமியே உங்காந்தாங்க 5

அக்காதங்க சாமியே ஏழுபேரும்
கட்டிசோத்தச் சாமியே அவுத்துத்தானா 6

பசியாநல்லா சாமியே எடுக்குதுன்னு
கட்டிசோத்தச் சாமியே அவுத்தாங்கடா - அங்க 7

அப்படியே சாமியே வலப்புறமே
திரும்பிநல்லா சாமியே பாத்தாங்கடா 8

திரும்பிநல்லா சாமியே பாக்கும்போதே
வலப்பொறமே சாமியே தெரிந்ததடா 9

வலப்பொறமே சாமியே தெரிந்தொடனே
கொல்லிமலெ சாமியே தெரிந்ததடா 10

கொல்லிமலெ சாமியே வந்தொடனே
கோடிசனம் சாமியே கையெடுக்கும் - அங்க 11

கருநெல்லுதா சாமியே சோத்துக்குமே
கருவாழதா சாமியே பழத்துக்குமே - அங்க 12

ஆசப்பட்டு சாமியே வந்தவ
கொங்காயிதா சாமியே சாமியே 13

ஆசப்பட்டு வந்ததடா சாமியே
வெரகனூரு சாமியே கொங்காயிதா 14

அக்காதங்க சாமியே ஏழுபேரும்
அங்கொருத்தி சாமியே வந்ததடா - அங்க 15

ரண்டாவது சாமியே தங்கையரும்
சேலுருதா சாமியே பழனியம்மா 16

மூணாவது சாமியே தங்கையடா
பரியூருதா சாமியே காளியம்மா 17

நாலாவது சாமியே தங்கையடா
பின்னாத்திதா சாமியே காளியடா 18

ஐஞ்சாவது சாமியே தங்கையடா
வாளாரத்து சாமியே இளையநாச்சி 19

ஆறாவது சாமியே தங்கையடா
சேட்டூருதா சாமியே பழனியம்மா 20

ஏழாவது சாமியே தங்கையடா
எட்டுச்செல்லும் சாமியே சொலுறண்டா 21

சூலவந்தி சாமியே பழனித்தாயே
சொல்லிவாறேன் சாமியே கேளுமய்யா 22

கருநெல்லுதா சாமியே சோத்துக்குந்தா
கருவாழதா சாமியே பழத்துக்குமே 23

ஆசப்பட்டு சாமியே வந்தவிங்க
அக்காதங்க சாமியே ஏழுபேரும் 24

ஆளுக்கொரு சாமியே எடத்தப்புடிச்சு
அங்கங்கதானே சாமியே அமர்ந்தாங்கடா 25

ஆசப்பட்டு சாமியே வந்தவிங்க
அக்காதங்க சாமியே ஏழுபேரும் 26

ஏழுபேரும் சாமியே பொறந்தெடமே
ஈரோடுதா சாமியே சமயபொறம் 27

ஈரோடுதா சாமியே சமயபுரம்
இருந்ததொரு சாமியே கொங்காயிதா 28

கொங்காயிதா சாமியே பேருசொன்னா
அழுதபுள்ள சாமியே வாய்மூடுமே 29

அனைவரும்: கோயிந்தா... கோயிந்தா... கோயிந்தா.

*[1] நாமக்கல்லிலிருந்து துறையூர் போகும் பாதையிலுள்ள ஊர். அங்குள்ள ஏரிக்கரையில் கோயில் உள்ளது.*
*[2] அழகுடைய*

*கோயிலில் பாடப்படுகிறது. மேக்களாந்துறையில் இப்பாடலைக் கற்றுக் கொண்டதாக திரு.மலையசாமி கவுண்டர் குறிப்பிட்டார். ஒருவர் இரண்டடி பாட மற்றவர்கள் அவற்றை மீண்டும் பாடுகின்றனர். பாடும்போது உடுக்கை அல்லது தப்பு இசைக்கப்படுகிறது.*

# 30. அம்மன் பாட்டு

தேவராஜன், 55
பெருங்கிராய்ப்பட்டி
வாழவந்திநாடு

வாழவந்தி கொங்கலம்மா ஓஹோ
வாழவந்தி கொங்கலம்மா ஓஹோ
வல்ல சூல நீலி காரியம்மா ஓஹோ 1

சூலம் நல்ல ஒரு கையிலே ஓஹோ
சூலம் நல்ல ஒரு கையிலே ஓஹோ
சுருளி வாணம் முக்கையிலே ஓஹோ அம்மா 2

பந்தம் நல்ல ஒரு கையிலே ஓஹோ
பந்தம் நல்ல ஒரு கையிலே ஓஹோ அங்கே
பகவாணம் முக்கையிலே ஓஹோ
பகவாணம் முக்கையிலே ஓஹோ நானும் 3

அறியாத சிறு பாலனம்மா ஓஹோ
அறியாத சிறு பாலனம்மா ஓஹோ உன்னை
அடிவணங்கித் தெண்டனிட்டேன் 4
கூப்பிட்டு நானழைத்தேன் ஓஹோ
கூப்பிட்டு நானழைத்தேன் ஓஹோ
கொடுங்க துணை வருக வேணும் ஓஹோ 5

பூங்க வனச் சோலையிலே ஓஹோ
குளுந்தநல்ல நிழலுதான் ஓஹோ
குந்தி இருக்கும் நாச்சியம்மா ஓஹோ யம்மா 6
பட்டி, முதல் கொண்டு ஓஹோ நீயும்
பாலர் வரை காப்பவளே ஓஹோ
காலை நல்ல பொழுதிலதான் ஓஹோ உன்னைக் 7
கை தொழுது வந்தேனம்மா ஓஹோ என்னைக்
காலமெல்லாம் நீயும் காக்க வேணும் ஓஹோ
காலடியே நான் பணிந்தேன் ஓஹோ 8

சாமி அழைப்பு - 1

## 31. சொழலு வந்தாக் காத்திரு

கணேசன், 32
சேலூர் கஸ்பா
சேலூர் நாடு

ஆதியில எழுந்தவளே தேவா - நீ
அறப்பளீ ஈஸ்பரியே வா வா
மாசி பெரியணனே தேவா - நீ
பாசிபதம் பெத்தவரே வா வா 1

உங்கள நா நெனத்து தேவா - இப்போ
உக்காந்தோ தெய்வச(ை)ப வா வா 2

விரகனூரு கொங்காளம்மா தேவா - உன்ன
வேண்டித் தொணயழச்சே
விரகனூரு கொங்காளம்மா தேவா - நா
வேண்டித்தா உன்னழச்சே வா வா 3

பரியூரு பத்ரகாளி தேவா - நாங்க
உங்கள நானெனச்சே தேவா
அரக்காலு நாச்சியம்மா தேவா - உன்ன
அரிய தொண காத்திடவா தேவா 4

காப்பில்லி கத்தவனே தேவா - நீங்க
கண்ணப் புடுங்கவேணும் வா வா
மூணுபில்லி கத்தவனே தேவா - அவ
முழியப் புடுஞ்க வேணும் வா வா 5

சேலூரு சொரியப்பட்டா தேவா - இப்போ
தெய்வத்தொண காக்கவேணும் வா வா
சேலூரு மாரியம்மா தேவா - நீங்க
செல்லத்தொண காத்திடவா வா வா 6

உங்கள நாநெனத்து தேவா - நாங்க
உக்காந்தோம் தெய்வசவ வா வா
மந்தியில எழுந்தவளே தேவா - நீ
மாகமத்து மாரியம்மா வா வா

உங்கள நானெனத்து தேவா - நாங்க
ஒக்காந்தோம் தெய்வசவ வா வா 8

அன்னையும் மாதாவுமே தேவா - என்ன
ஆதிபரஞ்சோதியே தேவா - என்ன
பெத்தவுங்க மாதாவுமே தேவா - என்ன
பேரு வெச்ச சற்குருவே தேவா - என்ன 9

படிச்சுத்தந்த வாத்தியாரு தேவா - நா
பலநாளு நாமறவே வா வா - எனக்குச்
சொல்லிக் கொடுத்த வாத்தியாரு தேவா - அவரு
சொழலு வந்தா காத்திடவா வா வா 10

*தெருக்கூத்துத் தொடங்கும் முன் தெய்வத்தை வேண்டி அழைத்துப் பாடும் பாடல். உடுக்கையுடன் பாடப்படுகிறது.*

**சாமி அழைப்பு – 2**

## 32. காவல் கொண்டு எழுந்தவளே

**கொங்கன், 70**
**சித்தூரணிப்பட்டி**
**வாழவந்திநாடு**

தேவாதி தேவர்களே - உன்னத்
தெண்டலுட்டே உம்பதமா
மந்தயில நீ புறந்தே - அங்க
மகமுத்து நீ மாரித்தாயே - நீங்க 1

ஆனயாரே பிள்ளயாரே
அரசாங்கத்து நாயகரே
கொன்னயடிப் பிள்ளையாரே
குளத்தங்கர நாயகரே - நீங்க 2
வேராநல்லா வழிப்புடியும்
பெரிச்சாளி வாகுனரே - நீங்க 3

மந்தயிலதா நீபுறந்தே - அங்க
மகமுத்து மாரித்தாயே
குப்பையில நீபுறந்தே - என்ன
கொணமுள்ள மாரித்தாயே 4

மாரி பிறந்தயாம்மா - அங்க
　　மந்தையில நின்னாதொம்
மாட்டுக்குத்தா காவுகொண்டு - இங்க
　　மந்தையில எழுந்தவளே 5

ஆட்டுக்குத்தா காவு கொண்டு - நீங்க
　　மந்தையில எழுந்தவளே
ஆட்டுக்குத்தா காவுகொண்டு - அந்த
　　அரமணையா வந்தவளே 6

தேவாரே முனிவாரே - உன்னத்
　　தெண்டலுட்டே உம்பதமா - இந்த
ஏழுமலச் சன்னதியே - நீங்க
　　எழுந்துவந்த நல்லகோங்கு 7

கருவறதா சந்துலதா - நீங்க
　　காத்திருந்து வந்தவளே - நீங்க
ஏழுபேரு வனக்காரி - அங்க
　　எழுந்துவந்த நல்ல கோங்கு - நீங்க 8

எச்சநல்ல சோத்துக்குத்தா
　　எழுந்துவந்த நல்லகோங்கு
அரமணயா பின்துடர்ந்து - நீங்க
　　எழுந்துவந்த நல்லகோங்கு 9

கருவாழதா பழத்திக்கும் - அந்தக்
　　கருநெல்லு சோத்துக்கீந்தா(ன்) - இந்தக
கருநெல்லுச் சோத்துக்குத்தா - நீங்க
　　காத்திருந்து வந்தவளே - நீங்க 10

கருநெல்லுச் சாதத்திக்கு - நீங்க
　　காத்திருந்து வந்தவாரே
கருவாழப் பழத்துக்குந்தா
　　கருநெல்லு சோத்துக்கீந்தா 11

எருமையான பின்துடர்ந்து - நீங்க
எழுந்துவந்த நல்லகோங்கு
கருவாழதா கொடகுலதா - இந்த
மாரிமழ வந்திடுத்து - நாங்க 12

ஏழுபேரும் வனக்காரி - இந்த
எழுந்துவந்த நல்லகோங்கு
நடந்துவந்த நல்லகோங்கு
எருமையான பின்தொடர்ந்து - நீனும் 13

பிடாரியம்மா பூங்கொடியே - நீ
வவுத்துப்புள்ள தாச்சிதானே - அம்மா
வகுத்துப்புள்ளத் தாச்சிதானே - அந்தக்
கருவறையா படுத்திருந்தா - நீங்க 14

இந்த
வகுத்துப்புள்ளத் தாச்சிதானே - நீங்க
கருவறையில படுத்திருந்து
பேயுநல்ல மழயுலதா - அங்க
பெண்ணே மயும் கருப்பமாம்மா - எனக்கு 15

அண்டநல்ல தாவுமில்லே - நீங்க
ஒதங்குமம்மா பிடாரித்தாயே
ஒதங்குன்னுதா சொன்னாலுமே - அங்க
பிடரியம்மா பூங்கொடியே 16

வவுத்துப்புள்ள தாச்சிதானே - அங்க
படுத்துனுதா இருக்கும்போது
தனனானா னன்னா தனனானே- அந்த
அழகுப் பொண்ணே பட்டுணர்ந்தே- அப்ப
கொங்காயம்மா தானந்தானே - அந்தச்
சூலாயுதத்தக் கைபுடித்து - அங்க
குத்தி நல்லா எழுந்துட்டாரே - அவுங்க 17

அங்கிருந்து அங்கவந்து - அந்தப்
பிடாரியம்மா பூங்கொடியும் - அவங்க
ஏழுபேரோ டுடன்புறந்த
இளயகன்னி தாம்புறந்தா - அவுங்க 18

வெத்திலயும் தாம்பிலமும்
மடித்து நல்லா போட்டுத்தானே - அவுங்க
கருவறச் சந்தவிட்டு - அங்க
வெளியேறி வந்துட்டாரே - அவுங்க
வெளியேறி வந்துதானே - அவுங்க
எங்கதா இருக்குறாரு - இந்த 19

நாலே பதுவுலயும் - அவுங்க
மந்துகொண்ட கன்னிமாரே
நாலேநல்ல பதுவுலயும் - அவுங்க
அமந்துகொண்ட பின்புறமா - நல்ல 20

கல்லாயிரம் கலிகாலம் - அந்தப்
பல்லாயிரம் பெருமாளும்
பல்லாயிரம் பெருமாளே - அந்த
வனத்துக்கொரு ரிஷிகளாளே
பல்லாயிரம் பெருமாளே - எங்க
வனத்துக்கொரு ரிஷிகளே - என்னச்
செங்கப் பிடாரியம்மா
சேடக நாச்சியம்மா
பெரிய பெடாரியம்மா
பேருள்ள உத்தமியே - எங்க
பெரிய பெடாரியம்மா - இன்னிக்குப்
பேருள்ள உத்தமியே - எங்க 21

வாழவந்தி கொங்குலம்மா - நீங்க
வந்துபூத்த லட்சுமியோ
எடவரையக் குத்திதானே - நீங்க
தலவரையா வந்தாங்கீளே - நீங்க 22

எல அந்தத்தூரு நாளயில - நீங்க
    என்னம்மா செஞ்சாங்கன்னா - அவுங்க
மூணுதலமொறையா - அங்க
    முப்பாட்ட(ன்) காலத்தீலே 23

நாலுநல்ல தலமொறையும் - அந்த
    நாப்பாட்டங் காலத்திலே - நம்ம
வாழவந்தி சாமிகளும் - அங்க
    இங்கிருந்து போயிதாண்டா 24

சேலூரு சாமிக்குத்தா - அந்த
    சாமி புடுங்கத்தா - அந்த
கொங்காயப் புடுங்கத்தாண்டா - இங்க
    கொம்பூலுட்டுப் போறாங்களே - அங்க 25

ஆகூட்டம் கண்ணேநீயே - எனக்கு
    அசிக்கோ முடியாதடா - உனக்கு
என்னாங்க தூக்காதீங்க - இன்னும்
    பக்கத்தில இருக்கறாங்க - அங்க 26

பக்கத்தில இருக்கறாங்க
    அதநல்லாத் தூக்கிபோங்க
அதநல்லாத் தூக்கிப்போனா - எனக்கு
    ஆகாசம் வந்துருவே(ன்) - நானு
ஆகாசமா வந்துதானே - உன்ன
    அழிக்கநல்ல தீத்துக்குவே(ன்) 27

## 33. விநாயகர் பாட்டு

தேவராஜன், 55
பெருங்கிராய்ப்பட்டி
வாழவந்திநாடு

| | | | |
|---|---|---|---|
| முந்தி, முந்தி | வினாயகனே | ஓ ஹோ | |
| | வினாயகனே | ஓஹோ | 1 |
| முக்கண்ணார் | தன்மகனே | | |
| கந்தனுக்கு | முன்பிறந்த | | |
| | முன்பிறந்த | ஓஹோ | |

கணபதியே முன்னடவாய்
ஆனையடி பிள்ளையாரே ஓஹோ
பிள்ளையாரே ஓஹோ

அரசங்கர விநாயகனே
கொன்னையடி பிள்ளையாரே ஓஹோ
பிள்ளையாரே ஓஹோ 2

குளத்தங்கர விநாயகனே
பேடைநல்ல வயிற்குலுங்க ஓஹோ
வயிற்குலுங்க ஓஹோ

பெருச்சாளி வாகனரே
அவலு, கடல பொரி ஓஹோ
அதிசயத் தேன்குழம்பும் ஓஹோ
தேனுந் தினைமாவும் ஓஹோ
தெவிட்டாத மாங்கனியும்
கூட்டிநல்ல குழம்பிடுவேன் ஓஹோ
குளத்தங்கர விநாயகனே ஓஹோ
பச்சரிசி பழம் தேங்கா ஓஹோ
பாங்குடனே நான் படைப்பேன் ஓஹோ 3
இந்நேர வேளையிலே ஓஹோ
ஏந்தி வரம் நானும் கேட்டேன் ஓஹோ
ஏந்தி வரம் நானும் கேட்டேன் ஓஹோ
என்னை ஆதரிக்க வேணுமையா ஓஹோ 4

**அக்கினிச்சட்டிப்பாட்டு – 1**

## 34. ஆதரிக்க வேணுமம்மா

**தேவராஜன், 55**
**பெருங்கிராய்ப்பட்டி**
**வாழவந்திநாடு**

சமய நல்ல யம்மா சமயபுரம் ஓஹோ
சமயபுரம் ஓஹோ
சாக்திகேத்த, யம்மா கண்ணபுரம் ஓஹோ
இருந்தா விலாடபுரம் ஓஹோ
விலாடபுரம் ஓஹோ 5
இனி இருந்தா யம்மா கண்ணபுரம் ஓஹோ

மந்தையிலே எழுந்தவளே ஓஹோ
எழுந்தவளே ஓஹோ
மகமுத்து மாரியம்மா ஓஹோ
ஆயிரந்தா கண்ணுடைச்சி ஓஹோ
ஆயிரந்தா கண்ணுடைச்சி ஓஹோ
அழகுமுத்து பொம்மாரியே ஓஹோ

உனக்கு உடுக்கை நல்ல பிறந்ததும்மா ஓஹோ
உத்து ராசா மேடையிலே ஓஹோ
சவுக்கு நல்ல பிறந்ததும்மா ஓஹோ
சன்னாசி மேடையிலே ஓஹோ

ஆயிரந்தா முத்துலையும் ஓஹோ
அழகுமுத்து உன்னுதம்மா ஓஹோ
முந்நூறு முத்துலையும் ஓஹோ
முதல் முத்து உன்னுதம்மா ஓஹோ
உனக்கு மாவிலை தோரணம்மா ஓஹோ
மந்தையிலே அலங்காரமம்மா ஓஹோ
நானும் அக்கினியே கையிலேந்தி ஓஹோ
அடிவணங்கி நானும் தெண்டனிட்டேன் ஓஹோ
என்னை ஆதரிக்க வேணுமம்மா ஓஹோ

நானும் ஆடும்புலவரோடு ஓஹோ
நானும் ஆடும்புலவரோடு ஓஹோ
ஆடியே நானும் வென்றதில்ல ஓஹோ
நானும் பாடும் புலவரோடு ஓஹோ
நானும் பாடும் புலவரோடு ஓஹோ
பாடியே நான் வென்றதில்லை ஓஹோ
பாடியே நான் வென்றதில்லை ஓஹோ

எனக்கு மங்கினதா தொண்டை ரெண்டும் ஓஹோ
மாடப்புறா நாதம் போலே ஓஹோ
மாடப்புறா நாதம் போலே ஓஹோ
சீறினதா தொண்டை ரெண்டும் ஓஹோ
சீறினதா தொண்டை ரெண்டும் ஓஹோ
சீனத் தொட்டி நாதம் போலே ஓஹோ

ஆடுனவன் காலுக்குத்தான் ஓஹோ
ஆடுனவன் காலுக்குத்தான் ஓஹோ
அவதி வந்து யம்மா நேராமலே ஓஹோ
பாடுனதா தொண்டைக்குத்தா ஓஹோ
பாடுனதா தொண்டைக்குத்தா ஓஹோ
பழுது ஒன்றும் நேராமலே ஓஹோ

கூப்பிட்ட தேவரெல்லாம் ஓஹோ
உங்கள் கோயில் போயே சேரவேணும் ஓஹோ
வன்னிச்சதா தேவரெல்லாம் ஓஹோ
வன்னிச்சதா தேவரெல்லாம் ஓஹோ
நீங்க மாளி போயே சேரவேணும் ஓஹோ
செய மங்கலம், செயமங்கலம், செய மங்கலம்

### அக்கினிச்சட்டிப்பாட்டு - 2

## 35. அறியாத பாலனம்மா

*சீனிவாசன்*, 45
பெருங்கிராய்ப்பட்டி
வாழவந்திநாடு

மந்தையிலே எழுந்தவளே ஒகும்
மகமுத்து மாரித்தாயே ஒகும்
அக்கினியில் பிறந்தவளே ஒகும்
ஆயிரம் கண்ணுடையா ஒகும்
அக்கினியிலே பிறந்தவளே ஒகும்
ஆயிரம் கண்ணுடையா ஒகும்

முத்துமாரி மகமாயியே ஒகும்
முன்னலதா வாரவேணும் ஒகும்
பத்தினி தேவதையே ஒகும்
பக்க துணை வாரவேணும் ஒகும்

ஆயிரம் மக்களுக்கும் ஒகும்
அறிஞ்ச நல்ல தெய்வம்மா ஒகும்
அத்திக் குச்சி ஆலங்குச்சி ஒகும்

அக்கினியே தீவளத்தி ஓகும்
அறியாத பாலேனம்மா ஓகும்
ஆடி வாரேன் மந்தையிலே ஓகும்

நட்டுக்குழி எட்டுக்கம்பம் ஓகும்
நாடாளும் பாப்பாத்தியே ஓகும்
நாடாளும் பாப்பாத்தியே ஓகும்
நடந்து வாங்க இந்த ச(பை)ப ஓகும்

ஆதியிலே எழுந்தவளே ஓகும்
அறப்புளி ஈஸ்வரியே ஓகும்
திருப்புளி பூச கொண்டு ஓகும்
திரும்புமம்மா இந்தசப ஓகும்
கல்லிலே எழுந்தவளே ஓகும்
கரையங்காட்டுக் காளித்தாயே ஓகும்
கரையங்காட்டுக் காளித்தாயே ஓகும்
காக்க வேணும் இந்த சப ஓகும்

பூமியிலதா எழுந்தவளே ஓகும்
பூங்குளத்துப் பெரியண்ணா ஓகும்
கொல்லிமலை ஏழு தெய்வம் ஓகும்
கொடுங்கைக்கே வாரவேணும் ஓகும்

நல்ல கொங்குப் பிடாரியம்மா ஓகும்
நாடாளும் பாப்பாத்தியே ஓகும்
கூப்பிட்ட தேவரெல்லாம் ஓகும்
கொடுங்கைக்கு வாரவேணும் ஓகும்

அக்கினிய எடுத்துத்தானே ஓகும்
ஆடிவாரே உஞ்சன்னதில ஓகும்

ஒண்ணா நல்ல கரகமெடுத்து ஓகும்
ஓடி வாரேன் உஞ்சன்னதிலே ஓகும்

இரண்டா நல்ல கரகமெடுத்து ஓகும்
நாடி வாறேன் பொன்கிரகம் ஓகும்

மூனா நல்ல கரகமடி ஓகும்
ஓடி வாரேன் பொங்கரகம் ஓகும்

நாலாம் நல்ல கரகமடி ஓகும்
நாடி வாரேன் பொன்கரகம் ஓகும்

அஞ்சம் நல்ல கரகமடி ஓகும்
ஆடி வாரேன் பொன்கரகம் ஓகும்

ஆறாம் நல்ல கரகமடி ஓகும்
ஆடி வரும் பொன்கரகம் ஓகும்
ஏழாம் நல்ல கரகமடி ஓகும்
எடுத்து வாரேன் பொன்கரகம் ஓகும்

எட்டாம் நல்ல கரகமடி ஓகும்
எட்டிவாரேன் பொன்கரகம் ஓகும்

ஒன்பதாம் நல்ல கரகமடி ஓகும்
ஓடிவாரேன் பொன்கரகம் ஓகும்

பத்தாம் நல்ல கரகமடி ஓகும்
பாடி வாரேன் பொன்கரகம் ஓகும்

ஆயாளோட பேரச்சொல்லி ஓகும்
ஆடிவாரேன் பொங்கரகம் ஓகும்

முத்துநல்ல முத்துமாரி ஓகும்
முன்னாலதா ஆடிவாரேன் ஓகும்

அக்கினியை நாவளத்து ஓகும்
ஆடிவாரேன் பொங்கரகம் ஓகும்

### அக்கினிச்சட்டிப்பாட்டு - 3

## 36. மாட்டுக்கிடைக்கு நீயே காவல்

கொங்கன், 70
கோப்பைய ராஜீ, 42
சாலசெல்லதுரை, 30
சித்தூரணிப்பட்டி
வாழவந்திநாடு

ஏலஏல ஏலஏல ஏலஏலெ - ஓகோ
ஏல ஏல - ஓகோ 1

கரகம் நல்லா ஏலேலோ பொறந்ததம்மா - ஓகோ
கண்ணூரு ஏலேலோ மாரியத்தே 2
உடுக்கு நல்லா ஏலேலோ பொறந்துதம்மா

உத்திராச மேடயில 3
தவண்டநல்லா பொறந்தும்மா
தருமரோட மேடயில 4

ஒண்ணநல்ல படியேறி
ஓடிவந்த முத்துமாரி 5

ரண்டநல்ல படியேறி
நடந்துவந்த முத்துமாரி 6

மூணுநல்லா படியேறி
முடிச்சுவந்த முத்துமாரி 7

நாலுநல்ல படியேறி
நளஞ்சு வந்த முத்துமாரி 8

அஞ்சநல்ல படியேறி
பணிஞ்சுவந்த முத்துமாரி 9

ஆறநல்லா படிகஏறி
அடங்கிவாங்க முத்துமாரி 10

ஏழநல்லா படிக ஏறி
மாரிநல்லா பெறந்தகையில் 11
மாரிநல்லா பெறந்தவளே
மந்தையில எழுந்தவளே 12

ஆயிரம்தான் கண்ணிலேயே
அழகுமுத்துப் பொம்மாரி 13

பொன்னூருதா கண்ணிலேயும்
மொகமுத்துதா பொன்மாரி 14

முந்நூறுதா கண்ணுலயும்
மொகமுத்துதா பொம்மாரி 15

நானூறுதா கண்ணடக்கம் - உனக்கு
நல்லமுத்து மாரியம்மா 16

மந்தையிலநீபுறந்தே
மகமுத்துதா மாரியத்தே 17

ஆனயில எழுந்தவளே
அரியமுத்து மாரியம்மா 18

மாரிநல்லா பெறந்தவளே
மந்தையில நீபுறந்தே 19
மாரிநல்ல பெறந்தவளே
மாட்டுக்கிட காவலம்மா 20

ஆலயில எழுந்தவளே
மாட்டுக்குத்தா காவலம்மா 21

ஆலயில எழுந்தவளே - நீங்க
ஆங்காரக் காரியம்மா 22

ஆனயடிப் பிள்ளையாரே
அரசங்கர நாயகியே 23
முந்திமுந்தி நாயகரே
முக்கண்ணுதா தேவர்களே 24

கந்தருக்கே முன்னாலே
கருப்பொளிய நாயகரே 25

வேலநல்லா வைப்பொழிய
பெருச்சாளி வாகனரே 26

மாரிநல்லாப் பெறந்தவளே
மந்தையில நீபுறந்தே 27

அக்னியா நீபிறந்தது
உக்கிரமா எழுந்துபோகுங்கூட 28

அக்கினியா நீபுறந்த
உக்கிரமா எழுந்தவளே 29

ஒம்பாட்டு அறுந்துபோன
என்னாலே முடியாதம்மா 30

தேவரொட புள்ளயம்மா - இங்காத்
தீர்மானஞ் செய்தவளே 31

மாரிநல்லாப் பெறந்தவளே
அக்னியக் கொண்டுதானே 32

கண்ணனூரு மாரியத்த
காந்தார நீலிம்மா 33

கண்ணனூரு மாரியம்மா
காந்தாள நீலியம்மா 34

தீபதொட்டி பந்தங்களும்
தேவருக்கு முன்னாலே 35

வேலிநல்லா வழிப்பொழிய
பெருச்சாளி வாகுனரே 36

அக்கினியா பெறந்தவளே
உக்கிரமா மாரியத்தே 37

மாரிநல்லா பெறந்தவளே
மந்தையில நின்னாளே 38

மந்தையில எழுந்தவளே
மகமூத்து மாரியம்மா 39

வேப்பெலயுந் தோரணமும்
வெடிப்பேத்தி வந்தவளே 40

பச்சநல்லா தலையொடுச்சு
தாரணச்சால உண்டுபண்ண 41

பரணசால மேடையில - இங்க
பாக்குறவங்க செல்லாயியே வந்துநிப்பா 42

பறந்துவந்தே நின்னுருப்பா
படிவாச சேந்திருப்பே 43

மாரிநல்லா பெறந்தவளே
மந்தையில எழுந்தவளே 44

ஆயிரந்தா கண்ணுனக்கு
அழகுமுத்து பொன்மாரி 45

நானூறு கண்ணுலயும்
நடந்துவந்த பொம்மாரி 46

## 37. ஓட்டிக்க மகமாயி

செல்லம்மாள், 60
சேலூர்கஸ்பா
சேலூர்நாடு

மாரியாயி மாரியாயி - உம்
மாருமேல என்னாத்தா
மணியாரரு பண்ணிப்போட்ட
மார்பதக்கம் பொன்னால 1

சேரியாயி சேரியாயி - உஞ்
சிரசிலயிம் என்னம்மா
சேர்காரங்க பண்ணிப்போட்ட
சேர்பதக்கம் பொன்னால 2

காளியாயி காளியாயி - உங்
கழுத்திலயும் என்னம்மா
கரக்காரரு பண்ணிப்போட்ட
காரப்பதக்கம் பொன்னால 3
போறம் போறன்னு
பொல்லாப்புச் சொல்லாத
வாரவரு சேத்துக்கு
வத்துக்க மகமாயி 4

கட்டாந் தரையில
கதுவாலி மேயுது
ஓட்டோட்டப் போகுல - நீ
ஓட்டிக்க மகமாயி 5

கும்பந் தலயில
கோடாலி தோளிலே
வன்னி மரம் பொளக்க
வாரா மகமாயி 6

ஆலாஞ் சருவுல
அடக்கோழி மேயுது
ஓட்டோட்டப் போகுல - நீ
ஓட்டிக்க மகமாயி 7

மமுட்டிக் கைப்புடிச்சே - எங்கமாரியாயி
மடதொறக்கப் போவயில
மடயத் துறந்துடம்மா - எங்க மாரியாயிக்கு
மயிலுவந்து நீராட 8

கோடாலி கைபுடிச்சு - எங்கமாரியாயி
குச்சிவெட்டப் போவயில
கோடாலி கைலுழுவும் - எங்கமாரியாயி
கும்பந் தலயிலம்மா 9

ஏரிக்கரமேல எங்கமாரியாயிக்கு
எலந்த பழுத்திருக்கும்
ஏறி உதுக்கைய்யா – நீ
எந்தோழி ராவுரைரே

*மாரியம்மனுக்கு மாவெளக்கு எடுக்கும்போது பாடுவது. குலவையும் இடப்படும். இலங்கையிலிருந்த போது கற்றுக்கொண்டதாகக் குறிப்பிட்டார்.*

## 38. மூர்த்தம் போட்டுக்குங்க...

**குழந்தையம்மாள், 75**
**ஏ. தண்ணிமாத்திப்பட்டி**
**வாழவந்திநாடு**

சித்திர பொறந்திருச்சி – சிறு
செம்புகம்பூ பூத்திருச்சு
நாடு செழிச்சிருச்சு
நல்லமாரி பெஞ்சிருச்சு
ஊரு செழிச்சு
உத்தமாரி பெஞ்சிருச்சு – இந்த
ஊராரு ஊரு ஏருகட்டி – உங்க
ஏருகட்டி உங்க மூர்த்தம் போட்டுக்குங்க.
ஆயாளுக்கு
பச்சக் கொல வெட்டி
பாதம் புடிங்க
திரி கொல வெட்டி
திரிபாதம் புடிங்க
மந்த நெறஞ்சிருக்கும்
மாந்தழத் தோரணம்

*மாரியம்மன் திருவிழாத் தொடங்கும்போது இருவர் தோள்களின் மேல் கை போட்டுக்கொண்டு பூசாரி இதனைச் சொல்லுகிறார்.*

# 39. செம்புகப்பூப் பூத்திருச்சு

செல்லம்மாள், 60
சேலூர்கஸ்பா
சேலூர்நாடு

சித்திர பொறந்திரிச்சு
செம்புகப்பூ பூத்திரிச்சு
திரித்திருத்தி மணப்பரப்பி
தென்னம்பா(ளை)ள விரித்தொணத்தி
பாள கொண்டு பல்வெளக்கி
ஓல கொண்டு நா வழிச்சு
நாமாட்டுச் சாணங் கொண்டு
நாலுபொறஞ் சுத்தம் பண்ணி

புள்ளையார் புடிச்சுவெச்சி
போயருவா சூடிவெச்சு
முக்கண்ணுத் தேங்காயத்
திக்கென்று கண்துறந்து
காஞ்சி வனத்திலே
கருவேலாங் காட்டுல
வாதுக்குப் பந்தடிச்சு
வழக்கா முடிச்சு வருது
கடங்கண்டா பொங்கலெல்லாம்
காடேறிப் போங்க
ஈறு சிறுக்காரியெல்லாம்
எல்ல தாண்டிப் போங்கோ

*கொங்கலம்மாவுக்குப் பாடுவது. காப்புக் கட்டிய பிறகு தீட்டுக்காரிகளைப் போகச்சொல்லிப் பாடுவது.*

குலவை - 1

## 40. விதமான சந்தனங்கள்

அரசாமி, 55
விரகனூர்ப்பட்டி
சேலூர் நாடு

கல்லிவெள்ளி மோதரத்தெ
விரலிலியே மாட்டியல்லோ
விதமான சந்தனங்கள்
மாருமே அணஞ்சி

வெத்தலயெக் கைப்பிடிச்சு
வெறும்பாக்க நாவிலிட்டு
சுண்ணாம்பு இல்லாத நம்ம மாரியாத்த
சூதாடி வாராளாம்
எஞ்சோட்டுப் பெண்டுகளே
எலவாழத் தண்டுகளே
எடுங்க மாக்கூடையெ

*(மாவிளக்கு எடுக்கும்போது பாடுவது)*

குலவை - 2

## 41. சிறுக்கி மடிமேலே

துறையூர் சின்னம்மா, 85
எம்.ஜி.ஆர். நகர்
வாழவந்தி நாடு

கிறுக்கு மிதியடியாம் - பொண்ணே
கெண்ட போட்ட முண்டாசாம்
சறுக்கி நடப்பாராம் - நம்ம
வாத்தியாரு சிறுக்கி மடிமேலே

எஞ்சோட்டுப் பொண்டுங்களா
எளவாழத் தண்டுங்களா
எடுங்கடியோ பூங்கொரல (லூ...லூ...லூ...

குலவை - 3

## 42. மூட்டைப் பருத்தி

துறையூர் சின்னம்மா, 85
எம்.ஜி.ஆர். நகர்
வாழவந்திநாடு

மூட்டே பருத்தியாம் - பெண்ணே
மொடமொடத்த துப்பிட்டியாம்
போட்டு வருவாராம் நம்மவாத்தியாரு
மோட்டுகை வழியே
எஞ்சோட்டுப் பொண்டுங்களா
எளவாழத் தண்டுகளா
எடுங்கடியோ பூங்கொரல

குலவை - 4

## 43. மாலை சோருதடி

துறையூர் சின்னம்மா, 85
எம்.ஜி.ஆர். நகர்
வாழவந்திநாடு

வருவாரு இன்னிருந்தே(ன்) -
பொண்ணே
வழிப்போக்கி இன்னிருந்தே
இஞ்சிக்குக்கீழ இருக்கிறார் இன்னிருந்தே
எலுமுச்சகீழ நடக்கிறார் இன்னிருந்தே
குருத கொளத்துல குளிக்கிறார் இன்னிருந்தே
கொத்தரளிப் பூவெடுத்து முடியுறார் இன்னிருந்தே - எம்

மால கெடந்து மடியுலயோ சோருதடி
எடப்பொறம் மூணுசுத்து
வலப்பொறம் மூணுசுத்து
வாத்தி கழட்டுங்கடி - நம்ம
வாத்தியாருக்கு மச்சினரா(ம்) தோழிகளா

எஞ்சோட்டுப் பொண்டுங்களா
எளவாழத் தண்டுங்களா
எடுங்கடியோ பூங்கொரல லூ...லூ...லூ...

## 44. வீடு சுத்தம் செய்து

காளிமுத்து, 59
கரையங்காடு
வாழவந்திநாடு

சித்திர பொறந்தது- சிறு
செம்புக பூத்தது
நல்லமாட்டுச் சாணங்கொண்டு
நடுவீடு சுத்தஞ்செய்து
பெரியமாட்டுச் சாணங்கொண்டு
பெரியவீடு சுத்தஞ்செய்து
அம்மனுக்குப் பச்சக்கொல வெட்டி
பாதம்புடிக்கப் போறம்
திரிகொல வெட்டி
திரிபாதம் புடிக்கப்போறம்
கலசெம்பு தீண்டாத பெண்களெல்லாம்
காடேறிப் போங்க

*மாரியம்மன் திருவிழாவின்போது பெரியதனக்காரர் மேளதாளம் முழங்க, அணிவீடு என்னும் சாமிவீட்டில், புதன் அல்லது வெள்ளிக்கிழமை இரவு பத்து மணிக்கு மேல் கருவாழைத் தாரைக் கட்டி வைத்து விட்டு, மந்தையில் இதற்கெனவே உள்ள கல்லின் மீதேறி இதனை மூன்றுமுறை சொல்வார். இது 'காய்வெட்டுதல்' எனப்படுகிறது.*

### பேயோட்டும் பாடல்

## 45. சுடுகாட்டு நீலியடி

சின்னக்காளி, 75
கூச்சக்கிராய்
வாழவந்திநாடு
சொல்லதிருமன், 60
மாதாகோயில்
திண்ணனூர் நாடு

குழு: தேவாதி தேவர்களே! -நீங்க
தண்டலுட்டா ஒம்பதண்டு - நாம
கூப்புட்டு தேவரெல்லாம் - அம்மா
கூப்புட்டு தேவரெல்லாம்

குழு: தேவரெல்லாம் - அந்த
கொல்லிமல வந்துசேரு

குழு: வந்துசேரு - அந்த
கொழுந்திக்கு வந்துசேரு - அம்மா

கல்வியா இருந்தவளே
காந்தாள நீலியே - அம்மா
நெருப்பிலி நீ பொறந்தே - அம்மா
நீலவண்ணந் தங்கையாரே - அம்மா
நீலவண்ணந் தங்கையாரே - அம்மா
சூலமா ஒருகையி - அம்மா
சூலமா ஒருகையி - அம்மா
சூலிவனம் முக்கையி - அம்மா
சூலிவனம் முக்கையில - அம்மா

பந்தம்மா ஒருகையில - அம்மா
படவெட்டி முக்கையி - அம்மா
உலக்கையில இருந்தவனே - அங்கே
உலக்கையி இருந்தவனே - அங்கே
வடமதுர பொன்ராமா - அம்மா
வடமதுர பொன்ராமா - நாம
கூப்புட்டு கொரலுக்கு - நீங்க
கொடுங்கைக்கு[1] வந்துசேரு - அம்மா
தெக்கையி இருந்தவளே - அங்க
சீரங்க ரங்கநாத -அம்பு உனக்கு

ஆறுரண்டுங் காவேரி - அம்மா
தேருங்கும் சீரங்கமே - அம்மா
கொள்ளாடம் காவாரி - அம்மா
கூடுதே ரங்கதாளம் - அம்மா
மாறுமட்டி கங்கயில - ராமா
மாருமட்டி கங்கயில் - ராமா
மைந்துட்டி[2] தலமுழுகி - நீங்க
நெஞ்சமுட்டி கங்கயில - நீங்க
நின்னுதா லமுழுகி - நீங்க
கெழக்கோ தி ரும்பிதாண்டா - நீங்க

கிள்ளிவெச்ச திரிராமோ[3] - நாங்க
இளிக்காலு[4] ஒர்ப்பதமா
வடக்க திரும்பிதாண்டா - நீங்க
வாருவெச்சு திரிராமோ - அங்க
வண்ண கிளி ஒர்ப்பதம்[5] - ராமா
ராமம் மணக்குதடா - ராமா
ராமம் மணக்குதடா - ராமா
ராணிதட்டி காதவழி - அங்கே
தொளசி மணக்குதடா - அங்கே
துன்னுதட்டி[6] காதவழி -
கம்பகம்ப காமாட்சியே -அங்க
கதிருசம்பா மீனாட்சியே - அங்கே
தொட்டித்து மதுரகாளி - அங்க
துலுக்குசா ரமினியே - எங்க
நீள பறந்துதும்மா
உடுக்க புறந்துதம்மா - அங்கே
உத்துராசரம் மேடயில -
சவுக்கு புறந்துதும்மா - அங்கே
அம்மணாண்டி மேடயில - அங்கே
வீணி புறந்துதம்மா - அங்க
கண்ணனூரு எல்லயில - அங்க
மந்தியில யிருந்தவளே - என்ன
மகமத்து மாரியே - அங்க
ஆயிரியும் கண்ணிலியும் - அங்கே
அழகுமுத்து மாரியே - அங்கே
முந்நூறு கண்ணிலயும் - ஆங்கே
முத்து பரவுதம்மா - அங்க
ஈரோடு சமயவரம் - அங்க
எழுந்துவந்தே நல்லவுங்கு - அங்கே
கருவாழ(ழை) பழத்துக்கும் - அங்கே
கருநெல்லுச் சோத்துக்கும் - அங்கே
இஷ்டப்பட்டு வந்தவளே - அம்மா
எருமானே பின்துடர்ந்து - அவுங்க
அக்கதங்க ஏழுபேரும் - நீங்க
கூட நடந்துவந்தே - என்ன
கசவோம்பி கன்னியே - நீங்க

கீழயே ஒக்காந்தே - நீங்க
ஆதியெழுந்தவளே - அமா
நாஞ்செய்த அலயோட - அங்கே
நாரத்தங்கா பட்டோட - நீங்க
ஈரத்தலயோட - அம்மா
ஈசங்கு பட்டோட - உனக்குச்
சூலமா ஒருகையி - நீங்க
சுருளிவனம் முக்கையி - நம்ம
எட்டுகரெ நாட்டுலதா - நீங்க
கொங்காயி ஒக்கந்தே - உனக்கு
பட்டுத் துகிலெடுத்து - நீங்க
பாங்கா மடிச்சுக்கட்டி - நீங்க
பட்டுணத்தி வாங்கம்மா - நீங்க
சேலூரு படரியே - நீங்க
செங்க பிடரியம்மா - நீங்க
அக்கா தங்க ஏழுபேரு - நீங்க
நேரிச்சே எழுந்தவளே - நீங்க
தந்து பழனியே - நீங்க
தருமல ஆண்டியே - உனக்கு
அன்னுருச்ச மாந்தோலு - உனக்கு
ஆசனந் தலமேல - அம்மா
வாரும்மா கோவிலுக்கு - அங்க
கூப்பிட்டு கொரலுக்கு - நீங்க
பின்னத்து மதுரகாளி - நீங்க
பேருபோனஉத்தமியே - நாங்க
விரகனூரு கொங்கலம்மா -
கூப்பிட்டு கொரலுக்கு - என்
கொடுங்கைக்கு வாங்கலம்மா
தின்னூரு பெருமாள - நீங்க
புத்தசா மிங்களம்மா
கூப்பிட்டு கொரலுக்குதா - நீங்க
கொடுங்கைக்குப் படுக்கவேணும் - என்ன
பின்னூரு பெருமாளே - என்னு
மாதாவே தாதாவே - நானும்
கூப்பிட்டு கொரலுக்கு - நீங்க
பட்டு

பாடுகண்டு சோவிகனே - என்ன
அரியக்கா பெரியநாச்சி - நீங்க
ஆவரஞ்சி நல்லசெல்லி - நீங்க
ஆவரங்க மேலசெல்லி - நாங்க
கூப்பிட்டு கொரலுக்கு - நாங்க
கொடுங்கைக்கு வாங்கம்மா
பள்ளமாச்சி பந்தலுந்தா - நீங்க
பையூரு நடந்தகாளி -
சேடுபட்டி சேடுவந்தா
சேட்டூரு நடந்தகாளி - நீங்க
சீக்கிரமா ஓடிவாம்மா - அம்மா
பட்டுக் கொலகாரனே - நீங்க
பாடுகண்டு சேவிகணு - நீங்க
கூப்பிட்டு கொரலுக்குதா - நீங்க
கொடுங்கைக்கு ஓடியாம்மா - அம்மா
வாளரத்து பெரியநாச்சி
ஊஞ்சி தா விராட - அங்க
உன்னுடம்பு தாலாட - நீங்க
அக்கா தங்க ஏழுபேரும் - அங்க
கூப்பிட்டு கொரலுக்கு - நீங்க
கொழுந்திக்கு வருகவேணும் -
அட்டுஆத்தி தண்ணியே
அறிவு சொல்லும் பாப்பாத்தி - நீங்க
போதமலே சித்தய்யா - அங்கே
பொதியமலே கந்தய்யா - நீங்க
கொடுங்கல்லு காளியே - நீங்க
கூப்பிட்டு கொரலுக்கு - நீங்க
கொடுங்கைக்கே ஒடியாங்க - அம்மா

வாக்காட்டு[8] இன்னமல - என்ன
கூப்பிட்டு கொரலுக்கு - என்னே
கொடுங்கைக்கு ஓடியாம்மா - என்ன
கொரலுக்கு ஓடியாம்மா - நம்ம
கருவூரு கடகத்தம்மா - என்ன
காந்தாளு நீலியெல்லாம்

நாம
கூப்பிட்டு கொரலுக்குத்தா - நீங்க

கொடுங்கைக்கு ஓடி வாம்மா - நம்ம
ஆதிக்கு எழுந்தவனோ - அங்க
அறப்பளி ஈஸ்பரியே - அதே
பாப்பாரே சிரசுலயும் - உனக்கு
பசைவீசறது உன்னுதுடா - உனக்கு
கோமுட்டி சிரசுலயும் - உனக்கு
கோடிசெரசு உன்னிது - அம்மா
சோம்பேல எழுந்தவளே
குருவிபா டரியம்மா -
வளப்பூரு ரங்கதப்பா - அட
ஓடிவிடா மந்தைக்கு - நானும்
கூப்பிட்டு கொரலுக்கு - நீங்க
கொடுங்கைக்கு ஓடிவாம்மா - என்ன
நட்டுக்குழி எட்டுகம்மா - என்ன
நாடாளும் பாப்பாத்தியே - நம்ம
கூப்பிட்டு கொரலுக்கு - நீங்க
கொடுங்கைக்கு வந்துசேரு - என்ன
பொன்னுருத்து அம்மாவே - அந்த
ஆதியாதி நாளையிலே
முழங்கோதி கைப்புடிச்சு - அட
மாந்தோலு கைப்பிடிச்சா - அந்த
ஆதிக்கு எழுந்தவனே - அந்த
அறப்பளீசுவர மந்தையிலே - அட
நெருப்புலே நீ பொறந்தா - அந்த
நீலவண்ண(ன்) தங்கையாரே -
வெங்கீல காளியே - நீங்க
சூலமொரு கையி - நீங்க
சூலிசனம் முக்கையி - உனக்கு
பந்தம்மா ஒருகையி - உனக்கு
பகவானம் முக்கையி - அம்மா
ஓடிவார மந்தைக்கு - நீங்க
மந்தையில எழுந்தவளே - என்னு
மகமுத்து மாரியே - அம்மா
சீக்குமல சின்னமலெ - அம்மா
சீக்கிரமா ஓடிவாடி - என்ன
காரவெளி நாச்சியே

நம்ம
ஓடிவாடி மந்தைக்கு - நீங்க
மந்தெ கொலயு[9] மட்டும் - அம்மா
மடியவிட்டுப் போகாதே - அம்மா
வடக்கெவா வெகுதூரம் -
வாளுருவி ரேடபுரம் - நீங்க
சுட்டு பொணந் தினியே - நீங்க
சுடுகாட்டு நீலியடி - அம்மா
ஓடிவாடி மந்தைக்கு - நீங்க
மந்தெகொலயுமுட்டும்
மடியவிட்டுப் போகாதே - அம்மா
ஏழுபேரு வானவெளி - அம்மா
ஓடிவாடி மந்தைக்கு - அம்மா
பழங்கவனம் காளியே - அன்னிக்கு
மின்கட்டு பின்கட்டு
பதனாறு கட்டுக்கட்டி -
பாசக் கவுறுவிட்டு - அன்னிக்குக்
கட்டியே இருந்தாலும் - அம்மா
எட்டியோ தையம்மா
எழுந்தமடி சொங்கலம்மா.[10]

*உடுக்கையுடன் பாடல் பாடப்படுகிறது.*

*[1] அருகில் வா [2] மண்டியிட்டு [3] நாமம்*
*[4] இனி ஒருபோதும் மறக்கமாட்டேன் [5] ஒருபோதும்*
*[6] தொண்ணூற்றெட்டு [7] அட்டையாறு [8] வாக்கைக் கேட்டு*
*[9] கலையுமட்டும் [10] சோர்வாகலாமா?*

# கொண்டாட்டப் பாடல்கள் :
## i. நாட்டுக்கட்டு



*ஆனப்படை ஐயாயிரம் குதிரைப்படை கோடி லட்சம்*
*ஐந்தாயிரஞ் சனத்தோட வந்தாங்க கொல்லிமல*

நாட்டுக்கட்டு - 1

## 46. மன்னவர் மூன்று பேர்

பாலைய்யா, 52
குட்டுகிராய்ப்பட்டி
வளப்பூர் நாடு

''டேய் தோட்டி!''

''சாமி...''

''தென்காஞ்சி, வடகாஞ்சி, காஞ்சிபுரத்தில கரியபெருமாள்
கோயிலிலே, சின்னண்ணன், பெரியண்ணன், நடு அண்ணன்
மூணுபேரும், ஐந்தாயிரம் சேனையோட போட்டதொரு
திருவிழா, அப்படியே நிக்குதடா, சின்னண்ணன், பெரியண்ணன்,
நடு அண்ணன் மூணுபேரும் கரியபெருமாள் கோயிலில
தடியடி தகலாறாகி வம்புவந்து நேந்துதடா
தாடு தகலாறாகி வழக்குவந்து நேந்துதடா

நானும் கோயில் படைக்க[1] வேணும் நீயுங் கோயில்படைக்க
வேணும் தம்பியுங்கோயில் படைக்கவேணும்
இப்படி மூணு அண்ணனுக்கும் வாக்குவாதம் ஏற்பட்டு
அப்போது வேளையில தந்தையுந் தாயும் அன்னையும்
பிதாவும் என்னம்மா வாக்கு அளிச்சாங்க? 'என்னைக்கு
மூணு மன்னவனும் ஒத்துமையா வாரீங்களோ
அன்னிக்குக் கோயில் திறக்க வேணும்' அப்பிடின்னு
சொல்லித் தந்தையுந்தாயும் வாக்கு அளிச்சாங்க

சின்னண்ணன், பெரியண்ணன், நடண்ணன் மூணு
பேரும் காஞ்சிபுரத்திலே கரியபெருமா கோயிலிலே
இறுத்திக்கதவடச்சு, ஈரமண்ண மேல போட்டான்
சாத்திக் கதவடச்சா(ன்) தாப்பாளய மேல போட்டான்

எண்ணயில திரிவெளக்கு எரியுது காஞ்சிபுரம்
கல்லால மணிவெளக்கு காந்துது காஞ்சிபுரம்
மாணிக்க வெளக்கால சுடருது காஞ்சிபுரம்
தண்ணியில வெளக்கு தளம்புது காஞ்சிபுரம்

சின்னண்ணன் பெரியண்ணன் நடண்ணன் மூணுபேரும்
காஞ்சிபுரத்தில கரியபெருமா கோயிலில
போட்டதொரு திருவிழா அப்பிடியே நிக்குதடா
கல்லாக் கரையுதே காஞ்சிபுரத்திலே
இட்டதொரு பொங்கலெல்லாம் ஈடுமாறிக் கெடக்குதடா
வச்சதொரு பொங்கலெல்லாம் தண்ணியில மெதக்குதடா

சின்னண்ணன் பெரியண்ணன் நடண்ணன் மூணுபேரும்
கருமல போகும்போது கள்ளுத்தொட்டி பனையருவா
கைபிடிச்சு வந்தமன்ன(ன்) வேட்டநாயுஞ் சங்கிலியும்
விருதோட வந்த மன்ன(ன்) செந்நாயுஞ் சங்கிலியும்
சேந்துவந்த மன்ன(ன்) கருநாயுஞ் சங்கிலியும்
கைபிடிச்சு வந்த மன்ன(ன்)
சின்னண்ணன் பெரியண்ணன் நடண்ணன் மூணுபேரும்
காஞ்சிபுரத்தில கரியபெருமா கோயிலில
எடதுகைச் சந்தனமும் வலதுகைப் பூணூலும் பொஸ்தகமும்
வலதுகைச் சந்தனமும் எடதுகைப் பூணூலும் பொஸ்தகமும்
பெற்றுவந்த மன்னவ(ர்) மூணுபேரும்
முத்தியில[2] சந்தனமும் மொதலான வெத்திலையும்
பூச்சகர[3] கொடயுடனே பெற்றுவந்த மன்னவ மூணுபேரும்
சின்னண்ணன் பெரியண்ணன் நடண்ணன் மூணுபேரும்
தங்கக்குல்லா போட்டவிங்க தகுமானம் பெத்தவிங்க
வெள்ளிக்குல்லா போட்டவிங்க வெகுமானம் பெத்தவிங்க
சருகுக்குல்லா போட்டவிங்க சரித்திரம் படைச்சவிங்க
பட்டுக்குல்லா போட்டவிங்க பட்டந்தரிச்சவிங்க
சின்னண்ணன் பெரியண்ணன் நடண்ணன் மூணுபேரும்
தேக்குஎலயில தொன்ன தெச்சு வந்த மன்னே
நெல்லிக்காய் எலயில தொன்னதெச்சு வந்த மன்னே
பூண்டியா[4] எலயில பூரி[5]யம்மர் கொண்டுவந்த மன்னே
வாழஎலயில வாரியம்மர் கொண்டுவந்த மன்னே
தாமர எலயில தாகந்தீர்த்து வந்தமன்னே
ஆனப்படை ஐயாயிரம் குதிரைப்படை கோடிலட்சம்
ஐந்தாயிரஞ் சனத்தோட வந்தாங்க கொல்லிமல
சின்னண்ணன் பெரியண்ணன் நடண்ணன் மூணுபேரும்
கெங்கவெளியில கண்குளிரக் கூத்துப்பாத்து
படுகளத்த வென்றுவந்த மன்னவ மூணுபேரும்

பழனிக்கு மேற்கே கருமல ஓரத்தில்ல
காட்டு எருமகுத்தி, நேர்கிழக்கே
காவேரி ஆத்தில கத்திகழுவி
கரமேல ஏறிவந்த மன்னவன் மூணுபேரும்
சின்னண்ணன் பெரியண்ணன் நடண்ணன் மூணுபேரும்
தாமர ஆத்தில தாகந்தீர்த்து வந்த மன்னவ மூணுபேரும்
எடச்சி கொளத்தப் படச்சிவந்த மன்னவ மூணுபேரும்
அம்பார மலமேல அம்புதீட்டிவந்த மன்னவ மூணுபேரும்
ஊடார மலமேல தண்ணிப்பந்தல் வெச்சி
தாகந் தீர்த்துவந்த மன்னவ மூணுபேரும்
சின்னண்ணன் பெரியண்ணன் நடண்ணன் மூணுபேரும்

செந்தாரப்பட்டியில தேரு சிங்காரிச்சு
கொப்பம்பட்டியில கொடியேந்தி
தம்மம்பட்டியில தங்கத் தமுக்கடிச்சு
தருமகஞ்சி வாங்கித் தருமத்த வெளக்கிவந்த
மன்னவ மூணுபேரும்
சின்னண்ணன் பெரியண்ணன் நடண்ணன் மூணுபேரும்
பூத்தட்டம்[6] பாறையில சிட்டு உடுக்கோட[7] சிறுதண்டு[8] ஆடையோட
சுத்து சோமத்தோட[9] கூத்தாடிவந்த மன்னவ மூணுபேரும்

எட்டடிப் பாறையில[10] எட்டுரண்டு கடம[11]குத்தி
எட்டா வகுத்த மன்னவன்
ஆறாணிப் பாறையில ஆறுரண்டு கடமகுத்தி
ஆறா வகுந்த மன்னவ மூணுபேரும்
மூணாணிப் பாறையில மூணுரண்டு கடமகுத்தி
மூணா வகுந்த மன்னவ மூணுபேரும்
ஐந்தாணிப் பாறையில ஐந்துகண்டு கடமகுத்தி
ஐந்தா வகுந்த மன்னவ மூணுபேரு
ஏழாணிப் பாறையில ஏழுரண்டு கடமகுத்தி
சின்னண்ணன் பெரியண்ணன் நடண்ணன் மூணுபேரும்

தலகொல்லி[12] கௌள முந்நூத்தி இருபது
அடிகுண்டணி[13] கௌள முந்நூத்தி அறுபது
அடுக்கம்புள்ளமாதி ஆண்டுவந்த நாடுதாண்டா

தேருகல்லு மோட்டோட செந்தில் காளையோட[14]
சேந்துவந்த மன்னவ மூணுபேரு
அமுட்டுக் கல்லு[15] திமுட்டுபா(றை)ற அச்சமில்ல தச்சவாடி
புடிகல்லுத் தடத்தோட புடிச்சுவந்த மன்னவ மூணுபேரும்
மெதிகல்லு[16] தடத்தோட மெதிச்சுவந்த மன்னவ மூணுபேரும்
ஏணிகல்லுத் தடத்தோட ஏறிவந்த மன்னவ மூணுபேரும்

ஏ, தோட்டி! கானாம்பறைச்சி!
கருவேம்பு சாம்புகனே!
தேருதிருவிழா போட்டாச்சு
ரம்ப சந்தோஷமடா தோட்டி!

ஏ, தோட்டி!
ஓராயிரம் பிறப்பு ஓராயிரஞ்சனம்
ரண்டாயிரம் பிறப்பு ரண்டாயிரஞ்சனம்
மூணாயிரம் பிறப்பு மூணாயிரஞ்சனம்
நாலாயிரம் பிறப்பு நாலாயிரஞ்சனம்
அஞ்சாயிரம் பிறப்பு அஞ்சாயிரஞ்சனம்
ஆறாயிரம் பிறப்பு ஆறாயிரஞ்சனம்
ஏழாயிரம் பிறப்பு ஏழாயிரஞ்சனம்
எட்டாயிரம் பிறப்பு எட்டாயிரஞ்சனம்
ஒன்பதாயிரம் பிறப்பு ஒன்பதாயிரஞ்சனம்
பத்தாயிரம் பிறப்பு பத்தாயிரஞ்சனம்
பதினொராயிரம் பிறப்பு பதினோராயிரஞ்சனம்
பனிரண்டாயிரம் பிறப்பு பனிரண்டாயிரஞ்சனம்

''ஏ, தோட்டி! நாடு அழைக்கலாமாடா தோட்டி''

''அழைக்கலாம் சாமி''
''தங்கக் கடபூண்டு தருமருக்குத் தேரோட்டி
முத்துக் கடபூண்டு மொதலிமார் தேரோட்டி
வெள்ளிக் கடபூண்டு வீமனுக்குத் தேரோட்டி
ஏ, தோட்டி நாடு அழைக்கலா்மா''

''அழைக்கலாம் சாமி''

''ஏ, தோட்டி! பலாந்தூர்நாடு வந்துதா தோட்டி?''
''வந்துது சாமி''
''கருமூர் நாடு வந்துதா தோட்டி?''
''வந்துது சாமி''
''சேத்தூர் அலியநாடு வந்துதா தோட்டி?''
''வந்துது சாமி''
''அரியூர் நாடு வந்துதா தோட்டி?''
''வந்துது சாமி''
''சேலூர் நாடு வந்துதா தோட்டி?''
''வந்துது சாமி''
''பெரியகோயிலூர் வந்துதா தோட்டி?''
''வந்துது சாமி''
''அசக்காடு வந்துதா தோட்டி?''
''வந்துது சாமி''
''ஏ, தோட்டி!
ஆட்டம் பாட்டத்தோட தாளந்தப்போட
கொம்பு கொழலோட அஞ்சுகஞ்சியோட
கோய சந்தனத்தோட
தட்டடா மோளத்த நாம கோயிலுக்குப் போகலாம்''

*[1] தேங்காய், பழம் படைத்து வழிபடுதல் [2] முகத்தில் [3] பூச்சரக்குடை*
*[4] மசுப்பூண்டிய மர இலை [5] கீறுதல் [6] பூந்தோட்டம் - ஓர் இடத்தின் பெயர்*
*[7] சிறிய உடுக்கை [8] துண்டு*
*[9] உடலைச் சுற்றி அணியும் சேலையாடை 'சொத்து சுகத்தோட' என்றும் இது பாடப்படுகிறது*
*[10] பாறைகள் - தம்மம்பட்டியிலிருந்து மலையேறும் வழியிலுள்ளவை*
*[11] கடமான் [12] கொல்லி மலையின் தலைப்பகுதி ஊர் முடி, விரகனூர் ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய சேலூர் நாடு*
*[13] 360 குலங்கள் [14] சிவப்பு நிறக்காளை [15] குண்டூர் நாட்டில் உள்ளது*

*நாட்டுக்கட்டு என்பது மலையாளக் கவுண்டர்களது வரலாற்றைச் சொல்லுவதாகும். சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் காஞ்சிபுரம் பகுதியிலிருந்து உடன்பிறந்தார் மூவர், தம் இனத்தாருடன் கொல்லிமலை, பச்சமலை, பெரியமலை ஆகியவற்றில் குடியேறிய வரலாற்று நிகழ்ச்சி இதில் குறிப்பிடப்படுகிறது. உடுக்கை ஒலியுடன் உரைநடையும், பாடலும் கலந்து இது திருவிழாக்களில் மக்கள் முன்னால் சொல்லப்படுகிறது. தோட்டியாக ஒருவர் உடனிருந்து பேசுகிறார்.*

## நாட்டுக்கட்டு - 2

# 47. மூன்று சிங்கக்குட்டி

சின்னக்காளி, 75
கூச்சக்கிராய்
வாழவந்திநாடு

ஏ...
வெள்ளந் தனில் அகப்பட்டு ... ஏ
பிரசம்[1] போனது தெரியா(ே)த
மஞ்சீலகாரியே தடுமாறி நின்னுட்டு ஏ...
புருஷனக் காணமின்னு ஏ...
தாலியக் கழட்டிதா ஏ...
தண்ணிபோன மேடயில வெச்சுப்போட்டு ஏ...
- அவனே

மஞ்சீல காரியே பொஞ்சாதி
சந்தனக்கட்டெ வெட்டிதா
குங்குமக் கட்டெ வெட்டிதா
அக்கினியத் தீய வளத்தி ஏ... - அந்த
பொண்ணு மடிஞ்சிங்க போயிருச்சே - அந்தத்
தண்ணிய வத்துனதுக்குப் பிறுப்பாடு
வீட்டபோயி பாக்கும்போது - அந்த
வீட்டில பாக்கும்போது -
பொறந்தாரு மூணு பேரு - ஒரு
பொண்ணு ஒன்னுதா - அந்த
வீட்டுல இருக்குதே - அந்தப்
பொண்ணக் கொண்டுக்கினு - இனிமே
இங்க இருக்கப்பிடாதுன்னு சொல்லியே
என்னம்மா செய்தாரு - அந்த
மலயவிட்டு
கொல்லிமல போகுலான்னு

கொல்லிமலக்கு வந்துதா - அந்த
அண்ணந்தம்பி மூணுபேரும் எ...
எங்கதா ஒக்காந்தா... ஏ - அப்போ

எங்கதா ஒக்காந்து
கொல்லிமல நாட்டிலே
அடுக்கிங்க புல்லுவேஞ்சு புல்லுமேஞ்சு
தம்பம்பட்டில தமுக்கடிச்சி
கொப்பாம்பட்டில கொடியேத்தி
சிந்திரப்பட்டில தேரு சிங்காரிச்சு
அடுக்கும் புள்ளமெதி
ஆண்டுவந்த நாடு
அடுக்கும் புள்ளமெதி
ஆண்டுவந்த நாடு
ஒராணிபாறயில ஒருகடம குத்தி
ஒன்னா வகுந்துவந்த நாடு
ரண்டாணி பாறயில ரண்டுகடம குத்தி
நாலா வகுந்து வந்தநாடு
மூணாணி பாறயிலே
மூணு கடம குத்தி
மூணுரண்டு ஆறா வகுந்துவந்தநாடு
நாலாணி பாறயில நாலு கடம குத்தி
நாலுரண்டு எட்டா வகுந்து வந்த நாடு
அஞ்சாணி பாறயிலே அஞ்சு கடம குத்தி
ஐரண்டு பத்தா வகுந்து வந்த நாடு
ஏழாணி பாறையிலே ஏழு கடம குத்தி
ஏழுரண்டு பதனாலா வகுந்து வந்தநாடு
எட்டாணி பாறயிலெ எட்டுக் கடமகுத்தி
எட்டுரண்டு பதனாறா வகுந்து வந்த நாடு
ஒம்பதாணி பாறயில ஒம்பது கடம குத்தி
ஒம்பதுரண்டு பதினெட்டா வகுந்து வந்த நாடு

பத்தாணி பாறயில பத்துக் கடம குத்தி
பயித்ரண்டு இருபதா வகுந்து வந்த நாடு

அடுக்கும் புள்ளமெதி
ஆண்டுவந்த நாடு
அடி குண்டணி
கொலங்க முந்நூத்தி அறவது
ஒத்தக்காலு செருப்போட
ஒருகாலு வெண்டயோட
ஓடுன எல்லெயாளு
எல்லெ பிரிச்சுட்டான்
எல்லெயே பிரிச்சுட்டே
எல்லெயே ஓடும்போதே
கோம்பயில இருந்தாளே குருவபெடாரி - அவ
தண்ணி தவ குடிச்சாந்து
ரத்தகெணறு பாசகெணறுப்பா
எல்லய ஓடும்போது
தம்மாம்பட்டி தலவுக்கும்
ஓட்டக் கொளத்துக்கும்
தாம்பவுத்தரம் தலவுக்கும்
சேந்தமங்கலம் சலவக்கல்லு அடிக்கும்
எல்லய ஓடுனா

அப்போ
எல்லய ஓடும்போது
குண்டூரு நாடுடோ
அரியூரு நாடு ஒன்னு
வாழவந்தி நாடு ஒன்னு
வளப்பூரு நாடு ஒன்னு
அண்ணந்தம்பி மூணுபேத்திலே -
நடுவால பொறந்தவனுக்கு - இந்த

நடுநாட்டப் பிரிச்சுட்டா(ன்)
அஞ்சுநாடு சித்தூரு பெறக்கர
எடப்புளி நாடு ஒன்னு
திருப்புளி நாடு ஒன்னு
பயிலுத்து நாடு ஒன்னு
அஞ்சில நாடப்போ
அஞ்சில நாட்டவும்
கரையாறு[2] க்குப் பிரி
திண்ணனூரு நாடு ஒன்னு
சேலூரு நாடு ரண்டு
தேவானூருநாடு - இந்த
மூனு இங்க நாடுதா
மூத்தவனுக்குப் பிரிச்சுட்டு - இந்த
கொல்லிமலெ ஆண்டவெ
மூனுங்க மன்னவரு
மூனுங்க மன்னவனும் - இங்க
மூனுபேத்துக்குப் பிரிசுட்டு
அதுலய நேராப் புறந்தானே
அண்ணந்தம்பி மூனு பேத்திலே
எங்கதா போனாங்கன்னா
கடமப்பாடியிலெ
கடமடிச்சுக் கூறுபோட்டு
கரியபெருமா கோயிலிலே
எண்ணயால திரிவெளக்கு
எரியுது காஞ்சிபொறம்
தண்ணியால திரிவெளக்கு
தளம்புது காஞ்சிபொறம்
மாணிக்கக் கல்லுவெச்சா
வெளக்கு எரியிதே
அண்ணந்தம்பி மூனுபேரும்
அன்னைக்கொரு வாக்குறுதி குடுத்தாங்க

சின்னண்ணே பெரியண்ணே
நடண்ண மூணுபேரும்
நடண்ணன கொல்லிமலயில ஒக்காந்துக்கோ
கடசியண்ணன் பச்சமலயில ஒக்காந்துக்கோ
பெரியண்ணநா பெரியமலெக்கிப் போறயின்னு
சங்குந் செகுண்டியுங்
கையில புடிச்சுப் போயிட்டா - இந்தக்
கொல்லிமலையில ஒக்காந்த அண்ணனிக்கே
ஆண்டிக்கொளம் ஒன்னு
சேருவ ரண்டு - நீங்க
ரண்டுதா கட்டியாடுன்னோ - உனக்கு
ரண்டிங்க கூத்துதா
பச்சமலயில கடசி அண்ணனுக்கு
கூத்து நாடகந்தா ஆடிப் பொழைக்கனும்
அன்னிக்கு வாக்குறுதி குடுத்துட்டு
அண்ணந்தம்பி மூணுபேரும் - அவ(ன்)
பெரியண்ண(ன்) பெரியமலெக்குப் போயிட்டா(ன்)
சின்னண்ண(ன்) பச்சமலக்கிப் போயிட்டா (ன்)
நடண்ண(ன்) இந்த மலெயில ஒக்காந்தா
பச்சமலெ போனவே
பள்ளியச் செறயெடுத்தா
கொல்லிமலெயில ஒக்காந்தவ
எடச்சியச் செறயெடுத்தா
பெரியமலெயில ஒக்காந்த பெரியண்ணே
வெள்ளாளப் பொண்ணச் செறயெடுத்தா
மூணுபேரும் மூணுவாகுல போயிஒக்காந்து
மூணு வாகுல ஒக்காந்தாலும் - இந்த
மலெயில பொறந்தானே
மூணு சிங்கக்குட்டி
சீறி வெளிய வந்தா
சிறுவேங்க கன்னுமின்னு

தூறி வெளிய வந்தா
கருவேங்க கன்னுமின்னு
அண்ணந்தம்பி மூணுபேரும் - இந்த
மூணு நாட்டுமே[3] ஆண்டானே - இந்தப்
அண்ணந்தம்பி மூணுபேரும்
மூத்தவ ஒக்காந்தா(ன்)
சேலூரு நாட்டிலே
நடுவெலவெ ஒக்காந்தா(ன்) - இந்த
நாலுநாட்டில[4] ஒக்காந்தா(ன்)
கடசியான் ஒக்காந்தா(ன்)
அஞ்சிநாட்டப்புடிச்சி ஒக்காந்தா
நீனு இருந்துவான்னு சொல்லியே

[1] *புருஷன்*

[2] *கரை பிரித்து விடுவது*

[3] *சேலூர் நாடு, திண்ணனூர் நாடு, தேவானூர் நாடு*

[4] *வாழவந்தி நாடு, குண்டூர் நாடு, வளப்பூர் நாடு, அரியூர் நாடு*

# ii. சேர்வைப் பாடல்கள்



*நல்லநாளு பொறந்ததின்னு*
*நாட்டுலயும் நாங்க வந்தோம்...*

சேர்வைப் பாட்டு -1

## 48. குழந்தை முகம் காக்க வேணும்

மூலிகை செல்வராஜ், 37
குளவங்கிராய்
வளப்பூர்நாடு

னன்னே னன்னே னானே னன்னா
னானே னன்னே னன்னே னன்னானே

இன்னிக்கு

ஆதிக்குத்தா எழுந்தவரே
அறப்பளீதா இங்க ஈஸ்வரரே - இன்னிக்குத்

திருப்பலிதா இங்க பூசகொள்ள
திரும்புமப்பாநீ இந்தப்பக்கம் - இன்னிக்குத்
திருப்பலிதா நீங்க பூசகொள்ள - நீ
திரும்புமப்பா நீங்க இந்தச்ச(ை)ப

புத்தியிலா மீன்புள்ளைக்கு - நீ
புத்திசொன்ன ஈஸ்வரனே
அறுத்தமீனெப் பொருத்திவெச்ச - நீங்க
அறப்பளிதா சாமி ஈஸ்வரனே - உங்களுக்கு

மாந்தோலுதா கக்கத்துல
மயிலெறகே சாமி கொடுங்கையில
காலநல்ல பொழுதுலதா - நாங்க
கையெந்திதா நானு கூப்பிடுறேன்

காலயில எந்திரிச்சே
காலுகையே சாமி சுத்தம்பண்ணி
கையேந்தித்தா அழைக்குறமே - சாமி
அழகுள்ளதா ஈஸ்வரரே

அரியரிதா ரெகுராமா
ஆலஞ்சங்கே அம்ம தெறிச்சிராமா
கோதுண்டதா ரெகுராமா
கொழந்த மொகம் காக்கவேணும்

ஆறாண்டு சீரங்கமா
அதுநடுவே ராமா கொள்ளிடமா
கொள்ளிடந்தா காவேரிதா
கூடுதடா அங்க ரங்கதளம்

ஆத்தநல்லா குறுக்கட்டிதா
அரிமணலா அங்கே மேடயிட்டே
அரிமணலே மேட போட்டே
அரிபூசதா நடக்குதடா

கொளத்தநல்லா குறுக்கட்டிதா
குறுமணலெ சாமி மேடபோட்டே
குறுமணலெ மேடமேலே
குருபூசதா நடக்குதடா
அறுபூசதா குருபூசதா
ஆயிரமே ரங்கபூச

கோட்டயதா சுத்திருக்கும்
கோபுறா நாராயண
மண்டகத்தே சுத்திருக்கும்
மாடப்புறா நாராயணா - உனக்கு

தங்கவல்லம் - தலயிலதா
பொன்னுவல்லம் காலளந்தே

பாம்புமேலே பள்ளிகொண்ட
அமந்திருக்கும் ரங்கநாதா
அள்ளிவைக்கும் திரிராமம்
அணிப்புள்ளைக்கே ஒப்பதமோ
கிள்ளிவைக்கும் திரிராமம்
கிளிப்புள்ளைக்கே ஒப்புதமோ
கோயிந்தா... கோயிந்தா... கோயிந்தா...

*சேர்வைப்பாட்டுக்கு முதற்பாட்டாக, கடவுள் வணக்கப்பாட்லாகப் பாடப்படுவது. அறப்பளீஸ்வரர் பாடல் என்று கூறப்பட்டாலும் திருவரங்கம் அரங்கநாதர் பற்றியும் கலந்து பாடப்படுகிறது.*

### சேர்வைப் பாட்டு - 2

## 49. தங்கக் கொடி ஓடும்

பிடாரன், 65
நத்துக்குழிப்பட்டி
குண்டூர்நாடு
மலையசாமி, 39
பெரியகோவிலூர்
வளப்பூர்நாடு
சந்திரன், 22
தேனூர்
குண்டூர்நாடு

அரியரியே ரகுராமா
அரியரியே ரகுராமா
ஆவுத்த காருடா[1]
அனலுவந்தா நேருடா[2]
திண்டண்ணா திரியத்தூரா
திரிக்கே பொறந்த செட்டி
கண்டான்னா காசுமாலெ - எங்
கரணக் கொடி மகராசா... ஆ... ஆ...

குழு: அரியரியரியரீ.....
ஏறாதே மலையேறி
ஏறாதே மலையேறும்
எருதுரண்டுந் தத்தளிக்கும்
பார வரங்குடுடா ஆ....

குழு: அரியரியரீ....
அந்தண்ணே கொத்துக்கால(ன்)
அந்தண்ணே கொத்துக்கால(ன்)
அறவதடி பாவக்கால(ன்)
அறவதடி வேங்கையாம்
அறவதடி வேங்கையாம்
பாலுண்ணு கறக்கினோம்
பசுவின்னு எண்ணுகினோம்

குழு: அரியரி யரீ...
தங்கப்படி வாசலிலே
தங்கப்படி வாசலிலே
தலப்படியா வந்தேனே
மாசமொரு நாளைய்யா
வருஷமொரு தேதியய்யா
தேதி கணக்குவச்சு
தேடிவந்தே உன்னு மனே

குழு: அரியரி யரீ...
முத்துப்படி வாசலிலே
முத்துப்படி வாசலிலே
மொதப்படியா வந்தேனே
மொதப்படியா வந்தவர
மொகமஞ்சொல்லி அனுப்புங்களேன்

குழு: அரியரியரீ....
எனக்குத்
தாவி படந்திடுமே
தாவி படந்திடுமே
தங்கக் கொடி ஓடிடுமே
ஓடிப் படந்திடுமே
ஓசந்தகொடி கட்டிடுமே
தங்கக்கொடி ஓடினதா
தலமேல ஓடியே
தாவிப் படருதே... தே... ஏ...

குழு: அரீ.... ஏ...
எனக்கு
வெள்ளிபோட்டா வெள்ளி வெளயும்
வெள்ளி போட்டா வெள்ளி வெளயும்
வேட்டுவரு சீமையிலே
வேட்டுவரு சீமையிலே
வெள்ளிக் கொடிமொளச்சு - நம்ம
வீதிமின்னா ஓடுதுன்னா - ஏ...

குழு: அரியரி...

[1] ஆபத்தில் காப்பாற்று [2] அனலு வந்தா நேரு - துன்பத்தில் காப்பாற்று
[3] தெற்கே

கம்பச்சேர்வை

## 50. நெருப்புத்தணலாகும்

தங்கராஜ், 45
சீக்குப்பாறைப்பட்டி
வாழவந்திநாடு

அரீ...
கோபமுழி கண்ணுரண்டும்
கோபமுழி கண்ணுரண்டும்
கொழுந்துட் டெரியுதம்மா - உம்

அரீ...
நீலமுழி கண்ணுரண்டும்
நீலமுழிக் கண்ணுரண்டும்
நெருப்புத் தணலாகும்
நெருப்புத் தணலாகும்

அரீ...
கள்ளி பெருத்துச்சுன்னு
கள்ளி பெருத்துச்சுன்னு
கருமருந்து கத்தசின்னு
கருமருந்து கத்தசின்னு

பில்லி பெருத்துச்சினு
பில்லி பெருத்துச்சினு
பெருமருந்து கத்தசின்னு
பெருமருந்து கத்தசின்னு

அரீ...
பில்லி படிச்சவனெ
பில்லி படிச்சவனெ
பிணமா ஆக்கிடுவே
பேய்கொண்டு மாத்திடுவே
கள்ளி படிச்சவனெ

கள்ளி படிச்சவனெ
கல்லா பிடுங்கிடுவே
கைல சரக்கிடுவே

அரீ...
ஒரு எல்லயில் எழுந்தவரே
எல்லயில் எழுந்தவரே
எரும காவுகொண்டவரே
ெரும காவுகொண்டவரே

அரீ...
ஒரு கொல்லையில் எழுந்தவரே
கொல்லையில் எழுந்தவரே
கூலிகாவு கொண்டவரே
கூலிகாவ் கொண்டவரே

அரீ...
ஒரு மாரப் பௌந்திடுவே
மாரப் பௌந்திடுவே
மருந்து வெச்சுச் சுட்டுடுவே
மருந்து வெச்சுச் சுட்டுடுவே

அரீ...
தொடயக் கிழிச்சுடுவே
தொடயக் கிழிச்சுடுவே
கைல சரக்கிடுவே

அரீ...
உனக்கு வாழ கரும்பம்மா
வாழ கரும்பம்மா
வச்செடம் தோப்பம்மா... ஆ... ஆ... அரீ...

உனக்கு தென்னையுங் கரும்பம்மா
தென்னையுங் கரும்பம்மா
தெருவெல்லாந் தோப்பம்மா... ஆ... ஆ... அரீ...

வாழ்த்து

மத்தில மாமரம்
மத்திலமாமரம்
எலய துளுக்கவே
எருது பெறக்கவே
எருது பெறக்கவே
ராமருடைய கணயாழி கலியாண மோதிரம்
கைவிட்டுப் போனதே
கைக்கு வந்து சேந்ததே
ராமருக்கு ரெம்ப சந்தோஷம்
கோயிந்தா கோயிந்தா கோயிந்தா...

## 51. வரம் கேட்டேன்

*சீனிவாசன்*, 45
பெருங்கிராய்ப்பட்டி
வாழவந்திநாடு

ராமா, ராமா, அரி ராமா ஓஹோ
அரியரியே ரெகுராமா ஓஹோ

ஆறு ரெண்டும் காவிரியே ஓஹோ
காவிரியே ஓஹோ
அது நடுவே கொள்ளிடமாம் ஓஹோ
கொள்ளிடத்துப் பொய்கையிலே ஓஹோ
கூடுதடா ரெங்க தளம் ஓஹோ

மாரு முட்டு கெங்கையிலே ஓஹோ
மண்டி போட்டுத் தலமுழுகி ஓஹோ
நெஞ்ச முட்டு கெங்கையிலே ஓஹோ
நீச்சம் போட்டு தல முழுகி ஓஹோ

கரமேலே தானு வந்து ஓஹோ
கிழக்கே நல்லா திரும்பித்தானே ஓஹோ
கிழக்கே நல்லா திரும்பித்தானே ஓஹோ
கிள்ளி வைக்கும் திரிராமம் ஓஹோ
கிள்ளி வைக்கும் திரிராமம் ஓஹோ
கிளி பிள்ளைக்கு ஒப்புதமாம் ஓஹோ

வடக்கே நல்ல திரும்பி தானே ஓஹோ
வடக்கே நல்ல திரும்பி தானே ஓஹோ
வாரி விடும் திரி ராமம் ஓஹோ
வாரி விடும் திரி ராமம் ஓஹோ
வண்ணக்கிளிக்கே ஒப்புதமாம் ஓஹோ

கல்லி பெருத்த சீம ஓஹோ
கருமருந்து கற்ற சீம ஓஹோ
கருமருந்து கற்றவனே ஓஹோ
கருமருந்து கற்றவனே ஓஹோ
கண்ணைப் பிடுங்க வேணும் ஓஹோ

பில்லி பெருத்த சீம ஓஹோ
பில்லி பெருத்த சீம ஓஹோ
பெருமருந்து கற்ற சீமை ஓஹோ
பெருமருந்து கற்றவனை ஓஹோ
பேய் கொண்டு ஓட்டவேணும் ஓஹோ

பூசை பண்ணி வெளிய வர ஓஹோ
பூசை பண்ணி வெளிய வர ஓஹோ
பொன்னுடம்பு நீர்வடியும் ஓஹோ
தானம் பண்ணி வெளிய வர ஓஹோ
தானம் பண்ணி வெளிய வர ஓஹோ
தங்க உடம்பு நீர்வடியும் ஓஹோ

# iii. ஆண்டிக்கோலம் பாடல்கள்



*சீருசொல்லி அனுப்பிடுங்க*
*செல்வமுள்ள எந்தாயே...*

## ஆண்டிக்கோலம் பாட்டு - 1

# 52. என்னென்ன அலங்காரம்

பாலையா, 52
குட்டுகிராய்ப்பட்டி
வளப்பூர் நாடு

ராராரோ ராரிராரோ ..... ஏ..
ராராரோ ராரிராரே..... ஏ..

சேலஞ் ஜில்லா சேந்திருக்கும் நாமக்கல்லு தாலுக்காவும் ஏ...
நாமக்கல்லச் சேந்ததொரு
அழகான கொல்லிமல ... ஏ... சதுரகிரி கொல்லிமல ... ஏ
கொல்லிமல கொடகுமல... ஏ... அம்மா
கொல்லிமல நாட்டிலதா
என்ன என்ன அலங்காரம்... ஏ

நாயிக்குந்தா நல்லநாளு... ஏ... அம்மா
பேயிக்குந்தா பெரியநாளு - எம்மா
நல்லநாளு பொறந்ததின்னு - ஏ... அம்மா
நாட்டிலதா நாங்க வந்தோம் - இங்க
உத்தநாளு பொறந்ததின்னு - எம்மா
உத்தநாளு பொறந்ததின்னோ
ஊரிலதா நாங்க வந்தோம் - இங்க
நம்மளோட சீமையில - அம்மா
என்ன என்ன அலங்காரம் - இங்க

வாழக்காயி இங்க காய்ச்சிசம்மா - இங்க
ஏலக்காயி இங்க காய்ச்சிசம்மா - இங்க
அன்னாசிக்காயி இங்க காய்ச்சிச்சம்மா - இங்க
பலாப்பழம் இங்க காய்ச்சிச்சம்மா
நம்மளோட இந்த நாட்டிலதா - இங்க
என்ன என்ன அலங்காரம் - அம்மா
அலங்காரத்தச் சொல்லிவாரேன் - ஏ... அம்மா
சொல்லிவாரனே கேளும்மா நா - எம்மா

தங்கக்கொடி நட்டுதானே - ஏ
தாவாரந்தே படருதானே - ஏ அம்மா அங்க
தங்கநல்லா காயறுக்க - எங்கம்மா
தருமரூரே நீபுறந்தே - அங்க
பொன்னுநல்லா கொடியுநட்டே - ஏ
பூலோகத்தப் படருதம்மா - எங்கம்மா
பொன்னுநல்லா நீங்க காயறுக்க - எங்கம்மா
புண்ணியரே நீபுறந்தே - ஏ அம்மா
மதிக்கநல்ல முடியாதே - ஏ இது
மாணிக்க இது தூணல்லோ - ஏ
மாணிக்கந்தா இது தூணல்லோ - ஏ... இது
வெங்கலம் இது தூணல்லோ - எம்மா
வெங்கலந்தா இது தூணல்லோ - ஏ
ராரீரே ராரி ராரீரோ - ஏ
ராரீரோ ராரி ராரீரோ

*ஆண்டிக்கோலம் என்பது, ஆண்டிபோல் வேடமிட்டுக் கொள்வதாகும். பொங்கல் பண்டிகையின்போது பலரும் ஆண்டிபோல் வேடமிட்டு வீடுவீடாகச் செல்வர். இதுபோன்ற பாடலைப் பாடி ஆடி, அவ்வீட்டாரிடம் பணம், பொருள்களைப் பெறுவர். பாடலின் ஒவ்வொரு அடியும் இருமுறை பாடப்படுகிறது. பின் செல்வோர் அவற்றைத் திரும்பப் பாடுகின்றனர்.*

### ஆண்டிக்கோலம் பாட்டு - 2

## 53. சீருசொல்லி அனுப்பிடுங்க

மலையசாமி, 39
பெரியகோயிலூர்
வளப்பூர்நாடு
மூலிகை செல்வராஜ், 37
குளவங்கிராய்
வளப்பூர்நாடு

ராரிராரோ ராரிராரோ
ராரிராரே ராரிராரே

சீக்குமண்ணு ஊடுபூசி - ஆயாளே
செம்மண்ணுதா காப்பறுத்து - ஆயாளே

காப்பறுத்த கையினாலே - ஆயாளே
கரும்புண்ணி படிவழங்கும்

சொல்லிவாறேன் கேளும்மாநா - ஆயாளே
சோகுமான்னி நோவுனாலும் - ஆயாளே

தெக்கத்துதா ஆண்டிப்பய - ஆயாளே
தெசதப்பி நாங்கவந்தோம் ஆயாளே
சீறாம செதறாம - ஆயாளே
செவந்தமொகம் வாடாமதா - எங்களச்
சீருசொல்லி அனுப்பிடுங்க - ஆயாளே
செல்வமுள்ள எந்தாயே - ஆயாளே
செல்வமுள்ள எந்தாயே

வடக்கத்திதா ஆண்டிப்பய - நாங்க
வகதப்பி நாங்க வந்தோம் - ஆயாளே
வகதப்பி நாங்க வந்தோம்
சீறாமதா செதறாமதா - ஆயாளே
செவந்தமொகம் வாடாமதா - எங்களச்
சீருசொல்லி அனுப்பிடுங்க - ஆயாளே
செல்வமுள்ள எந்தாயே

செடிக்குந்தா கீழால - ஆயாளே
செடிக்குந்தா கீழால
தென்னமரம் அடையாளம் - ஆயாளே
தென்னமரம் பூப்பூத்து
தென்னாட்டம் வீசுதனா - ஆயாளே
தென்னமரம் பூவுக்கெல்லாம் - ஆயாளே
தென்னாட்டுச் சிறுங்கிளியும் - ஆயாளே
தென்னாட்டுச் சிறுங்கிளியும் - ஆயாளே
தேர்கடையும் வந்துநிற்கும் - ஆயாளே
தேர்கடையும் வந்துநிற்கும் - ஆயாளே
சீறாம செதறாமே - எங்களச்
சீருசொல்லி அனுப்பிடுங்க - ஆயாளே
சீருசொல்லி அனுப்பிடுங்க - ஆயாளே
செல்வமுள்ள எந்தாயே - ஆயாளே

வாசலுக்குக் கீழாழ
வாழமரம் அடையாளனம் - ஆயாளே
வாழமரம் பூப்பூத்து
வாழமரம் பூப்பூத்து
வன்னாட்டம்[1] வீசுதுனா - ஆயாளே
வன்னாட்டம் வீசுதுனா -
வடநாட்டுச் சிறுங்கிளியும் - ஆயாளே
வடநாட்டுச் சிறுங்கிளியும் - அந்த
வாழமரம் பூப்பூத்து - அந்த
வாழமரம் பூவாசம் - அந்த
வடநாட்டுச் சிறுங்கிளியும் - அந்த
வாசலிலே வந்திறங்கும் - எங்களச்
சீறாம செதறாம
செவந்தமொகம் வாடாம
சீருசொல்லி அனுப்பிடுங்க
செல்வமுள்ள எந்தாயே - ஆயாளே
சொல்லிவாறே(ன்) கேளும்மா நா
ஆளுட்டு வம்முசம்னா - ஆயாளே
சொல்லிவாறேன் கேளும்மா நா
கொளப்பாண்டியூண்டி வம்முசம்நா - ஆயாளே
சொல்லிவாறேன் கேளும்மா நா - ஆயாளே
ஊருலதா போனாலும் - ஆயாளே
ஊருலதா போனாலும்
நாட்டுலதா போனாலும் - ஆயாளே
நல்லபேரு கெடைக்குமாநா - அவிங்க
சந்தனந்தா பொட்டுவைத்து - ஆயாளே
சந்தனந்தா பொட்டுவைத்து- ஆயாளே
சபைக்குநா போனாலுமே - அந்த
சபையிலுள்ள சாதிசனம் - அவிங்க
சாமியென்று கையெடுக்கும் - ஆயாளே
கூட்டத்திக்குப் போனாலுமே - ஆயாளே
கூட்டத்திக்குப் போனாலுமே - ஆயாளே
கூட்டத்துல உள்ளசனம் - அங்க
கோடிசனம் கையெடுக்கும் - ஆயாளே
கோடிசனம் கையெடுக்கும்
சொல்லிவாறேன் கேளுமம்மாநா - ஆயாளே
பேருநல்லா வெளங்குதான்னா - ஆயாளே

பேருநல்லா வெளங்குதான்னா
பிரியக்கூடி கட்டுதான்னா - ஆயாளே
பிரியக்கூடி கட்டுதான்னா
பெத்துநல்லா பெருகுதன்னா - ஆயாளே
பெரியகுடி ஆகுதான்னா - ஆயாளே
சொல்லிவாறேன் கேளும்மா நா - ஆயாளே
கெழக்கத்திதா ஆண்டிப்பய - ஆயாளே
சொல்லிவாறேன் கேளும்மாநா - நாங்க
நல்லநாளு பெறந்ததின்னு - ஆயாளே
நாட்டுலதா நாங்கவந்தோம்
உத்தநாளு பெறந்ததின்னு
ஊருலதா நாங்கவந்தோ
சொல்லிவாறேன் கேளும்மாநா

சோதுமணி நோவுனாலும் - ஆயாளே
தேங்காயிக்கு மூணுகண்ணு - ஆயாளே
தேங்காயிக்கு மூணுகண்ணு - ஆயாளே
தேவதிக்கு ரண்டுகண்டு - ஆயாளே
சொல்லிவாறேன் கேளும்மாநா
வெள்ளனுக்கு நாலுகண்ணு
வாழக்காயிக்கு ஒருகண்ணு - ஆயாளே
சொல்லிவாறேன் கேளும்மா நா
நல்லநாளு பெறந்ததின்னு
ஊருலதா நாங்க வந்தோம்

குடுஞ்சாட்டி காக்குந்தண்ணி - ஆயாளே
குடுஞ்சாட்டி காக்குந்தண்ணி - ஒருபக்கம்
குண்டிக்குந்தா பத்துவன்னா - ஆயாளே
பானயிலதா கலக்குந்தண்ணி - ஒருபக்கம்
சப்பைக்குந்தா பத்தலன்னா - ஆயாளே
சொல்லிவாறேன் கேளும்மாநா
சோதுமணி நோவுனாலும்
ஆடிவாறோம் பாடிவாறோம் - நாங்க
அர்த்தத்தோட பாடிவாறோம் - நாங்க
ஆண்டவந்தா பேரச்சொல்லி - நாங்க
ஆண்டவந்தா பேரச்சொல்லி - ஆயாளே
ஊருலதா நாங்கவந்தோம் - ஊருலதா நாங்க வந்தோம் - நாங்க
மொட்டையாட்டி புள்ளயான்னா
சொல்லிவாறேன் கேளும்மாநா - நாங்க

கெழக்கத்திதா ஆண்டிப்பய - நாங்க
கெழக்கத்திதா ஆண்டிப்பய - ஆயாளே
ஆரான்னு நெனச்சிடாதே - நாங்க
கோயிலூரு பிள்ளையன்னா - ஆயாளே
கோயிலூரு பிள்ளையன்னா - ஆயாளே

கொழந்தமொகம் வாடாதன்னா - ஆயாளே
தங்கமொகம் வாடாதன்னா - ஆயாளே
கோயிலூரு பேருசொன்னா - ஆயாளே
கொழந்தமொக் வாடாதன்னா
சொல்லிவாறேன் கேளும்மாநா
சொக்குமணி நோவுனாலும்
எந்தாயே பத்தினியே

வாழ்த்து: "ஆரு குடுத்ததே? அம்மா குடுத்ததே! ஆராருக்குப்
பொதுவுன்னா, ஆதி அறப்பளாண்டிக்கும்
மொட்டையாண்டிக்கும் தாயம்மாவுக்கும்
சுப்பிரமணியருக்கும் ஒன்னுகர அரகர... அரகரா...
ஸ்ரீரங்கநாதர் குடி வளந்தாப்பல
அறப்பளாண்டி குடிவளந்தாப்பல
மாசிபெரியசாமி குடிவளந்தாப்பல
கோயிந்தா... கோயிந்தா... கோயிந்தா..."

[1] வடநாடு

### ஆண்டிக்கோலம் பாட்டு - 3

## 54. பால் பானை பொங்க வேணும்

தேவராஜன், 55
பெருங்கிராய்ப்பட்டி
வாழவந்திநாடு

ராரிராரோ ராரிராரோ ஏயா
ராரி ராரோ ராரிராரோ ஏயா

சியா சியா காலத்திலே ஏயா
சிய பாட்டன் நாளையிலே ஏயா
நாம சீக்குமண்ணு வீடு பூசி ஏயா

செம்மண்ணுக் காப்பறுத்து ஏயா
ஆண்டியே கட்டித்தானே ஏயா
ஆட நல்ல நாம வந்தோம் ஏயா

பொங்கலே என்று சொல்லி ஏயா
போசமிட்டு நாம வந்தோம் ஏயா
தேங்காய்க்கு மூணு கண்ணு ஏயா
தேவருக்கு இரண்டு கண்ணு ஏயா
தேங்காய அடுப்புக்கூட்டி ஏயா
செங்கரும்பத் தீவளத்தி ஏயா
செங்கரும்பு கருகினாலும் ஏயா
தேங்காய் கருகாது ஏயா

மாங்காய அடுப்புக்கூட்டி ஏயா
மணிக்கரும்புத் தீவளத்தி ஏயா
மணிக்கரும்பு கருகினாலும் ஏயா
மாங்காய் கருகாது ஏயா
பொங்கலோ பொங்கலோன்னு ஏயா
போசமிட்டு நாங்க வந்தோம் ஏயா
நல்ல நாளு பொறந்ததுன்னு ஏயா
நாட்டிலேயே நாங்க வந்தோம் ஏயா
உத்தநாளு பிறந்ததுன்னு ஏயா
ஊரிலேயே நாங்கவந்தோம் ஏயா

ராரிராரோ ராரிராரோ ஏயா

ஆண்டியே கட்டித் தானே ஏயா
ஆட நல்லா நாங்கவந்தோம் ஏயா
சேலூரே வளப்பூரே ஏயா
செலுவமன பட்டணமே ஏயா
வாழ நல்ல வளநாடு ஏயா
வாழ வந்திச் சீமையில ஏயா
பெருங்கிரா பட்டிதானே ஏயா
பெருமையுள்ள சீமையே ஏயா

ஆருயின்னு கேட்டாளும் ஏயா
நம்மளோட வம்முசும்மே ஏயா
சினுப்பன்வீட்டு வம்முசுமே ஏயா
சீமகட்டி ஆண்டோமே ஏயா

பாண்டவர் கதை போல ஏயா
பாங்குடனே நாம்பிறந்தோம் ஏயா
அண்ணன் தம்பி ஐந்து பேரு ஏயா
அழகுடனே நாம்பிறந்தோம் ஏயா

கூட்டு பாலு உன்னுதானே ஏயா
கூடியே நாம் வளந்தோம் ஏயா
நம்ம பேர நல்ல சொல்லி வந்தா ஏயா
அழுதபிள்ளை வாய்மூடும் ஏயா

அடியெடுத்துப் பாடினாலும் ஏயா
அரைமணி நேரமாகும் ஏயா
நம்ம கொடியெடுத்துச் சொன்னாலும் ஏயா
கொஞ்ச நேரம் ஆகுமா ஏயா
அஞ்சு மணியே நேர்மாகும் ஏயா
ஆறு மாசப் பொழுதாகும் ஏயா

ராரிராரே ர்ாரிராரோ ஏயா

ஏரிக்கர பக்கத்தில ஏயா
எட்டுக்குழி நிலமிருக்க ஏயா
எட்டுக்குழி நிலம் பாக்க ஏயா
எத்தன பண்ணயாளு? ஏயா

பச்சமலை பக்கத்திலே ஏயா
பசுமாட்டுப் பண்ணையுண்டு ஏயா
பசுமாட்டப் பாத்து வர ஏயா
பண்ணையாளு நூறு பேரு ஏயா
கடுகு வரும் மிளகு வரும் ஏயா

கணக்குப் பார்க்கப் பண்ணையாளு ஏயா
ராரிராரே ராரிராரோ ஏயா
துண்டு வேட்டித் தோளுபோட்டு ஏயா
தூரவழி போனாலும் ஏயா
துரைமகன் வாராருன்னு ஏயா
தூரத்திலுள்ள சனங்களெல்லாம் ஏயா
கோமிட்டின்னு கையெடுப்பார் ஏயா
சாரட்டு வண்டி கட்டி ஏயா
கோட்டு சட்ட நாம போட்டு ஏயா
கோரட்டுக்குப் போனாலும் ஏயா
கோரட்டுள்ள நீதிமானே ஏயா
கோமிட்டி வாரங்கன்னு ஏயா
கோடி சனம் கையெடுக்கும் ஏயா

வாங்க எந்துரையே ஏயா
வந்தனமே நானுந்தாரேன் ஏயா
ஆருன்னு கேட்டாலுமா ஏயா
இந்த அண்ண பேரச்சொன்னாலும் ஏயா
அழுத பிள்ளை வாய்மூடும் ஏயா
சந்தனப் பொட்டு வச்சு ஏயா
சவைக்குப் போனாலும் ஏயா
சவையிலுள்ள மக்களெல்லாம் ஏயா
சாமி என்று கையெடுப்பார் ஏயா

பாண்டவரே முன்னால ஏயா
பாரதமே பின்னாலே ஏயா
பாடின பத்துப்பேரும் ஏயா
பாங்குடனே வாழவேண்டும் ஏயா
கேட்டிருந்த மக்களெல்லாம் ஏயா
கோத்திரமா வாழவேணும் ஏயா

ஐயா சொல்லி வாரேன் கேளுமையா ஏயா
சோகுமணி நாவு ஏயா
அண்ணன் கொடுக்கணும்மா வாங்கணும்மா ஏயா
கொணமிருந்தா ஒண்ணு போதும் ஏயா
ஒரு காணிக் கொடுத்தாலுமே ஏயா
நூறு காணி மேவளரும் ஏயா
பட்டி நல்ல பெருகினதா ஏயா
பால்பானை பொங்கவேணும் ஏயா
எந்த முகம் போனாலும் ஏயா

தங்க முகம் ஆவாரே ஏயா

அவர் பணமும் நல்ல வெள்ளிப்பணம் ஏயா
அவர் குணமும் நல்ல தங்கக்குணம் ஏயா
மக்களே பெருகவேணும் ஏயா
மச்சுவீடு கட்டவேணும் ஏயா

**வாழ்த்து:** யார்கொடுத்தது நம்ம சினுப்ப வம்சத்திலே அன்னாரு ஆண்டியகுளப் பசங்களுக்காக 100 ரூபாயும் தேங்கா பழமும் ஒரு ஜோடி வேஷ்டியும் கொடுத்ததற்காக அவரும் அவர் குடும்பத்தாரும், மாமனும், மச்சானும் உத்தாரும் பெத்தாரும் அரப்பளீஸ்வரர் கோவில் வளந்ததுபோல் அவர் குடும்பம் வளர ஒரு காணி கொடுக்க மறுகாணி வளர ஒன்றுக்கு நூறு காணி ஆதி அறப்பலாண்டியும் தாயம்மாளும் ஒன்னுக்கு நூறு அரகரா.

### ஆண்டிக்கோலம் பாட்டு - 4

## 55. கொடுக்கணுமா? வாங்கணுமா?

தேவராஜன், 55
சின்னமுத்து, 65
பெருங்கிராய்ப்பட்டி
வாழவந்திநாடு

ராரி ராரிராரோராரி ராரோ
ராரி ராரிராரோராரி ராரோ

குடுக்கணுமா வாங்கணுமா
குடுக்கணுமா வாங்கணுமா
குணமிருந்தா ஒண்ணுபோதும்
பட்டீல கட்டிருக்கும்
பால்மாட்டுச் சீதனமே
சேலூரு வளப்பூரு
சேந்ததொரு திருமணம்பட்டணமே
வாழநல்ல வளநாடு
வாழவந்தி நம்மநாடு - நான்
வாழவந்தி நாட்டிலது

யாருன்னு சொன்னாலுமா
சொல்லிவாறே(ன்) கேளுமையா
சோக்குமணி நோவுனாலும்
பாண்டவரு அதபோல
பாங்குடனே நாம்புறந்தோம்
ஐஞ்சுபேரு பஞ்சவரே
அண்ணந்தம்பி நாம்புறந்தோம்
குட்டுப்பாற குன்னுதானே
கூடியே வந்தமைய்யா
ஏரிக்கர ஓரத்தில

எட்டுக்குழி நெலமுண்டு
எட்டுக்குழி நெலம்பாக்க - அங்க
எத்தனதா பண்ணையாளு
கடுகுவரும் மொளகுவரும்
கணக்குப்பாக்கப் பண்ணையாளு

பச்சமல பக்கத்திலே
பசுமாட்டுப் பண்ணயுண்டு
பசுமாட்டப் பாத்துவர
பண்ணயாளு நூறுபேரு
பண்ணயாளு நூறுபேரும்
கொடுக்கணுமா வாங்கணுமா- அங்க
கொணமிருந்தா ஒண்ணுபோதும் - அங்க

பணமுநல்ல வெள்ளிப்பணம்
கொணமுநல்ல தங்கக்கொணம்
துண்டுவேட்டி தோளுபோட்டு
தூரத்தையே போனாலுமே
தூரத்தில்ல சனங்களெல்லாம்
கோமுட்டின்னே கையெடுப்பா

**வாழ்த்து:** யாரு கொடுத்தது, அண்ணங்குடுத்தது, ஒருகாணி குடுக்க நூறுகாணி மாற, ஒண்ணுக்கு நூறு, ஆதி அறப்பளாண்டிக்கும் தாயம்மாளுக்கு ஒண்ணுக்கு நூறு அரகரா.

# iv. கோமாளிப் பாடல்கள்



*தன்னானே தாளம்போடுங்க - எம்*
*பொண்டாட்டிக்கு சுவத்தியாருக்கு*
*தயிருத்திச் சோறுபோடுங்க*

## கோமாளிப்பாட்டு - 1

# 56. ஓலகம் போற போக்குல

மூலிகை செல்வராஜ், 37
குளவங்கிராய்
வளப்பூர்நாடு
மலையசாமி, 39
பெரியகோயிலூர்
வளப்பூர் நாடு

ஓலகம்போற போக்குல
ஒன்னும் இப்போ புரியில
உண்ம[1] நீதி தருமமெல்லாம்
மறஞ்சு போச்சு நாட்டுல

சிஞ்சினுக்காஞ் சினுக்குச்சிக்கா
சினிமாப்படம் காட்டுது
ஊரே ஏய்க்கிற கும்பலொன்னு
காருமேல சுத்துது
ஒழப்பாளி வகுத்தப்பாத்து
ஊமக்குத்து குத்துது

ஓலகம்போற போக்குல
ஒன்னுமிப்போ புரியல
உண்மநீதி தருமமெல்லாம்
மறஞ்சு போச்சு நாட்டுல

தன்னானன்னே னானேன்னனே
னானானோ னன்னானனா
தன்னானன்னே னானேன்னே
னானா னோ னன்னானனா
நல்லநாளு பொறந்ததுன்னு - தங்கம்
நாட்டுலயும் நாங்கவந்தோம்
நல்லநாளு பொறந்ததுன்னு - பொண்ணு
நாட்டுலயும் நாங்கவந்தோம் - இப்போ
உத்தநாளு பொறந்ததுன்னு - கண்ணு
ஊருலயும் நாங்க வந்தோம்
னன்னான்னே நாக்குவெட்டி
நாங்குடுத்த காசுக்கட்டி

போட்டா செவக்குலனா
பொன்னான காசுக்கட்டி

* *மார்பைக் குறிக்கும் சொல்* ** *ஆணின் இன உறுப்பைக் குறிக்கும் சொல்*
[1] *உண்மை* [2] *நோண்பு*[3] *இரவிக்கைக்காரி*

*தைப்பொங்கல் நாட்களில் ஒவ்வொரு ஊரிலும் பலர் கூடி, சாமி மாட்டினை அலங்கரித்து, அருகில் உள்ள ஊர்களுக்குச் செல்லுகின்றனர். ஒவ்வொரு வீட்டின் முன்னரும் பாடல்களைப்பாடிப் பணம் மற்றும் தேங்காய், பழம், துணி போன்ற பொருட்களைப் பரிசாகப் பெறுகின்றனர். இவ்வாறு மாட்டுடன் செல்வது 'சேர்வை' எனப்படுகிறது. பெருமாளின் குறியீடாகக் கம்பம் ஒன்றினைத் தாங்கி இதுபோல் செல்லும் மற்றொரு வகைக்குழு 'கம்பச்சேர்வை' எனப்படுகிறது. அதில் மாடு இடம்பெறுவதில்லை. ஆயினும் இரண்டிலும் ஒரே வகையான பாடல்களே பாடப்படுகின்றன. இச்சேர்வைகளில் இடம்பெறும் கோமாளி மிகுந்த நகைச்சுவை உணர்வுடன் பாடல்களைப் பாடுகிறார். மற்றவர்கள் அதனைத் திரும்பவும் கை தட்டியவண்ணம் பாடி ஆடுகின்றனர்.*

**கோமாளிப்பாட்டு - 2**

## 57. ஏலம் போட்டு நானெடுப்பேன்

**மூலிகை செல்வராஜ், 37**
**குளவங்கிராய்**
**வளப்பூர்நாடு**

ஏத்துமாடி[1] கொல்லிமல - தங்கம்
கொல்லிமல - தங்கம்
கொல்லிமல - இப்போ
எறக்குமாடி[2] புளியஞ்சோல - தங்கம்
புளியஞ்சோல - தங்கம்
புளியஞ்சோல
தொரயூரு[3] தூரமடி - தங்கம்
தொடந்துவாடி நடந்து போவோம் 1

ஏ...
வட்டவட்டதா(ன்) பொட்டுக்காரி - தங்கம்
வகுநாளத்து[4] ஒறவுக்காரி - இப்போ
வகுநாளத்து ஒறவுக்காரி
ஒருநாளத்து சண்டையோட - பொண்ணு
உட்டுதாடி[5] ஒன்னுறவு - தங்கம்
உட்டுதாடி ஒன்னுறவு 2

ஏ...

வண்டியிலே வாழமரம் - பொண்ணு
கொண்டையிலே தாழம்பூவு - இப்போ
கொண்டையிலே தாழம்பூவு - இங்க
தாழம்பூவு வாசத்துக்கு
தாலிகட்ட நா வருவே -இங்க
தாலிகட்ட நா வருவே 3

ஏ...

கூடுனுமே கூடுனுமே - உங்
கூட்டுவண்டி காளபோல - இப்போ
கூட்டுவண்டி காளபோல - இங்க
ஒருநாளத்துச் சண்டையோட - பொண்ணு
உட்டுதாடி உன்னொறவு - இப்போ
உட்டுதாடி உன்னொறவு 4

ஏ...

வெள்ள வெள்ளதா சீலக்காரி - தங்கம்
வெள்ளிரிக்கா கூடக்காரி - பொண்ணு
வெள்ளிரிக்கா கூடக்காரி - இங்க
கொழந்தக்காட்டு வெள்ளிரிக்கா - புள்ளெ
கொண்டுவாடி தின்னுபாப்போம் - இப்போ 5
கொண்டுவாடி தின்னுபாப்போம்

ஏ...

நாட்டுக்குத்தா நாட்டுமட்டம் - தங்கம்
நாமரண்டும் சோடிமட்டம் - இப்போ
நாமரண்டும் சோடிமட்டம் - இங்கே
சோடியாகப் போனாலுமே - கண்ணு
கோடிசனம் கையெடுக்கும் - நம்பள 6
கோடிசனம் கையெடுக்கும்

ஏ...

தன்ன னன்னான னன்னானன்னா
னானா னானா னன்னா னனா
னானே னானா னானா னன்னா
ஏறுறது ஏராப்பிளேன் - புள்ளெ
எறங்குறது வெள்ளிச்சந்தெ - இப்போ
எறங்குறது வெள்ளிச் சந்தெ - அங்க
குடுக்குறது முக்காப்பணம் - தங்கம்

படுக்குறது பஞ்சுமெத்தெ - இப்போ
படுக்குறது பஞ்சுமெத்தெ 7

ஏ...
புளியஞ்சோல சந்தயிலே - பொண்ணு
பூமுடியும் கொண்டையில - இப்போ
பூமுடியும் கொண்டையில - இங்க
பூவழகும் உன்னழகும் - தங்கம்
போட்டாவில[6] பாப்பேனடி - இப்போ
போட்டாவில பாப்பேனடி 8

மஞ்ச மஞ்சதா சீலக்காரி - தங்கம்
மாம்பழத்துக் கூடக்காரி - இங்க
மாம்பழத்துக் கூடக்காரி - உன்ன
சேலத்துல கண்டாலுந்தா - தங்கம்
ஏலம்போட்டு நானெடுப்பே - இப்போ
ஏலம்போட்டு நானெடுப்பே 9

*[1] ஏற்றமடி [2] இறக்கமடி [3] துறையூர்*
*[4] வெகுநாளைய [5] விட்டுவிட்டதா [6] ஆங்கிலச் சொல் (Photo)*

## கோமாளிப்பாட்டு - 3
## 58. உருகுரண்டி சருகுபோல

மூலிகை செல்வராஜ், 37
குளவங்கிராய்
வளப்பூர்நாடு
மலையசாமி, 39
பெரியகோயிலூர்
வளப்பூர்நாடு

கட்டக்கட்டப் புளியாமரம்
கடலக்காயி காய்க்குமரம்
வட்டவட்டப் பொட்டுக்காரி
வகுநாளத்து[1] ஒறவுக்காரி
ஒருநாளத்துச் சண்டையோட
உட்டுதாடி உன்னொறவு

நீலநீலப் பொட்டுவச்சு
நெல்லறுக்கப் போகையில
நீலப்பொட்டு மின்னமின்ன
நெல்லறுக்கப் பிரியமில்லெ
நாட்டுக்கு நாட்டுமட்டம்
நாங்கரண்டுஞ் சோடிமட்டம்
சோடிமேல போனாலும்
கோடிசனம் கையெடுக்கும் - இப்போ
ஏத்துமாடி தூத்துக்கோடி
எறக்கமாடி புளியஞ்சோலை
புளியஞ்சோல சந்தையில
பூமுடியும் கொண்டையில
பூவழகும் உன்னழகும்
போட்டாவில[2] பாப்பேனம்மா

தங்கத்துக்குத் தங்கிருக்க
தனித்தங்கம் நானிருக்க
பித்தாளத் தங்கத்துக்குப்
பேராசப் பட்டையேடி
தன்னான்னே னானான்னே
னானான்னே னன்னான்னே
னானன்னா னானானா
னன்னனன்னா னானா

ஏறுறது ஏராப்பிளான்
எறங்குறது வெள்ளிச்சந்தெ
குடுக்குறது முக்காப்பணம்
படுக்குறது பஞ்சுமெத்தெ

ஏத்துமாடி[3] கொல்லிமலெ
எறக்குமாடி[4] சூலவந்தி
கோங்காமுளி மேட்டுலதா
குள்ளக்குள்ளக் கொய்யாமரம்
குள்ளக்குள்ளக் கொய்யாமரம்
குமரியெல்லா கூடவரும்

அஞ்சுகாசு எண்ணெ(ய்) வாங்கி
அஞ்சுநாளாக் கொண்டபோட்டு
கொண்டபோட்ட மூணாநாத்து
கொண்டுபோறே(ன்) சிங்கப்பூரு

மலையில மாட்டக் கண்டே[5](ன்)
மக்கியாநாளு[6] உன்னக் கண்டே(ன்)
உன்னக்கண்ட நேரமெல்லா(ம்)
உருகரண்டி சருகுபோல

[1] வெகுநாளைய [2] புகைப்பட்டம் [3] ஏற்றமடி [4] இறக்கமடி
[5] மாட்டைக்கண்டேன் [6] மறுநாள்

### கோமாளிப்பாட்டு - 4

## 59. ஏ குட்டி நாகம்மா...

இளையான், 26
பெரியகோவிலூர்
வளப்பூர்நாடு

ஏ குட்டி நாகம்மா
எம்மேல கோபமா
ஆத்தங்கர ஓரமா
காத்தடிக்க நேரமா

ஆத்தாங் கரையோரம்
அம்மாப்பேட்டை - இந்தப்
பாட்டி தலமேல
சீல மூட்ட
சீலமூட்ட தூக்க முடியாத
போட்டுதா விட்டே(ன்)

நாத்தம் பொறுக்காம
உட்டானா ஓட்டம் - அடி

அந்தத் தோட்டம்
இந்தத் தோட்டம்
வப்பாளித் தோட்டம் - இந்த
படுத்தபாயச்
சுருட்டிக்கினு
விட்டேன ஓட்டம்

கோமாளிப்பாட்டு - 5

## 60. அடகுவெச்சுத் தூங்குறானாம்

மூலிகை செல்வராஜ், 37
குளவங்கிராய்
வளப்பூர்நாடு

எங்கபெருமா(ன்) இளைய பெருமா(ன்)
வறடிக்குப் புள்ளவரம் தந்த பெருமா(ன்)
எங்கபெருமா இளைய பெருமா
வறடிக்குப் புள்ளவரம் தந்த பெருமா 1

காக்காய்க் கல்லெடுத்துப் போட்ட மாயவா
காலடிலே வேலுவாங்கி இடிச்சமாயவா
காலடியில வேலுவாங்கி இடிச்சமாயவா 2

சூக்காய்க்[1] கல்லெடுத்துப் போட்ட மாயவா
சூத்தடியில வேலுவாங்கி இடிச்ச மாயவா
எங்கபெருமா இளையபெருமா
வரடிக்குப் புள்ளவரம் தந்த பெருமா 3

தெக்கத் தெருவுல தேவிடிச்சா வீட்டுல
தேங்காய் அடகுவெச்சுத் தூங்குறானாம் கோமாளி
வடக்குத் தெருவுல வண்ணாத்தி வீட்டுல
வாழக்காய் அடகுவெச்சுத் தூங்குறானாம் கோமாளி 4

[1] குருவி

### கோமாளிப்பாட்டு - 6

## 61. கள்ளுக்கடை ஓரத்திலே

மலையசாமி, 39
பெரியகோயிலூர்பட்டி
வளப்பூர்நாடு
சந்திரன், 22
தேனூர், குண்டூர் நாடு

கோமாளி: தேக்காம் பலயிலே
தேனடைக்கும் மெத்தியில

பிறர்: தேக்காம் பலயில
தேனடைக்கும் மெத்தியில

ஒன்றசாணு பலயில
ஒன்னரைக்காம் மெத்தையில
கள்ளுக்கட ஓரத்தில
பில்லுக்கூட வச்சியடா

தன்னானே தாளம் போடுங்க - எம்
பொண்டாட்டிக்கு கூத்தியாருக்குத்
தயிரூத்திச் சோறுபோடுங்க.
தன்னான்னே நன்னானே
தில்லால்லே லல்லாலே

வாசலுக்குக் கீழாலே
வாழமரம் அடையாளனம்
வாழமரம் பூப்பூத்து
வடநாட்டே வீசுதே

வடநாட்டே சிறுங்கிளியும்
வாசலிலே வந்திறங்க
வாழமரம் பூப்பூத்து
வடநாட்டே வீசிடுத்தே

சீறாம செதறாம
    செவந்தமொகம் வாடாமே
சீருசொல்லி அனுப்பிடுங்க
    செல்வமுள்ள எந்தாயே

தேரீக்கிக் கீழாலே
    தென்னமர அடையாளனம்
தென்னமரம் பூப்பூத்து
    தென்னாட்டே வீசிடுத்தே

தென்னாட்டுச் சிறுகிளியும்
    தேர்க்கடையும் வந்திருக்கும்
தென்னமர வாசத்துக்குத்
    தேர்க்கடையும் வந்திருக்கும்

தன்னானே தாளம்போடுங்க - எம்
    பொண்டாட்டிக்குக் கூத்தியாருக்குத்
    தயிரூத்திச் சோறுபோடுங்க.

**கோமாளிப்பாட்டு - 7**

## 62. அவ கெடக்கறா பைத்தியக்காரி

மலையசாமி, 39
பெரியகோயிலூர்
வளப்பூர்நாடு
பிடாரன், 65
சந்திரன், 22
தேனூர், குண்டூர் நாடு

கோமாளி: மட்டத்துக்கு மட்டம்பாரு
நாலுகாலு மட்டம்பாரு

பிறர்: மட்டத்துக்கு மட்டம் பாரு
நாலுகாலு மட்டம்பாரு

கோமாளி: மட்டத்துக்கு மட்டம்பாரு
நாலுகாலு மட்டம்பாரு

பிறர்: மட்டத்துக்கு மட்டம்பாரு
நாலுகாலு மட்டம்பாரு

நாக்குலொரு நச்சம்பாரு
சூத்திலொரு சுங்கம்பாரு
வாலொட்டற வளையும்பாரு
ஈயோட்டற கையப்பாரு

ஈயோட்டற கையப்பாரு
இடுப்பச்சுத்திப் பையப்பாரு
பையிருக்கிற எடத்தப்பாரு
பணம்போடற தாவப்பாரு

கோச்சுமேல கோச்சுவரும்
கொளம்புக் கோச்சி மேலவரும்
சாமானக் கோச்சிலதா (ன்)
சாமிவரக் கண்டிங்களா
ஐஞ்சுமணிக் கோச்சிலதா(ன்)

ஆளேத்தும் பொட்டிலே
சேலந் தெரிஞ்சுபோச்சு
செவ்வாப்பேட்டையுங் கூடிப்போச்சு
பாத்திருந்த தம்மாம்பட்டி
பஞ்சாப் பறக்குது

கல்லிவெள்ளி கல்லிவெள்ளி
கல்லிவெள்ளி மோதிரமா
கல்பொதச்ச மேமுருகம்[1]

ஓரழகு ஓரழகு
ஓரழகுச் சங்கிலியாம்
உன்னாலே பேருபோட்டே(ன்)

# V. குறவன் - குறத்திப் பாடல்கள்



*செக்கநல்லா செவந்தபய - மாமா*
*செவக்கு வேட்டிநீ போறபய*
*செத்த நேரந்தா காணாட்டிதா - மாமா*
*செத்திடுவே நா உம்மேலதா*

## 63. டே குறவா டே!

செல்லம்மாள், 45
பள்ளக்குழி
சேலூர் நாடு

ஒருபுடிதா தெனக்குத்தித்தா[1] டே குறவா டே - நாங்க
ஓரடதா சுட்டுப்போட்டா டே குறவா டே
அத்தனயுந் தின்னுபோட்டு டே குறவா டே - இங்க
சத்தியத்துக்கு வாராயடா டே குறவா டே 1

ரெண்டுபுடிதா தெனக்குத்தித்தா டே குறவா டே - நாங்க
ரண்டடதா சுட்டுப்போட்டா டே குறவா டே
அத்தனையுந் தின்னுபோட்டு டே குறவா டே - இங்க
சத்தியத்துக்கு வாராய்டா டே குறவா டே 2

மூணுபுடிதா தெனகுத்தித்தா டே குறவா டே - நாங்க
மூணடதா சுட்டுப்போட்டா டே குறவா டே
அத்தனயுந் தின்னுபோட்டு டே குறவா டே - இங்க
சத்தியத்துக்கு வாராயடா டே குறவா டே 3

[1] *தினை குத்தித்தான்*
*பாடல், பத்துவரை தொடர்கிறது.*

*திருவிழா, திருமண நிகழ்ச்சிகள் முதலியவற்றில் குறவன், குறத்தி வேடம் தாங்கி இருவர் ஆடிப்பாடுவது இப்பாடலாகும். பார்வையாளர்களை மகிழ்விக்கும் நோக்கில் பாலுறவுத்தன்மையுடன் பாடப்படுகின்றன. மிகவும் வயது முதிர்ந்த நிலையில் இறப்போரின் இறப்புச் சடங்கில் கூடக் குறவன், குறத்திப் பாடல் இதே நகைச்சுவை உணர்வுடன் பாடி ஆடப்படுகிறது.*

## 64. செவக்காத வெத்தில

சரஸ்வதி, 47
விரகனூர்ப்பட்டி
சேலூர் நாடு

கோடியோரம் கொய்யாமரம் - ராசா
கொழுந்தனாரு வெச்சமரம்
கொழுந்தனாரு வெச்சமரம்

கொய்யாகாயுக்குநா ஆசப்பட்டு
கொழுந்தனாரே வெச்சிருந்தே - நானு
கொழுந்தனாரே வெச்சிருந்தே 1

மச்சியோரம் மாங்காமரம் - ராசா
மாமனாரு வெச்சமரம்
மாங்காயிக்கு நா ஆசப்பட்டு
மாமனாரே வெச்சிருந்தே - நா
மாம னாரே வெச்சிருந்தே 2

தன்ன னானே னானே னன்னா
னான னானே னானே னன்னா 3

ஆத்தோரந்தா கூத்தாலையா(ம்)
அரும்பரும்பா வெத்தலையா(ம்)
போட்டாநல்லா செவக்குலடி - குட்டி
பொம்மயிலே[1] உம்மயக்கம் - அடி
பொம்மயிலே உம்மயக்கம் 4

[1] பொன்மயிலே

## 65. வரவரிசி தீட்டயிலே

துறையூர் சின்னம்மா, 85
தனபாக்கியம், 47
எம்.ஜி.ஆர். நகர்
வாழவந்தி நாடு

குறவன்: வட்ட வட்டங்க பாறயிலே - புள்ளே
வரவரிசிநீ தீட்டயிலே
ஆர்குடுத்தங்க சாயச்சேல - புள்ளே
ஆலவட்டங்க போடுதடி 1

குறத்தி: மாமா ஆருநல்லங்க குடுக்கவில்லை - மாமா
அவுசரியா நா(ன்) போகவில்லே
கைவலிக்க நா பாடுபட்டு - மச்சான்
கட்டுறண்டா நா சாயச்சீல 2

குறவன்:
உங்கவீடுடங்கே எங்கவீடு - புள்ளே
ஒருதலதங்கா வாசப்படி
சந்துசத்தங்க நேரமெல்லாம் - புள்ளே
சருகுபோல உணருரண்டி - 3

குறத்தி :
அரே மச்சான் -
வெத்திலிலே மையெழுதி - மச்சா(ன்)
வெய்யிலிலே காயப்போட்டு
மையுருவ மனமுருவ சாமி
கூடவந்த குயிலுருவ 4

குறவன்:
அரே புள்ளே
கேட்டனாங்காடி மூணுமாசம் -
கெஞ்சுனண்டிநா நெஞ்சுணர
மாட்டயினின்னு சொன்னதுக்கு - புள்ளே
மாரியாயிங்க உன்னக்கேளு 5

குறத்தி:
அரே மச்சான்
அஞ்சுருவாநீ மஞ்சச் சீல - மச்சா
அரியபய நரிக்கொறவ
நரிக்கொறவ நீ பேச்சக்கேட்டு - நீ
வகைமோசந்தா ஆவிதடா 6

குறவன்:
மாடிமேலங்க மாடிகட்டி - புள்ள
மாரளவாங்க ஜன்னல் வச்சு
ஜன்னலிலேங்க சொன்ன சொல்லு
தட்டுருவி எனக்குப் போகுதடி 7

குறத்தி:
வட்டவட்டங்க பாறயிலே - மாமா
வரவரிசி நா தீட்டயிலே
ஆர்குடுத்தாங்க சாயச்சேல - மாமா
ஆலவட்டங்க போடுதடா 8

ஆருநல்லா குடுக்கவில்ல - மாமா
அவுசரியாப் போகவில்லை
கைவலிக்கநா பாடுபட்டு - மாமா நா(ன்)
கட்டுறண்டா சாயச்சேல 9

## 66. காப்படிதா கொத்தமல்லி

புஷ்பா, 23
பெரியகோவிலூர்
வளப்பூர் நாடு

ஆத்துல தாண்டா அஞ்சுமீனு - மாமா
அதுல ரண்டுதா குஞ்சு மீனு
குஞ்சுமீனநா நம்புனாலும் - மாமா
கொறப்பயல நா நம்பமாட்டே 1

ஆத்துலதா ஊத்து நோண்டி - மாமா
அவனு நானுங்க பல்வெளக்கி
ஆத்துல தாண்டாங்க சொன்ன சொல்லு - மாமா
அறுக்குதாங்க ரம்பம் போட்டு 2

தண்ணி நல்லா கறுத்திடுச்சு - மாமா
தவளச் சத்தமும் கேட்டிருச்சு
ஊரு நல்லாங்க ஒறங்கிடுச்சு - மாமா
ஓடிப்போவங்க சிங்கப்பூரு 3

காஞ்ச நல்லா புழுதியிலே - மாமா
கஞ்சி கொண்டுநீ போறபய - இந்த
கஞ்சி ஒறவ மறந்தாலுந்தா - மாமா
கனத்தொறவநா மறக்க மாட்டே 4

ஒலந்த நல்லா புழுதியிலே - மாமா
உப்புக் கொண்டங்க போறபய
உப்பொறவ மறந்தாலுந்தா மாமா
ஒன்னொறவ மறக்க மாட்டே 5

முக்காப்படிதா கொத்தமல்லி - மாமா
மூக்குப் போனங்க கோழிக்குஞ்சு
மூக்குக் கிறதாம் பத்தலீன்னு - மாமா
முக்குறாண்டாங்க சாமத்திலே 6

காப்படிதா கொத்தமல்லி - மாமா
காலுப்போனங்க கோழிக்குஞ்சு - இந்த
காலுக்கறிதா பத்தலேன்னு - மாமா
கத்துறாண்டாங்க சாமத்திலே 7

சாலையோரம் சதுரக்கல்லு - மாமா
சாஞ்சிருக்குங்க நாகதாளி - அந்த
நாகதாளி ரூபங்கொண்டு - மாமா
நா வருவேங்க சாமத்திலே 8

காசக் கொட்டதா குச்செடுச்சு - மாமா
கச்சிதமா நா பாலங்கட்டி - இந்த
பாலத்திலதா போறபய - மாமா
பதறுதாண்டாங்க எம்மனமே 9

ஒன்னு ரண்டுதா கல்பொறுக்கி - மாமா
ஓடயில நா பாலங்கட்டி - இந்த
பாலத்திலதா போவம்போது - மாமா
பாத்துப் பாத்துங்க கண்ணடிச்சா 10

கறுப்பு நல்லா நா பொட்டு வெச்சு - மாமா
கம்பறுக்கநா போவயில - இந்தக்
கறுப்புப் பொட்டிங்க மின்னமின்ன - மாமா
கம்பறுக்கப் பிரியமில்லே 11

நீலநீலங்க பொட்டுவெச்சு - மாமா
நெல்லறுக்கநா போகயில - இந்த
நீலப்பொட்டுத்தா மின்னமின்ன - எனக்கு
நெல்லறுக்கப் பிரியமில்லே 12

வட்டவட்டதா பொட்டுவச்சு - மாமா
வரவறுக்கா போகயிலே - இந்த
வட்டப் பொட்டுத்தா மின்னமின்ன - மாமா
வரகறுக்கப் பிரியமில்லே 13

சடங்க வேட்டிதா நாகுரிச்சு - மாமா
சடச நார நீ வில்வளச்சு - இந்த
அம்பு போட்டுத்தா போற மச்சா - உனக்கு
அரச மரமிங்க அடையாளந்தா 14

செக்க நல்லா செவந்த பய - மாமா
செவக்கு வேட்டிநீ போறபய
செத்த நேரந்தா காணாட்டிதா - மாமா
செத்திடுவே நா உம்மேலதா 15

புல்லாங்கோலதா கையிலெடுத்து - மாமா
புதுமலெய நீ மாடு ஓட்டி
புல்லாங் கொலதா சத்தமடா - மாமா
புதுமலெயங்க காவுதடா 16

சீனிதொட்டி கையிலெடுத்து - மாமா
சிறுமலெயநீ மாடுஓட்டி - இந்த
சீனிதொட்டிதா சத்தமெல்லாம் - மாமா
சிறுமலெயங்க காவுதடா 17

*இப்பாடலில் குறத்தி பாடுவது மட்டும் இடம்பெற்றுள்ளது.*

## 67. கொல்லிமலெ - கொடகுமலெ

**செல்வம், 29**
**சின்னசாமி, 28**
**பெரியகோயிலூர்**
**வளப்பூர்நாடு**

குறத்தி: பாக்க நல்லா பகுட்டுதடா - மாமா
பழைய உறவு மங்குதடா
சந்திக்காத நேரமெல்லாம் - மாமா
சருகு போல உருகுதடா 1

பாயநல்லா விரிச்சுப்போட்டு - மாமா
பச்ச மொளகா கிள்ளிப்போட்டு
பழக்கமில்லாத கொறவங்கிட்டே - மாமா
படுக்க எனக்குப் பயமா(யி)ருக்கு 2

குறவன்: ஏறுனது ஏராப்பிளான் - கண்ணு
எறங்குனது வெள்ளிச்சந்தெ
வெள்ளிச் சந்த பக்கத்திலே - எனக்கு
வேலா முள்ளு தச்சுதடி 3

குறத்தி: பாக்கநல்லா நீ பச்சப்பய - மாமா
பாருவைக்குநீ ஏந்தபய
இடுப்பு நல்லா செவந்தபய - நீ
இந்தக் குத்து குத்திரியே 4

சீல நல்லா விரிச்சுப்போட்டு - மாமா
சீனிமௌகா கிள்ளிப்போட்டு - இந்த
சிரிப்பு இல்லாத கொறவங்கிட்டே
சிரிக்க எனக்குப் பயமா(யி)ருக்கு 5

குறவன்: பாட்டுக்குத்தா பாட்டெடுப்பே - கண்ணு
பழம்பாட்டு நானெடுப்பே
எதிருப்பாட்டு பாடுனாலும் - கண்ணு
ஏணிவெச்சுப் பல்லொடைப்பே 6

குறத்தி: செவப்புக்கல்லு மாவரைச்சு - மாமா
சேரியிலநா கோலம்போட்டு
செவந்தமூஞ்சிநா பையனோட - மாமா
சேருவதுநா எந்தக்காலம் 7

வெள்ளி நல்லா நெலவிருக்க - மாமா
கெணத்துக்குள்ளதா ஆளிருக்க
தள்ளி நல்லாநீ கதவடைச்சு - மாமா
சொல்லாமலே நீ வந்தயடா 8

குறவன்: சாலையோரம் சதுரக்கல்லு - கண்ணு
சாஞ்சிருக்கும் நாகதாளி
நாகதாளி வேஷங்கொண்டு - கண்ணு
நாவருவே சாமத்திலே 9

குறத்தி: ஆளநல்லா ஆளானண்டா - மாமா
அரும்புமீச நீ காரனடா
அரும்பு மீசநீ காரனோட - மாமா
கூடுனது மோசமடா 10

குறவன்: ஆளுலதா ஆளங்கடி - கண்ணு
அரும்புமீசக் காரனடி
அரும்புமீசக் காரனெண்டே - நீ
குறும்புத் தனம் காட்டாதடி 11

குறத்தி: மானத்திலதா மஞ்சிருக்க - மாமா
மரத்திலதா பிஞ்சிருக்க
பிஞ்சிறங்கும் நேரத்தில - மாமா
பிரியமில்லாத போனயேடா 12

சந்தயில மீனுவாங்கி - மாமா
சலசலன்னு கொழம்புவெச்சு
கொத்தமல்லி பத்திலன்னு
குத்துறானாம் டப்பாங்குத்து 13

கொல்லிமலெ ஓரத்திலே
கொம்புச்சத்தம் கேக்கையிலே
கொம்புச்சத்தந்தா கேட்டோடனே - மாமா
கூடவந்துநா சேந்துடுவே 14

பச்சமலெ பக்கத்திலே
பம்பசத்தந்தா கேக்கையிலே
பம்பச் சத்தந்தா கேட்டோடனே
பக்கம்வந்துநா சேந்திடுவே 15

குறவன்: கொல்லிமலெ கொடகுமலெ - கண்ணு
கோடிசனம் வாழும்மலெ
பச்சமலெ பவளமலெ - கண்ணு
பரமசிவம் வாழும்மலெ 16

குறத்தி: முத்துக்கடல தாறேன் - மாமா
முத்திவிடநா தேங்காதாறே
திருப்பத்தூரு நா வெல்லந்தாறே
சேந்துபோவோம் ரண்டுபேரும் 17

ஆடுறது வீதியில - மாமா
பாடுறது நாம பந்தலிலே
பாடுறது நாம பந்தலிலே - மாமா
அமுக்குறது நாம ரூமுக்குள்ளே 18

குறவன்: ஏறுறது ஏராப்பிளேன் - புள்ளே
எறங்குறது சூலவந்தி
ஆடுறது பந்தலிலே - கண்ணு
அமுக்குறது நாம ரூமுக்குள்ளே 19

## 68. மூக்குப்போன கோழிக்குஞ்சு

சின்னமணி, 17
பெரியகோயிலூர்
வளப்பூர்நாடு

காப்புடி[1] கம்பரிசி[2]
காலுப்போன கோழிக்குஞ்சு
காலுக்கறி பத்தாமதா
கத்துறாராஞ் சாமத்துல

தன்னா னன்னா னானா - அடி
தில்லாலங்கடி லேலே

முக்காப்புடி கம்பரிசி
மூக்குப்போன கோழிக்குஞ்சி
மூக்குக்கறி பத்தாமலே
முக்குறானாம் சாமத்திலே
வாசலிலே வாழமரம்
வாதுவாதாப் போகும்மரம்
வாதுபோற பக்கமெல்லாம்
வம்புவந்து சேருதடி

தன்னா னன்னா னானே
தன்னா னன்னா னானே

[1] *கால்படி* [2] *கம்பு அரிசி*

## 69. பொய்ச்சத்தியம்

துறையூர் சின்னம்மா, 85
எம்.ஜி.ஆர். நகர்
வாழவந்திநாடு

ஒருபடி நெல்லுக்குத்தி — டப்பக்கொறவா - நா
ஓரட சுட்டுவச்சே — டப்பக்கொறவா
அத்தினியுந் தின்னுபுட்டு — டப்பக்கொறவா - அவ(ன்)
சத்தியங்க பண்ணுனானே — டப்பக்கொறவ(ன்) 1

ரெண்டுபுடி நெல்லுக்குத்தி — டப்பக்கொறவா - நா(ன்)
ரண்டாட சுட்டுவச்சே — டப்பக்கொறவா
அத்தினியும் தின்னுபுட்டு — டப்பக்கொறவா - அவ(ன்)
சத்தியங்க பண்ணுனானே — டப்பக் கொறவ 2

மூணுபடி நெல்லுக்குத்தி — டப்பக்கொறவா - நா
மூணாட சுட்டுவச்சே — டப்பக்கொறவா
அத்தினியுந் தின்னுபுட்டு — டப்பக்கொறவா - நீ
சத்தியங்க பண்ணுறியே — டப்பக்கொறவா 3

நாலுபடி நெல்லுக்குத்தி — டப்பக்கொறவா - நா
நாலாயிரம் சுட்டுவச்சே — டப்பக்கொறவா
அத்தினியும் தின்னுபுட்டு — டப்பக்கொறவ - அவ
இல்லீன்னு சொல்லுறானே — டப்பக்கொறவ(ன்) 4

*பத்து எண்கள்வரை பாடல் தொடர்கிறது.*

## 70. நெத்தீல வச்சபொட்டு

துறையூர் சின்னம்மா, 85
எம்.ஜி.ஆர். நகர்
வாழவந்திநாடு

குறவன்: நெத்தீல வச்சபொட்டு
நீலவரணப் பொட்டு
நீலங் குறைஞ்சதென்னடி - எங்குருவிக்காரி
நிச்சியத்தச் சொல்ல வேணுமடி 1

குறத்தி: மாமா

வேவாத வெய்யிலிலே
வேலைக்கிநா போவயிலே
வேர்வத்தண்ணி பட்டதாலய்யா - எ(ன்) மச்சா மச்சா(ன்)
வித்தியாசம் ஒண்டுமில்லையய்யா 2

குறவன்: அறுபத்தி மூணுபோவம்

அள்ளி முடிஞ்ச கூந்தல்
அவுந்த வெவரமென்னடி - எ(ன்) குருவிக்காரி
அத எனக்குச் சொல்ல வேணுமடி 3

குறத்தி: மாமா

குளிச்சி முழுவிக்கிட்டு
கோயிலுக்குப் போகும்போது
கூட்ட நெருக்கலாச்சுதே - எம்மச்சா மச்சா
குத்தங்கொற ஒன்றுமில்லையய்யா 4

குறவன்: பெரட்டாசி மாசத்திலே

வாங்கிவச்சே பேசர்கல்லு
முரிஞ்ச வெவரமென்னடி - எங்குருவிக்காரி
அது எனக்குச் சொல்ல வேணுமடி 5

குறத்தி: மாமா

பெரட்டாசி மாசத்திலே
பெறட்டிப்போட்டு ஒதைக்கையிலே
அப்போ முரிஞ்சதாலைய்யா - எம்மச்சாமச்சா
வித்தியாசம் ஒண்டுமில்லையய்யா 6

குறவன்: வையாசி மாசத்திலே

வாங்கிப்போட்ட வயிரத்தோடு
வருமோசம் போனதென்னடி - எங்குருவிக்காரி
வதிலெனக்குச் சொல்ல வேணுமடி 7

குறத்தி: மாமா

எனக்குஞ் சினகமுள்ள
எதுத்தவூட்டு அக்காளுக்கு
எறவ(ல்) குடுத்தாலய்யா - எம்மச்சா மச்சா
வித்தியாசம் ஒன்றுமில்லையய்யா 8

## 71. கிழவன் - கிழவி பாடல்

மலையசாமி, 39
பெரியகோயிலூர்
வளப்பூர்நாடு
மூலிகை செல்வராஜ், 37
குளவங்கிராய்
வளப்பூர்நாடு

எப்பப்பா கலியாணம்
ஈத்துப் பொதங்கிழமை நல்ல கலியாணம் 1

குண்டாங்கல்லு ஓரத்திலே - சின்னண்ணா
குறியாடு மேய்க்கயிலே - சின்னண்ணா
குறியாடு மேய்க்கயிலே - சின்னண்ணா
அப்பப்புடிச்ச பெருஞ்சிரங்கு - சின்னண்ணா
இன்னுந்தா போகிலயே 2
எப்பா எப்பா எப்பா
வெள்ளக்கல்லு ஓரத்திலே - சின்னண்ணா
வெள்ளாடு மேய்க்கப்போனே - பெரியண்ணா
வெள்ளாடு மேய்க்கயிலே - சின்னண்ணா
அப்பப்புடிச்ச பெருஞ்சிரங்கு - சின்னண்ணா
இன்னுந்தாண்டா போகலடா - சின்னண்ணா
வெள்ளாடு மேய்க்கயிலே - சின்னண்ணா
அப்பப்புடிச்ச பெருஞ்சிரங்கு - சின்னண்ணா
இன்னுந்தா போகயிலே - சின்னண்ணா
எப்பத்தாபோகுமடா பெரியண்ணா 3

எப்ப? எப்ப? எப்ப?

*திருமண வீடுகளில் கிழவன் - கிழவியாக வேடமிட்டு இருவர் நகைச்சுவையாகப் பாடுவது.*

## 72. ஏழுமலக் கருப்பண்ணா

தங்கராஜ், 29
பிடாரன், 65
நத்துக்குழிப்பட்டி
குண்டூர்நாடு

ஏழுமல கருப்பண்ணா கருப்பண்ணா - நீங்க
என்னஊரு வந்துசேரு வந்துசேரு
பக்கத்திலே நீங்களருந்து நீங்களருந்து - சாமி
பாரவரம் தாரவேணும் தாரவேணும்

அங்கவசிரிக்க பாளையத்திலே பளையத்திலே
வந்தெழுந்த காமாட்சியே காமாட்சியே - அவ
காமாட்சியோ மீனாட்சியோ மீனாட்சியோ
இருவரண்டு பேருகளும் பேருகளும் - அங்க
எங்கிருந்து எங்கவந்தே எங்கே வந்தே - நாங்க
கொல்லிமல கொடகுமல கொடகுமல - நம்ம
கோம்பக்காடு ஓருமல ஓருமல
பச்சமல பவளமல பவளமல - நம்ப
பாங்காக வாழுமல வாழுமல - நம்ம
கொல்லிமல கொடகுமல கொடகுமல - நம்ம
கொறவரும் வாழும்மல வாழும்மல

***வசனம்:*** *அடசாமி! நாங்க பச்சமல பவளமல கொல்லிமல, கொடகுமல எல்லாமலயும் போவம். அப்பிடிப் போனா நாங்க எந்தமல தெரியுமா? சேலம் ஜில்லா, நாமக்கல் தாலுக்கா, கொல்லிமல குண்டூர் நாட்டச் சேர்ந்த நத்துக்குழி கிராமம். நத்துக்குழிக் கிராமத்திலேயே பலவருஷமாக, பிறந்து இங்கியே இருக்கிறோம். அப்படி ஒரு கல்யாணம் காட்சின்னா தெம்பாப் போவம். அங்க 'டப்பாங்குத்துப் பாட்டுப் போடுங்கப்பா' அப்பீடீன்னு சொல்லுவாங்க. யாரு அப்பிடின்னா, அந்தக் கல்யாணத்துக்கு வந்திருக்கிற தாய்மார்கள் அத்தினிபேரும், அப்போ நாங்க கொல்லிமலெக் கவுண்டரு. அடடா! கொல்லிமலக் கவுண்டரு... அடடா! கொல்லிமலைக் கவுண்டருன்னா கோமணத்தக் கட்டிக்கிட்டு சட்டயப் போட்டுக்குவோம். என்ன, நரிக்கொறவாராட்டம் இருக்கிறீங்கன்னு கேலி பேசுவாங்க. அப்போ நரிக்கொறவர் பாட்டுக்கூடப் பாடுவோம்.*

கோமங்கட்டி நரிக்குறவ(ர்) நாங்களே - சாமி
    நாங்களே - இந்த
கொல்லிமலெ சுத்திப்பாக்க வந்தோமோ - சாமி
கொல்லிமலெ சுத்திப்பாக்க வந்தோமோ - நாங்க
மாணாமணிக் கொறவ(ர்) நாங்களே - சாமி
    நாங்களே - இந்த
மண்டலத்தச் சுத்திப்பாக்க வந்தோமோ - கவுண்டரே
மண்டலத்துச் சுத்திப்பாக்க வந்தோமோ

புரியாத வெள்ளாடு தெரியாம ஓடுது
கொண்டாந்து கூட்டத்திலே சேரு - நாங்க
நல்லா நரிக்கொறவர் சாமி
நாயம் இருப்பதெல்லாம் பூமி

தந்தன தந்தன தந்தன தந்தன தளுக்குக்காரண்டி
தாளம்போட்டு வித்துவாறே(ன்) மினுக்குக்காரண்டி - அட
பாடாப் படுத்தினாங்க பம்பரமா ஆட்டுனாங்க - என்ன
கும்மாளம் போட்டதெல்லாம் நடுங்கிருச்சே
கொட்டமெல்லாம் தன்னாலே ஒடுங்கிருச்சே

தந்தனதந்தன தளுக்குக்காரன்
தாளம்போட்ட மினுக்குக்காரன்
பொல்லாத ஒறவுக்காரன்
போனாக் கெடுத்துடுவா
தள்ளாத ஒறவுக்காரன்
சாமிகும்புடுக் கெடுத்திடுவான் - அவன்
பாடாப் படுத்திடுவான்
பம்பரமா ஆட்டிடுவான் - அவன்
கேடுகெட்ட கெழட்டுப்பயன்

என்ன என்ன சொல்லிடுவான் - அவ
வாலவயிசுலதா வயசுப் பொண்ணக் கேக்குறானே
என்னால முடியுலப்பா
எழுந்துவாப்பா முருகனய்யா - அவ
கேடாக் கெடுக்கிறானே கெழட்டுப்பயலால - அவ
வெடிய வெடிய அடிக்குறானே குடிவெறியாலே - அடா
பட்டாம் பகலயிலதா பவளத்தேரு ஓட்டுறானே - அவ
ஈனங்கெட்ட எளம்பையன்

இந்தத்தேரு ஓட்டுறானே - அடியே
பொடிப்பய ஆறுதமமே கட்டாதடா
பெரியவங்க சொன்னசொல்லு
பேயோட ஒன்னுசொல்லு
பெரியவங்க சொன்ன சொல்லு
பெருமாளே சொன்ன சொல்லு
சின்னவுங்க சொன்ன சொல்லு

முருகனோட ஒன்னு சொன்ன சொல்லு
இத்தனயும் பாடிவந்தா எளமூச்சு வாங்குதய்யா
வாரும் சபையோரே வயசல பெரியவரே
எனக்கும் எளயவரே எளமொட்ட அடிச்சவரே
தாடி நரச்சவரே தலமொட்ட அடிச்சவரே
பாத்திங்கிளா கேட்டங்கிளா
பஞ்சாயத்துக் காரர்களே
சேலஞ் ஜில்லா ராசிபுரம்
சேர்ந்ததொரு பேள்குறிச்சி - அட
அடுக்குஞ்சந்த கொல்லிமலெ
பம்பக்காடு புங்கம்பாடி புளியம்பாடி
புங்கம்பாடி புளியம்பாடி வேலூரு வெளிரிக்காடு
பாக்கிருந்த பள்ளக்குழி
சேந்திருக்கும் செம்மேடு - அடே
வாலுல வளரிக்காடு
வழக்குவ போகும் வாசலூரு

திருட்டுக்குழி தின்னனூரு
கம்பிப்பாறெ காமாடு
அரிங்கந் தலமாடு - அங்க
இருந்ததெரு
அதுக்குஞ் சேந்த ஊர் கலிங்கம்
செம்மேடு இல்லறக்காடு

அலுக்கிக் குலுக்குதாடி அம்பரமா நெய்வடிய
எளயுந் தலமாடு இருந்ததொரு மாசிகுன்று
அரியூரு பெரியூரு அதுக்குஞ்சேந்த கசப்பாகுன்னு
தோத்துப்போன தொவரப்பள்ளம்
தேனெடுக்கும் தெகவாயி
சேலூரு வாழப்பூரு
சேந்ததொரு மாசிக்குன்னு

நட்டுக்குழி நடுவிலவு
நாயமுள்ள பெரியூரு
சுண்டக்காடு சூரியவலவு
எங்கிருக்கும் பாருமைய்யா
பச்சச்சட்டக் காரப்பைய(ன்)
மொச்சக் கொட்டத் தின்னச் சொன்னானே
அந்தந்த மாமியத்தா
மொச்சக் கொட்ட தின்னச் சொன்னானே

*திருமண வீடுகளில் கதை நிகழ்த்தும் முன்னால் இப்பாடல் இடையிடையே வசனங்களுடன் உடுக்கையடித்துக் கொண்டு பாடப்படுகிறது. வந்துள்ள மக்களை நகைச்சுவையாய் மகிழ வைப்பது நோக்கம்.*

## 73. மல்லியப்பூ வாங்கி வந்தேன்

**சின்னக்குட்டி, 50**
**மேக்கலாந்துறைப்பட்டி**
**சேலூர் நாடு**

மதுரைக்குச் சீட்டெழுதி - தங்கம்
மல்லியப்பூ வாங்கி வந்தே(ன்) - அந்த
மல்லியப்பூ சூட்டிக்கினு - நா
மாமியா வூடு போவோமடி 1
சேலத்துக்குச் சீட்டெழுதி - தங்கமே
சிண்டுமல்லி வாங்கிவந்தே
சிண்டுமல்லி சூட்டிக்கினு - உனக்கு
சின்னாயி வூடு போவோமடி 2
கூடிக்கூடிச் சொன்னாலுமே - தங்கம்
கூடாதடி எம்மனமோ
என்னான்னமே சொன்னாலுமே - தங்கம் 3
ஏறுக்காது உன்னமனம்
தன்னா னன்னா னானா னன்னா - தன
னானா னன்னா னானா னன்னா 4

மருதயிலதா வெளயுதடி
மருதயில வெளயிறது மொச்ச மொச்ச - தங்கம்
    மலையாளத்தா பேசுறது கொச்ச கொச்ச
செஞ்சில வெளயிறது மொச்ச மொச்ச - தங்கம்
    செவத்தக்குட்டி பேசறது கொச்ச கொச்ச 5

ஆத்துக்குள்ள ஊத்துநோண்டி - தங்கம்
    அவளநாளா பல்வெளக்கி
நேத்துச்சொன்ன சொல்லலுந்தா - தங்கம்
    நெஞ்சுக்குள்ள இருக்குதடி 6

என்னன்னதா சொன்னாலுமே - தங்கம்
    ஏறுக்காது உன்னமனம்
கூடிக்கூடிச் சொன்னாலுமே - தங்கம்
    கூடாதடி இந்தமனம் 8

சின்னூட்டத் தீத்துக்க
    சிறுகதாப்பா போட்டுக்க
பெரியூட்டத் தீத்துக்க
    பெரியதப்பா போட்டுக்க 9

# vi. திருமணப் பாடல்கள்



கள்ளிப்பால் வத்துனாலும்
கறவப்பால் வத்தாமே
எருக்கம்பால் வத்துனாலும்
எருமப்பால் வத்தாமே...

வாழ்ந்திடுவார் கோடிக்காலம்

# 74. பெண் கொடு

துறையூர் சின்னம்மா, 85
எம்.ஜி.ஆர். நகர்
வாழவந்திநாடு

ஒத்தப் பெறம்போட    வந்தே நா வந்தே[1]
ஓரேரு மாட்டோட    வந்தே நா வந்தே
குத்து வெளக்கோட    வந்தே நா வந்தே
கொடிமல்லிப் பூவோட    வந்தே நா வந்தே
பாக்குப் பதியத்தோட    வந்தே நா வந்தே
பதிங்காலரிசியோட[2]    வந்தே நா வந்தே
அண்ணனுக்குத் தங்கச்சி    வந்தே நா வந்தே
பொண்ணுக்கு நாத்தியா    வந்தே நா வந்தே
வளையாத பட்டுக்கு
நனையாத காரைக்கு
நெருப்புல சந்தனம்மா
நெதானிச்சு - அண்ணா!
பொண்ணுந் தாரியா - அண்ணா!
பூவுந் தாரியா
பூவிலேயே பொறந்த[3]
பூராசா மவளே
பொண்ணுந்தாரியா பூவுந்தாரியா
எண்ணெயில பெறந்த
எண்ணெயில வளந்த
எண்ணெச் செக்காம் மவளே - அண்ணி!
பொண்ணுந் தாரியா பூவுந்தாரியா

*[1] அண்ணனிடம் பெண்கேட்டுப் பாடுவது*
*[2] மணவறையில் வைக்கப்படும் அரிசி . இதன் மீது செம்பு, தேங்காய், தாலி ஆகியன ஒன்றின் மீது ஒன்றாக வைக்கப்படும்.*
*[3] அண்ணியிடம் பெண்கேட்டுப் பாடுவது*

# 75. நெலமெல்லாம் நெல்லு

துறையூர் சின்னம்மா, 85
எம்.ஜி.ஆர். நகர்
வாழவந்திநாடு

நெல்லெல்லாம் நெல்லு
நெலமெல்லாம் நெல்லு
உத்திரத் தூணு
ஒசந்த கிரிகடம்
செம்பூத்து அண்ணனுக்கு
சேந்த மணிவெளக்கு
மல்லியப்பூ அண்ணனுக்கு
வாச மணிவெளக்கு

*திருமணம் முடிந்து அண்ணிக்குப் பட்டம் கட்டும்போது பாடும் பாடல்.*

## ஏற்றி இறங்கும்பாட்டு - 1

# 76. குறவமக நீ தானா

தனபாக்கியம், 47
எம்.ஜி.ஆர். நகர்
வாழவந்திநாடு

கல்யாணங் கல்யாணம் யாருக்குக் கல்யாணம்
ஆருக்குக் கல்யாணம் - எங்க
அருச்சுணார்க்குக் கல்யாணம் 1

சின்ன மடிக்கோலி[1] சீமையெங்கும் பாக்குவைத்தார்
பெரியமடிக்கோலி பெரியவர்க்குப் பாக்குவைத்தார்
நடுமடிக்கோலி நாட்டாருக்குப் பாக்குவைத்தார். 2

ஆனையக் கொண்டாந்து
கட்டுங்கய்யா பந்தலிலே
ஆனைக்கு உண்டான
அரிசிபடி நாந்தாரே(ன்) 3

குருதையக் கொண்டாந்து
கட்டுங்கய்யா பந்தலிலே
குருதைக்கு உண்டான
கொள்ளுப்படி நாந்தாறே(ன்) 4

ஆளாள் அழவீன்னு சென்னி(ங்)களே பொண்டுகளா
ஆளாள் அழவீக்கு அடிவகுத்தப் பாருங்கடி
முழியாள் அழவீன்னு சொன்னீ(ங்)களே பொண்டுகளா
முழியாள் அழவீக்கு முட்டிவகுத்தப் பாரு 5

நல்லெண்ண கொண்டுகொண்டு - எங்கண்ணே
நயமா தல முழுவி
நல்லூரு சந்தைக்கு
ஊஞ்சலாடப் போவையிலே
ஊஞ்சலுக்குக் கீழாவே
ஒண்டிருந்த தங்கையாரே
மாமா சரணமுன்னு
மடிமேலே கைப்போட்டார்
ஈசனார் தாசமுன்னு - உன்ன
எடுத்தாரு மங்கிலியம் 6

வெளக்கெண்ண கொண்டு கொண்டு
எதமாத் தலமுழுவி
வேலூரு சந்தைக்கு - எங்கண்ணே
ஊஞ்சலாடப் போவயிலே
ஊஞ்சலுக்குங் கீழாவே
ஒண்டிருந்த தங்கையாரே
மாமா சரணமுன்னு
மடிமேல கைப்போட்டார் 7
ஈசனார் தாசமுன்னு - உன்ன (என்ன)
எடுத்தாரு மங்கிலியம்
கடலையத் தின்னுக்கிட்டு - எங்கண்ண(ன்)
கடவீதி போவயிலே

கடங்கெட்ட அத்த மவ
　　கடவாய்ச் சப்புறாளாம் 8
வெல்லத்தத் தின்னுக்கிட்டு - எங்கண்ண(ன்)
　　வீதிவழி போவயிலே
விதிக்கத்த அத்தமவ
　　வெறுவாயச் சப்புறாளாம் 9

ஓனாங் கொடிப்புடுங்கி
　　ஒருலட்சம் கூடைபின்னி
கூட பின்னிக் காசுவாங்கும்
　　குறவமக நீ தானா? 10

பருத்திக் கொடி புடுங்கி
　　பத்துலட்சம் கூட பின்னி
கூடபின்னிக் காசுவாங்கும்
　　குறவமக நீ தானா? 11

மச்சூடு! மச்சூடு! சொன்னிங்களே பொண்டுங்களா!
　　மொட்டக் குடிசயத்தா(ன்) பாருங்கடி பொண்டுங்களா
குச்சூடு! குச்சூடு! சொன்னிங்களே பொண்டுங்களா
　　கொறவ(ன்) குடிசயத்தா(ன்) பாருங்கடி பொண்டுங்களா 12

நானூறு எலுமுச்சங்கா நறுக்கிப் புழிஞ்சாலும்
　　அப்பவும் பத்தாது எங்களண்ண(ன்) கூந்தலுக்கு
முந்நூறு எலுமுச்சங்கா முறுக்கிப் புழிஞ்சாலும்
　　அப்பவும் பத்தாது எங்களண்ண கூந்தலுக்கு 13

பூமரத்துக்கீழ எங்கண்ண(ன்)
　　பூவே ஒணத்தும்போது
பூவோட வாசங்கொண்டு
　　பொணங்குனவ நீத்தானா? 14

மாமரத்துக்கீழ எங்கண்ண(ன்)
　　மயிரெ ஒணத்தும்போது
மயிரோடு வாசங்கொண்டு
　　மசங்குனவ நீத்தானா? 15

வெத்தலபோல விரிச்ச மொவரைக்கு
    வெள்ளாள வம்மூசம் எங்கிருந்து வாச்சீதோ
பாக்குவெட்டிபோல பரந்த மொவரைக்கு
    பாப்பார வம்மூசம் எங்கிருந்து வாச்சீதோ 16

[1] *முந்தானைச் சேலையால் அமைக்கப்படும் மடி.*

*திருமண நிகழ்ச்சியில் மணமகனையும் மணமகளையும் கேலி செய்து பாடும் பாடல். இது 'ஏற்றி இறக்கும் பாட்டு' எனப்படுகிறது.*

### ஏற்றி இறக்கும் பாட்டு - 2

## 77. மடிமேல கைபோட்டா

**தனபாக்கியம், 47**
**எம்.ஜி.ஆர். நகர்**
**வாழவந்தி நாடு**

ஆனசட்டிக்கு - எங்கண்ணி அரிய கறுப்புக்கு
    தொட்டால் ஒட்டிக்கு - எங்கண்ணி
    தூர நின்னுக்க
சோத்துச் சட்டிக்கு - எங்கண்ணி
    சுத்த கறுப்புக்கு
தொட்டால் ஒட்டிக்கு - எங்கண்ணி
    தூர நின்னுக்க 1

எட்டுக்கட்டுப் புஸ்தாகம்
    எழுதத் தெரியுமா
இந்தியார் வாசலுக்கு
    நீயா மருமவ
பத்துக் கட்டுப் புஸ்தாகம்
    படிக்கத்தெரியுமா 2

பாண்டியர் வாசலுக்கு
    நீயா மருமவ
சட்டியக் கழுவி சன்னலிலே ஊத்தும்போது
    தன்னாசி வேசங்கொண்டு
    வந்தவளும் நீதானா 3

பானயக் கழுவி பந்தலிலே ஊத்தும்போது
    பரிதேசி வேசங்கொண்டு
    வந்தவளும் நீதானா 4

மாமரத்தடியில மயிர ஒணத்தியிலே
    மயிரோட வாசங்கொண்டு
    மயங்குனவ நீதானா 5

பூமரத்தடியீலே பூ ஓணத்தியிலே
    பூவோட வாசங்கொண்டு
    பொணங்குவை நீதானா 6

அரிசி பொரிக்குமவ
    யானமே வாரதென்ன
அரசனார் பெத்தமவ
    கால்நடையா வாரதென்ன 7

கொள்ளு பொறிக்குமவ
    குதரமேல வாரதென்ன
கோயிலார் பெத்த செல்வம்
    கால்நடையா வாரதென்ன 8

பருப்பு பொறிக்குமவ
    பல்லாக்கு வாரதென்ன
பாண்டியார் பெத்தசெல்வம்
    கால்நடையா வாரதென்ன 9

ஆனக் கொண்டாந்து
    கட்டுங்கையா பந்தலிலே
ஆனக்கு உண்டான
        அரிசிபடி நாந்தாறேன் 10

குதிரயக் கொண்டாந்து கட்டுங்கையா
    பந்தலிலே
குதிரைக்கு உண்டான
    கொள்ளுபடி நாந்தாரே 11

ஆன நெருநெருங்க - எங்க
    அரிச்சனார் தாலிகட்ட
குதிர நெருநெருங்க - எங்க
    கோயிலார் தாலிகட்ட 12

சாரசரயில எங்களண்ண(ன்)
    சைக்கிள் ஓட்டயில
கொரங்க மூஞ்சாலே - எங்களண்ணி
    கொனச்சு விட்டாளாம்
சைக்கிள் கம்பியாலே எங்களண்ணன்
    காச்சி விட்டாராம்
சிங்கப்பல்லாலே எங்களண்ணி
    சிரிச்சு விட்டாளாம்
தோள் துணியாலே எங்களண்ணன்
    தொடச்சி விட்டாராம் 13

ஊசி மலமேல ஏறாதே எங்கண்ணானே
    ஊத்தமூஞ்சிப் பொண்ணைக் கட்டாதே அண்ணானே
பாசிமலமேல ஏறாதே எங்கண்ணானே
    பழதமூஞ்சிய பொண்ணாளே கட்டாதே எங்கண்ணானே 14

வெல்லத்த நக்கிக்கிட்டு - எங்களண்ணன்
    வீதிவழி போம்போது
விதிகெட்ட அத்தமவ
    வெறுவாயச் சப்புனாளாம் 15
கடலயத் தின்னுக்கிட்டு எங்களண்ணன் கடவீதி போவயிலே
    கடகெட்ட அத்தமவ கடவாயச் சப்புனாளாம் 16

நல்லெண்ணெ தேச்சி - எங்களண்ண
    நயமா தலமுழுவி
நல்லூரு சந்தைக்கி ஊஞ்சலாடப் போவயிலே
ஊஞ்சலுக்கு அடியீல
    ஒண்டிருந்த தேவிடியா
மாமா சரணமின்னு
    மடிமேல கைபோட்டா 17
இதுஎன்ன தோஷமின்னு எங்களண்ணன்
    எடுத்தாரு மங்கிலியம்

புண்ணியமாப் போகுதுன்னு எங்களண்ண
　　பூவெடுத்துப் பூட்டி
தருமமா போவுதுன்னு - எங்களண்ண
　　தாலி திருப்பூட்டி 18

*சகோதரன் திருமணத்தின்போது அண்ணியைக் கேலி செய்து பாடும் பாடல்.*

### ஏற்றி இறக்கும் பாட்டு - 3
## 78. கத்திரிக்கா பொரிக்க மாட்டா

**தனபாக்கியம், 47**
**எம்.ஜி.ஆர். நகர்**
**வாழவந்திநாடு**

சட்டியக் கழுவியல்லோ சன்னலிலே ஊத்தும்போது
　　சன்னாசி வேஷங்கொண்டு வந்தபொண்ணா நீத்தானா?
பானயக் கழுவியல்லோ எங்கண்ண பந்தலிலே ஊத்தம்போது
　　பரதேசி வேஷங்கொண்டு வந்தபொண்ணா நீத்தானா 1

நாலு வரவருசி நறுக்கா வடிக்கமாட்டா
　　நாலுரண்டுங் கத்திரிக்கா பொரிய(ல்) பொரிக்க மாட்டா(ள்)
மூணுவரவருசி முழுசா வடிக்க மாட்டா
　　மூணுரண்டுங் கத்திரிக்கா பொரிய(ல்) பொரிக்கமாட்டா(ள்) 2

தோலு செருப்பு ஏதண்ணி உங்களுக்கு
　　தொரையூரு சக்கீலி பழக்கமா உங்களுக்கு
வாரு செருப்பு ஏதண்ணி உங்களுக்கு
　　வாழவந்தி சக்கீலி பழக்கமா உங்களுக்கு 3

### ஏற்றி இறக்கும் பாட்டு - 4
## 79. தோலு செருப்பு ஏதண்ணி?

**துறையூர் சின்னம்மா, 85**
**எம்.ஜி.ஆர். நகர்**
**வாழவந்திநாடு**

ஓனாங் கொடிபுடுங்கி
　　ஒருலட்சம் கூடபின்னி
கூட பின்னிக் காசுவாங்கும்
　　குறவமக நீத்தானா? 1

பருத்திக்கொடி புடுங்கிப்
பத்துலட்சம் கூடபண்ணி
கூடபண்ணிக் காசுவாங்கும்
குறவமக நீத்தானா? 2

மச்சூடு! மச்சூடு! சொன்னிங்களே பொண்டுங்களா
மொட்டக் குடிசயத்தா(ன்) பாருங்கடி பொண்டுங்களா
குச்சூடு! குச்சூடு! சொன்னிங்களே பொண்டுங்களா
கொறவ(ன்) குடிசயத்தா(ன்) பாருங்கடி பொண்டுங்களா 3

நானூறு எலுமுச்சங்கா(ய்) நறுக்கீப் புழிஞ்சாலும்
அப்பவும் பத்தாது எங்களண்ண(ன்) கூந்தலுக்கு
முந்நூறு எலுமுச்சங்கா முறுக்கிப் புழிஞ்சாலும்
அப்பவும் பத்தாது எங்களண்ண(ன்) கூந்தலுக்கு 4

பூமரத்துக்கீழ எங்கண்ண(ன்) பூவே ஒணத்தும்போது
பூவோட வாசங்கொண்டு பொணங்குனவ நீத்தானா
மாமரத்துக்கீழ எங்கண்ண(ன்) மயிரெ ஒணத்தும்போது
மயிரோட வாசங்கொண்டு மசங்குனவ நீத்தானா 5

வெத்தல போல விரிச்ச மொவரைக்கு
வெள்ள வம்மூசம் எங்கிருந்து வாச்சீதோ
பாக்குவெட்டிபோலப் பரந்த மொவரைக்கு
பாப்பார வம்மூசம் எங்கிருந்து வாச்சீதோ 6

சட்டியக் கழுவியல்லோ சன்னலிலே ஊத்தம்போது
சன்னாசி வேஷங்கொண்டு வந்தபொண்ணா நீத்தானா
பானயக் கழுவியல்லோ எங்கண்ண(ன்) பந்தலிலே ஊத்தம்போது
பரதேசி வேஷங்கொண்டு வந்தபொண்ணா நீத்தானா? 7

நாலு வரவருசி நறுக்கா வடிக்கமாட்டா(ள்)
நாலுரண்டுங் கத்திரிக்கா பொரிய(ல்) பொரிக்க மாட்டா
மூணு வரவருசி முழுசா வடிக்கமாட்டா(ள்)
மூணுரண்டுங் கத்திரிக்கா பொரிய(ல்) பொரிக்கமாட்டா 8

தோலு செருப்பு ஏதண்ணி உங்களுக்கு
    தொரையூரு சக்கீலி பழக்கமா உங்களுக்கு
வாரு செருப்பு ஏதண்ணி உங்களுக்கு
    வாழவந்தி சக்கீலி பழக்கமா உங்களுக்கு 9

நாக்காலே சளிய நாலாக்கடஞ்சுவச்சே
    அத்தினியுந் தின்னானே ஆந்த ஒதடி மவன்
மூக்கால சளிய மூணாக் கடஞ்சுவஞ்சே
    அத்தினியுந் தின்னானே ஆந்த ஒதடி மவன்
அம்மிக்கடியிலே அறத்தோச வச்சிருந்தே(ன்)
    அத்தினியுந் தின்னானே ஆந்த ஒதடி மவன் 10

மம்புட்டி புடிச்சு மறுக்கத் தெரியாது
    மாமியா சீலயே வெளுக்கத் தெரியாது
கோடாலி புடுச்சுக் கொத்தத் தெரியாது
    கொளுந்தியா சீலியே வெளுக்கத் தெரியாது 11

## 80. கல்லுல கத்தாழ பூத்தாப்பல...

**மூலிகை செல்வராஜ், 36**
**இளையான், 26**
**செல்வம், 29**
**சின்னசாமி, 28**
**மலையசாமி, 39**
**பெரியகோயிலூர்**
**வளப்பூர்நாடு**

குருவநல்ல குருபதமே குருவருட பொன்பதமே...
    அல்லோ... ஓ...ஓ...
தாயே நல்லா குருபதமே தலைமேல வெச்செழுத...
    அல்லோ...ஓ...ஓ...
தாயே நல்லா குருபதமே ராஜாவே தலைமேல வெச்செழுத
    அல்லோ...ஓ...ஓ...
இன்னிக்கு யாராரிதா கதபாட நம்ம ஐவரோட கதபாட
    அல்லோ...ஓ...ஓ...

இன்னிக்கு யாராரிதா கதபாட நம்ம ஐவரோட கதபாட
அல்லோ...ஓ...ஓ...
சாமி இன்னிக்குப் பட்டணமா பட்டணமா - இன்னிக்குத்
தெம்மதுரப் பட்டணமா... அல்லோ...ஓ...ஓ...
தெம்மதுரப் பட்டணத்த ஆருங்கப்பா ஆண்டுவாரா
அல்லோ...ஓ...ஓ...
இன்னிக்கு
தெம்மதுரப் பட்டணமா இன்னிக்கு ஆருங்கப்பா ஆளுராக
அல்லோ...ஏ... - சாமி
இன்னிக்கு
ராமலிங்கம் பெத்தெடுத்த அழகுள்ள நல்லதம்பி
ஏ...ஏ... - இன்னிக்கு
இந்தராணி பெத்தெடுத்த எளங்கொடி நல்லதங்கா
அல்லோ...
இந்தராணி பெத்தெடுத்த எளங்கொடி நல்லதங்கா
அல்லோ... - இன்னிக்கு

குதுரங்கா படையோட இருக்குராண்டா நல்லதம்பி...
அல்லோ...- அன்னிக்கு
அண்ணனும் தங்கையா அழகுடனே வாழ்ந்துவர
அல்லோ...
வலதுகாலத் தானெடுத்தே - அங்க[1]
வந்துபூந்த லட்சுமியே
வலதுகாலத் தானெடுத்தே - அங்க
வந்துபூந்த லட்சுமியே - அவுங்க
பெத்துப் பெருகவேணும்
பெரியகுடி கட்டவேணும்... அல்லோ...
பெத்துப் பெருக வேணும்
பெரியகுடி கட்ட வேணும்... அல்லோ...
கயித்தெடுத்தே தாலிகட்ட
காலம்பூரா வாழவேணும் ஏ... ஏ... - அவுங்க
ஆண்போன பக்கமெல்லாம்

அரசுபட்டம் காணவேணும்
பெண்போன பக்கமெல்லாம்
பெரியகுடி கட்டவேணும்... ஏ... ஏ... - அவுங்க
கருப்பிருக்கும் வீடெல்லாம்
காளியாயே குடியிறங்கும் - இன்னிக்கு

உத்தாறே சித்தாறே
வழியாதே பாற்கடலே
கள்ளிப்பாலே வத்துனாலும்
கறவப்பாலே வந்தாதே... அல்லோ
எருக்கம்பால் வத்துனாலும்
எருமப்பால் வந்தாதே
பால் கொடமும் தலமேல
பாலகனும் மடிமேல... அல்லோ - அவுங்க
ஆலுபோல தழதழச்சே
அருகுபோல வேரூணி... ஏ... ஏ...
ஆலுபோல தழதழச்சே
அருகுபோல வேரூணி... ஏ... ஏ...

மூங்கோ குருத்துபோல
முரியாம வாழவேணும்... ஏ... ஏ...
மூங்கோ குருத்துபோல
முரியாம வாழவேணும் - அவுங்க
வாழ்ந்திடுவார் கோடிக்காலம்
வளந்திருப்பார் நாட்டிலதா... ஏ... - அவுங்க

மச்சானுந்தா மாமனுந்தா
மலபோல வாழவேணும்... அல்லோ... - அவுங்க
மச்சானுந்தா மாமனுந்தா
மலபோல வாழவேணும்

ஆலுபோல தழதழச்சு
அருகுபோல வேரூணி

மூங்கிபோல தழதழஞ்சு
    முரியாம வாழ்ந்திரு
நீரில நெல்லு பூத்தாப்பல
        கல்லுல கத்தாழ பூத்தாப்பல
கனத்த எருமப்பாலு கறந்தாப்பல
    முரியாத வாழ்ந்திரு...[1]

*மணம் முடித்த பெண்ணை மணமகன் வீட்டிற்கு அழைத்துச் செல்லும்போது பாடுவது. ஏதாவது ஒரு நாட்டுப்புறக் கதைப் பாடலை ஒருவர் பாட, மற்றவர்கள் 'அல்லோ' என இசைகூட்டிப் பாடிச் செல்வர். இது 'அல்லவா' என்ற சொல்லாகலாம். நடந்து செல்லும் தொலைவுக்கு ஏற்பக் கதை தொடர்ந்து பாடப்படுகிறது. மணமகன் வீடு சென்று சேர்ந்துவிட்டால் பாடல் நிறுத்தப்படும். கதை சொல்லி முடிக்க வேண்டும் என்பதில்லை.*

*[1] இப்பகுதி மணமகன் வீட்டிற்கு அருகில் சென்றதும் பாடப்படுவது. தாலி கட்டப்பட்ட பின் பெரியோர்கள் இவ்வாறு கூறி வாழ்த்துவர்.*

## 81. ஈஸ்வரனா வாழ்ந்திரு

**பிடாரன், 65**
**நத்துக்குழி**
**குண்டூர்நாடு**

எலைக்கு எலையெடுத்து
இந்திரவனப் பட்டுடுத்தி
மனைக்கு மனைவாழ
மஞ்ஞானப் பெண்ணுக்கு
முன்கையி கங்கணம்
மாருக்கு ஏத்தியிருக்கும்
மல்லியத் திருப்பு
தோளுக்கு ஏத்தியிருக்கும்
துளசித் திருமா(லை)ல்
பச்சப்பந்தலும் பாவாடையும்
குத்துவெளக்கும் சரவெளக்கும்
இன்னுஞ் சிரஞ்சீவியா
ஈஸ்வரனா வாழ்ந்திரு

*மங்கலநாண் பூட்டும்போது கரக்காரர் வாழ்த்துவது.*

# vii. கும்மிப் பாடல்கள்



குும்மியடிக்கிற பக்கத்திலே வந்து
குந்தியிருக்கிற மாமன்மாரே
முந்தாணி படுது எந்திரிங்க - நல்ல
மூணுபணந்தாறே கும்பிடுங்க

# 82. சேந்துச்சோ சேருலையோ

சின்னமணி, 17
ஈஸ்வரி, 14
பெரியகோயிலூர்
வளப்பூர்நாடு

ஓராத்தே தண்ணீலே வைக்க வைக்கச் சந்தனம்
சேந்துச்சோ சேருலையோ
செவத்த மச்சா நெத்திக்கு
நெத்திக்கும் புத்திக்கும்
நீலக்கல்லு வாசைக்கும்
தாலிக்கும் கூலிக்கும்
தங்கச் சரட்டுக்கும்
யாரோடே பேசுனே
அங்கம் பதறுது 1

ரெண்டாத்தே தண்ணீலே வைக்க வைக்கச் சந்தனம்
சேந்துச்சோ சேருலையோ
செவத்தமச்சா நெத்திக்கு
நெத்திக்கும் புத்திக்கும்
நீலக்கல்லு வாசைக்கும்
காலிக்குங் கூலிக்கும்
தங்கச் சரட்டுக்கும்
யாரோட்டே பேசுனே
அங்கம் பதறுது 2

மூணாத்தே தண்ணீலே வைக்க வைக்கச் சந்தனம்
சேந்துச்சோ சேருலையோ
செவத்தமச்சா நெத்திக்கு
நெத்திக்கும் புத்திக்கும்
நீலக்கல்லு வாசைக்கும்
தாலிக்குங் கூலிக்கும்
தங்கச் சரட்டுக்கும்
யாரோடே பேசுனே
அங்கம் பதறுது 3

*பத்து எண்கள் வரை பாடல் தொடர்கிறது.*

## 83. யாரு துடைப்பார்?

லலிதா, 16
சின்னமணி, 17
பெரியகோயிலூர்
வளப்பூர்நாடு

ஒரு தட்டுத்தா தாழம்பூவு
தட்டு முடிவார் - இங்கே
தட்டு முடிவார் -
தேகத்திலே சேறுபட்டா
ஆரு தொடைப்பார் - இதை
ஆரு தொடைப்பார்
மல்லியப்பூ வாசங்கொண்டு
மாம(ன்)ந் தொடைப்பார் – இத
மாமந் தொடைப்பார் 1

ரெண்டுதட்டுதா தாழம்பூ - இதை
தட்டு முடிவார் - இதை
தட்டு முடிவார் - இதை
தேகத்திலே சேறுபட்டா
ஆரு தொடைப்பார் - இத
ஆரு தொடைப்பார்
மல்லியப்பூ வாசங்கொண்டு
மாம(ன்) தொடைப்பார் - இத
மாம(ன்) தொடைப்பார் 2

மூணுதட்டுத்தா தாழம்பூ - இதை
தட்டு முடிவார் - இதை
தட்டு முடிவார்
தேகத்திலே சேறுபட்டா
ஆரு தொடைப்பார் - இத
ஆரு தொடைப்பார்
மல்லியப்பூ வாசங்கொண்டு
மாம(ன்) தொடைப்பார் - இத
மாம (ன்) தொடைப்பார். 3

*பத்து எண்கள் வரை பாடல் தொடர்கிறது*

## 84. பாட்டுப்பாடும் சேவல்

லலிதா, 16
பெரியகோயிலூர்
வளப்பூர்நாடு

ஒருபடியா குறுண போட்டு
நா(ன்) வளத்தும் சாவ[1]
நா வளத்தும் சாவ
வெள்ளி சலங்ககட்டி வீதியிலுட்டே சாவ
வீதியிலுட்டே சாவ
வெடியக்கால எழுந்துபாத்தா
சாவக்காணோம் மச்சா -
சாவக்காணோம் மச்சா
பாப்பான் தெருவிலெ பாட்டுப்பாடும் சாவ
பாட்டுப்பாடும் சாவ - அங்க
வண்ணான் திருவுல வெளயாடும் சாவ 1
வெளயாடும் சாவ

ரெண்டுபடிதா குறணபோட்டு
நா வளத்துஞ் சாவ
நா வளத்துஞ் சாவ
வெள்ளி சலங்ககட்டி வீதியிலுட்டே சாவ
வீதியிலுட்டே சாவ
வெடியக்கால எழுந்து பாத்தோம்
காணோமச்சா சாவ
காணோமச்சா சாவ
பாப்பாந் தெருவுலதா பாட்டுப்பாடுஞ்சாவ
பாட்டுப்பாடுஞ்சாவ
வண்ணாந் திருவுல வெளயாடுஞ் சாவ
வெளயாடுஞ் சாவ 2

மூணுபடிதா குறணபோட்டு
நா வளத்துஞ் சாவ
நா வளத்துஞ் சாவ

வெள்ளி சலங்ககட்டி வீதியிலுட்டே சாவ
 வீதியிலுட்டே சாவ
வெடியக்கால எழுந்து பாத்தோம்
 காணோமச்சா சாவ
 காணோமச்சா சாவ
பாப்பாந் தெருவுலதா பாட்டுப்பாடுஞ்சாவ
 பாட்டுப்பாடுஞ்சாவ
வண்ணாந் திருவுல வெளயாடுஞ் சாவ
 வெளயாடுஞ் சாவ 2

[1] *சேவல்*
*பத்து எண்கள் வரையில் தொடர்கிறது பாடல்.*

## 85. கொம்பானை

சாந்தி, 16
நத்துக்குழிப்பட்டி
குண்டூர்நாடு

ஓரான வெள்ளான பட்டஞ்சூடுன கொம்பான
 கொம்பான மேலேறி வாராராம் ஈனருக்கும்
 நைனருக்கும் தேவருக்கும் என்ன என்ன அடையாளம்
 காலுல வீரதண்டு கழுத்துல தொளசிமணி 1

ரண்டான வெள்ளான பட்டஞ்சூடுன கொம்பான
 கொம்பான மேலேறி வாராராம் ஈனருக்கும்
 நைனருக்கும் தேவருக்கும் என்ன என்ன அடையாளம்
 காலுல வீரதண்டு கழுத்துல தொளசிமணி 2

மூனான வெள்ளான பட்டஞ்சூடுன கொம்பான
 கொம்பான மேலேறி வாராராம் ஈனருக்கும்
 நைனருக்கும் தேவருக்கும் என்ன என்ன அடையாளம்
 காலுல வீரதண்டு கழுத்துல தொளசிமணி 3

[1] *ஓர் யானை*
*பாடல், கேரளா சூரிப்பாறை எஸ்டேட்டில் கற்றுக் கொண்டது.*
*பத்து எண்கள்வரை தொடர்கிறது.*

## 86. வீசுறது மணிப்பிரம்பு

சாந்தி, 16
நத்துக்குழிப்பட்டி
குண்டூர்நாடு

ஒருதட்டு ஏலேலோ மண்ணெடுத்து ஐலலா
மண்ணெடுத்து ஐலலா -
நாம்போட்டே ஏலேலோ
ரயில்ரோடு ஐலலா
ரயில்ரோடு ஐலலா
குடுக்கிறது ஏலேலோ முக்காத்துட்டு ஐலலா
முக்காத்துட்டு ஐலலா
வீசுறதுஏலேலோ மணிப்பெரம்பு ஐலலா
மணிப்பெரம்பு ஐலலா

வீசுனாலும் ஏலேலோ வீசுட்டடா ஐலலா
வீசுட்டடா ஐலலா
நம்மதொர ஏலேலோ மணிப்பெரம்பு ஐலலா
மணிப்பெரம்பு ஐலலா 1

ரண்டுதட்டு ஏலேலோ மண்ணெடுத்து ஐலலா
மண்ணெடுத்து ஐலலா -
நாம்போட்டே ஏலேலோ
ரயில்ரோடு ஐலலா
ரயில்ரோடு ஐலலா
குடுக்கிறது ஏலேலோ முக்காத்துட்டு ஐலலா
முக்காத்துட்டு
வீசுறது ஏலேலோ மணிப்பெரம்பு ஐலலா
மணிப்பெரம்பு ஐலலா

வீசுனாலும் ஏலேலோ வீசுட்டடா ஐலலா
வீசுட்டடா ஐலலா
நம்மதொர ஏலேலோ மணிப்பெரம்பு ஐலலா
மணிப்பெரம்பு ஐலலா 2

மூனுதட்டு ஏலேலோ மண்ணெடுத்து ஐலலா
    மண்ணெடுத்து ஐலலா -
        நாம்போட்டே ஏலேலோ
        ரயில்ரோடு ஐலலா
        ரயில்ரோடு ஐலலா
குடுக்கிறது ஏலேலோ முக்காத்துட்டு ஐலலா
        முக்காத்துட்டு
    வீசுறது ஏலேலோ மணிப்பெரம்பு ஐலலா
        மணிப்பெரம்பு ஐலலா 3

வீசுனாலும் ஏலேலோ வீசுட்டடா ஐலலா
        வீசுட்டடா ஐலலா
    நம்மதொர ஏலேலோ மணிப்பெரம்பு ஐலலா
        மணிப்பெரம்பு ஐலலா

*பத்து எண்கள் வரை பாடல் தொடர்கிறது.*
*கேரளத்திற்குச் சென்றிருந்தபோது சூரிப்பாறை எஸ்டேட்டைச் சேர்ந்த சாந்தாவிடம் இப்பாடலைக் கற்றதாகச் சாந்தி குறிப்பிட்டார்.*

## 87. நெஞ்சம் குழம்பி

**சாந்தி, 16**
**சந்திரா, 15**
**கண்ணகி, 12**
**புவனேஸ்வரி, 10**
**கலைமணி, 14**
**நத்துக்குழிப்பட்டி**
**குண்டூர்நாடு**

ஒருரண்ட மஞ்சளாம் ஏலஞ்சொல்லாட்டி - வள்ளி
ஏலஞ் சொல்லாட்டி
ஓரேத்தம் தண்ணியிலே நெஞ்சங் கொழப்பி - வள்ளி
நெஞ்சங்கொழப்பி
சந்தனக் கிண்ணியிலே சாஞ்சு நடடி - வள்ளி
சாஞ்சு நடடி
சத்தியுள்ள மாரியாத்தா வீசிநடடி - வள்ளி
வீசிநடடி 1

ரண்டுரண்ட மஞ்சளாம் ஏலஞ்சொல்லாட்டி - வள்ளி
ஏலஞ்சொல்லாட்டி
ரண்டேத்தந் தண்ணியிலே நெஞ்சங் கொழப்பி - வள்ளி
நெஞ்சங்கொழப்பி
சந்தனக் கிண்ணியிலே சாஞ்சுநடடி - வள்ளி
சாஞ்சு நடடி
சத்தியுள்ள மாரியாத்தா வீசிநடடி - வள்ளி
வீசிநடடி 2

மூணுரண்ட மஞ்சளாம் ஏலஞ்சொல்லாட்டி - வள்ளி
ஏலஞ்சொல்லாட்டி
மூணேத்தந் தண்ணியிலே நெஞ்சங் கொழப்பி - வள்ளி
நெஞ்சங்கொழப்பி
சந்தனக் கிண்ணியிலே சாஞ்சுநடடி - வள்ளி
சாஞ்சு நடடி
சத்தியுள்ள மாரியாத்தா வீசிநடடி - வள்ளி
வீசிநடடி 2

*பத்து எண்கள்வரை பாடல் தொடர்கிறது.*

## 88. பாவம் சுற்றும்

**லலிதா, 16**
**ஈஸ்வரி, 14**
**பெரியகோயிலூர்**
**வளப்பூர்நாடு**

ஒருமூட்டதா சீலவாங்கி
கப்பலிகம் செய்து
கப்பலிகம் செய்து
ஒன்னாம் படியேறி
வருகின்றாள் பாம்பு
வருகின்றாள் பாம்பு
பாம்பக் கீம்ப அடிக்காதே
படலுக்கார அண்ணா
படலுக்கார அண்ணா

பாவமெல்லாஞ் சுத்திவரும்
பஞ்சவர்ணக் கிளியை
பஞ்சவர்ணக் கிளியை 1

ரெண்டு மூட்டதா சீலவாங்கி
கப்பலிகம் செய்து
கப்பலிகம் செய்து
ரெண்டாம் படியேறி
வருகின்றாள் பாம்பு
வருகின்றாள் பாம்பு
பாம்பக் கீம்ப அடிக்காதே
படலுக்கார அண்ணா
படலுக்கார அண்ணா
பாவமெல்லாஞ் சுத்திவரும்
பஞ்சவர்ணக் கிளியை
பஞ்சவர்ணக் கிளியை 2

மூனு மூட்டதா சீலவாங்கி
கப்பலிகம் செய்து
கப்பலிகம் செய்து
ரெண்டாம் படியேறி
வருகின்றாள் பாம்பு
வருகின்றாள் பாம்பு

பாம்பக் கீம்ப அடிக்காதே
படலுக்கார அண்ணா
படலுக்கார அண்ணா
பாவமெல்லாஞ் சுத்திவரும்
பஞ்சவர்ணக் கிளியை
பஞ்சவர்ணக் கிளியை 3

*பத்து எண்கள் வரை பாடல் தொடர்கிறது.*

## 89. சத்தம் கேட்கும்

லலிதா, 16
பெரியகோயிலூர்
வளப்பூர்நாடு

ஓரடி மங்கலமா - தங்க
ராவுதடி கப்பூருவா - தங்க[1]

வேட்டிரெண்டு வெள்ளவேட்டி - தங்க
வீடுரெண்டுங் காரவீடு - தங்க

ஆத்துக்கு அந்தப்புறம் - தங்க
அழகான சத்தங்கேட்கும் - தங்க

தண்ணிமேல தண்ணிவந்தா - தங்க
தருமரோட சத்தங்கேட்கும் - தங்க

பேனக்குச்சி[2] கைபுடிச்சு - தங்க
தேருவச்சி நாங்கவந்தோம் - தங்க

[1] *தங்கை* [2] *பேனமரம்*

## 90. கைவணங்குஞ்சோதி

சின்னமணி, 17
பெரியகோயிலூர்
வளப்பூர்நாடு

ஒருபடிதா கருகமணி
வாங்கினாப்பல வாங்கி - அவ
கழுத்துல பூட்டி
கண்ணனூரு மாரி
கைவணங்குஞ் சோதி
வேப்பமரம் மாரி
வெளயாடும் துணையிருந்தா
வெள்ளி மலெசாமி 1

ரெண்டுபடிதா கருகமணி
வாங்கினாப்பல வாங்கி - அவ
கழுத்துல பூட்டி
கண்ணனூரு மாரி
கைவணங்குஞ் சோதி
வேப்பமரம் மாரி
வெளயாடும் துணையிருந்தா
வெள்ளிமலெ சாமி 2

மூணுபடிதா கருகமணி
வாங்கினாப்பல வாங்கி - அவ
கழுத்துல பூட்டி
கண்ணனூரு மாரி
கைவணங்குஞ் சோதி
வேப்பமரம் மாரி
வெளயாடும் துணையிருந்தா
வெள்ளிமலெ சாமி 3

*பத்து எண்கள் வரை பாடல் தொடர்கிறது.*

## 91. வறுக்கலாமா? பொரிக்கலாமா?

**சின்னமணி, 17**
**பெரியகோயிலூர்**
**வளப்பூர்நாடு**

ஒருசெடியுந் தூக்கித்தூக்கி ஓராயிரம் பாவக்கா
ஓராயிரம் பாவக்கா
வறுக்கலாமா பொரிக்கலாமா ஐயாயிரம் பாவக்கா
ஐயாயிரம் பாவக்கா
யாரு தின்ற பாவக்கா - எங்க
அய்யா தின்ற பாவக்கா

மோரூத்தி பொரி பொரிச்சா மொறுமொறுங்கும் பாவக்கா
மொறுமொறுங்கும் பாவக்கா
நெய்யூத்திப் பொரிப்பொரிச்சா நொறுநொறுங்கும் பாவக்கா
நொறுநொறுங்கும் பாவக்கா 1

ரெண்டுசெடியுந் தூக்கித்தூக்கி ஓராயிரம் பாவக்கா
ஓராயிரம் பாவக்கா
வறுக்கலாமா பொரிக்கலாமா ஐயாயிரம் பாவக்கா
ஐயாயிரம் பாவக்கா
யாரு தின்ற பாவக்கா – எங்க
அய்யா தின்ற பாவக்கா
மோரூத்தி பொரி பொரிச்சா மொறுமொறுங்கும் பாவக்கா
மொறுமொறுங்கும் பாவக்கா
நெய்யூத்திப் பொரிப்பொரிச்சா நொறுநொறுங்கும் பாவக்கா
நொறுநொறுங்கும் பாவக்கா 2

மூனுசெடியுந் தூக்கித்தூக்கி ஓராயிரம் பாவக்கா
ஓராயிரம் பாவக்கா
வறுக்கலாமா பொரிக்கலாமா ஐயாயிரம் பாவக்கா
ஐயாயிரம் பாவக்கா
யாரு தின்ற பாவக்கா – எங்க
அய்யா தின்ற பாவக்கா
மோரூத்தி பொரி பொரிச்சா மொறுமொறுங்கும் பாவக்கா
மொறுமொறுங்கும் பாவக்கா
நெய்யூத்திப் பொரிப்பொரிச்சா நொறுநொறுங்கும் பாவக்கா
நொறுநொறுங்கும் பாவக்கா 3

*பாடல், பத்து எண்கள் வரை தொடர்கிறது.*

## 92. எடுத்தவிங்க சொல்லிடுங்க

ஜெயலலிதா, 12
கீதா, 6
மைதிலி, 11
ஊர்ப்புறம்,
வளப்பூர் நாடு

ஒருகொட்டாங்குச்சி கல்பொறுக்கி
செய்தேனப்பா மூக்குத்தி
செய்தேனப்பா மூக்குத்தி
எடுத்தவிங்க சொல்லிடுங்க
எழனிசாமி மூக்குத்தி
எழனிசாமி மூக்குத்தி
பாத்தவிங்க சொல்லிடுங்க
பழனிசாமி மூக்குத்தி
பழனிசாமி மூக்குத்தி 1

ரண்டுகொட்டாங்குச்சி கல்பொறுக்கி
செய்தேனப்பா மூக்குத்தி
செய்தேனப்பா மூக்குத்தி
எடுத்தவிங்க சொல்லிடுங்க
எழனிசாமி மூக்குத்தி
எழனிசாமி மூக்குத்தி
பாத்தவிங்க சொல்லிடுங்க
பழனிசாமி மூக்குத்தி
பழனிசாமி மூக்குத்தி 2

மூணுகொட்டாங்குச்சி கல்பொறுக்கி
செய்தேனப்பா மூக்குத்தி
செய்தேனப்பா மூக்குத்தி
எடுத்தவிங்க சொல்லிடுங்க
எழனிசாமி மூக்குத்தி
எழனிசாமி மூக்குத்தி
பாத்தவிங்க சொல்லிடுங்க
பழனிசாமி மூக்குத்தி
பழனிசாமி மூக்குத்தி 3

*பாடல், பத்து எண்கள் வரைதொடர்கிறது.*

## 93. அடகு வைத்தேனடா

ஈஸ்வரி, 14
லலிதா, 16
பெரியகோயிலூர்
வளப்பூர்நாடு

செயினத்தா அடகுவச்சேண்டா
மச்சான்டா திண்டுக்காரா
மல்லியப்பூ செண்டுக்காரா
பூப்போட்ட துண்டுக்காரா
உன்னாலே நா கெட்டன்டா 1

கெட்டரலுங் கெட்டுப்போடி
கண்ணே கருமயிலே
பெண்ணே பெருமயிலே
பின்னாலே பேசிக்கலாண்டி 2
தோட்டத்தா அடகுவெச்சண்டா
மச்சாண்டா திண்டுக்காரா
மல்லியப்பூ செண்டுக்காரா
பூப்போட்ட துண்டுக்காரா
உன்னாலே நா கெட்டன்டா 3

கெட்டாலுங் கெட்டுப்போடி
கண்ணே கருமயிலே
பெண்ணே பெருமயிலே
பின்னாலே பேசிக்கலாண்டி 4

சிமிக்கியத்தா அடகுவெச்சண்டா
மச்சான்டா திண்டுக்காரா
மல்லியப்பூ செண்டுக்காரா
பூப்போட்ட துண்டுக்காரா
உன்னாலே நா கெட்டன்டா 5

கெட்டாலுங் கெட்டுப்போடி
கண்ணே கருமயிலே
பெண்ணே பெருமயிலே
பின்னாலே பேசிக்கலாண்டி 6

*மூக்குத்தி, கொலுசு முதலியவற்றை அடகு வைத்ததாகப் பாடல் தொடர்கிறது.*

## 94. வாரார் மேஸ்திரி

புஷ்பா, 23
சகுந்தலா, 20
பெரியகோயிலூர்
வளப்பூர்நாடு

ஓரெலயும் பறிச்சு
மின்னே மடிகூட்டி
ஓரெலக்கும் மேலால
வழிநடந்து ராசாவே
சாமம் தெரியுமா
சாம்பராணி தெய்வமே
சக்தியுள்ள எங்கள் மேஸ்திரி
வாராரைய்யா வீதியில 1

ரண்டெலயும் பறிச்சு
மின்னே மடிகூட்டி
ரண்டெலக்கும் மேலால
வழிநடந்து ராசாவே
சாமம் தெரியுமா
சாம்பராணி தெய்வமே
சக்தியுள்ள எங்கள் மேஸ்திரி
வாராரைய்யா வீதியிலே 2

மூணெலயும் பறிச்சு
மின்னே மடிகூட்டி
மூணெலைக்கும் மேலால
வழிநடந்து ராசாவே
சாமம் தெரியுமா
சாம்பராணி தெய்வமே
சக்தியுள்ள எங்கள் மேஸ்திரி
வாராரைய்யா வீதியிலே 3

*பத்து எண்கள் வரை பாடல் தொடர்கிறது.*

# 95. சேசிக்கல் மூக்குத்தி

புஷ்பா, 23
சகுந்தலா, 18
பெரியகோயிலூர்
வளப்பூர்நாடு

ஒருதபாதா கல்பொறுக்கிச்
செய்தேனம்மா மூக்குத்தி
சேசிகல்லு[1] மூக்குத்தி
எடுத்தவிங்க குடுத்திடுங்க
எங்களோட மூக்குத்தி
எங்களோட மூக்குத்தி
பாத்தவங்க குடுத்திடுங்க
பரமசாது மூக்குத்தி
பரமசாது மூக்குத்தி 1

ரண்டுதபாதா கல்பொறுக்கிச்
செய்தேனம்மா மூக்குத்தி
சேசிகல்லு மூக்குத்தி
எடுத்தவிங்க குடுத்துடுங்க
எங்களோட மூக்குத்தி
எங்களோட மூக்குத்தி
பாத்தவங்க குடுத்திடுங்க
பரமசாது மூக்குத்தி
பரமசாது மூக்குத்தி 2

மூணுதபாதா கல்பொறுக்கிச்
செய்தேனம்மா மூக்குத்தி
சேசிகல்லு மூக்குத்தி
எடுத்தவிங்க குடுத்துடுங்க
எங்களோட மூக்குத்தி
எங்களோட மூக்குத்தி
பாத்தவங்க குடுத்திடுங்க
பரமசாது மூக்குத்தி
பரமசாது மூக்குத்தி 3

*[1] சிகப்புக்கல்*
*பத்து எண்கள் வரை பாடல் தொடர்கிறது.*

## 96. கிளியெல்லாம் ஓடிப்போச்சு

கண்ணகி, 12
நத்துக்குழிப்பட்டி
குண்டூர்நாடு

ஒருசெடியாம் தூக்கித்தூக்கிக் கிளிபரவுன சோல
கிளிபரவுன சோல
கிளியெல்லாம் ஓடிப்போச்சு மணலெடுக்கப் போவோம்
மணலெடுக்கப் போவோம் 1

ரண்டு செடியாம் தூக்கித்தூக்கிக் கிளிபரவுன சோல
கிளிபரவுன சோல
கிளியெல்லாம் ஓடிப்போச்சு மணலெடுக்கப் போவோம்
மணலெடுக்கப் போவோம் 2

மூணு செடியாம் தூக்கித்தூக்கிக் கிளிபரவுன சோல
கிளிபரவுன சோல
கிளியெல்லாம் ஓடிப்போச்சு மணலெடுக்கப் போவோம்
மணலெடுக்கப் போவோம் 3

*பத்து எண்கள் வரை பாடல் தொடர்கிறது.*

## 97. ஓரெல சாயல

ஜெயம்மாள், 26
செந்தாமரைச்செல்வி, 23
மேக்கலாந்துறை
சேலூர்நாடு

ஓரெல சாயல சாயசம்பா வீசல
வீசுனாலும் வீசுங்கோ
எங்கமுத்து மாரிக்கு 1

ரண்டெல சாயல சாயசம்பா வீசல
வீசுனாலும் வீசுங்கோ
எங்க முத்து மாரிக்கு 2

மூணெல சாயல சாயசம்பா வீசல
வீசுனாலும் வீசுங்கோ
எங்க முத்து மாரிக்கு 3

*பாடல், பத்து எண்கள் வரை தொடர்கிறது.*

## 98. குப்பையேறி மேயும் சேவல்

சின்னம்மாள், 34
அரிப்பலாப்பட்டி
தேவானூர் நாடு

ஒருகல் உருட்டி குண்டுமணி தெரட்டி
குப்பேறி மேயுதா நீலவண்ண சாவ(ல்)
சாவசாவ எங்குதா(ம்) சதுரமணித் தென்னே
சாவலுக்கு உள்ளதாண்டி நாந்தரண்டி கண்ணே
கண்ணே கதுரமலெ கல்வேரிக்குப் போறமலெ
வீரமலெக் கோயிலுக்கு விளையாடப் போவலாமா 1

ரெண்டுகல் உருட்டி குண்டுமணி தெரட்டி
குப்பேறி மேயுதா நீலவண்ண சாவ(ல்)
சாவசாவ எங்குதா(ம்) சதுரமணித் தென்னே
சாவலுக்கு உள்ளதாண்டி நாந்தரண்டி கண்ணே
கண்ணே கதுரமலெ கல்வேரிக்குப் போறமலெ
வீரமலெக் கோயிலுக்கு விளையாடப் போவலாமா 2

மூணுகல் உருட்டி குண்டுமணி தெரட்டி
குப்பேறி மேயுதா நீலவண்ண சாவ(ல்)
சாவசாவ எங்குதா(ம்) சதுரமணித் தென்னே
சாவலுக்கு உள்ளதாண்டி நாந்தரண்டி கண்ணே
கண்ணே கதுரமலெ கல்வேரிக்குப் போறமலெ
வீரமலெக் கோயிலுக்கு விளையாடப் போவலாமா 3

*பத்து எண்கள் வரை பாடல் தொடர்கிறது*

## 99. படிச்சு வாங்க

குழந்தையம்மாள், 75
ஏ. தண்ணிமாத்திப்பட்டி
வாழவந்திநாடு

ஒன்னாவது வாங்கித்தாரேன்
எம்மகனே பாலகனே
ஓடிப் படிச்சு வாங்க! 1

ரெண்டாவது வாங்கித்தாரேன்
எம்மகனே பாலகனே
நடந்து படிச்சு வாங்க! 2

மூணாவது வாங்கித்தாரேன்
எம்மகனே பாலகனே
நடந்து படிச்சு வாங்க! 3

*பாடல், பத்து எண்கள்வரை தொடர்கிறது*
*இது குழந்தையம்மாள் கட்டிய பாடல்.*

## 100. ஒதைப்பானடி வெள்ளைக்காரன்

சரஸ்வதி, 27
நரியங்காடு
சித்தூர் நாடு

ஆடீலதா(ன்) கொடிப்புடுங்கி
ஏலேலக் கும்மி ஏலேலோ
ஏலேலக்கும்மி ஏலேலோ
புழுதீலதா(ன்) கூட தெச்சி
ஏலேலக் கும்மி ஏலேலோ
ஏலேலக்கும்மி ஏலேலோ
கோணக்கோண பாத வெட்டி
ஏலேலக்கும்மி ஏலேலோ
ஏலேலக்கும்மி ஏலேலோ

கொப்பிப்பழம் பொறிக்கப் போனோம்
ஏலேலக் கும்மி ஏலேலோ
ஏலேலக் கும்மி ஏலேலோ

ஒருபழம் தப்புச்சனா
ஏலேலக் கும்மி ஏலேலோ
ஏலேலக் கும்மி ஏலேலோ - அடி
ஒதைப்பானடி வெள்ளைக்காரன்
ஏலேலக் கும்மி ஏலேலோ
ஏலேலக் கும்மி ஏலேலோ 1
ரெண்டுதட்டு மண்ணெடுத்து
ஏலேலக் கும்மி ஏலேலோ
ஏலேலக் கும்மி ஏலேலோ
ரெண்டாம்படி பாத்தும் வெட்டி
ஏலேலக் கும்மி ஏலேலோ
ஏலேலக் கும்மி ஏலேலோ
கோணக்கோண பாதெஏறி
ஏலேலக் கும்மி ஏலேலோ
ஏலேலக் கும்மி ஏலேலோ
கொப்பிப்பழம் பொறிக்கப் போனோம்
ஏலேலக் கும்மி ஏலேலோ
ஏலேலக் கும்மி ஏலேலோ
ரெண்டுபழம் தப்புச்சனா
ஏலேலக் கும்மி ஏலேலோ
ஏலேலக் கும்மி ஏலேலோ
ஒதைப்பானடி வெள்ளைக்காரன்
ஏலேலக் கும்மி ஏலேலோ
ஏலேலக் கும்மி ஏலேலோ - அடி 2

பாதயிலதா(ன்) பாலமரம்
ஏலேலக் கும்மி ஏலேலோ
ஏலேலக் கும்மி ஏலேலோ
பளப்பளன்னு பூக்கு(ம்) மரம்
ஏலேலக் கும்மி ஏலேலோ
ஏலேலக் கும்மி ஏலேலோ
பாப்பாத்திதா கொண்ட மேல
ஏலேலக் கும்மி ஏலேலோ
ஏலேலக் கும்மி ஏலேலோ

தொண்ணாத்தெட்டு பூவிருக்கும்
ஏலேலக் கும்மி ஏலேலோ
ஏலேலக் கும்மி ஏலேலோ 3

பாப்பாத்திதா(ன்) கொண்ட மேல
ஏலேலக் கும்மி ஏலேலோ
ஏலேலக் கும்மி ஏலேலோ
பத்துவகைப் பூவிருக்கும்
ஏலேலக் கும்மி ஏலேலோ
ஏலேலக் கும்மி ஏலேலோ
சாலுலதா சாராயமா
ஏலேலக் கும்மி ஏலேலோ
ஏலேலக் கும்மி ஏலேலோ
சாந்துக்குடி பண்டாரம்மா
ஏலேலக் கும்மி ஏலேலோ
ஏலேலக் கும்மி ஏலேலோ 4

*இலங்கைத் தோட்டத்தில் வேலை செய்தவர்களிடமிருந்து கற்ற பாடல் எனத் தெரிவித்தார்*

## 101. குங்கும மேடை

சகுந்தலா, 20
பெரியகோயிலூர்
வளப்பூர்நாடு

ஒருபுடிதா கருவமணி ஆதிபரா சோதி - இங்க
அழகுமுத்து மாரி
குங்கும மேடையிலதா குந்திருப்பது சோதி
குந்திருப்பது சோதி 1

ரெண்டுபுடிதா கருவமணி ஆதிபரா சோதி - இங்க
அழகுமுத்து மாரி
குங்கும மேடையிலதா குந்திருப்பது சோதி
குந்திருப்பது சோதி 2

மூணுபுடிதா கருவமணி ஆதிபரா சோதி - இங்க
அழகுமுத்து மாரி
குங்கும மேடையிலதா குந்திருப்பது சோதி
குந்திருப்பது சோதி 3

*பத்து எண்கள்வரை பாடல் தொடர்கிறது.*

## 102. மாரியாயி வீசிநடக்க

சகுந்தலா, 20
பெரியகோயிலூர்
வளப்பூர் நாடு

ஒருதட்டு மஞ்சவெட்டி மஞ்சநுணுக்கி
ஓரேத்தம் தண்ணியிலே கொஞ்சங் கலக்கி
சந்திரனுஞ் சூரியனுஞ் விஞ்சு நடக்க
சக்தியுள்ள மாரியாயி வீசி நடக்க 1

ரண்டுதட்டு மஞ்சவெட்டி மஞ்சநுணுக்கி
ஓரேத்தம் தண்ணியிலே கொஞ்சங் கலக்கி
சந்திரனுஞ் சூரியனுஞ் விஞ்சு நடக்க
சக்தியுள்ள மாரியாயி வீசி நடக்க 2

மூணுதட்டு மஞ்சவெட்டி மஞ்சநுணுக்கி
ஓரேத்தம் தண்ணியிலே கொஞ்சங் கலக்கி
சந்திரனுஞ் சூரியனுஞ் விஞ்சு நடக்க
சக்தியுள்ள மாரியாயி வீசி நடக்க 3

*பத்து எண்கள்வரை பாடல் தொடர்கிறது.*

## 103. சின்னப்பணம்

சகுந்தலா, 20
பெரிய கோயிலூர்
வளப்பூர்நாடு

ஓராணி ஓராணி தோட்டத்துல் -
ஒருவின் நட்டது வெள்ளிரிக்கா
காயிலுங் காயிரு பூவிலுங்காயிரு
காச்சுக் குலுங்குதாம் காரமல
காசுக்கொரு காயி விக்கச்சொல்லி

காயிதம் போட்டாராம் நம்மதொர
வெள்ளாளங்குடுத்தது வெள்ளிப்பணம்
வேடிக்கை பேசுதாஞ் சின்னப்பணம். 1

ரண்டாணி ஓராணி தோட்டத்துல -
ஒருவின் நட்டது வெள்ளிரிக்கா
காயிலுங் காயிரு பூவிலுங்காயிரு
காச்சுக் குலுங்குதாம் காரமல
காசுக்கொரு காயி விக்கச்சொல்லி
காயிதம் போட்டாராம் நம்மதொர
வெள்ளாளங்குடுத்தது வெள்ளிப்பணம்
வேடிக்கை பேசுதாஞ் சின்னப்பணம். 2

மூணாணி ஓராணி தோட்டத்துல -
ஒருவின் நட்டது வெள்ளிரிக்கா
காயிலுங் காயிரு பூவிலுங்காயிரு
காச்சுக் குலுங்குதாம் காரமல
காசுக்கொரு காயி விக்கச்சொல்லி
காயிதம் போட்டாராம் நம்மதொர
வெள்ளாளங்குடுத்தது வெள்ளிப்பணம்
வேடிக்கை பேசுதாஞ் சின்னப்பணம். 3

*பத்து எண்கள் வரை பாடல் தொடர்கிறது.*

## 104. வெள்ளைக்காரன் கொடுமை

**குழந்தையம்மாள்; 75**
**ஏ. தண்ணிமாத்திப்பட்டி**
**வாழவந்திநாடு**

ஏறுறது கொல்லிமல
எறங்குறது வெள்ளிச்சந்த
வெள்ளிச்சந்த பாக்கப்போயி
வேலாமுள்ளு பட்டதென்ன
வெள்ளக்கார கண்டுக்கிட்டா - அவ(ன்)
கையப் புடுச்சுக்கிட்டா
கன்னத்திலே ரெண்டுவச்சான் - அவ

கன்னத்திலே ரெண்டுவச்சான்
மேலான துரைமாரு
வாக்குமூலங் கேக்கும்போது
என்னத்தச் சொல்லப்போறேன்
ஏதத்தாஞ் சொல்லப்போறேன்.

*சுமைதூக்கிச் செல்லும்போது பாடுவது.*

## 105. தூள்பறக்கும்

சகுந்தலா, 20
பெரியகோயிலூர்
வளப்பூர்நாடு

| | | |
|---|---|---|
| எல்லாரும் நடக்குந்தடம் | லே | தங்கம் |
| கயிலுத்தடம் முள்ளுத்தடம் | லே | தங்கம் |
| எங்கு தங்கம் நடக்குந்தடம் | லே | தங்கம் |
| செரியான நெல்லிமரம் | லே | தங்கம் |
| எல்லாரும் விசிலடிச்சா | லே | தங்கம் |
| கண்ணடிக்கும் காதடிக்கும் | லே | தங்கம் |
| எங்குதங்கம் விசிலடிச்சா | லே | தங்கம் |
| ரங்குதங்கம் தூள்பறக்கும் | லே | தங்கம் |

## 106. மீனுத்தின்ற கணக்குப்புள்ளே

சகுந்தலா, 20
பெரியகோயிலூர்
வளப்பூர்நாடு

ஒருமமுட்டி மண்வெட்டி
ஒன்றச்சாணு கரும்புநட்டு
கரும்பேவா கரும்பே வா
கருங்கொளத்து மீனேவா
மீனத்தின்ற கணக்கப்புள்ளே
கதையச்சொல்றே கேளுங்க

ரண்டு மம்முட்டி மண்வெட்டி
ரண்டறச்சாணு கரும்பு நட்டு
கருங்கொளத்து மீனேவா
மீனத்தின்ற கணக்கப்புள்ளே
கதையச்சொல்றே கேளுங்க

மூணுமம்முட்டி மண்வெட்டி
மூண்றச்சாணு கரும்புநட்டு
கரும்பேவா கரும்பேவா
கருங்கொளத்து மீனே வா
மீனத்தின்ற கணக்கப்புள்ளே
கதையச் சொல்றே கேளுங்க.

*பாடல், பத்து எண்கள் வரை தொடர்கிறது.*

## 107. சாமக்காட்டு மூலையிலே

**புஷ்பா, 20**
**பெரியகோயிலூர்**
**வளப்பூர்நாடு**

சாமக்காட்டு மூலயிலே மணி தில்லாலே லோ
சாமளக்கப் போற மச்சா மணி தில்லாலே லோ
பாவசாயி சாமளக்க
அப்பிடிப்போடு இப்பிடிப்போடு
சுந்திரிவீட்டு எள்ளளக்க மணி தில்லாலே லோ
தெனக்காட்டு மூலயிலே மணி தில்லாலே லோ
தேனளக்கப் போறமச்சா மணி தில்லாலே லோ
சாவாயி தேனளக்க
அப்பிடிப்போடு இப்பிடிப்போடு
சுந்திரிவீட்டு எள்ளளக்க.

## 108. கிண்ணிச் சந்தனம்

**செந்தாமரைச் செல்வி, 23**
**மேக்கலாந்துறை**
**சேலூர் நாடு**

ஒருகிண்ணி சந்தனமா ஏலேலக்கும்மி ஏலேலோ
ஏலேலக் கும்மி ஏலேலோ
ஒண்றக்கிண்ணி குங்குமமா ஏலேலக்கும்மி ஏலேலோ
ஏலேலக் கும்மி ஏலேலோ
அள்ளியள்ளிப் பூசிடுவோம் ஏலேலக்கும்மி ஏலேலோ - எங்க
ஏலேலக்கும்மி ஏலேலோ

அழகுமுத்து மாரிக்கு ஏலேலக்கும்மி ஏலேலோ
ஏலேலக்கும்மி ஏலேலோ 1

ரண்டுகிண்ணி சந்தனமா ஏலேலக்கும்மி ஏலேலோ
ஏலேலக்கும்மி ஏலேலோ
ரண்டறக் கிண்ணி குங்குமமா ஏலேலக்கும்மி ஏலேலோ
ஏலேலக்கும்மி ஏலேலோ
அள்ளியள்ளிப் பூசிடுவோம் ஏலேலக்கும்மி ஏலேலோ
ஏலேலக்கும்மி ஏலேலோ - எங்க
அழகுமுத்து மாரிக்கு ஏலேலக்கும்மி ஏலேலோ
ஏலேலக்கும்மி ஏலேலோ 2

மூணுகிண்ணி சந்தனமா ஏலேலக்கும்மி ஏலேலோ
ஏலேலக்கும்மி ஏலேலோ
மூண்றக் கிண்ணி குங்குமமா ஏலேலக் கும்மி ஏலேலோ
ஏலேலக்கும்மி ஏலேலோ
அள்ளியள்ளிப் பூசிடுவோம் ஏலேலக்கும்மி ஏலேலோ
ஏலேலக்கும்மி ஏலேலோ - எங்க
அழகுமுத்து மாரிக்கு ஏலேலக்கும்மி ஏலேலோ
ஏலேலக்கும்மி ஏலேலோ 3

*பாடல், பத்து எண்கள் வரை தொடர்கிறது.*

## 109. ஆடும் கிளி

**செந்தாமரைச்செல்வி, 23**
**மேக்கலாந்துறை**
**சேலூர்நாடு**

அம்மி சுத்திக் கும்மியடிப்போம்
கம்பளப்பெண்ணே நாங்கதா
கம்பளப்பெண்ணே நாங்கதா 1

வேலி சுத்தி வெறகொடிப்போம்
வெள்ளாளப் பெண்ணே நாங்கதா
வெள்ளாளப் பெண்ணே நாங்கதா 2

மாங்கா மரங்கள் வெட்டி
மரங்கள் வெட்டி
மாமரத்து ஊஞ்சல் கட்டி
ஊஞ்சல் கட்டி
மாமரத்து ஊஞ்சலிலே
ஊஞ்சலிலே

ஆடுங்கிளி ஆண்கிளியோ
பெண்கிளியோ 3
ஆண்கிளியும் இல்லேசாமி
இல்லேசாமி
பெண்கிளியும் இல்லேசாமி
இல்லே சாமி - இது

ராமரோட கிளி சாமி
கிளி சாமி 4

## 110. பூவெடுத்துச் சூடி

செந்தாமரைச்செல்வி, 23
மேக்கலாந்துறை
சேலூர்நாடு

ஒருசெம்பு நீரெடுத்து எங்கண்ணே குடிக்க
எங்கண்ணே குடிக்க
ஒரு சாடிப் பூவெடுத்து நாங்க சூடிக்க
நாங்க சூடிக்க
காலுலதா சேறுபட்டா யாரு தொடைப்பா - இங்க
யாரு தொடைப்பா
மல்லியப்பூ சிந்திவிட்டா மைனர் தொடைப்பா(ன்)
மைனர் தொடைப்பா(ன்) 1

ரண்டு செம்பு நீரெடுத்து எங்கண்ணே குடிக்க
எங்கண்ணே குடிக்க

| | |
|---|---|
| ரண்டு சட்டிப் பூவெடுத்து | நாங்க பொடைக்க |
| | நாங்க பொடைக்க |
| காலுலதா சேறுபட்டா | யாரு தொடைப்பா - இங்க |
| | யாரு தொடைப்பா |
| மல்லியப்பூ சிந்திவிட்டா | மைனர்தொடைப்பா(ன்) |
| | மைனர் தொடைப்பா(ன்) 2 |
| மூனு செம்பு நீரெடுத்து | எங்கண்ணே குடிக்க |
| | எங்கண்ணே குடிக்க |
| மூனு சட்டிப் பூவெடுத்து | நாங்க பொடைக்க |
| | நாங்க பொடைக்க |
| காலுலதா சேறுபட்டா | யாரு தொடைப்பா - இங்க |
| | யாரு தொடைப்பா |
| மல்லியப்பூ சிந்திவிட்டா | மைனர்தொடைப்பா(ன்) |
| | மைனர் தொடைப்பா(ன்) 3 |

*பாடல், பத்து எண்கள் வரை தொடர்கிறது.*

## 111. எம்பொறப்பு நல்ல தங்கம்

**செந்தாமரைச்செல்வி, 23**
**மேக்கலாந்துறை**
**சேலூர்நாடு**

| | |
|---|---|
| ஒன்னாம் | படியாலரி |
| | படியாலரி |
| ஒருவெதப் | பூவெடுத்து |
| | பூவெடுத்து |
| பூவெடுத்துக் | கட்டி விட்டா |
| எம்பொறப்பு | நல்ல தங்கம் |
| | நல்ல தங்கம் |
| அந்த ம(லை)ல | இந்த மல |
| நடுவிருக்கும் | சேரமல |
| தேரமலக் | கோயிலுக்கு |
| | கோயிலுக்கு - நாங்க |
| வெளயாடப் | போறமம்மா |

# 112. சேவலைக்காணாம்

தனபாக்கியம், 25
கீதா, 20
மேக்கலாந்துறை
சேலூர்நாடு

ஓரிசிப் பஞ்சத்தில
நாவளக்கும் சாவ(ல்)
நா வளக்கும் சாவ - இத
நாலுநாளாக் காணாம்
பாத்தவிங்க சொல்லிடுங்க
பரமசிவஞ் சாவ(ல்)
எடுத்தவிங்க சொல்லிடுங்க
எங்களோட சாவ(ல்)

ரண்டரிசிப் பஞ்சத்தில
நா வளக்கும் சாவ(ல்)
நா வளக்கும் சாவ - இத
நாலுநாளாக் காணாம்
பாத்தவிங்க சொல்லிடுங்க
பரமசிவஞ் சாவ
எடுத்தவிங்க சொல்லிடுங்க
எங்களோட சாவ

மூனரிசிப் பஞ்சத்தில
நா வளக்கும் சாவ(ல்)
நா வளக்கும் சாவ - இத
நாலுநாளாக் காணாம்
பாத்தவிங்க சொல்லிடுங்க
பரமசிவஞ் சாவ
எடுத்தவிங்க சொல்லிடுங்க
எங்களோட சாவ

*பாடல், பத்து எண்கள் வரை தொடர்கிறது.*

## 113. சந்தனமும் குங்குமமும்

தனபாக்கியம், 25
கீதா, 20
மேக்கலாந்துறை
சேலூர்நாடு

ஒருகிண்ணிதா சந்தனமா — அல்லி லேலோ - மணி
அல்லிலே லோ
ஒண்ரக்கிண்ணிக் குங்குமமா — அல்லிலேலோ
அல்லிலேலோ - மணி
அரங்கசிவங் கோயிலுக்கு — அல்லிலே லோ -மணி
அல்லிலே லோ
அள்ளியள்ளிப் பூசுங்கடி — அல்லிலேலோ - மணி
அல்லிலேலோ
முருகப்பங் கோயிலுக்கு — அல்லிலேலோ - மணி
அல்லிலேலோ
மொண்டு மொண்டு பூசுங்கடி — அல்லிலேலோ - மணி
அல்லிலேலோ 1

ரண்டு கிண்ணிதா சந்தனமா — அல்லி லேலோ - மணி
அல்லிலே லோ
ரண்ரக்கிண்ணிக் குங்குமமா — அல்லிலேலோ
அல்லிலேலோ - மணி
அரங்கசிவங் கோயிலுக்கு — அல்லிலே லோ -மணி
அல்லிலே லோ
அள்ளியள்ளிப் பூசுங்கடி — அல்லிலேலோ - மணி
அல்லிலேலோ
முருகப்பங் கோயிலுக்கு — அல்லிலேலோ - மணி
அல்லிலேலோ
மொண்டு மொண்டு பூசுங்கடி — அல்லிலேலோ - மணி
அல்லிலேலோ 2

மூனுகிண்ணிதா சந்தனமா — அல்லி லேலோ - மணி
அல்லிலே லோ

மூண்ரக்கிண்ணிக் குங்குமமா அல்லிலேலோ
அல்லிலேலோ - மணி
அரங்கசிவங் கோயிலுக்கு அல்லிலே லோ -மணி
அல்லிலே லோ
அள்ளியள்ளிப் பூசுங்கடி அல்லிலேலோ - மணி
அல்லிலேலோ
முருகப்பங் கோயிலுக்கு அல்லிலேலோ - மணி
அல்லிலேலோ
மொண்டு மொண்டு பூசுங்கடி அல்லிலேலோ - மணி
அல்லிலேலோ 3

*பாடல், பத்து எண்கள் வரை தொடர்கிறது.*

## 114. ‘கிக்’கிருக்கும்

**தனபாக்கியம், 25**
**கீதா, 20**
**மேக்கலாந்துறை**
**சேலூர்நாடு**

ஒருபையி கருப்பிட்டிதா ஏலேலக்கும்மி ஏலேலோ
ஒரு கிண்ணி வேப்பம் பட்டெ ஏலேலக் கும்மி ஏலேலோ
காச்சிக்காச்சி ஊத்துறானாம் ஏலேலக் கும்மி ஏலேலோ
காசுக்குதா விக்கறானாம் ஏலேலக் கும்மி ஏலேலோ
குடிச்சா நல்லா ‘கிக்’கிருக்கும் ஏலேலக்கும்மி ஏலேலோ
கொப்புளிச்சா வாய்மணக்கும் ஏலேலக்கும்மி ஏலேலோ 1

ரண்டு பையி கருப்பட்டிதா ஏலேலக்கும்மி ஏலேலோ
ரண்டுகிண்ணி வேப்பம்பட்டெ ஏலேலக்கும்மி ஏலேலோ
காச்சிக்காச்சி ஊத்துறானாம் ஏலேலக்கும்மி ஏலேலோ
காசுக்குத்தா விக்கறானாம் ஏலேலக்கும்மி ஏலேலோ
குடிச்சா நல்லா ‘கிக்’கிருக்கும் ஏலேலக்கும்மி ஏலேலோ
கொப்புளிச்சா வாய்மணக்கும் ஏலேலக்கும்மி ஏலேலோ 2

மூனு பையி கருப்பட்டிதா ஏலேலக்கும்மி ஏலேலோ
மூனு கிண்ணி வேப்பம்பட்டெ ஏலேலக்கும்மி ஏலேலோ
காச்சிக்காச்சி ஊத்துறானாம் ஏலேலக்கும்மி ஏலேலோ

காசுக்குத்தா விக்கறானாம் ஏலேலக்கும்மி ஏலேலோ
குடிச்சா நல்லா 'கிக்'கிருக்கும் ஏலேலக்கும்மி ஏலேலோ
கொப்புளிச்சா வாய்மணக்கும் ஏலேலக்கும்மி ஏலேலோ 3

*பாடல், பத்து எண்கள் வரை தொடர்கிறது.*

## 115. குலுங்கும் வெள்ளிரிக்கா

**தெல்லிய வெள்ளையம்மாள், 70**
**ஆலேரிப்பட்டி**
**ஆலத்தூர் நாடு**

ஓராணி ஓராணித் தோட்டத்தில
ஒருவன் போட்டது வெள்ளிரிக்கா
காயில ஆயிரம் பூவுல ஆயிரம்
காச்சிக் குலுங்குதாம் வெள்ளிரிக்கா
வெள்ளிரிக்கா விக்கச் சொல்லி
காயிதம் போடுறா வெள்ளக்காரன்
வெள்ளக்காரம் பணம் சின்னப்பணம்
வேடிக்க காட்டுதே வெள்ளிப்பணம்
வெள்ளிப்பணத்துக்கு ஆசப்பட்டு
வேஷங் கொலையுறா வீராயி

ரெண்டாணி ஓராணித் தோட்டத்தில
ஒருவன் போட்டது வெள்ளிரிக்கா
காயில ஆயிரம் பூவுல ஆயிரம்
காச்சிக் குலுங்குதாம் வெள்ளிரிக்கா
வெள்ளிரிக்கா விக்கச் சொல்லி
காயிதம் போடுறா வெள்ளக்காரன்
வெள்ளக்காரம் பணம் சின்னப்பணம்
வேடிக்க காட்டுதே வெள்ளிப்பணம்
வெள்ளிப்பணத்துக்கு ஆசப்பட்டு
வேஷங் கொலையுறா வீராயி

மூணாணி ஓராணித் தோட்டத்தில
ஒருவன் போட்டது வெள்ளிரிக்கா
காயில ஆயிரம் பூவுல ஆயிரம்
காச்சிக் குலுங்குதாம் வெள்ளிரிக்கா
வெள்ளிரிக்கா விக்கச் சொல்லி
காயிதம் போடுறா வெள்ளக்காரன்
வெள்ளக்காரம் பணம் சின்னப்பணம்
வேடிக்க காட்டுதே வெள்ளிப்பணம்
வெள்ளிப்பணத்துக்கு ஆசப்பட்டு
வேஷங் கொலையுறா வீராயி

*பாடல், பத்து எண்கள் வரை தொடர்கிறது.*

## 116. வாரா மகமாயி

செல்லம்மாள், 60
சேலூர்கஸ்பா
சேலூர்நாடு

ஓரெல பறிச்சு மின்ன மடிக்கோலி
ஓரான பிடாரியம்மா வாரா மகமாயி
தேரேறி வாராளோ
தெண்டனிட வாராளோ
சீரங்கத்துக்கோவிரத்தக்
கொள்ளையிட வாராளோ 1
ரண்டெல பறிச்சி மின்ன மடிக்கோலி
ரண்டான பிடாரியம்மா வாரா மகமாயி
தேரேறி வாராளோ
தெண்டனிடவாராளோ
சீரங்கத்துக் கோவிரத்தக்
கொள்ளையிட வாராளோ 2
மூணெல பறிச்சு மின்ன மடிக்கோலி
மூணான கொங்கலம்மா வாரா மகமாயி
தேரேறி வாரியோ
தெண்டனிட வாரியோ
சீரங்கத்துக் கோவிரத்தக்
கொள்ளையிட வாரியோ 3

*பாடல் , பத்து எண்கள் வரை தொடர்கிறது.*

## 117. நெய்யளிக்கும் பாகற்காய்

செல்லம்மாள், 45
பள்ளக்குழி
சேலூர் நாடு

ஒரு கொடியத் தூக்கிப்பாத்தே(ன்)
ஓராயிரம் பாவக்கா(ய்)
சட்டியிலொடும் பாவக்கா
சாறுகாச்சும் பாவக்கா
இன்னுங் கொஞ்சம் நெய்தொளிச்சா[1]
நெய்யளிக்கும் பாவக்கா 1

ரண்டு கொடியத் தூக்கிப்பாத்தே
ரண்டாயிரம் பாவக்கா
கசப்பாக் கசக்கும் பாவக்கா
சட்டியிலொடும் பாவக்கா
சாறுகாச்சும் பாவக்கா
இன்னாங் கொஞ்சம் நெய்தொளிச்சா
நெய்யளிக்கும் பாவக்கா 2

மூணுகொடியத் தூக்கிப்பாத்தே
மூவாயிரம் பாவக்கா
சட்டியிலொடும் பாவக்கா
சாறுகாச்சும் பாவக்கா
இன்னாங்கொஞ்சம் நெய்தொளிச்சா
நெய்யளிக்கும் பாவக்கா 3

*[1] தெளித்தால் பத்து எண்கள் வரை பாடல் தொடர்கிறது*

## 118. ஆரஞ்சுப்பூத்தேர்

செல்லம்மாள், 45
பள்ளக்குழி
சேலூர் நாடு

ஓராணி ஓராணி சாத்தும்வெட்டி - இங்க
உச்சித் தலம்புல தேரெழுப்பி
[1]தேருக்கொடய பழனிநாதா - இங்க
வந்து வடம்புடித் தேரோட 1

ரண்டாணி ரண்டாணி சாத்தும்வெட்டி - இங்க
நாரத்தம் பூவுல தேரும்கட்டி - இந்தத்
தேருக்கொடய பழனிநாதா - இங்க
வந்து வடம்புடித் தேரோட 2

மூணாணி மூணாணி சாத்தும்வெட்டி - இங்க
ஊமத்தம் பூவுல தேரெழுப்பி
தேருக்கொடய பழனிநாதா - இங்க
வந்து வடம்புடித் தேரோட 3

நாலாணி நாலாணி சாத்தும்வெட்டி - இங்க
நாரத்தம் பூவுல தேருகட்டி
தேருக்கொடய பழனிநாதா - இங்க
வந்து வடம்புடித் தேரோட 4

அஞ்சாணி அஞ்சாணி சாத்தும்வெட்டி - இங்க
ஆரஞ்சுப் பூவுல தேரெழுப்பி
தேருக்கொடய பழனிநாதா - இங்க
வந்து வடம்புடித் தேரோட 5

ஆறாணி ஆறாணி சாத்தும்வெட்டி - இங்க
ஆரஞ்சுப் பூவுல தேரெழுப்பி
தேருக்கொடய பழனிநாதா - இங்க
வந்து வடம்புடித் தேரோட 6

ஏழாணி ஏழாணி சாத்தும்வெட்டி - இங்க
எலுமிச்சம் பூவுல தேரெழுப்பி
தேருக்கொடய பழனிநாதா - இங்க
வந்து வடம்புடித் தேரோட 7

எட்டாணி எட்டாணி சாத்தும்வெட்டி - இங்க
எலுமிச்சம் பூவுல தேரெழுப்பி
தேருக்கொடய பழனிநாதா - இங்க
வந்து வடம்புடித் தேரோட 8

ஒம்பதாணி ஒம்பதாணி சாத்தும்வெட்டி - இங்க
    ஊமத்தம் பூவுல தேரெழுப்பி
தேருக்கொடய பழனிநாதா - இங்க
    வந்து வடம்புடித் தேரோட 9

பத்தாணி பத்தாணி சாத்தும்வெட்டி - இங்கப்
    பத்துச்சம் பூவுல தேரெழுப்பி
தேருக்கொடய பழனிநாதா - இங்க
    வந்து வடம்புடித் தேரோட 10

[1] *தேருக்கு உடைய*

## 119. மயங்கும் மாமன்மார்

**சரஸ்வதி, 47**
**விரகனூர்ப்பட்டி**
**சேலூர் நாடு**

கும்மியடிக்கிற பொட்டலுல
குந்தியிருக்கிற மாமன்மாரே
கும்மி பறக்குது பாருங்களே - நானு
அஞ்சு பணந்தாரேன் கும்புடுங்கோ

ஆம்பளயென்று பிறக்கலாமா - நீங்க
அஞ்சு மொழவேஷ்டி கட்டலாமா?
மாருமேல் சந்தனம் பூசலாமா - நீங்க
மங்கயக் கண்டு மயங்கலாமா?

தன்னானே னாதினம் னானே தன்னாதினா - போடு
தானேதா தினம் தான்னே னன்னா.

## 120. கண்ணனூர் மாரி

**சம்பூரணம், 27**
**விரகனூர்ப்பட்டி**
**சேலூர் நாடு**

மாரியம்மன் கோயில்மின்னே
மயிலுவிளையாட
நாங்கள் விளையாட
ஜனங்கள் வந்து கூட

மயில வில மதிக்கக் கண்ணனூரு மாரி - அவள்
கண்ணனூரு மாரி
எழுந்திரிச்சா கொலகொலங்கும்[1] ராவரட்டின மால - எப்படி
ராவரட்டின மால 1

காளியம்மன் கோயில்மின்னே காசுவிளை யாட
நாங்கள்விளை யாட
ஜனங்கள் வந்து கூட
காசுவில மதிக்கக் கண்ணனூரு மாரி - அவள்
கண்ணனூரு மாரி 2
எழுந்திரிச்சா கொலகொலங்கும் ராவரட்டின மால - எப்படி
ராவரட்டின மால

சத்திரத்து மாரியம்மன் செடுலுத்திருநா(ள்) ஓட
நாங்கள் விளை யாட
ஜனங்கள் வந்து கூட
செடுல விலமதிக்கக் கண்ணனூரு மாரி - அவள்
கண்ணனூரு மாரி
எழுந்திரிச்சா கொலகொலங்கும் ராவரத்தினமால - எப்படி
ராவரத்தின மால 3

தலமலயுங் கோவிரத்தில் நெய்யிவிளை யாட
நாங்கள் விளை யாட
ஜனங்கள் வந்து கூட
நெய்ய விலமதிக்கக் கண்ணனூரு மாரி - அவள்
கண்ணனூரு மாரி
எழுந்திரிச்சா கொலகொலங்கும் ராவரத்தின மால - எப்படி
ராவரத்தின மால 4

சமயபுரம் கோவிரங்க தங்கரதம் ஓட
நாங்கள் விளை யாட
ஜனங்கள் வந்து கூட

தங்கரதம் விலமதிக்கக்
கண்ணனூரு மாரி - அவள்
கண்ணனூரு மாரி
எழுந்திரிச்சா கொலகொலங்கும்
ராவரத்தின மால - எப்படி
ராவரத்தின மால 5

[1] *'கலகல'ங்கும் என்னும் ஒலிக்குறிப்புச் சொல்.*

## 121. வட்டக்குடைப்பிடித்து வாரார்

சரஸ்வதி, 47
விரகனூர்ப்பட்டி
சேலூர் நாடு

ஒருகட்டுக் கரும்பாம் - பரங்கி
ஏத்துங்க தலயில
கப்பலு முக்காதம் - பரங்கி
கடலு முக்காதம்
எண்ணெயுந் தேச்சுக்கிட்டு - சுப்பையா
எலந்தப் பொட்டுமிட்டு
வட்டக் கொட[1]பிடிச்சு - சுப்பையா
வாரார் தோள்மேல 1

ரெண்டுகட்டுக் கரும்பாம் - பரங்கி
ஏத்துங்க தலயில
கப்பலு முக்காதம் - பரங்கி
கடலு முக்காதம்
கப்பலு செட்டிமவன் - சுப்பையா
எப்ப வருவாரோ
எண்ணெயுந் தேச்சுகிட்டு - சுப்பையா
எலந்தப் பொட்டுமிட்டு - அவரு
வட்டக் கொடபிடிச்சு - சுப்பையா
வாரார் தோள்மேல 2

மூணு கட்டுக் கரும்பாம் - பரங்கி
ஏத்துங்க தலயில
கப்பலு முக்காதம் - பரங்கி
கடலு முக்காதம்
கப்பலு செட்டிமவன் - சுப்பையா
எப்ப வருவாரோ
எண்ணெயுந் தேச்சுக்கிட்டு - அவுரு
எலந்தப் பொட்டுமிட்டு
வட்டக் கொடபிடிச்சு - சுப்பையா
வாரார் தோள்மேல 3

[1] குடை
*பத்து எண்ணிக்கை வரை பாடல் தொடர்கிறது*

## 122. யார் உயர்ந்தவர்?

அரசாயி, 55
விரகனூர்ப்பட்டி
சேலூர் நாடு

ஓடையிலே ஏலேலோ கல்பொறுக்கி - ஐலசா
கல்பொறுக்கி - ஐலசா
உலுத்தமரம் ஏலேலோ ஏத்துக்கட்டி - ஐலசா
ஏத்துக்கட்டி - அங்க 1

அத்தமவ(ன்) ஏலேலோ எறைக்குந்தண்ணி - ஐலசா
எறைக்குந் தண்ணி - ஐலசா
அத்தினியும் ஏலேலோ பச்சத்தண்ணி - ஐலசா
பச்சத்தண்ணி 2

எம்பொறப்பு ஏலேலோ எறைக்குந்தண்ணி - ஐலசா
எறைக்குந்தண்ணி - ஐலசா
அத்தினியும் ஏலேலோ எளநித்தண்ணி - ஐலசா
எளநித்தண்ணி - ஐலசா-அங்க 3
அத்தமவ(ன்) ஏலேலோ கட்டும்வேட்டி - ஐலசா
கட்டும்வேட்டி - ஐலசா - அங்க

அக்கியானம்[1] ஏலேலோ கிழிஞ்சவேட்டி - ஐலசா
கிழிஞ்சவேட்டி - ஐலசா-அங்க 4

ஆறுகாசு ஏலேலோ மண்ணுச்சட்டி - ஐலசா
மண்ணுசட்டி - ஐலசா
எம்பொறப்பு ஏலேலோ குடிக்குங்கும்பா[2] - ஐலசா
குடிக்குங்கும்பா-ஐலசா-அங்க 5
எட்டுரூபா ஏலேலோ எலுத்துக் கும்பா - ஐலசா
எலுத்துக் கும்பா

*[1] வெட்கக்கேடு [2] வெண்கலப் பாத்திரம்*
*ஒருவனுடைய முறைப்பெண் அவனைக் கேலி செய்து தாழ்த்திப்பாட, பொறுக்க முடியாத அவனுடைய சகோதரி உயர்த்திக் கூறிப் பாடுகிறாள்.*

## 123. நீ கொடுத்த தினைமாவு

**கல்தொட்டி குப்பாயி, 42**
**சித்தூரணிப்பட்டி**
**வாழவந்திநாடு**

சட்டியில தெனவாரி
சலசலன்னு தெனவெதச்சு
கருந்தெனயுங் செந்தெனயும்
கலந்து கட்டி வெதவெதச்சு

ஓராங்க மாசத்தில ஓரெலயும் தெனப்பயிராம்
ரெண்டாங்க மாசத்தில ரெண்டெலயுந் தெனப்பயிராம்
மூனாங்க மாசத்தில மூனெலயும் தெனப்பயிராம்
நாலாங்க மாசத்தில நாலெலையுந் தெனப்பயிராம்
அஞ்சாங்க மாசத்தில அஞ்செலயுந் தெனப் பயிராம்
ஆறாங்க மாசத்தில அறுக்குப்போவ ஆத்துல
ஆராரக் காவுவெச்சே கொழுந்தியராக் காவுவெச்சே(ன்)
கொடுமடியாக் கருதொளிப்பா
ஆராரக் காவுவெச்சே மாமனாரக் காவுவெச்சு
மடிமடியாக் கருதொளிப்பா(ன்)
ஆராரக் காவுவெச்செ வள்ளிப்பெண்ணக் காவுவச்சு
வெளஞ்சிருச்சு தெனக்கதிரு

ஓடியோடிப் பொறிச்சாளாம் ஒம்பதுமாடித் தெனக்கதிரு
பாடிப்பாடிப் பொறிச்சாளாம் பத்துமாடித் தெனக்கதிரு
வட்டப்பாற தேடியல்லோ கொட்டுனாளாம் தெனக்கதிரு
ஒட்டநல்ல ஒரலுவெச்சா
ஒருபூணுவ ஏக்கவச்சா குத்துனாளாம் தெனக்கதிரு

பாறமேல தேனழிச்சுப் பளபளன்னு மழபேஞ்சு
நீகுடுத்த தெனமாவு நெஞ்சப் பொளக்குதல்ல
தண்ணி கொண்டா வள்ளியரே
ஆத்திலேயுந் தண்ணிபோகும்
அள்ளிக்குடி பண்டாரமே
கொல்லிமலெத் தேனழிச்சி
கொழகொழன்னு மழபேஞ்சு
நீ கொடுத்த தெனமாவு
நெஞ்சப் பொளக்குதல்ல

பள்ளத்திலே தண்ணி போவும்
போயிக்குடி பண்டாரமே
ஆன குடிக்குந் தண்ணி
அய்யா குடிப்பதுண்டோ

## 124. ஒருகளை தப்பினாலும்

கல்தொட்டி குப்பாயி, 42
சித்தூரணிப்பட்டி,
வாழவந்திநாடு.

| | |
|---|---|
| ஏலோலபட்டி | மலகெளரி ஏலெலோ |
| | மல கெளரி ஐலலோ |
| கொத்துகள ஏலேலப்படி | வெட்டும்போது |
| கொத்துகள ஏலேலப்படி | வெட்டும்போது ஐலலோ |
| | வெட்டும்போது ஏலலே |
| ஒருகளதா ஏலேலப்படி | தப்புனாலும் |
| ஒருகளதா ஏலேலப்படி | தப்புனாலும் ஐலலோ |
| | தப்புனாலும் ஏலேலா |
| ஒதைப்பானடி ஏலேலோ | மாருகலங்க ஐலலோ |
| | மாருகலங்க ஏலேலோ |

## 125. பறந்தது பச்சைக்கிளி

பழனியம்மாள், 40
விரகனூர்ப்பட்டி
சேலூர் நாடு

கிழக்க நல்லா ஏலேலோ
கிணறு வெட்டி - ஐலசா
கிணறு வெட்டி - ஐலசா
கிழக்குப் பாத்து ஏலேலோ
மச்செழுப்பி - அங்க
மச்சுக்குள்ளே ஏலேலோ
ரெண்டுகிளி - ஐலசா
ரெண்டுகிளி - ஐலசா
கச்சிதமா ஏலேலோ
கொத்துங்கிளி - அங்க 1

பாவிப்பய ஏலேலோ
என்ன சொன்னா - ஐலசா
என்ன சொன்னா - ஐலசா
தொட்டு நல்லா ஏலேலோ
கடலப் போல - ஐலசா
கடலப் போல - ஐலசா 2

பொடியம்பய ஏலேலோ
ரண்டுபேரு - அங்க
பாவிப் பய ஏலேலோ
என்ன சொன்னா - ஐலசா
என்ன சொன்னா - அங்க
பறந்திடுச்சா ஏலேலோ பச்சக்கிளி. 3

## 126. கைபோட்ட அத்தைமகன்

செல்லம்மாள், 50
பள்ளக்குழி
சேலூர் நாடு

மஞ்சமஞ்ச சீலக்காரி தில்லாலே லேலா - அங்க
மாம்பழத்துக் கூடக்காரி தன்னானே னானே - அங்க
மானங்கெட்ட அத்தமக(ன்) தில்லாலே லேலா
மாங்கா மேலே கையப்போட்டா தன்னானே னானே 1

| | |
|---|---|
| வெள்ளவெள்ளச் சீலக்காரி | தில்லாலேலா - அங்க |
| வெள்ளரிக்காக் கூடக்காரி | தன்னானேனா - அங்க |
| வெக்கங்கெட்ட அத்தமவ(ன்) | தன்னானேனா |
| வெள்ளரிமேல கையப்போட்டா | தில்லாலேலா 2 |
| மந்தையிலதா வெளக்கெரிய | தில்லாலேலா-அந்த |
| மாமன் மவன் கணக்கெழுத | தன்னானேனானா-அந்த |
| மஞ்சச்சீலக் காரிகளே | தில்லாலேலேலா-அங்க |
| மறந்தாங்க ரண்டெழுத்த | தன்னானே னானா 3 |
| வீதியிலதா வெளக்கெரிய | தில்லாலேலாலே -அந்த |
| வீமமகன் கணக்கெழுத | தன்னானே னானா |
| வெள்ளச்சீலக்காரிகளே | தில்லாலே லேலா - அங்க |
| விட்டிங்க ரண்டெழுத்தத் | தன்னானே னானா 4 |
| கூடமேல கூடகட்டி | தன்னானே னானே - அங்க |
| கூடானூரு போற பெண்ணே | தில்லாலே லேலா - அந்தக் |
| கூறுகெட்ட அத்தெமவ(ன்) | தன்னானே னானா-அங்கக் |
| கூடமேல கையப்போட்டா | தில்லாலே லேலா 5 |
| சாறுமேல சாரங்கட்டி | தன்னானே னானா - அங்க |
| சாரானூரு போற பெண்ணே | தங்கமே தங்கம் - அங்க |
| சாதிகெட்ட அத்தமவ(ன்) | தில்லலே லேலா - அங்க |
| சாட்டமேல கையப்போட்டா | தன்னானே னானா 6 |

னன்னானா னானன்னா னானே
னானன்னா னன்னே னன்னானே

## 127. உன்ன விடப்போவதில்லே

சரஸ்வதி, 47
விரகனூர்ப்பட்டி
சேலூர் நாடு

ஒருத்தி வளத்தசாவ
ஒத்தமணி போட்டசாவ
பத்தினியா வளத்தசாவ
ஒத்தயில கூவுதடி 1

வெள்ளிமலெ சோங்கு
விளாரிமலெ கானல்
நாகமலெத் தோட்டம்
நடத்தப்போற(ன்) பாட்டு 2

அல்லி பொசுத்தகமா
அடிமடியா வெத்தலையா
கிள்ளின வெத்தலைக்கு - இப்போ
கிளிகள்வந்து லாகுதடி 3

வெள்ளிமலெ சோங்கு
விளாரிமலெ கானல்
நாகமலெத் தோட்டம்
நடத்தப் போற(ன்) பாட்டு 4

கணயாழி மோதிரமா
நிழலாடும் பச்சக்கல்லு
உச்சிவிடும் பிச்சிப்பூ - நா
உன்னவிடப் போவதில்லே 5

வெள்ளிமலெ சோங்கு
விளாரிமலெ கானல்
நாகமலெத் தோட்டம்
நடத்தப்போற(ன்) பாட்டு 6

தன்னானே னானே னன்னா
னனனான்னே னானேனன்னா
தன்ன னன்னே னானே னன்னா
னானானே னானேனன்னா
னன்னன்ன னானா
னானே னன்னே னானே 7

## 128. ராசாவக் காணோம்

துறையூர் சின்னம்மா, 85
எம்.ஜி.ஆர். நகர்
வாழவந்தி நாடு

மல்லியப்பூத் தோட்டத்துல
மன்னா[1] வரக்கண்டே(ன்)
மல்லியப்பூ அரும்பக் கண்டேன்
மன்னா வரக்காணோம் 1

காசரளித் தோட்டத்துல
    ராசாவேக் கண்டே(ன்)
காசரளி அரும்பக்கண்டே
    ராசாவக் காணாம் 2

செவிந்தியப்பூத்[1] தோட்டத்திலே
    சேவூவரக்[3] கண்டேன்
செவிந்தியப்பூ அரும்பக் கண்டேன்
    சேவூவரக் காணாம் (மல்லிய... 3

[1] மன்னா [2] செவ்வந்தி [3] சேவகர்

## 129. அழைக்கப்படும் மேளம்

செல்லம்மாள், 45
பள்ளக்குழி
சேலூர் நாடு

ஒருமூங்கி தண்ணிய ஏத்துவாளாம் சின்னம்மா
    ஒரூரு மோளத்த அழைக்குவாளாம் சின்னம்மா
    சீரோட வாரயா சீருதப்பி வாரயா
    சிறுமூங்கிதா(ன்) கோவரத்த அழிக்கிறப்ப வாரயா 1
ரெண்டுமூங்கி தண்ணிய ஏத்துவாளாம் சின்னம்மா
    ரெண்டூரு மோளத்த அழைக்குவாளாம் சின்னம்மா
    சீரோட வாரயா சீருதப்பி வாரயா
    சிறுமூங்கிதா கோவரத்த அழிக்கிறப்ப வாரயா 2
மூணுமூங்கி தண்ணிய ஏத்துவாளாம் சின்னம்மா
    மூணூறு மோளத்த அழைக்குவாளாம் சின்னம்மா
    சீரோட வாரயா சீருதப்பி வாரயா
    சிறுமூங்கிதா கோவரத்த அழிக்கிறப்ப வாரயா 3

*பத்து எண்கள் வரை பாடல் தொடர்கிறது.*

# 130. வாசங்கொண்டு வந்தோம்

சரஸ்வதி, 27
நரியங்காடு
சித்தூர்நாடு
பிடாரியம்மாள், 30
அரிப்பலாப்பட்டி
தேவானூர் நாடு

பச்சகநாச்சி பச்சகநாச்சி
ஏன்டியம்மா இந்நேரத்துக்குள்ளே
தும்பப்பூ வாசங்கொண்டு
நாங்கவந்தோம் இந்நேரத்துக்குள்ளே 1

பச்சகநாச்சி பச்சகநாச்சி
ஏன்டியம்மா இந்நேரத்துக்குள்ளே
அரளிப்பூ வாசங்கொண்டு
நாங்கவந்தோம் இந்நேரத்துக்குள்ளே 2

பச்சகநாச்சி பச்சகநாச்சி
ஏன்டியம்மா இந்நேரத்துக்குள்ளே
ரோஜாப்பூ வாசங்கொண்டு
நாங்கவந்தோம் இந்நேரத்துக்குள்ளே 3

பச்சகநாச்சி பச்சகநாச்சி
ஏன்டியம்மா இந்நேரத்துக்குள்ளே
மல்லியப்பூ வாசங்கொண்டு
நாங்கவந்தோம் இந்நேரத்துக்குள்ளே 4

பச்சகநாச்சி பச்சகநாச்சி
ஏன்டியம்மா இந்நேரத்துக்குள்ளே
குண்டுமல்லி வாசங்கொண்டு
நாங்கவந்தோம் இந்நேரத்துக்குள்ளே 5

பச்சகநாச்சி பச்சகநாச்சி
ஏன்டியம்மா இந்நேரத்துக்குள்ளே
அடுக்குமல்லியப்பூ வாசங்கொண்டு
நாங்கவந்தோம் இந்நேரத்துக்குள்ளே 6

பச்சகநாச்சி பச்சகநாச்சி
ஏன்டியம்மா இந்நேரத்துக்குள்ளே
கொப்பமல்லியப்பூ வாசங்கொண்டு
நாங்கவந்தோம் இந்நேரத்துக்குள்ளே 7

பச்சகநாச்சி பச்சகநாச்சி
ஏன்டியம்மா இந்நேரத்துக்குள்ளே
வாடாமல்லியப்பூ வாசங்கொண்டு
நாங்கவந்தோம் இந்நேரத்துக்குள்ளே 8

*தரைமெழுகி முக்காலியிட்டுக் குழந்தையை அமர்த்தி, நீர்க்குடம், பூ, மஞ்சள் தழை முதலியவை வைத்துச் சுற்றி வந்து பாடுவது.*

## 131. வெட்டினாலும் வெட்டலையே

சரஸ்வதி, 27
நரியங்காடு
பிடாரியம்மாள், 30
அரிப்பலாப்பட்டி
தேவானூர் நாடு

ஒருகட்டு இரும்பெடுத்து ஓவா காளியம்மா
ஓரம்புள்ள புடுவபண்ணி ஓவா காளியம்மா
வெட்டுனாலும் வெட்டுலையே ஓவா காளியம்மா
வேதாம்பய பண்ணருவா ஓவா காளியம்மா 1

ரெண்டுகட்டு இரும்பெடுத்து ஓவா காளியம்மா
ரண்டாம் பிள்ளே கொடுவா பண்ணி ஓ வா காளியம்மா
வெட்டுனாலும் வெட்டுலையே ஓவா காளியம்மா
வேதாம்பய பண்ணருவா ஓவா காளியம்மா 2

மூணுகட்டு இரும்பெடுத்து ஓவா காளியம்மா
மூணாம் புள்ளே புடுவ பண்ணி ஓ வா காளியம்மா
வெட்டுனாலும் வெட்டுலையே ஓவா காளியம்மா
வேதாம்பய பண்ணருவா ஓவா காளியம்மா 3

*வேதாம்பய - கொல்லன் பையன்.*
*பாடல், பத்து எண்கள் வரை தொடர்கிறது.*

## 132. அள்ளி அள்ளிப் பூசுங்கோ

பார்வதி, 25,
வாசலூர்ப்பட்டி
திண்ணனூர் நாடு
சரஸ்வதி, 27
நரியங்காடு
சித்தூர் நாடு

ஒருகிண்ணி சந்தனம்
ஒன்றரக் கிண்ணி குங்குமம்
அள்ளி அள்ளிப் பூசுங்கோ
அழகு முத்து மாரிக்கி 1

ரெண்டு கிண்ணி சந்தனம்
ரெண்டறக் கிண்ணி குங்குமம்
அள்ளி அள்ளிப் பூசுங்கோ
அழகுமுத்து மாரிக்கி 2

மூனுகிண்ணி சந்தனம்
மூன்றரைக் கிண்ணி குங்குமம்
அள்ளி அள்ளிப் பூசுங்கோ
அழகு முத்து மாரிக்கி 3

*பத்து எண்கள் வரை பாடல் தொடர்கிறது.*

## 133. சுழலும் கரகம்

துறையூர் சின்னம்மா, 85
எம்.ஜி.ஆர். நகர்
வாழவந்தி நாடு

ஒன்னாநல்ல கரகமடி அம்மா - ஓகோ - தாயே - ஆஹா
ஓடிவரும் பூங்கரகம் இப்போ -
கரகமெல சுழறுதடி[1] அம்மா - ஓகோ - தாயே - ஆஹா
கன்னிமாரு சூழ்ந்து[2] வரும் இப்போ 1

ரண்டாங் நல்ல கரகமடி அம்மா - ஓகோ - தாயே - ஆஹா
எடுத்தாடும் பூங்கரகம் இப்போ
கரகமெலாம் சுழறுதடி அம்மா - ஓகோ - தாயே - ஆஹா
கன்னிமாரு சூந்துவரும் இப்போ 2

மூணாநல்ல கரகமடி அம்மா - ஓகோ - தாயே - ஆஹா
மூடிகரகம் பொன்னாலதா இப்போ
கரகமெல்லாம் சுழறுதடி அம்மா - ஓகோ - தாயே - ஆஹா
கரகமெல்லாம் சுழறுதடி அம்மா 3

நாலா நல்ல கரகமடி அம்மா - ஓகோ - தாயே - ஆஹா
நடந்தாடும் பூங்கரகம் இப்போ
கரகமெலாம் சுழறுதடி அம்மா - ஓகோ - தாயே - ஆஹா
கண்ணனூரு மேடையிலே இப்போ 4

அஞ்சாநல்ல கரகமடி அம்மா - ஓகோ - தாயே - ஆஹா
அசஞ்சாடும் பூங்கரகம் இப்போ
கரகமெல்லாம் சுழறுதடி அம்மா - ஓகோ - தாயே - ஆஹா
கன்னிமாரு சூந்துவரும் இப்போ 5

ஆறாநல்ல கரகமடி அம்மா - ஓகோ - தாயே - ஆஹா
அடிகரகம் பொன்னாலதா இப்போ
கரகமெலாம் சுழறுதடி அம்மா - ஓகோ - தாயே - ஆஹா
கண்ணனூரு மேடையிலே இப்போ 6

ஏழாம்நல்ல கரகமடி அம்மா - ஓகோ - தாயே - ஆஹா
எடுத்தாடும் பூங்கரகம் இப்போ
கரகமெலாம் சுழறுதடி அம்மா - ஓகோ - தாயே - ஆஹா
கன்னிமாரு சூந்துவரும் இப்போ 7

எட்டாம்நல்ல கரகமடி அம்மா - ஓகோ - தாயே - ஆஹா
எடுத்தாடும் பூங்கரகம்இப்போ
கரகமெலாம் சுழறுதடி அம்மா - ஓகோ - தாயே - ஆஹா
கன்னிமாரு சூந்துவரும் இப்போ 8

ஒன்பதாம் கரகமடி அம்மா - ஓகோ - தாயே - ஆஹா
ஓடிவரும் பூங்கரகம் இப்போ
கரகமெலாம் சுழறுதடி அம்மா - ஓகோ - தாயே - ஆஹா
கன்னிமாரு சூந்துவரும் இப்போ 9

பத்தாம்நல்ல கரகமடி அம்மா - ஓகோ - தாயே - ஆஹா
பறந்தாடும் பூங்கரகம் இப்போ
கரகமெலாம் சுழறுதடி அம்மா - ஓகோ - தாயே - ஆஹா
கன்னிமாரு சூந்துவரும் இப்போ 10

## 134. முந்தாணி படுது

துறையூர் சின்னம்மா, 85
எம்.ஜி.ஆர். நகர்
வாழவந்திநாடு

கும்மியடிக்கிற பக்கத்துல - நல்லா
குந்தியிருக்கிற மாமன்மாரே - நல்லா
குந்தியிருக்கிற மாமன்மாரே
முந்தாணிபடுது ஏந்திரிங்க - நல்ல
மூணு பணந்தாரே(ன்) கும்புடுங்க - நல்ல
மூணு பணந்தாரே(ன்) கும்புடுங்க 1

பாட்டுப் பாடுற பக்கத்துல - நல்லா
பாத்திருக்கிற மாமன்மாரே - நல்லா
பாத்துருக்கிற மாமன்மாரே
பாவாட படுது எந்திரிங்க - நா(ன்)
பத்துப் பணந்தாரே(ன்) கும்புடுங்க - நல்ல
பத்துப் பணந்தாரே கும்புடுங்க 2

னன்ன னன்னே ஏலேலோ
னானே னன்னே ஐலல்லோ
னன்ன னன்னே ஏலேலோ
னானே னன்னே

## 135. ஆட்டுக்கறி

குழந்தையம்மாள், 75
ஏ. தண்ணிமாத்திப்பட்டி
வாழவந்திநாடு

ஆட்டுக்கறியச் சாறுவச்சு
மூட்டு[1] வச்சேனே
அடுத்தவீட்டுக்காரிய யெல்லாம்
ஏங்க வச்சேனே 1

கோழிக்கறியச் சாறுகாய்ச்சி
மூட்டு வச்சேனே
கோட்டுவீட்டுக் காரிய எல்லாம்
ஏங்க வச்சேனே 2

மூட்டுக் குட்டியே மூட்டுக்குட்டியே
விக்கச் சொன்னேனே - அங்கு
மூலவீட்டுல சீலபோட்டு
முடங்கச் சொன்னேனே. 3

[1] *முகந்து*

## 136. ஆட்டம்பாக்கப் போவோம்

தெல்லிய வெள்ளையம்மாள், 70
ஆலேரிப்பட்டி
ஆலத்தூர்நாடு

பட்டுப்போம் பயிலுருப்போம் நேந்துடுங்க
பயித்துரு வண்ணத்திலே நேந்துடுங்க
கொட்டுடுப்போம் கொயிலிருப்போம்
கோயிலு வண்ணத்திலே நேந்துக்குங்க நாம்
ஆணாந்தூருலதான் பொண்டுகளா
ஆட்டம் பாக்க நாம போவோம் வாங்க

கொட்டுடுப்போம் கோயிலிருப்போம்
கோயிலூரு வண்ணத்திலே நேந்துடுங்க
மூணாந்தூருலதான் பொண்டுகளா நாம
கூத்துப்பாக்க நாம போடுவோம் வாங்க.

## 137. பூமி பிளந்துவிடும்

கல்தொட்டி குப்பாயி, 42
சித்தூரணிப்பட்டி
வாழவந்திநாடு

ஒருகுத்து மூங்கவெட்டி
மலயோரங்க சாத்தி
மலயோரங்க சாத்தி - அங்கரண்டு மலையாளனு(ம்)
ஏலங்கூறி வாரா(ன்)
ஏலங்கூறி வாரா(ன்)

செங்காத்துந்தா செம்மழயும்
வருகிதடாலண்ணா
வருகிதடாலண்ணா

சென்னிகிரி தோப்புல ஒண்டிலாமடி பெண்ணே
ஒண்டிலாமடி பெண்ணே
பெண்ணே பெண்ணே லிங்காதடா
புத்திகெட்ட மடயா
புத்திகெட்ட மடயா
பூமாதேவி கண்டாலன்னா
பொளந்திருவா இப்போ
பொளந்திருவா இப்போ

ரெண்டுகுத்து மூங்கவெட்டி
மலயோரங்க சாத்தி
மலயோரங்க சாத்தி - அங்கரண்டு மலையாளனு(ம்)
ஏலங்கூறி வாரா(ன்)
ஏலங்கூறி வாரா(ன்)

செங்காத்துந்தா செம்மழயும்
வருகிதடாலண்ணா
வருகிதடாலண்ணா

சென்னிகிரி தோப்புல ஒண்டிலாமடி பெண்ணே
ஒண்டிலாமடி பெண்ணே
பெண்ணே பெண்ணே லிங்காதடா
புத்திகெட்ட மடயா
புத்திகெட்ட மடயா
பூமாதேவி கண்டாலன்னா
பொளந்திருவா இப்போ
பொளந்திருவா இப்போ

மூணுகுத்து மூங்கவெட்டி
மலயோரங்க சாத்தி
மலயோரங்க சாத்தி - அங்கரண்டு மலையாளனு(ம்)
ஏலங்கூறி வாரா(ன்)
ஏலங்கூறி வாரா(ன்)

செங்காத்துந்தா செம்மழயும்
வருகிதடாலண்ணா
வருகிதடாலண்ணா

சென்னிகிரி தோப்புல ஒண்டிலாமடி பெண்ணே
ஒண்டிலாமடி பெண்ணே
பெண்ணே பெண்ணே லிங்காதடா
புத்திகெட்ட மடயா
புத்திகெட்ட மடயா
பூமாதேவி கண்டாலன்னா
பொளந்திருவா இப்போ
பொளந்திருவா இப்போ

*பாடல், பத்து எண்கள் வரை தொடர்கிறது.*

# 138. தொரமகளாடுங் கும்மி

துறையூர் சின்னம்மா, 85
எம்.ஜி.ஆர். நகர்
வாழவந்திநாடு

தன்ன னன்னே ஏலேலோ
னானே னன்னே ஐலல்லோ
னானே னன்னே
னன்னே னன்னே ஏலேலோ
னானே னன்னே 1

நன்னன்னே கும்மினா நீனக்கும்மி - நல்ல
நாலு தொரமக[1] ளாடுங்கும்மி - நல்ல
நாலு தொரமக ளாடுங்கும்மி
தில்லால கும்மி தின்னக்கும்மி- நல்ல
செல்லத் தொரமக ளாடுங்கும்மி - நல்ல
செல்லத் தொரமக ளாடுங்கும்மி 2

ஓரா ஓராந் தோட்டத்துல
ஒருவன் போட்டது வெள்ளிரிக்கா
காசிக்கு ரெண்டு விக்கச்சொல்லி
காகிதம் போட்டானாம் வெள்ளக்காரன் 3

வெள்ளக்காரன்பணம் சின்னப்பணம்
வேடிக்க காட்டுதாம் வெள்ளிப்பணம்
சின்னக் கெணத்துல பாம்படிச்சு
சிங்காரத் தோப்புல வேட்டையாடி
வேட்டையாடிமாரி வெளிய வாராளாம்
வெள்ளிக் குஞ்சம்போட்டு வீசுறாளாம் 4

[1] துரைமகள்

# 139. சுறுசுறுப்பு இல்லாத கொழுந்தனார்

செல்லம்மாள், 45
பள்ளக்குழி
சேலூர் நாடு

ஒன்னாம் பலகமேல
பலகமேல
ஒண்றச்சாணு[1] மெத்தமேல - இங்க
மெத்தமேல
தூங்கிவாடா கொழுந்தினாரே - இங்க
கொழுந்தினாரே
சுறுசுறுப்பு இல்லாமதா - இங்க
இல்லாமதா
சொல்லுக் கட வச்சுடாதே - இங்க
வச்சுடாதே 1

ரண்டாம் பலகமேல
பலகமேல
ரண்ரச்சாணு[2] மெத்தமேல - அங்க
மெத்தமேல
தூங்கிவாடா கொழுந்தினாரே
கொழுந்தினாரே
சுறுசுறுப்பு இல்லாமதா
இல்லாமதா
சொல்லுக்கட வச்சிடாதே - இங்க
வச்சிடாதே 2

மூனாம் பலகமேல
பலகமேல
மூண்ரச்சாணு[2] மெத்தமேல - அங்க
மெத்தமேல
தூ272lவாடா கொழுந்தினாரே
கொழுந்தினாரே
சுறுசுறுப்பு இல்லாமதா
இல்லாமதா
சொல்லுக்கட வச்சிடாதே - இங்க
வச்சிடாதே 3

[1] *ஒன்றரைச்சாண்* [2] *இரண்டரைச்சாண்*
*பத்து எண்கள் வரை பாடல் தொடர்கிறது*

ஒயில் கும்மி

## 140. கண்டுவந்தேன்

சின்னக்குழந்தையன், 30
சின்னவெள்ளையன், 30
பனஞ்சாட்டுப்பட்டி
அரியூர்நாடு

தன்னன்னே னானனன்னா னான னானனானே
னன்னன்னே னானனன்னா னான னானனானே

தன்னன்னா ஐய்யானாரே மெய்யனாரே சாமி
தட்டுனா விரிச்சிக்கத
கண்டுவந்தே ஒன்னு - சாமி
கெழங்குவெட்ட குழிதனிலே சாமி
தட்டுனா கண்டுவந்தே
செங்கொழந்தே ஒன்னு - சாமி

கடுகுமல ஓரத்திலே சாமி-
தட்டுனா கண்டுவந்தே
செங்கொழந்த ஒன்னு - சாமி
போகுநல்லா வழிதனிலே சாமி-
தட்டுனா புதுமையொன்னு
கண்டுவந்தே ஒன்னு - சாமி
கெழங்கு சொம தலயில்வைத்து - மானே
தட்டுனா இங்கிதமா வழிநடந்தே தேனே

தன்னன்னா ஐய்யனாரே மெய்யனாரே சாமி- தட்டுனா
விரிச்சிகதா கண்டுவந்தே ஒன்னு - சாமி
அடிகப்பட ஓரத்தில சாமி - தட்டுனா கண்டுவந்தே
பெண்கொழந்த ஒன்னு

தன்னன்னா நாங்க அம்மா தலயில்வைத்து மானே - தட்டுனா
இங்கிதமா வழிநடந்தே தேனே
ஆறுகட்டி நூறுசரம் சாமி - தட்டுநா
நகைகளெல்லாம் கண்டுவெப்பே தேனே

தத்தித்தோம் ததிகிடதோம்
தாதைய்யத் தத்தித்தோம்.

*மாரியம்மன் திருவிழாவிலும், பொழுதுபோக்காக ஊரிலும் வெளியூர் சென்றும் பாடி ஆடப்படுகிறது.*

## 141. ஓடிவந்தே கந்தனாரே

சின்னக்குழந்தையன், 30
சின்னவெள்ளையன், 30
பனஞ்சாட்டுப்பட்டி
அரியூர்நாடு

தையா தான னன்னா னானனன்னா னானே னன்னா - னன்னா
னான னன்னா னானனன்னா னானே னன்னா

ஐயா என்ன ராசா சோழராச நாதுனாரே[1] நல்லா
இதுக்குலுங்கி ஏதுசெய்வோம் கந்தனாரே[2] - ஐயா
ஆறுசம்பா நாம் வளத்தோம் நாதுனாரே- நல்ல
ராவிலயும் ஓடி வந்தே கந்தனாரே

ஐயா பெண்மணியத் தேடிவந்தே நாதுனாரே
பித்தங்களா ஏறுதய்யா கந்தனாரே - ஐயா
கண்ணே வெள்ளி தன்னேதானே நாதுனாரே - நல்ல
காதலயா ஓடிவந்தே கந்தனாரே - ஐயா

என்ன நம்ம சோழராச நாதுனாரே- நல்ல
இதுக்குலுங்கி ஏதுசெய்வோம் கந்தனாரே
கண்ணே வெள்ளி தன்னேதானே நாதுனாரே நல்ல
காதலயும் ஓடிவந்தே கந்தனாரே

ஐயா வானமெல்லாந் தேடிவந்தே நாதுனாரே - நல்ல
வள்ளியப்பவ வகையினாலே கந்தனாரே தானனன்னா

தத்தித்தோம் ததிகிடதோம்
தாதைய்யா தத்தித்தோம்.

[1,2] பெரியவர்களைக் குறிக்கும் சொற்கள்.

# 142. அய்யனாரை அடிவணங்கி

சின்னக்குழந்தையன், 30
சின்னவெள்ளையன், 30
பனஞ்சாட்டுப்பட்டி
அரியூர்நாடு

தைய்யா
தன்னே னன்னன னான னன்னே னானனன்னான
னானனன்னா னானனன்னா னானனே னன்னானன்னா

சோதும இல்லாத தொரு சொர்ணமணி மண்டேகமா
சொர்ணமணி மண்டேகமா
முன்னவந்து நின்றேனய்யா -
அடியே

ஆதிஅணப்பொழிலே அத்திமுக மானே-
அய்யனாரு குடியிருக்க
அடிவணங்கி நின்றேனய்யா -
அடியே

பொன்னாம் பழத்தவளே போட்டு செய்ய வந்தவளே
போட்டு செய்ய வந்தவளே
பூவுடனே வள்ளிப்பெண்ணே- அடி

எங்களூரு கோயமுத்து மைசூருராசா
மாநிலத்த விட்டெறங்கி மண்டலத்தச் சென்றேனய்யா - அடி
வல்லமென்று பேர்விளங்க மைசூருராசு
மாநிலத்த விட்டெறங்கி மண்டலத்தச் சென்றேனய்யா - அடி

தன்னே னன்னன னானன்னே னானனன்னனானா
னானானா னானனன்னா னன்னனே னன்னானன்னா

தத்தித்தோம் தரிகிடத்தோம்
தாதையத் தத்தித்தோம்.

## 143. மடி சுகம்

சின்னக்குழந்தையன், 30
சின்னவெள்ளையன், 30
பனஞ்சாட்டுப்பட்டி
அரியூர்நாடு

தைய்யத் தன்னே னன்னே னன்ன னானே னன்னா னன்ன னானே
தைய்யத் தானென்னே னன்ன னானேனன்னா னன்ன னானே னன்னா

ஐயா கண்ணே பெண்ணே
நாள எப்போக்கம்போம்[3]
நாள எப்போக்கம்போம் - இந்தக்
கானகம் தன்னில் - இந்தக்
கச்சனும் வாயே[4] - இந்த
ஆசைத் துளிரும்மே - இந்த
நேசந் துளிரும்மே - இந்த
மானே தேனே
மருதிசொகம்[5] - பெண்ணே
நானறியே(ன்) - பெண்ணே
நானறியே(ன்) 1

ஐயா கண்ணே பெண்ணே - நாளை
எப்போக் கம்போம் - நானும்
எப்போக் கம்போம் - இந்தக்
கானகந்தன்னில் - இந்தக்
கச்சனுமிவாயே - இந்த
ஆசைத் துளிரும்மே - இந்த
நேசைத் துளிரும்மே - இந்த
மானே தேனே -
மடிசொகம் - பெண்ணே
நானறியே - பெண்ணே
நானறியே 2

பெண்ணரசே நாளும் எப்போக்கம்போம் - நாளும்
எப்போக்கம்போம் - இந்தத்
பேசிடுங்குயிலே - இந்த
ஆசைத் துளிரும்மே - இந்த
நேசைத் துளிரும்மே

மானே தேனே
மடி சொகம் - பெண்ணே
நானறியே - பெண்ணே
நானறியே 3

பெண்ணரசே நானும் எப்போ கம்போம்
நானும் எப்போ கம்போம் - இந்தக்
கானகந்தன்னில்
கச்சினும் வாயே - இந்த
ஆசைத் துளிரும்மே - இந்த
நேசைத் துளிரும்மே - இந்த
மானே தேனே
மடி சுகம் - பெண்ணே

நானறியே - பெண்ணே
நானறியே 4

தைய்யத் தான னன்னே னன்னே னன்ன னானே னன்னா
னன்ன னானே னன்னா
ஏ னானன்னனன்னா னன்னனனானா -
லல்லாலே லாலோ னன்னனனானா -
னானே னானே னானே னன்னா - ஒரு னானே னன்னா

தத்தித்தோம் தரிகிடதோம்
தா தைய்யத் தத்தித்தோம். 5

[1,2] பெரியவர்களைக் குறிக்கும் சொற்கள்
[3] நாளை எப்போது காண்போம்
[4] கட்டியணைவாயே [5] மடி சொகம்

# 144. கதிரொடிப்போம்

சின்னக்குழந்தையன், 30
சின்னவெள்ளையன், 30
பனஞ்சாட்டுப்பட்டி
அரியூர்நாடு

தன்னான்னே னன்னானே னானே
னானான்னா னன்ன னன்னா னானே

வாங்கலோடி அக்கக்காமாரே
வனத்துலதா தெனக்கருது கொய்ய
அண்ணாத்தா கதிரொடுப்போம் மானே
எதிரெதிரா கதிரொடிப்போம் தேனே - ஐயா
தெனக்கருத ஒடிச்சாச்சு மானே
தெனக்கருத எடுங்களோடி தேனே
தெனக்கருத ஒடிச்சாச்சு மானே
ஆளுக்கொரு மொறமெடுங்க தேனே - ஐயா
ஆளுக்கொரு மொறமெடுத்து மானே
அடிங்களோடி வாத்தியாரே தேனே

தேனில மாக்கொழச்சு மானே - ஐயா
தேக்கால ரண்டுசெய்து தேனே - ஐயா
கல்லா லொறசெய்து மானே
கடுங்கே ஒலக்கலெடுத்து தேனே - ஐயா
தேனத்தின்ற மாம்குயில மானே
வந்திலய்யா சூதுமின்ற தேனே - ஐயா
கொஞ்சம்மா இருக்குதென்று மானே
எடுத்தாங்க தலவெளக்கு தேனே

தன்னானே னன்னானே னானே
னானானே னனன்னா னானே
தத்தித்தோம் ததிகிடத்தோம்
தாதைய்யத் தத்தித்தோம்

## 145. தெனவளத்து

சின்னக்குழந்தையன், 30
சின்னவெள்ளையன், 30
பனஞ்சாட்டுப்பட்டி
அரியூர்நாடு

தைய்யத் தன்னனன்னா னானனன்னா
னன்னே னான னன்னா - ஐயா
னானே னன்னா - ஐயா
தானேனன்னா னானே னன்னா 1

இந்த வந்த நிலத்தோம் தைய்யா - தைய்யா
செட்டக் கட்டி செலஒதுக்கி - கொறவர்
செலஒதுக்கி தரிகிட சுந்தரி
செலஒதுக்கி சொலயே சொல்
காடுவனம் உண்டு செய்தார் - இந்த
வந்த நிலத்தோம் தைய்யா - ஐயா 2

காடுவெட்டி முள்பொறுக்கி
முள்பொறுக்கி தரிகிட - அந்த
முள்பொறுக்கி
கம்புசோளம் தெனவிதைத்தார் - இந்த
வந்த நிலத்தோம் தைய்யா - சுந்தரி 3
தெனவெதத்து பயிர்வளர்ந்து
பயிர்வளர்ந்து தரிகிட - அந்த
பயிர்வளந்து
சலசலவென்று தெனவெதைத்தார் - இந்த
வந்தநிலத்தோம் தைய்யா - தையா 4

சட்டீயிலதா தெனயெடுத்து - கொறவர்
தெனயெடுத்து தந்திட சுந்தரி
தெனயெடுத்து
சலசலவென்று தெனைவெதைத்தார் - இந்த
வந்த நிலத்தோம் தையா - ஐயா

பொட்டீலதா தெனையெடுத்து - கொறவர் 5
தெனையெடுத்து தரிகிட சுந்தரி
தெனையெடுத்து சொலயேசொல்

பொலிபொலியென்று தெனை வெதைத்தார் - இந்த
வந்தநிலத்தோம் தைய்யா - அந்தத் 6
தெனை வெதைத்து பயிர்வளர்த்து - காட்டு
பயிர்வளந்து - தரிகிட சுந்தரி
பயிர்வளர்த்து சொலியேசொல்
கும்பகமா வந்தெறங்கும்[2] - இந்த
வந்த நிலத்தோம் தைய்யா - அந்த 7

மணிபெறம்பா தெனையைக்கண்டா - கொறவர்
தெனயக்கண்டா சொலயேசொல்
கும்பகமா வந்தெறங்கும் - இந்த வந்த நிலத்தோம் தையா 8

வடக்குத்து[3] அன்னம்பட்சி - கொறவர்
அன்னம்பட்சி தரிகிட சுந்தரி
அன்னம்பட்சி சொலயே சொல்
வசதப்பி வந்தெறங்கும் -அடியே 9

தெக்கத்திதா அன்னம்பட்சி - கொறவர்
அன்னம்பட்சி - தரிகிட சுந்தரி
அன்னம்பட்சி சொலயேசொல்
தெசதப்பி வந்தெறங்கும் - இந்த
வந்தநிலத்தோம் தைய்யா 10

தைய்யத் தானனன்னா னானே னன்னா
னானே னன்னா தரிகிட சுந்தரி
னானே னன்னா சொலயே சொல்
னான னன்னா னானே னன்ன - இந்த
வந்த நிலத்தோம் தைய்யா 11

தத்தித்தோம் ததிகிடதோம்
தாதைய்யத் தத்தித்தோம்

[1] சொல்லுவாயா, சொல் [2] கும்பலாக வந்திறங்கும்
[3] வடக்கத்து

# 146. வள்ளி செலுத்திடும்

சின்னக்குழந்தையன், 30
சின்னவெள்ளையன், 30
பனஞ்சாட்டுப்பட்டி
அரியூர்நாடு

தைய்யத் தன்னனன்னா னன்னனா னன்னே னானன்னா
னன்னானே னான னன்னா னானே னன்னானானா

ஐயா
சொல்லுமின்று கும்மிதானம் சொல்லுகுத்தம் இருந்தா
சுப்ரமணி கையினால சூரியனப்பாக்க - ஐயா
வாருமின்று கும்மிதானம் வார்த்தகுத்த மிருந்தா
வள்ளியப்பா கையினால வார்குடனே பார்க்க -ஐயா
உந்தன்பாதம் மட்டுமஞ்ச அடுப்படியில இருந்த
குடமுடனே வள்ளிப்பெண்ணே
வாமயிலே மேல - ஐயா
தம்பிமாரே தமயன்மாரே வள்ளி செலுத்திடும்
தாளம்போட பஞ்சத்தில தட்டி எழுப்பிடும் - ஐயா
கடலபொரி வறுவறென்று கச்சாயமிருந்தா
கச்சாய வடதோச கடலபொரி தேங்கா - ஐயா
மாமரமே வாக்குயிலே மயிலகும்மி பாட
மந்திதினி காவடிங்க மத்தளங்க பாட

மேட்டூரு அணயில தண்ணி தெறந்திடும்
வேண்டியான வேண்டிசனம் வேடிக்க பார்க்கும் - ஐயா
கொடூரு ஆணயில தண்ணி தெறந்திடும்
கோடியான கோடிசனம் வேடிக்க பார்க்கும்

நாமக்கல்லுமேல போகும்நல்ல வண்டிரோட்டு
பனஞ்சாட்டுல கும்மிவெளயாட்டு நல்லவய லாட்டும்

காளப்பம்பட்டி புதூரு போகும் பிள்ள ரோட்டு
கோணமுள்ளு பனஞ்சாட்டுல கும்மிவெளயாட்டு - ஐயா

னன்னானே னான னன்னே னான னன்னே னானன்னா

தத்தித்தோம் ததிகிடதோம்
தாதைய தத்தித்தோம்.


## 147. வளையல் பெண்ணே

சின்னக்குழந்தையன், 30
சின்னவெள்ளையன், 30
பனஞ்சாட்டுப்பட்டி
அரியூர்நாடு

ஐயா கொஞ்சம் சொல்லவேணும் - நீங்க
காசுக் கொருவளையல்
காசுக் கொருவளையல்
கண்ணாடி போட்டவளையல்
கறுப்பு வளையல் - ஐயா
பணத்துக்கொருவளையல்
பணத்துக் கொருவளையல்
குணத்துக்காக கண்ணே
ரண்டு வளையல் - ஐயா
பத்துரூவா போடுவளையல்
பத்துரூவா போடுவளையல்
பத்தினிப் பெண்களுக்கு
ஏத்த வளையல் - அந்த
நீட்டுமடி உந்தன் கைய
நீட்டுமடி உந்தன் கைய

# ஒப்பாரிப் பாடல்கள்

## i. தாயாருக்குப் பாடுவது...



*மலயில எரியுந்தீயி - அம்மா எனக்கு*
*மனசில எரியுதம்மா*

# 148. மல்லிகை சூடலையே

துறையூர் சின்னம்மா, 85
எம்.ஜி.ஆர். நகர்
வாழவந்தி நாடு

கோட மழபேஞ்சி - நா
குயிலா(ள்) நனஞ்சிவந்தா - ஏ ஆயா நா(ன்)

என்னப்பெத்த குயிலா இருந்துவிட்டால் - எ(ன்)
கூந்த(ல்) ஒனத்திருந்தே
கொடிச்சீல மாத்திருந்தே
கொடிமணியச் சூடிருந்தே

என்னப்பெத்த குயிலா போனோடனே - நா
கூந்த ஒனத்திலியே - நா
கொடிச்சீல மாத்திலியே - நா
கொடிமணியச்சூடிலியே - நா
கொடியா வர ஞாயமுண்டோ 1

மாரி மழபேஞ்சு - ஏ அம்மா
மயிலா நா நனஞ்சிவந்தா
எ(ன்) மாதா இருந்துபோனா - என்னெ
மயிரெ ஒனத்தும்பா
மடிச்சீல மாத்தும்பா
மல்லியெ சூடும்பா

என்னப் பெத்த மாதா போனதும்மே - இப்போ நா
மயிரெ ஒனத்துலம்மா
மடிச்சேல மாத்துலம்மா
மல்லியற சூடுலம்மா
மயிலா வர ஞாயமில்லே 2

# 149. பச்சத்தண்ணி ஆர் கொடுப்பார்?

குப்பாயி, 42
சித்தூரணிப்பட்டி,
வாழவந்திநாடு.

அம்மா நா
சங்கீலி பின்னுலிலே
சாஞ்சிரிந்து மோர்கடைய - ஐயா எனக்குக்
கோலான கொத்துக்கார - அம்மா
கொண்டுவந்தா காயுதமு - ஐயா நா 1

ஆரோட காயிதுன்னு - அம்மா
அலசுநா பாத்துனம்மா - அக்கா உனக்கு
வாவோல வல்லியக்கா - உனக்குச்
சாவோல வந்துதுன்னா - அம்மா நா 2

ஒடனே ரயிலேறி - ஐயா நா
ஒமனூரு போயெறங்கி - நா
சுத்தியே வந்தனம்மா - அம்மா
முத்துலோடு சோடிச்சு 3

அப்பன் பாக்கிலியே
ஆயளோட திரிமொகத்தே- ஐயா 4

நெலக்கல்லுத் தெப்பக்கொளம் - அம்மா
நின்னழுதா கந்துகார - நா
நின்னழுதே வீடுவந்தா - எனக்கு
நீச்சத்தண்ணி ஆர்கொடுப்பார்? - நா 5

பச்சக்கல்லு தெப்பக்கொளம் - அம்மா
பாத்தழுதா கந்துகார - நா
பாத்தழுதே வீடுவந்தா - அம்மா எனக்குப்
பச்சத்தண்ணி ஆர்கொடுப்பார் - அம்மா 6

காரப் பொதயில்லே - நாங்க
    கடுசான சாவுன்னு - நீங்க
காஞ்சிதே ராசருக்கு - எனிக்குக்
    கட்டிக் கொடுத்திங்களே - அந்த 7

காஞ்சித்தே ராசருக - அம்மா என்னக்
    கசக்கிப் புழிஞ்சாங்க - என்னக்
கசக்கிப் புழிஞ்சாங்க - நா
    கண்டபுடி பேசுனாங்க - நா
கரிக்குருவி வேஷங்கொண்டு - நா
    காதம்மயிலு வந்தே - நா 8

சுற்றிப் பொதையில்லே - அம்மா
    சுலுசான தாவுன்னு- நீங்க
மேல்நாட்டு ராசருக்கு - ஐயா
    மெச்சிக் குடுத்தீங்க - எனக்கு
மேல்நாட்டு ராசருக - அம்மா
    தொவட்டிப் புழிஞ்சாங்க - என்னத்
    தொக்குவரப் பேசினாங்க - நா
தோக்குருவி வேஷங்கொண்டு - அம்மா நா
    தோக மயிலுவந்தே 9

## 150. மனசில எரியுதம்மா

குப்பாயி, 42
சித்தூரணிப்பட்டி
வாழவந்திநாடு

அம்மா எனக்கு
    வெய்யி லடிக்குதுன்னு - எனக்கு
        வேங்கமரம் கூடாரமா - அம்மா எனக்கு
    வேங்க மரத்தடியே - எனக்கு
        வெள்ளான கட்டிருக்கும் - எங்களுக்கு

வெள்ளான சங்கிலியே - அம்மா எனக்கு
வேடன் கொண்டுபோனது - நாங்க
வேடந்தடஞ் சிக்காம - அம்மா நாங்க
வெய்யிலிலே நின்னழுதோம் - நீங்க 1

கானலடிக்குதுன்னு - அம்மா எனக்கு
கமுகமரம் கூடாரமா - எங்களுக்குக்
கமுகமரத்தடியே - எனக்குக்
காரான கட்டிருக்கும் - எங்களுக்குக்

காரான சங்கிலியே - அம்மா
கள்ளங் கொண்டு போனது - நா
கள்ளந்தடஞ் சிக்காமா - அம்மா நா
கானலுல நின்னழுதே - ஐயா நீங்க 2

தின்னுங் களிப்பாக்கு - அம்மா எனக்குத்
திமிரடையும் பல்காவி - நீங்க
தின்னு நெவிந்தவிங்க - அம்மா நீங்க
சீமநதி போனீங்க 3

சீமநதி வெய்யிலிலே - அம்மா
அங்கன்ன தீவெளுக்கும் - எனக்குப்
பத்தி எரியுதம்மா - எனக்குப்
பந்தலுட்டு வேகுதம்மா - அம்மா நாங்க 4

மாங்கா அடிச்சுக்கூட்டி - அம்மா நீ
மாவெறகு தீமூட்டி - எனக்கு
மலயில எரியுந்தீயி - அம்மா எனக்கு
மனசில எரியுதம்மா - அம்மா நீங்க 5

தேங்கா அடிச்சுக்கூட்டி - அம்மா நீ
செங்கரும்பு தீ மூட்டி - எனக்குச்
செடியில எரியுந்தீயி - அம்மா எனக்கு
நெஞ்சில எரியுதம்மா 6

## 151. மங்கிய நகை

குப்பாயி, 42
சித்தூரணிப்பட்டி
வாழவந்திநாடு

எனக்குப்
பங்குனி மாசத்தில - அம்மா
பவளத்தேரு ஓடயில - என்னப்
பெத்தவளுந் தாயிருந்தா - நா
பச்சக்கிளி வாய்தெறந்து
பட்டுன்னு கேட்டுட்டாலும் - அவுங்க
பட்டணத்துச் சேடருக்கு - அவுங்க
தட்டெழுதி வுட்டாது - அவுங்க
பட்டணத்துச் சேடருக - அம்மா
கட்டெடுத்துப் பாத்தொடனே
கன்னிக் கொருசீல - அம்மா
கருப்புல ஒருபிரி
கருப்புல ஒருபிரி- எங்களுக்குக்
கட்டெடுத்து நேந்தது - எனக்குப்

பட்டொரு பொட்டில - எனக்குப்
பவுனுநவ தட்டத்தில - எனும்
பெத்தவளுந் தாயிருக்க - நா
பட்டே மடிச்சுடுத்தி
பவுனுநவ மேல்பூட்டி - நா
பவுனுநவ மேல்பூட்டி - நா
பட்டணம் போனாலும் - எனக்குப்
பட்டணம் போயுமழ - என்னப்பெத்தவளும் இருக்குமட்டும் எனக்குப்
பட்டு நனயிலியே - எனக்கு
பட்டு நனயிலியே - எனக்குப்
பவுனுநக மங்குலியே - என்னப் பெத்தவளும் போய் மடிய
எனக்குப்
பட்டு நனஞ்சிருச்சி- இப்போ
பவுனுநவ மங்கிருச்சி 1
சித்திர மாசத்தில
செல்லத்தேரு ஓடயில - நா

செல்லக்கிளி வாய்திறந்து - அம்மா நா
சீலன்னு கேட்டுட்டாலும் - எனக்குச்
சேலத்துச் சேடருக்கு - எனக்கு எம் பெத்தவளுந் தாயிருந்தா
சீட்டெழுதி வுட்டுருவா - அவிங்க
சேலத்து சேடருக - அவுங்க
சீட்டெடுத்துப் பாத்தொடனே - எனக்குச்
சென்னிக் கொருசீல
செகப்புல ஒருபிரி - எனக்குச்
செகப்புல ஒருபிரி - அவுங்க
செட்டகட்டி நேந்திருவா - எங்களுக்குப் பெத்தவளுந் தாயிருக்க எனக்குச்

சீலயொரு பொட்டியிலே
சிறுநவயுந் தட்டத்திலே
சீல மடிச்சுடுத்தி - நா
சிறுநவய மேலணிஞ்சு
சீமக்குப் போனாலும் - எனக்குச்
சீமயில பேயுமழ - எனக்குச்
சீல நனயில
சிறுநவயும் மங்குல - இப்போ எனக்குச்
சீமயில பேயுமழ - என்னப் பெத்தவளும் போய்மடிய எனக்குச்
சீல நனஞ்சிடுச்சு
சிறுநவயும் மங்கிருச்சு 2

## 152. வளர்த்தமுகம் பார்ப்பதெப்போ?

குப்பாயி, 42
சித்தூரணிப்பட்டி
வாழவந்திநாடு

வண்ணமாய்க் காரு
வாடகைக்கு ஓடுங்காரு- இந்த
ஓட்டு டைவேரு
உள்ளிருக்கும் கண்டேட்ரு - நா
வாடகைய நாந்தாரே - என்ன
வாசமின்னே எறக்குமப்பா - இந்த

ஓட்டுந் டைவேரு
உள்ளிருக்கும் கண்டேட்ரு
வாடகைய வாங்கினு - என்ன
வழியில எறக்குனது - நா
வாச முதிப்பதெப்ப - நா
வளத்தமொகம் பாப்பதெப்ப?

## 153. பொன்னாள் புரண்டழுதேன்

**தங்கம்மாள், 55**
**சின்னகவரப்பட்டி**
**அரியூர் நாடு**

தங்காஞ்சிக் கட்டலிலே - என்னப்பெத்த அம்மா உனக்குத்
தாழம்பூ மெத்தயில - என்னப்பெத்த அம்மா உங்களுக்குத்
தலய வலிக்குத்துன்னு
தந்தலய நோகுதின்னு - என்னப்பெத்த சாமி நீங்க
சாஞ்சு படுத்திருந்தா - என்னப்பெத்த அம்மா உனக்கு
தலவலியா வேதினம்மா - நானுமொரு
தஞ்சாவூர் மாடுவாங்கி - என்னப்பெத்த அம்மா நா
தனிவண்டிய ரண்டும்பூட்டி - என்னபெத்த அம்மா நா
தனிவண்டிய ரண்டும் பூட்டி - நா
தஞ்சாவூர் வீதியில - நா
தனிச்சி கடதுறந்து - அம்மா உங்களுக்கு
தனிச்சி கடதுறந்து - ஒரு
டாக்குட்டர தெறந்துவெச்சு - நா
தஞ்சாவூர் டாக்டர்கிட்டே - நா
தைலமல கொடுங்களுன்னே - என்னப்பெத்த அம்மா நா உங்குளுக்கு
தைலவாங்கி வாரங்காட்டியும் - நா
தனிதயிலம் வாங்கிவர - நா
தஞ்சாவூரு பாலஞ்சுத்தி - என்னப்பெத்த அம்மா நா
தனிப்பாலஞ் சுத்திவர - நா
தங்காவர நேரமாச்சி - உங்களுக்குத்
தங்காவர நேரமாச்சு
சவத்துக் கொடயாளி - என்னப்பெத்த அம்மா நீங்க
சவத்தயே நடந்துடுங்க

சவங்கெடக்கும் மூலயில - என்னப்பெத்த அம்மா நீ பெத்த
தங்கா பெரண்டழுவா - நீ பெத்த அம்மா
தங்கா பெரண்டழுவா - என்னப்பெத்த அம்மா
தங்கரதம் அம்மா போனீங்களோ 1

பொன்னஞ்சிக் கட்டலிலே - என்னப்பெத்த அம்மா நீங்க ஒரு
பூப்போட்ட மெத்தயில - அம்மா உங்களுக்குப்
பொடனி வலிக்குதின்னு - என்னப்பெத்த அம்மா நீங்க
போத்தி படுத்திங்கின்னா - அம்மா நீங்க
போத்தி படுத்திங்கின்னா - உனக்குப்
புதுதயிலம் வேணுமின்னு - என்னப்பெத்த அம்மா உனக்குப்
புதுதயிலம் வேணுமின்னு - நா
புதுசேரி மாடுவாங்கி - நா
பொன்னுவண்டியா ரண்டும்பூட்டி - என்னப்பெத்த அம்மா உங்களுக்குப்
பொன்னுவண்டியா ரண்டும்பூட்டி - நா
புதுசேரியா போயிறங்கி - இந்த
புதுசேரி வீதியில - என்னப்பெத்த அம்மா நா
புதுசாக் கடதுறந்து - இந்த
புதுசேரி டாக்டராண்ட - நா ஒரு
பொன்தயிலம் கேட்டமின்னா - என்னப்பெத்த அம்மா
பொன்தயிலம் கேட்டமின்னா - நா
தயிலமே வாங்கிவர
புதுசேரி பாலஞ்சுத்தி - அம்மா
பொன்னுவர நேரமாச்சு - என்னப்பெத்த அம்மா நா
பொன்னுவர நேரமாச்சு - இந்த
பொணத்திக் கெடையாளி - ஒரு
பொணத்தே நடத்திடுங்க - நீங்க
பொணத்தே நடத்திடுங்க - இந்தப்
பொணங்கெடக்கும் மூலயில - நீங்கபெத்த
பொன்னாள் பெரண்டழுதே
பொன்னா பெரண்டழுதே - என்னப்பெத்த அம்மா நீங்க
பொன்னுரதம் போனீங்களோ 2

## 154. பாலும் தளும்பிப்போச்சு

தங்கம்மாள், 55
சின்ன கவரப்பட்டி
அரியூர் நாடு

கோட்ட சருகசீல - என்னப்பெத்த அம்மா நீ பெத்த
குயில்போடும் முந்தாணியா
குயில்போடும் முந்தாணியா - என்னப்பெத்த அம்மா
குயிலயார் கட்டிவந்தா - நாம்பொறந்த
கோட்டைக்கு வந்தமின்னா - என்ன பெத்த அம்மாவே நீங்கிருந்தா
கோட்டே பெருக்கிடுவா - எங்களுக்கு
கோல மல போட்டுடுவா - என்னபெத்த அம்மா
குயிலே வாரான்னு - நீங்க
கோலமல போட்டுடுவா - நீங்க
கோரபாய விரிச்சிவிட்டு - நீங்கவந்து
குந்துங்களே மயிலேயிம்பா - நீங்க
குந்தே குயிலேம்பா - உங்க
குற்றங்களே சொல்லும்பா - அம்மா நா
கோர பாயக் குந்தியல்லே - என்ன பெற்ற அம்மாவே
குற்றங்களச் சொன்னாலும் - எங்
குற்றம் முடியுலம்மா - என்னப்பெத்த அம்மா 1

மாய சருகசீல - என்னப்பெத்த அம்மா நீங்க பெத்த
மயில் போடும் முந்தாணிம்மா - எனக்கு
மயில்போடும் முந்தாணிம்மா - நாங்க
மயிலே போட்டுவந்து - என்னப்பெத்த அம்மா நாம் பொறந்த
மாளிக்கு வந்தமின்னா - என்னப்பெற்ற எங்கம்மாவே
மாளிக்கு வந்தமின்னா - நீங்க
மாவாலே கோலம்போட்டு - நீங்க
வண்ணபாயப் போட்டுடுவா- என்னப்பெத்த அம்மா
வந்து குந்து மகளயும்பா - நீ
வந்துகுந்து மகளயும்மா - நீங்க
வருத்தங்களே சொல்லும்பா - அம்மா நா
வந்திங்கு குந்தியல
வருத்தங்களச் சொன்னாலும் - அம்மா

வருத்தம் முடியுலம்மா - என்னப் பெற்ற அம்மாவே நீங்க
வருத்தித்தக் கேட்டீங்கன்னா - நா
வார்த்திசொல்லும் ஆளயில்லே - என்னப்பெற்ற அம்மா 2

ஐயோ விருமையின்னு
ஆண்டவரா ஈசுபரியா - நாங்க
ஈசுபரங் கோவலுக்கு - ஒரு
எண்ண கொண்டு சாமி போவயில - நாங்க
எண்ண கொண்டு போவயில -
எண்ண தளம்பாதுன்னா
எண்ணமெல்லா நீராகுன்னா - அம்மா
எண்ணயுந் தளம்பிப்போச்சு
எண்ணமெல்லாம் சாமி வாடிருச்சு - என்னப்பெத்த சாமி 3

பாலபோவுங் கோவலிலே - நா
பாவாத பெண்ணுகளா - நா
பால் கொண்டு போவயில - என்னப்பெத்தங்கம்மாவே
பத்திரக் கோயிலுக்கு - நாங்க ஒரு
பாலு கொண்டு போனமின்னா - அம்மா எங்களுக்குப்
பாலுந் தளம்பாதுன்னா - எங்களுக்கொரு
பரிகாசம் நேராதின்னே - இந்த பாவி கொண்டுபோன
பாலுந் தளும்பிபோச்சு
எங்களுக்குப் பரிகாசம் நேந்துபோச்சு
பாவியளா சாமி வாடுறம்மோ 4

## 155. அழைச்சா வருவியா

குப்பாயி, 42
சித்தூரணிப்பட்டி
வாழவந்திநாடு

வாரும் மயிர்கோதி - எனக்கு
வாக்கெடுக்குங் கண்ணாடி

என்னப் பெத்தவளுந் தாயிருந்தா
வாக்கயடுத்திடுவா - எனக்கு

வாக்கயடுத்திடுவா - அம்மா
வரிசவச்சே காட்டிடுவா - என்னப்

பெத்தவளும் போய்மடிய - அம்மா எனக்கு
வாக்கெ எடுப்பாரில்லே - எனக்கு
வாக்கெ எடுப்பாரில்லே
வரிசவச்சுக் காட்டுவாரில்லே - அம்மா எனக்கு
வரிசவச்சுக் காட்டுவாரில்லே - அம்மா நா
வாடிக் கருகரம்மா - எனக்குச் 1

சின்ன மயிர்கோதி - அம்மா
சிக்கெடுக்குங் கண்ணாடி
என்னப் பெத்தவளுந் தாயிருந்தா - எனக்குச்
சிக்க யெடுத்திடுவா - அம்மா எனக்குச்
சிக்க யெடுத்திடுவா - எனக்குச்
சீருவெச்சே காட்டிருவா - என்னப்
பெத்தவளும் போய்மடிய - எனக்குச்
சிக்க யெடுப்பாரில்லே - எனக்குச்
சீருவெச்சே காட்டுவாரில்லே

சீருவெச்சுக் காட்டுவாரில்லே - அம்மா நா
சீரழிஞ்சு கருகரம்மா 2

கொய்யாமரந் தோப்புன்னு - நா
குந்திருந்தே பச்சக்கிளி - அம்மா எனக்குக்
கொய்யாமரம் வேர்போயி - அம்மா எனக்குக்
கொளந்தங்கர சேந்துதென்ன - நாங்க 3

ஆலமரம் தோப்பின்னு- நா
அண்டிருந்தே பச்சக்கிளி - எனக்கு
ஆலமரம் வேர்போயி - அம்மா எனக்கு
ஆத்தங்கர சேர்ந்ததென்ன 4

அடிச்சு மறுகரம்மா - நா
அவிதிப்பட்டு நிக்குறம்மா - அம்மா நா 5

அள்ளி புளியெடுத்தே - நாங்க
ஆத்துல கரச்சு வெப்போம் - நீங்க
ஆறு தாண்டிப் போனவிங்க - நா
அழச்சாத்தா வாருவியா
ஆவியுட்டுப் பேசுவியா- அம்மா நா 6

கொஞ்சம் புளியெடுத்து - அம்மா நா
கொளத்துல கரச்சுவெப்பே - நீ
கொளந்தாண்டிப் போனவிங்க - அம்மா நீ
கூப்புட்டா வாருவியா - நீ
கெரலுட்டுப் பேசுவியா 7

வடக்க கொடுத்தபொண்ணு
வண்ணமா அருமையின்னு
வண்ணமா அருமையின்னு - ஐயா
வாதாடும் உம்மகளா - அம்மா எனக்கு
வாரான்னு சேதி கேட்டா - என்னப் பெத்தவளுந் தாயிருந்தா எனக்குக்
கரடி தடமொதுக்கும்
காட்டான முள்ளுப் பொறுக்கும்
என்னப் பெத்தவளும் போய்மடிய - எனக்குக்
கரடி கடிக்குதம்மா - எனக்குக்
கரடி கடிக்குதம்மா - எங்களுக்கு
காட்டான சீறுதுன்னோ 8
அம்மா
தெக்க கொடுத்த பொண்ணு - உனக்குச்
சின்னமா மருமையின்னு
சீருள்ள உன்மகளும் - எனக்கு

வாரான்னு சேதிகேட்டா - எனக்குச்
சிங்கி[1] தடமொதுக்கும் - எனக்குச்
சிங்கி தடமொதுக்கும் - எனக்குச்
சிறுபிலி[2] முள்ளுப் பொறுக்கும் - என்னப்
பெத்தவளும் போய்மடிய - எனக்குச்
சிங்கி கடிக்குதம்மா - எனக்குச்
சிறுபிலி சீறுதம்மா - நாங்க 9

ஐஞ்சு பவுனழிச்சே - நாங்க
ஆசாரம் மெத்தனிச்சே - எங்களுக்கு
ஆசாரம் மெத்தயிலே
ஆன நடபழக்கி - நாங்க
ஆனபோவும் தாரயிலும் - அம்மா நா
அரளி வெதயூனி - எனக்கு
அரளிவெத அத்தினியும் - எங்களுக்கு
அஞ்சுலட்சம் பூப்பூக்கும் - நா
அள்ளி முடிஞ்சுக்கினு - அம்மா நா
அருச்சுனனக் கூட்டிக்கினு - நாங்க
அருச்சுனனக் கூட்டிக்கினு - ஐயா
அரமனக்கு வந்தாலும் - எனக்கு
ஆலமரம் சாய்க்கீம்மா - எனக்கு
அரமனயுங் காவலுன்னு - நாங்க 10

கொஞ்சம் பவுனழிச்சு - நாங்க
கொட்டாரம் மெத்தனிச்சு - எங்களுக்குக்
கொட்டாரம் மெத்தில - நாங்க
குதிர நடபழக்கி- நீங்க
குதிர போகுந் தாரீலயும் - அம்மா நா
கொன்ன[3]வெதயூனி- எங்களுக்குக்
கொன்ன வெத அத்தினியும்
கோடிலட்சம் பூப்பூக்கும் - அம்மா நா
கோதி முடிச்சுக்கினு - நாங்க
கொண்டவரக் கூட்டிக்கினு - நாங்க
கொண்டவரக் கூட்டிக்கினு - ஐயா நா
கோட்டைக்கி வந்தாலும் - அம்மா எனக்குக்
கோட்டயுங் காவலம்மா - எங்களுக்குக்
கொய்யாமரம் சாய்க்கீனு - எனக்கு
கோட்டயும் காவல்லுன்னு 11

*[1] சிங்கம் [2] புலி [3] கொன்றை*

## 156. மயிலு பொலம்புறம்மா

தங்கம்மாள், 55
சின்னகவரப்பட்டி
அரியூர்நாடு

தின்ன சொமத்துக்கு - ஒரு
திட்டாரா மட்டத்துக்கும் - நீ
என்ன பெற்ற சாமியளா - நீ
இளங்கோடி தம்பியரே - என்னப்பெத்த ஐயா நீங்க
தேருக்குப் போனீங்கன்னா - நீ பெத்த
செல்லியே வாருங்கம்மா - எங்களுக்குச்
சீட்டியே எடம்புடிங்க - நா
தெய்வகொலம் பாக்கவாறே - நீ
என்னபெத்த ஐயாவே - அம்மா உங்களுக்கு

வாச சோமத்துக்கும் - உங்களுக்கு
வட்டார மட்டத்துக்கும் - என்ன
வளத்தினா சாமியளா - நீங்க
வையகொலம் போனீங்கனா - உன்ன
வளத்தினா நானும்வாறேன் - நாங்க
வையகொலம் பாக்கவாறேன் - நீ
என்னபெத்த அம்மாவே - நீ
எளங்கோடி சாமியளா - அம்மா உங்களுக்கு
வண்டியே எடமுமில்ல - உங்களுக்கு
வையகொலம் தூரமின்னா - நீ என்னபெத்த சாமியளா நா
வந்துவிட்டே எம்மனயா - நீ
என்னோட மாதாவெல்லாம் - நா
மயிலே பொலம்புறம்பா- நாங்க
மயில வாடுறம்மா - அம்மா உனக்கு

ஏறோ மரக்கியில்லே - உனக்கு
வெளிநாட்டு சைக்கிளு - நீ
எம்மவ காசுராளா - நீ
வெளிநாட்ட சைக்கிளுல - நீ
ஏறியே நடந்துபோனா - நீ
எம்மவனா காசுராளா

# 159. தின்னுருசி பாருங்கம்மா

தங்கம்மாள், 55
சின்னக்கவரப்பட்டி
அரியூர் நாடு

ஐயா உங்களுக்கு
வடக்கத்துக் கத்திரிக்கா - சாமி
வடமதுரப் பூசிணிக்கா
வடமதுரப் பூசிணிக்கா - என்னப்பெத்த சாமி உனக்கு
வாங்கித்தா நாங்ககறி சமக்க - என்னப்பெத்த அம்மா உனக்கு
வாங்கித்தா கறிசமக்க - நாங்க
வருசமொரு பொங்கலுட்டு - என்னப்பெத்த அம்மா உனக்கு
வருசமொரு பொங்கலுட்டு - என்னப்பெத்த அம்மா உன்ன
வருந்தி யழத்தமின்னா - என்னப்பெத்தசாமி நீங்க
வரிசிக்கு வருவிங்கம்மா - அம்மாநீங்க
வந்துருசி பாப்பீங்கம்மா - அம்மா நீங்க
வந்துருசி பாப்பீங்கன்னா - இப்ப நீங்க
வரிசிக்கி வருகாம்மா - என்னப்பெத்த அம்மா நீங்க
வைகுந்தம் போனிங்களா - என்னப்பெத்த அம்மா நீங்கபெத்த
வண்ண மயிலுகாள
வைகுந்தம் போனபோது - நாங்க

மயிலாயே வாடுறம்மா - என்னப்பெத்த அம்மா நா
வாமயிலா சோருரம்மா - என்னப்பெத்த அம்மா
என்னப்பெத்த மாதாவே - என்ன
இளங்கோடி ரஞ்சிதத்தே - என்னப்பெத்த அம்மா
என்னப்பெத்தவளே சாமியெல்லா - நீங்க
வைகுந்தம் போனபோது - நா
வயநாடே சோருரம்மா - என்னப்பெத்த அம்மாவே
என்னப்பெத்த சாமி உனக்கு 1

தெக்கத்துக் கத்திரிக்கா - உனக்கு
தெம்மதுர பூசிணிக்கா
தெம்மதுர பூசிணிக்கா - நம்மவாசலில
தேடிக்கறி சமச்சி - என்னப்பெத்த அம்மா
தேசமொரு பொங்கலுட்டு - என்னப்பெத்த அம்மா உங்களுக்கு
தேசமொரு பொங்கலுட்டு - இந்த

தேசத்தொரு பொங்கலுக்கு - என்னப்பெத்த அம்மா உங்களத்
தேடியழக்கறம்மா - நீங்கவந்து
தின்னுருசி பாருங்கம்மா - என்னப்பெத்த அம்மா நீங்க
தெருவிக்கு வாராமே - நீங்க
சீரயும் காணாம - என்னப்பெத்த அம்மா நீங்க
தின்னுருசி பாக்காம - என்னப்பெத்த அம்மா நீங்க
தெய்வலோகம் போனிங்களா - அம்மா 2

சின்ன மயிலியாள - நா
சின்னவட்ட ஒருபெண்டுகளா - நா
சிந்தியே அழுவறம்மா - நாஒரு
தெம்மயிலு வாடுறம்மா - நீ என்னப்பெத்த மாதாவே

எளங்கொடியோ ரஞ்சிதத்தே - நீங்க
கரடியு யுழுலாற - என்னப்பெத்த அம்மா
கரடியு யுழுலாற - இந்த 3

காஞ்சமல அடிவாரம்பா - என்னப்பெத்த அம்மா
கருத்த வெளக்கெடுத்த - என்னப்பெத்த அம்மா
கனகமுடுந் தாயாரே - என்னப்பெத்த அம்மா
கனகமொரு தாயாருக்கு - அம்மா உங்களுக்கு
காச்சோ அடித்துதுன்னு - எங்களுக்குக்
காயாதம் வந்ததம்மா - என்னப்பெத்த அம்மா
காயாதம் வந்ததின்னா - நாங்க ஒரு
காயதத்தக் கண்டொடனே - என்னப்பெத்த அம்மா
காயதத்தக் கண்டொடனே - நாங்க
கைய விரிச்சிக்கிட்டு - நாங்க
கைக்கொழந்த கக்கம்வெச்சு - என்னப்பெத்த அம்மா என்னோட

கணவரே கூடழத்து
காஞ்சிமலய விட்டு - நாங்க
கள்ளிவரும் வழியில - எங்களுக்கு
கரடி குறுக்கச்சம்மா
கரும்புலிய மின்னுச்சம்மா - நாங்க
கரடிய அடித்தெறிஞ்சு - என்னப்பெத்த அம்மா
கரும்புலியச் சுட்டெறிஞ்சு - என்னப்பெத்த அம்மா நா பொறந்த
கட்டடமும் வந்துநின்னா - என்ன
கன்னி வரங்காட்டியும் - என்னப்பெத்த ஆயா

காதம் பறந்திங்கிளா - நா
கன்னி பொறணடமுறே - என்னப்பெத்த அம்மா
கண்டசனம் கூடமுவும் - அம்மா உங்களுக்கு 4

செஞ்சிமல அடிவாரம் - என்னப்பெத்த அம்மா
சீரா வளத்தெடுத்தா - அம்மா எஞ்
செல்வமுடி தாயாரே - உங்களுக்குச்
சீக்கிலே அடித்ததுன்னு - என்னப்பெத்த சாமியளா
சீக்கிலே அடித்ததுன்னு - அம்மா உங்களுக்கு
சீட்டுகாள வந்ததம்மா - உனக்கு
சீட்டே கண்டொடனே - என்னப்பெத்த அம்மா
செறயயோதி விரிஞ்சூட்டே - என்னோட
செல்லி பொண்ணக் கக்கம்வைத்து - எனக்குவந்த
சீமாரோ கூடழத்து - அம்மா நாங்க
செல்லிவரோ வேளயில - உனக்கு
சிறுத்த குறுக்குச்சும்மா - எங்களுக்கொரு
செம்புலி மின்னச்சம்மா - நாங்க
சிறுத்தயோ அடிச்செறிஞ்சே - நா
சிறும்புலிய சுட்டெறிஞ்சே - நீபெத்த
செல்லியோ பொண்ணுகளா - நா
சீமயோ வாரங்காட்டியும் - என்னப்பெத்த சாமியளா
சீமயே வந்துநின்னா - என்னுந்தாயே
தேருரதம் போனிங்களா - நா
செல்லி பொறண்டமுதே - என்னப்பெத்த அம்மா எங்களுக்குச்
சீமச்சனம் கூடமுவும் 5

## 160. பூக்கவில்லை

தனபாக்கியம், 47
எம்.ஜி.ஆர். நகர்
வாழவந்திநாடு

தாவாரம் பஞ்சுமெத்தெ- என்னப்பெத்த அம்மா எனக்குத்
தாயாரத் தூங்குமெத்தே - என்னோட
தாயார் இருக்குமட்டும் - என்னப்பெத்த அம்மா எனக்குத்
தண்ணி குளுப்பியுண்டு
தாழம்பூ வாசமுண்டு
தாவாரம் தங்கலுண்டு

தாயாரப் போய்மடிய - எனக்குத்
    தண்ணி குளியலில்லெ
    தாழம்பூ வாசமில்லெ
    தாவாரம் தங்கலில்லெ 1

எரவாணம் பஞ்சுமெத்தெ - என்னப்பெத்த அம்மா எனக்கு
    ஈஸ்பரியா தூங்குமெத்தெ - என்னோட
    ஈஸ்பரியா இருக்குமட்டும் - எனக்கு
    எண்ணெக் கொளுப்பியுண்டு
    ஏலம்பூ வாசமுண்டு - நாம
    எரவாணம் தங்கலுண்டு - என்னோட

ஈஸ்பரியா போய்மடிய - என்னப்பெத்த அம்மா எனக்கு
    எண்ணெக் குளியலில்லெ
    ஏலம்பூ வாசமில்லெ - நம்ம
    எரவாணம் தங்கலில்லெ - எனக்கு 2

மாசி மழபேயும் - என்னப்பெத்த அம்மா எனக்கு
    மாரளவுத் தண்ணிவரும் - நாங்க இந்த
    மாரளவுத் தண்ணியில - என்னப்பெத்த அம்மா நீ பெத்த
    மயிலா நனஞ்சுவந்தா - என்னப்பெத்தவளும் இருந்திட்டா
    மயிர ஒணத்தும்பா
    மடிசீல மாத்தும்பா
    மல்லியரச் சூடும்பா - என்னப்பெத்தவளும் போய்மடிய

என்னப்பெத்த அம்மா நாங்க
    மயிர ஒணத்துலம்மா
    மடிசீல மாத்துலம்மா
    மல்லியர சூடுலம்மா - எனக்குக் 3

கோட மழபேயும் - என்னப்பெத்த அம்மா
    கூறளவுந் தண்ணிவரும் - நாங்க
    கூறளவுந் தண்ணியில - என்னப்பெத்த அம்மா நீபெத்த
    குயிலா நனஞ்சுவந்தா- என்னப்பெத்தவள இருந்திட்டா
    இன்னிக்கு

கூந்த ணெத்தும்பா
கொடிசீல மாத்தும்பா
கொடிமல்லியத்தா சூடும்பா - என்னப்பெத்தவளேபோய்மடிய
கூந்த ஒணத்துலம்மா
கொடிச்சீல மாத்துலம்மா
கொடிமல்லிய சூடுலம்மா - எனக்குச் 4

செங்கல்லு வீடுன்னு - என்னப்பெத்த அம்மா எனக்குச்
செவந்தியப்பூ தோட்டமுன்னு - நீ பெத்த
செல்லத்தே சம்மதிச்சே - நீபெத்த செல்லம்போயிப்
பாத்தொடனே
செங்கல்லு வீடில்ல
செவந்தியப்பூ தோட்டமில்ல - நீ பெத்த
செல்லங்கையினாலே - என்னப்பெத்த அம்மா நா
சீம செலுத்திவாறே 5

கருங்கல்லு வீடுன்னு - என்னப்பெத்த அம்மா
காசரளித் தோப்புன்னு - நீ பெத்த
கள்ளியச் சம்மதிச்சே - நாங்க
கள்ளிபோயிப் பாத்தொடனே- என்னப்பெத்த அம்மா
கருங்கல்லு வீடு இல்ல
காசரளித் தோட்டமில்ல - என்னப்பெத்த அம்மா நீபெத்த
கள்ளி கையினாலே
காலஞ் செலுத்திவாறே 6

நீல செவிந்தியப்பூ - என்னப்பெத்த அம்மா இன்னிக்கு
நெலங்கண்டா பூத்திருக்கும் - நாங்க
நேரமாப் பூத்தபூவு - என்னப்பெத்த அம்மா உம் வவுத்துல
நெறங்குடுத்துப் பூத்திருந்தா - இன்னிக்கு
நின்னா மதிப்பாங்க
நேரம்வந்தாத் தேடுவாங்க - நாங்க
நேரமாம் பூத்தபூவு - உம்வவுத்துல
நெறங்குடுத்துப் பூக்குலம்மா - இன்னிக்கு
நின்னா மதிக்குலம்மா
நேரம் வந்தாத் தேடுலம்மா - எனக்கு 7

கால செவிந்தியப்பூ - என்னப்பெத்த அம்மா எனக்குக்
கரூரு மல்லியப்பூ - நாங்க
காலமா பூத்தபூவு - உம் வயித்துல நாங்க
கலர்குடுத்துப் பூத்திருந்தா - இன்னிக்குக்
கண்டா மதிப்பாங்க - என்னப்பெத்த அம்மா
காலம்வந்தாத் தேடுவாங்க - நாங்க
காலமா பூத்த பூவு - உம் வவுத்துல நாங்க
கலர்குடுத்துப் பூக்குலம்மா - இன்னிக்குக்
கண்டா மதிக்கிலம்மா
காலம் வந்தாத் தேடுலம்மா 8

## 161. நான் மறந்தேன்

பழனியம்மாள், 40
விரகனூர்ப்பட்டி
சேலூர் நாடு

செடியிலியே பூப்பறிச்சி - என்னப்பெத்த அம்மா எனக்குச்
சிண்டுசிண்டா ஆரங்கட்டி - நா
சீருகுடுக்குந் தாயார
சிறுசிலேயே நாமறந்தே

படியிலேயே பூப்பறிச்சி
பந்துபந்தா ஆரங்கட்டி - நா
பால்குடுக்குந் தாயாரப்
பாதியில நாமறந்தே

## 162. காத்தசனம் கண்கலங்கும்

பழனியம்மாள், 40
விரகனூர்ப்பட்டி
சேலூர் நாடு

சாமி பசுமாடு - என்னப்பெத்த என்னப்பா எனக்கு
சந்தனப் பிள்ளமரம் - நா
தட்டி யெழுப்பாமே
தடியா லடிச்ச குத்தம்

நம்ம வாசனைக்குத்
தட்டுவந்தா நீங்கலய்யா - எனக்கு 1

கோயிலு பசுமாடு - என்னப்பெத்த ஐயா எனக்குக்
குங்குமப் பிள்ளநெறம் - நா
கும்பிட்டு எழுப்பாம
கோலால் அடிச்சகுத்தம் - என்னப்பெத்த அம்மா எனக்குக்
குத்தம்வந்தா நீங்கலம்மா - நா 2

தண்ணி தெளிக்குதுன்னு - என்னப்பெத்த என்னப்பா நா
தலமலயா போய்ப்பூந்தே - எனக்குத்
தலமல வேடரெல்லாம்
தடியெடுத்து அடிச்சாங்க - நா
தடிக்கி பயந்தலவோ
தாழ மடலானே
தாசிகையி பூவானே - நா எனக்கு 3

வெந்நி தெளிக்குதுன்னு
வீரமல போய்ப்பூந்தே - எனக்கு
வீரமல வேடரெல்லாம்
வில்லெடுத்து அடிச்சானே - நா
வில்லுக்குப் பயந்தலவோ
வேட மலரானே
வேசிகையி பூவானே - எனக்கு இன்னிக்கு 4
மாணிக்கப் பந்தலுல - என்னப்பெத்த என்னப்பா
மதிச்சசனம் கும்பலெல்லாம் - நா இன்னிக்கு
மயிலாள் வெளியவந்து
மயிர விரிச்சழுதா - எனக்கு
மாணிக்கப் பூவுதுரும்
மதிச்சசனம் கங்கலங்கும்[1] - எனக்குக் 5

கல்பூரப் பந்தலில - என்னப்பெத்த என்னப்பா எனக்கு
கனத்தசனம் கும்பலுல
கள்ளி வெளியவந்து
கைய விரிச்சழுதா - எனக்குக்
கல்பூரப் பூவுதுரும்
காத்தசனம் கங்கலங்கும்[2] 6

[1,2] *கண்கலங்கும்*

# 163. வெள்ளக்கல்லு

பழனியம்மாள், 40
விரகனூர்ப்பட்டி
சேலூர் நாடு

வெள்ளக்கல்லு ரோட்டுல - என்னப்பெத்த அம்மா நா
வேகமா நடநடந்து - எனக்கு
வெள்ளக்கல்லு ரோட்டுல
விழுது பழம்பழுக்கும்
விழுதுக்கொரு பிஞ்செறையும் - நா
வெள்ளக்கல்லு ரோட்டுல
வேகமா வந்தனின்னா - எனக்குவந்த
வீமருக்கு வந்தவ - நீ
வெளியபோயி நின்னுன்னா - நா
வெள்ளமுழிக் கண்ணீர
விரும்பி அழைச்சனின்னா - எனக்குவந்த
வீமனுக்குத் தாக்குமுன்னு - நா
வீதியில சூறையிட்டேன் - எனக்குக் 1

கருங்கல்லு ரோட்டிலயும்
கருங்கல்லு ரோட்டிலயும் - நா
கடினமா நடந்து
காகமா வந்தமின்னா - எனக்கு
கனுவுக்கொரு பிஞ்சிறங்கும் - எனக்குவந்த
கருணருக்கு வந்தவ
கடக்கப்போயி நின்னுன்னா - நா
கருமுழிக் கண்ணீரக்
கருதி அழச்சனின்னா - எனக்குவந்த
கருணரத் தாக்குமுன்னு
கடவீதி சூறையிட்டேன் 2

## 164. தங்கமல கொத்தமல்லி

பழனியம்மாள், 40
விரகனூர்ப்பட்டி
சேலூர் நாடு

தங்கமலக் கொத்தமல்லி - என்னப்பெத்த அம்மா
தழைஞ்சிவரும் ரஞ்சிதங்க - நா
தங்கப்பொடி நுணுக்கி
தரையிலயே கோலமிட்டு
தரையிலயே போறவுங்க
தாந்து[1] நடப்பாங்க
தங்ககொற கேப்பாங்க - எனக்கு 1
வெள்ளிமலக் கொத்தமல்லி
விளஞ்சிவரும் பல்லாக்கு - நா
வெள்ளிப்பொடி நுணுக்கி
வீதியில கோலம்போட்டே - எனக்கு
வீதியில போறவுங்க
பொறுத்து நடப்பாங்க
பொன்னாகொற கேப்பாங்க. 2

[1] தாழ்ந்து

# 165. கொடிப்பாதை பூ மணக்கும்

பழனியம்மாள், 40
விரகனூர்ப்பட்டி
சேலூர் நாடு

ஊசி நிறுத்திருக்கும்
ஊசிக்கம்பி போட்டிருக்கும் - என்னப்பெத்த அப்பா
ஒடம்ப வலிக்குதுன்னு
ஓடிப் படுத்திங்கன்னா - நா
ஒடனே ரயிலேறி
ஊத்துக்குடி போயெறங்கி - நா
ஊத்துக்குடி டாக்குடர
ஒடனே வரவழச்சி - என்னப்பெத்த அப்பனுக்கு
ஒரூசி மாத்திரையும்
ஒத்துமயா போடச் சொன்னே - இன்னிக்கு
ஒரூசி மாத்திரயும் ஒத்துமயா வேணான்னு
ஒசந்தரதம் தேடிட்டிங்க 1

காசி நிறுத்திருக்கும்
காசிக்கம்பி ஓடிருக்கும் - என்னப்பெத்த அப்பா நீங்க
கால வலிக்குதுன்னு
களச்சோடிப் படுத்தீங்கன்னா - நா
கால ரயிலேறி கரூரு போயெறங்கி - நா
கரூரு டாக்குட்டர
கடினமா வரவழச்சு - நா
கரூசி மாத்திரையும் - என்னப்பெத்த அப்பனுக்கு
கடினமா போடச் சொன்னே - நீங்க
கரூசி மாத்திரயும்
கடினமா வேணான்னு - நீங்க
கனத்தரதம் தேடிட்டீங்க 2

சந்தனக் கெணருவெட்டி - என்னப்பெத்த அப்பாவே நீங்க
சாஞ்சி தலமுழுவி - நீங்க
சாஞ்சி தலயமுழுவி
தலயப் புறஞ்சரக்கி
சாட்சிக்குப் போனீங்கன்னா - இன்னிக்கு
சாட்சி நெறந்திருக்கும் - என்னப்பெத்த அப்பா நீபோவும்
தனிப்பாத[1] பூமணக்கும் - நா 3

குங்குமக் கெணறுவெட்டி - என்னப்பெத்த அப்பா நீங்க
குளுரத் தலமுழுவி - நீங்க
கோயபுரம் கச்சேரிக்கு - நீங்க
கூட்டத்துக்குப் போனீங்கன்னா - இன்னிக்கு
கூட்டம் நெறந்திருக்கும் - நீங்கபோவும்
கொடிப்பாத பூமணக்கும் 4

[1] *பாதை*

## 166. பார்க்கக் கிடைக்கவில்லை

பழனியம்மாள், 40
விரகனூர்ப்பட்டி
சேலூர் நாடு

பாப்பார் அரமணையா - என்னப்பெத்த என்னப்பா எனக்குப்
பஞ்சாங்கஞ் சாவடியாம் - உங்க
பலவ திருமேனியப்
பாக்க வருவமின்னா - எனக்குப்
பாம்பு குறுக்காச்சி
பால்கடலு ஒடலாச்சி - நா
பாம்பே அடிச்சி வந்தே
பாற்கடல நீஞ்சி வந்தே - உங்க
பலக திருமேனிய - எனக்குப்
பாக்கக் கெடைக்கலப்பா - எனக்குச் 1

செட்டி அரமணையாம்
சீரங்கத்துச் சாவிடியாம் - எனக்கு உங்க
செல்வத் திருமேனியத் தேடி வருவமின்னா - எனக்குச்
செந்நாயி குறுக்காச்சி
செங்கடலு ஒடலாச்சி - நா
செந்நாயி அடிச்சி வந்தே
செங்கடலு தாண்டி வந்தே - உங்க
செல்வத் திருமேனிய - எனக்குத்
தேடக் கெடக்கிலப்பா 2

# 167. சாதகத்தை விட்டெறிந்தேன்

பழனியம்மாள், 40
விரகனூர்ப்பட்டி
சேலூர் நாடு

சாந்தொட்டு மையிட்டு - என்னப்பெத்த அம்மா நா
சாதகத்தே கைபிடிச்சு - நாங்க ஒரு
சாமிநதி போனமின்னா - எனக்குச்
சாமிநதி பண்டாரம் - எனக்கு
சாதகத்த வாங்கிப்பாத்து - உனக்கொரு
தம்பியில்லே இன்னானே - நா
சாந்தெ வழிச்செறிஞ்சே - என்னப்பெத்த தாயாரே
சாதகத்தே விட்டெறிஞ்சே - நா 1

பொட்டிட்டு மையிட்டு - என்னப்பெத்த அம்மா நா
புஸ்தகத்தே கைப்புடிச்சா - நாங்கஒரு
பூசநதிப் போனமின்னா - எனக்கு
பூசநதி பண்டாரம் - நா ஒரு
புஸ்தகத்த வாங்கிப்பாத்து - உனக்கு ஒரு
புள்ளியில்லே இன்னானே - நா
பொட்டே வழிச்செறிஞ்சே - நா
புஸ்தகத்த விட்டெறிஞ்சே - நா 2

மொழங்காலுத் தண்ணியில - நாஒரு
முத்துப் பதிச்சு வெச்சே - எனக்கு
முத்தெடுக்கப் புள்ளயுண்டு
முகந்தொடைக்கப் புள்ளியில்லே - நா
கருங்காலுத் தண்ணியில
காசப் பதியவெச்சே - எனக்குக்
காசெடுக்கும் புள்ளயுண்டு - எனக்குக்
கைகுடுக்கப் புள்ளயில்லே - எனக்கு 3

கும்பத்திலே பொங்க கொண்டு
குயிலநதி போனமின்னா - எனக்குக்

குயிலுநதி பண்டாரம் - அவ(ன்)
கொண்டிய அடிச்சிருக்கு
குறுங்கதவே போட்டிருக்கு - நா
கொண்டிய நாந்தொறந்து
குறுங்கதவே நாந்தொறந்து
குயிலுநதிப் போனமின்னா
குயிலுநதி பண்டாரம் - உங்க
கொலமெல்லாம் எங்கயின்னா(ன்) - எங்க
கொலமெல்லாம் அந்தக்கரெ
கொடும்பாவி இந்தக்கரெ - நா 4

சருவத்திலெ பொங்கக் கொண்டு - நா
சட்டியிலெ சாவக்கொண்டு - நா
சாமிநதி போனமின்னா - அங்க
சன்னலே அடச்சிருக்கும்
சங்கிலி போட்டிருக்கும் - அந்த
சங்கிலி நாந்தெறந்து
சாமிநதி போனமின்னா - இந்த
சாமிநதிப் பண்டாரம் - உங்க
சனமெல்லாம் எங்கையின்னா(ன்)
சனமெல்லாம் அந்தக்கரெ - நா
சண்டாளி இந்தக்கரெ - நா 5

## 168. பூ நாகம்

பழனியம்மாள், 40
விரகனூர்ப்பட்டி
சேலூர் நாடு

பொன்னு எலுமிச்சங்கா - எனக்குப்
புதுமரத்தே நாரத்தங்கா - நா
பூவிலயும் ஒருநாகம்
பொன்நாகம் தீண்டினதும் - இன்னிக்கு
பொன்னு எலுமிச்சங்கா - எனக்குப்
புதுமரத்து நாரத்தங்கா - நீங்க
பொண்ணழக்க வேணுமின்னு
பூவொதுக்கிக் காயறுக்க - எனக்கு

திட்டிச்சம் தேரு - எனக்கு
அன்னுரதம் பொன்னுரதம் யாருதுன்னே - இந்த
ஆசமவ கட்டுன
ரசக்கல்லு தேருன்னு
ரதங்குலுங்கிப் போவுதுன்னு - எனக்குச் 1

சலவச்சட்ட போட்டுக்கிட்டு - என்னப்பெத்த என்னப்பா நீ
தனிப்பேனா கைலெடுத்து - நீ
தங்கவள நாட்டுக்கும்
தமிழ்ப்படிக்கப் போனீங்கன்னா - நா
தமிழ் படிச்சு வீடுவர
சாய்ங்காலம் ஆவுமின்னே - நீபடும்
சஞ்சலத்த சொல்லுமம்மா - என்னப்பெத்த என்னப்பா
சலவச் சட்ட இத்துழுவும் - நீங்க வைச்சிருக்கும்
தனிப்பாட்டு கை வழுக்கும் - நா 2

புளுசட்ட[1] போட்டுக்கிட்டு
புதுப்பேனா கைலெடுத்து - நீங்க
பொன்னிவள நாட்டுக்கு - என்னப்பெத்த என்னப்பா
பூப்பறிக்கப் போனீங்கன்னா - நீங்க
பூப்பறிச்சு வீடுவர
பொழுதோட ஆவுமினா - நீங்கபடும்
சஞ்சலத்தச் சொல்லுமம்மா - நா
சஞ்சலத்தச் சொன்னமின்னா - நீங்க போட்டிருக்கும்
புளுவுசட்ட இத்துழுவும் - நீங்க வச்சிருக்கும்
புதுப்பேனா கைநழுவும் 3

[1] *நீலவண்ணச்சட்டை*

## 170. சாகும் மட்டும் முடியாது

பழனியம்மாள், 40
விரகனூர்ப்பட்டி
சேலூர் நாடு

தங்க சைக்கிள் வண்டி - என்னப்பெத்த அப்பாவே எனக்குத்
தரையிலயும் ஓடுவண்டி - நாங்க
தங்காளா ரண்டுபேரும்
தட்டிவிட்டா எங்கபோவோம்

தஞ்சாலூரு வீதி
தையில்கட போயிரங்கும் - எனக்குத்
தையில்கட நாயமெல்லாம்
சாய்ங்காலம் முடிஞ்சாலும் - என்னோட
தங்காளோட நாயம்
சாவமட்டும் முடியாது - எனக்கு 1

பொன்னு சைக்கிள் வண்டி
பூமியில ஓடும் வண்டி
பொன்னாள ரண்டுபேரும்
பூட்டிவிட்டா எங்கபோவோம் - எனக்குப்
பூவாலூரு வீதி
பூக்கட போயெறங்கும் - எனக்கு
பூக்கட நாயமெல்லாம்
பொழுதோட முடிஞ்சாலும் - இந்த
பொன்னாளோட நாயம்
போகமட்டும் முடியாது 2

## 171. பொற்குடம் எடுக்கும்

பழனியம்மாள், 40
விரகனூர்ப்பட்டி
சேலூர் நாடு

பொணத்தக் குளுப்பாட்டி - என்னப்பெத்த அப்பா எனக்கு
பொன்னுரதம் மேல்பூட்டி - எனக்குப்
பொணம்பாக்க வாரவுங்க - உனக்குப்
புள்ளயில்ல எம்பாங்க - எனக்கு
புள்ளயே இருந்துட்டா
பொன்னுக்குட மெடுக்கும்
பூச பண்ணத் தட்டெடுக்கும்
பூசபண்ணி முடிஞ்சுடனே
பொன்னுரதம் சிங்காரிக்கும் - நா 1

சவத்தே குளுப்பாட்டி
தங்கரதம் மேல்பூட்டி
சவம்பாக்க வாரவுங்க - வந்து
தம்பியெங்கன்னு கேட்டாங்க - எனக்கு

தம்பி இருந்துட்டா
தங்கக் குடமெடுக்கும்
தவிசிபண்ணத் தட்டெடுக்கும்
தவிசிகள முடிஞ்சொடனே
தங்கரதம் சிங்காரிக்கும் 2

[1] *மாமன் இல்லையென்று பாடுவது என இப்பாடலைத் திருமதி.பழனியம்மாள் குறிப்பிட்டார்.*

## 172. வேகலையே

**பழனியம்மாள், 40**
**விரகனூர்ப்பட்டி**
**சேலூர் நாடு**

கல்ல ஒடச்சியல்லோ - என்னப்பெத்த அப்பா நீ
கவலமணி நாத்துட்டே - எனக்குக்
கவலமணி அத்தனையும் - நம்ப வாசலுக்குக்
காசா வெளஞ்சிவரும் - நா
காச மடியவுட்டு - என்னப்பெத்த அப்பா நா
காயிதத்தக் கைப்பிடிச்சு
காசிநதி போனமின்னா - எங்
காசெல்லாஞ் செலவாச்சு - நீங்கபோட்ட
காயிதங்க வேவுலையே - நா 1

பாறய ஒடச்சு - என்னப்பெத்த அப்பா
பவளமணி நாத்தவுட்டு - எனக்குப்
பவளமணி அத்தனையும் - நம்மவாச
பவுனா வெளஞ்சிவரும் - நா
பவுன மடியிலுட்டு
பத்திரத்தக் கைப்புடிச்சு - நா
பட்டணமும் போனமின்னா
பணமெல்லாஞ் செலவாச்சு - நீங்கபோட்ட
பத்திரங்க வேவுலப்பா 2

## 173. எங்கடைவோம்?

பழனியம்மாள், 40
விரகனூர்ப்பட்டி
சேலூர் நாடு

மட்டப் பனயோல - என்னப்பெத்த அப்பா எனக்கு
மயிலடையும் மாந்தோப்பு - எனக்கு
மட்டப்பன சாஞ்சொடனே - என்னப்பெத்த அப்பா நாங்க
மயில்போயி எங்கடைவோம் - எனக்குக் 1

குட்டப்பனயோல - என்னப்பெத்த என்னப்பா எனக்குக்
குயிலடையும் மாந்தோப்பு - எனக்கு
குட்டப்பன சாஞ்சொடனே - என்னப்பெத்த என்னப்பா நாங்க
குயில்போயி எங்கடைவோம்? 2

## 174. அமுந்திடுவேன் கங்கையிலே

பழனியம்மாள், 40
விரகனூர்ப்பட்டி
சேலூர் நாடு

ஊசி பெருங்கோர - என்னப்பெத்த அப்பா நீங்க
ஊரிலயும் இருக்குமட்டும்
ஓடி வருவாங்க - உங்க
ஓசனையும் கேப்பாங்க - நீங்க இன்னிக்கு
ஊரவுட்டுத் தீந்தாங்க
ஓடி வருவாரில்லே - உங்க
ஓசனையுங் கேப்பாரில்லே 1

நாட்டுப் பெருங்கோர - என்னப்பெத்த என்னப்பா எனக்கு
நல்லதொரு நற்தாலி
நாட்டிலேயும் இருக்குமட்டும்
நாடி வருவாங்க - உங்க
நாயங்களுங் கேப்பாங்க - நீங்க
நாட்டவிட்டு சீந்தாங்க - இன்னிக்கு
நாடி வருவாரில்லே
நாயங்களுங் கேப்பாரில்லே - எனக்குச் 2

சந்தன லிங்ககுட்டி - என்னப்பெத்த என்னப்பா நீங்க
சாஞ்சிருக்கும் மேசக்குட்டி - நீங்க
சாஞ்சிருந்து புத்திசொன்னா - உங்களுக்குச்
சந்தன மலருவரும்
சமுத்திரத்துத் தீத்தம் வரும் - எனக்குக்
குங்கும லிங்ககுட்டி - என்னப்பெத்த என்னப்பா நீங்க
குந்திருக்கும் மேசக்குட்டி
குந்திருந்து புத்திசொன்னா - உங்களுக்குக்
கோட்ட மலருவரும்
கொள்ளிடத்துத் தீத்தம் வரும் 3

திருச்சிக்குஞ் ஜில்லாவுக்கும்
சேத்துப்பொணச்சவண்டி - என்னப்பெத்த அப்பா
செல்லியா ஏறுவண்டி
சீமான ஓட்டுவண்டி - நா
செல்லிசெத்துப் போனமின்னா - நாம்பொறந்த
சீமக்கே ஆளெ வுட்டா
சீம தெரண்டுவரும்
சிறுகண்டே[1] கோடிவரும் - நா
கொடிவந்து மேலவிழுந்தா
அரகரா என்று சொல்லி
அமுந்திடுவங் கங்கையில 4

மருதைக்குஞ் ஜில்லாவுக்கு
மருச்சுப் பொணச்சவண்டி
மயிலாள ஏறுவண்டி - எனக்குவந்த
மன்னவர ஓட்டுவண்டி - நா
மயிலா செத்துப்போனாலும் - நாம்பொறந்த
மாளிக்கே ஆள்போனா
மாளி தெரண்டு வரும்
மார்க்கண்ட[2] கோடிவரும்
கோடிவந்து மேபுகுந்தா
அரகரா என்று சொல்லி
அமுந்திடுவே கங்கையிலே 5

[1] சிறுதொண்டன் [2] மார்கண்டேயன்

## 175. காச எடுத்துக்கிட்டு

பழனியம்மாள், 40
விரகனூர்ப்பட்டி
சேலூர் நாடு

காச எடுத்துக்கிட்டு - என்னப்பெத்த என்னப்பா
காருக்கோ போனமின்னா - எனக்குக்
காரோட்டும் டைவேரும்
கண்டேட்டுக் காரரும் - நா
கள்ளி போயிச் சேரணுமே
கள்ளிக்கொரு டிக்கேட்டு
கடினமா கேட்டுட்டே - அம்மா இன்னிக்கு
காரோட்டும் டைவேரு
கண்டேட்டுக் காரரும்
கள்ளிக்கொரு டிக்கேட்டு
கடினமா இல்லையம்மா
இந்தவண்டி வேணாம்மா - நீ
அடுத்தவண்டியப் பாருன்னா - நா 1

பணத்த எடுத்துக்கிட்டு
பணத்த எடுத்துக்கிட்டு - நா
பஸ்ஸுக்கே போனமின்னா
பஸ்ஸோட்டும் டைவேரே - நா
பாங்கிக்கொரு டிக்கேட்டு
பாத்துக்குடுத்துருன்னே - நா
பாங்கிக் கொரு டிக்கெட்டு
பாத்துக் குடுக்கல்லம்மா - நீ
பத்தரையப் பாருமின்னா 2

## 176. புரண்டோடும் ஆறு

தனபாக்கியம், 47
எம்.ஜி.ஆர். நகர்
வாழவந்திநாடு

அப்பனுக்குச் சீக்குன்னு - என்னப்பெத்த அப்பா எனக்கு
ஆளுமே ஆளு அரிச்செண்டா வந்தா - நாங்க
காரமே வீடுகட்டி - என்னப்பெத்த அப்பா இன்னிக்கு
நாதமே காடுவரும்

கனிவருக்கங் கொண்டுவரும் - நாங்க
ஓசந்த மலயேறி - என்னப்பெத்த அப்பா நாங்க
சொந்த மலரெடுத்து
செங்கழனி கண்துறந்து - என்னப்பெத்த அப்பனுக்குத்
தட்டுலயும் முட்டாயி
தமுளருல பால்காப்பி - நாங்க
புட்டியில முட்டாயும்- என்னப்பெத்த அப்பனுக்கு
போட்டலுல பால்காப்பி - நாங்க
அத்தனயுங் கொண்டல்ல - நாங்க
ஆளரு கைப்புடிச்சி
ஆத்துக்கு வந்து நின்னோம் - எனக்கு
ஆத்தலயுங் செந்தண்ணி - என்னப்பெத்த அப்பா எனக்கு
ஆள மறிக்குதப்பா - நாங்க
கொளத்துலயுஞ் செந்தண்ணி
குளரவுட்டுப் போகுதப்பா - நாங்க
ஆத்த வடியக்கட்டி - என்னப்பெத்த அப்பா
அடி வருஷம் பாலங்கட்டி - நாங்க
ஆத்தவுட்டு மேடேறி - நீபெத்த பொண்ணா எங்க
அழுவசத்தம் கேட்டதுன்னா - இன்னிக்குக்
கொட்டும் பறயர்களா - இன்னிக்குக்
கூத்தாடுங் கள்ளர்களா - நீங்க
கொட்ட நிறுத்திடுங்க - நீபெத்த
குயிலா கொற சொல்லிவாறே(ன்)

## 177. கிளி கூவுலய்யா

தனபாக்கியம், 47
எம்.ஜி.ஆர். நகர்
வாழவந்திநாடு

சட்டம் போட்டு வீடுகட்டி - என்னப்பெத்த அப்பா எனக்குத்
தனிவாசத்தா மச்செழுப்பி - எனக்குத்
தனிவாச மச்சீலே - என்னப்பெத்த அப்பா நாங்க
தங்கக்கிளிதா கூவுதுன்னோ - எனக்குத்
தங்கக்கிளி கூவுலய்யா - என்னப்பெத்த அப்பா
தருமரோட ஓசயின்னோ 1

விட்டம்போட்டு வூடுகட்டி - என்னப்பெத்த அப்பா நீங்க
வெளிவாச மச்செழுப்பி - இன்னிக்கு
வெளிவாச மச்சீல - என்னப்பெத்த அப்பா நாங்க
வெள்ளிக்கிளிதா கூவுதுன்னோ - எனக்கு
வெள்ளிக்கிளி கூவுலய்யா - எனக்கு
வீமரோட ஓசயின்னோ 2

## 178. கூட்டத்திலே இல்லையம்மா

குப்பாயி, 42
சித்தூரணிப்பட்டி
வாழவந்திநாடு

கோரமணிப்பலக - அப்பா நீ
குந்திருக்கும் மாம்பலக - உங்கப்பங்
கூட்டத்தில இருப்பாங்கன்னு - நா
கொரலுட்டுக் கூவுனாலும் - எங்கப்பங்
கூட்டத்தில இல்லையம்மா - உங்கப்பங்
கொடிதடம் போயிட்டாங்க - எனக்கு 1

சாமி மணிப்பலக - அப்பா நீ
சாஞ்சிருக்கும் மாம்பலக - உங்கப்பஞ்
சபயில இருப்பாங்கன்னு - நா
சத்தம்போட்டு கூவுனாலும் - உங்கப்பஞ்
சபயில இல்லியம்மா - அவிங்க
சரிதடம் போயிட்டாங்க 2

## 179. கோர்ட்டுத் தீர்ப்பு

தங்கம்மாள், 55
சின்னக்கவரப்பட்டி
அரியூர் நாடு

என்னப் பெத்தங் கையாவே
என்னப் பெத்த ஐயா
கிருச்சு கிருபூச அறுப்புப் போட்டு
கிளிவருண வேட்டிகட்டி - என்னப்பெத்த ஐயா - நீங்க
கீழ் கொரட்டு[1] வீதியில

கிருதேனோ நடநடந்து - என்னப் பெத்த ஐயாவே நீங்க
கீழ்வருண நடக்கும்போது - உங்களுக்குக்
கீழ்கொரட்டு ஒருசேவுகரும்
கேள்வியே கேட்டாங்கன்னா - என்னப்பெத்த ஐயா - நீங்க
கேள்விக்கு வதலுமைய்யா - உங்களுக்கு
கேசிலே தீருப்புன்னா - நீங்க
கீழ்க்கொரடு வீதியில
கீழ்க்கொரட்டுக் கூண்டுல - என்னப்பெத்த அப்பா - நீங்க
கேள்விக்குச் சொன்னிங்கன்னா - உங்க
கேள்விக்கு ஒரு தண்டான - என்னப்பெத்த சாமியளா உங்களுக்கு
கேள்விக்குத் தண்டனில்ல - உங்களுக்குக்
கோரட்டில ஒரு தீருப்பாகும் - என்னப்பெத்த சாமியளா

என்னப்பெத்த ஐயாவே - உங்களுக்கு
கோரட்டு வீதிங்களே
முடிஞ்சிதே சொன்னிங்கின்னா - அப்பா நம்ம
கொரடு வந்து நின்னா - நம்ம
கோட்டைக்கு போகுமின்ன - உங்களுக்குக்
கோரடு முடிஞ்சுதய்யா - என்னப்பெத்த ஐயா - நம்ம
கோட்டைக்கு வாருமையா - என்னப் பெத்த சாமியளா - நம்ம
கோட்டைக்கு வந்திங்கன்னா - என்னப்பெத்த
அப்பாவே வந்திட்டாரு - உங்களுக்குக்
கோரட்டே தீருப்பாச்சா - அப்பா எங்களுக்குக்
கோடி சொல்லே சொல்லுங்கப்பா- நீங்க பெத்த
குயிலே தங்கிருப்போம் - என்னப்பெத்த சாமியலோ - நீங்க
வேட்டியே எடுத்துக்கட்டி- என்னப்பெற்ற சாமியலா
சயச வீதியில - என்னப்பெற்ற சாமியளா
சருகுசீல இடுப்பில்வைத்து - உங்களுக்கு
சருக்காரு என்னபின - உங்களுக்குச்
சருக்காரு நாயமின்னா
சருக்காரு ரோட்டில - என்னப்பெற்ற சாமியளா - ஐயா
சருக்காரு வீதியில - என்னப் பெற்ற அப்பாவே உங்களச்
சட்டம்போட்டுக் கேட்டாங்கன்னா - என்னைப்பெற்ற சாமியளா
- உங்களுக்குச்
சட்டம்போட்டுக் கேட்டதுக்கு - இந்த
சரிக்காரு சொன்னசொல்லு - எங்களுக்குச்

சட்டமு முடிஞ்சுதம்மா - எங்களுக்கு
சரலாறு வீதிலாச்சு - நாங்க
விரதமு முடிஞ்சுதம்மா - நம்ம
வீடுவந்தே சேருரம்மா - என்னப்பெத்த ஐயாவே
புடவை அடிச்சு முடிஞ்சுதம்மா - அப்பா
போட்டாயே சட்டமுன்னா - எனக்கு
விரதயே முடிஞ்சிடுத்து - அம்மா நா
வீடுவந்தே சேந்தமம்மா - என்னப்பெத்த ஐயாவே சாமியளா
வீடுமோற கேட்டெடடனே - உங்க
பொண்ணு மயிலுகளா - நம்ம
பொய்யியே நில்லுறம்மா - எனக்கொரு
புன்கவல இல்லுமையா - என்னப்பெத்த அப்பாவே

ஐகொரட்டு வக்கிலும்பா - உங்களுக்கு
ஐகொரட்டு வக்கிலுக்கு - என்னப்பெத்த ஐயா
ஐகொரட்டுவக்கிலுக்கு - ஓராளு
ஆருகச்ச வந்ததின்னா - என்னப்பெத்த சாமியளா
ஆருகச்ச வந்ததின்னா - நாங்க
ஆனேத தம்பெண்ணி - என்னப்பெத்த அப்பா - நாங்க
அள்ளி பணங்குடுத்து - நாங்க
அனுப்பிவிட்டோ ஒருகையலும்பா - என்னப்பெத்த ஐயா - நாங்க
அனுப்பிவிட்டே கையர - இந்த
ஆனமல ஓரத்தில - என்னப்பெத்த அப்பா
அண்டிருந்த பூசாரி
அண்டிருந்த பூசாரிக்கு - நாங்க
அய்யாளு ஒருகேள்விகேட்டா - அவர்
வாக்காலே சொல்லுவாரு - அவிங்க
ஆதிலே தலயெழுத்து - ஒரு
அம்சமா போட்டுடுத்து - இந்த என்னப் பெத்தசாமியளா உங்களுக்கு
அலச்சலே வேண்டாமின்னா - எங்களுக்கு
அல்லிக்கே சத்தங்கேட்டா - நாங்க
ஐயோன்னு என்றுசொல்லி - நாங்க
ஆத்தோரே நில்லுரும்பே

பச்ச வரகரிசி - என்னப்பெத்த ஐயா - எங்களுக்குப்
பரங்கிமலெப் பாப்பாத்தி

பரங்கிமலெப் பாப்பாத்தி - என்னப்பெத்த அப்பா
பணத்தேக் கைப்புடிச்சு
பஸ்ஸுக்குப் போனமின்னா - உங்களுக்கு
பஸ்ஸுலே இருக்குவிங்க - என்னப்பெத்த ஐயா
பஸ்ஸீல உள்ளவிங்க - என்னப்பெத்த அப்பா நீங்க
பரங்கிமலெ போய்ப்பாத்தா - இந்த
பஸ்ஸீல உள்ளசனம் - உங்களுக்கு
பஸ்ஸீல எடமுமில்லே - உங்களுக்கு
பைதிகொளந் தூரமின்னா - என்னப்பெத்த ஐயா உங்களுக்கு
பைதிகொளந் தூரமின்னா - நா
பஸ்ஸுக்குப் போகவில்லே - நீங்க பெத்த
பாப்பாரே பெண்ணுகளா - நா
பஸ்ஸயே பாத்தழுதே - நீங்க
பஸ்ஸுக்கே எடமில்லன்னா - நீங்க
போங்கமின்னா உங்கமனம் - என்னப்பெத்த சாமியளா - நா
எம்மனயும் வந்துவிட்டே - என்னப்போயிட்டாரு
என்றுமே நினைத்தேனப்பா - நாங்க
கண்ணீரு சிந்திவிட்டோம் - நாங்க
காந்தி மொழங்குறம்போ - என்னப் பெத்த அப்பா - நா
காசக் கைபுடித்து - நா
கடசிமலெ ராசாத்தி - என்னப்பெத்த அப்பா - நீங்க
காரீக்குப் போனீங்கின்னா - என்னப்பபெத்த அப்பா
காரீக்குப் போனீங்கின்னா - நீபெத்த
கண்ணு மயிலுகளா - என்னப்பெத்த அப்பா
கன்னிமக நானும்வாறே - எனக்கு
காரே எடம்புடிங்க - நா
காதங்காலம் பாக்கவாறேன் - என்னப்பெத்த அப்பாவே
காதிலே எடமில்லன்னா - இந்தக்
காரிலே உள்ளவிங்க - உங்களுக்குக்
காரு எடமில்லன்னா - உங்கப்பங்
காதம் போயிட்டாங்க - என்னப்பெத்த சாமியளா
காரீலே உள்ளவிங்க - நீங்க
பொறந்தமனெபோங்கமின்னா - நா
பொறந்தமனெ திரும்பிவிட்டே - என்னப்பெத்த சாமியளா - நா
களச்சிவிட்டே கன்னிரொம்ப - நா
கவலப்பட்டு நில்லுரும்போ - என்னப்பெத்த ஐயா

இளங்கோடி மாதாவல்லா - அப்பா
பல்லாவா ராசித்திலே
பொறப்பிட்டிரே காலுலாலே - நீ என்னப்பனே காசுராசா
கொத்து பன[2]யலும்பா - நாங்க
குயிலடயும் பொஞ்சலும்பா - என்னப்பனே காசுராசா
கொத்துபன சாயாதுன்னார்-என்னப் பெத்தவரே சாமியளா-நீ பெத்த
குயிலுகளே வாடாதும்பார் - இந்த
கொத்துபன சாஞ்சமுதே - என்னப்பெத்த அப்பா
குயிலிருந்தே வாடுரம்பா - எங்களுக்கு
கொடுமயெல்லாம் தீருலம்பா - என்னப்பெத்த அப்பா

மட்டப் பனயோல - என்னப்பெத்தங் கையாவே
மயிலடயும் பொஞ்சால - என்னப்பெத்த அப்பா
மயிலுகளே வாடாதுன்னார் - என்னப்பெத்த அப்பா
மட்டப்பன சாஞ்சமுதே - நீ பெத்த
மயிலுகள வாடுரம்பா
மதிபோயே நின்னு ரம்பா - என்னபெத்த அப்பா
மங்கபின்ன வாடுறம்பா - நீ என்னப் பெத்த சாமியளோ

வாசலிலே எறுக்குனாரே- என்ன பெத்த அப்பா
வளந்தியொடு பாலாறே - நாங்க
வாரி முகங்கழுவோ - எனக்கு
வல்லவரே பஞ்சுமைய்யா - என்னப்பெத்த ஐயா எனக்குத்
தேரிலே எறுகுகுனாரே - என்னப்பெத்த சாமியளே எங்களுக்கு
தெளிஞ்சியோடும் பாலயாறே - எங்களுக்கு
தேச்சு முகங்கழுவ - எங்க
தேட்டாலியே பஞ்சுமையா - என்னப்பெத்த ஐயா உங்களுக்குப்
பழனியிலே கூடாரும்பா - எங்களுக்கு
பரிசாதம்[3] ஏவாரம்பா - இந்த
பரிசாதத்த வெலமதித்தே - நீ பெத்த
பழங்கானோர் பெண்ணிக்கே - நீங்க
பரிகாசம் செய்யலாமா?- நீங்க
பரமலோகம் போனீங்களா - உங்களுக்கு
நெஞ்சிலே கூடாரம் - என்னப் பெற்ற எங்கையாவே உங்களுக்கு
செம்புகப் பூ ஏவாரம் என்னப்பெத்த ஐயா

செம்புகப்பூ ஏவாரம் - நீ
செம்புகப்பூ வெலமதித்து - நீ பெத்த
செல்லாயே பொண்ணுக்க - நீங்க
சீருங்க செய்யாமலா - ஒரு
சீமந்த நடத்தாமலே - நீங்க
தெய்வலோகம் போனீங்களா - நீ என்னப்பெற்ற சாமியளா

*[1] கோர்ட்டு- ஆங்கிலச்சொல் [2] கூந்தல்பனை [3] பாரிஜாதப்பூ*

## 180. கருவாழை வெட்டாமலே

தங்கம்மாள், 55
சின்னக்கவரப்பட்டி
அரியூர் நாடு

கொழுந்தினார் வீட்டில என்னபெற்ற சாமியளா - ஒரு
கொழந்த விளயாட்டுமின்னா - ஒரு
குய்யாக்கால் சீட்டுமின்னா - சாமி ஒரு
கொழுந்தினார் வீட்டில - ஒரு
கொழந்தயோட ஆட்டமில்ல - ஒரு
கொழந்தையோட ஆட்டமில்ல - ஒரு
கொறசொல்ல ஆட்டமின்னா
மச்சினார் வீட்டில - ஒரு
மங்கா வெளயாட்டுமின்னா - ஒரு
மாதளங்காச் சீட்டுமின்னா - எனக்கு ஒரு
மங்கா வெளயாட்டில்ல - ஒரு
மாதளங்காச் சீட்டுமின்னா - எனக்கு
மாதளங்காச் சீட்டுமின்னா - எனக்கு
மனக்கவல தோணுதின்னா- எனக்கு

வன்னியி சிந்திமரம் - சாமி
வார்த்தியளோ பேசுமரம் - எனக்கு
வார்த்தியளப் பேசுமின்னே - எனக்கு
வார்த்தயா கேட்டொடனே - நா

வார்த்தயக் கேட்டொடனே -
என்னுந் தலயோட எளபிம்பில்லியோர் காவியோடு
எகாந்துர் பட்டெடுத்து - என் சாமி நா
எளங்கொடியே பெண்ணுகளா - நாங்க

எண்ணெயத் தலயெடுத்து - ஒரு
எளமில்லோர் கோவெடுத்து - நாங்க
எடபொறம் நின்றுகள
ஏழஏழ என்று சொன்னார் - எங்களுக்கு
ஏழஏழ என்று சொன்னார் - சாமி உங்களுக்கு
எந்திரிக்க ஐயா பூந்தேரய்யா - ஐயா
எந்திரிக்கு முந்திரியே
இல்லவரம் சொல்லியழுவார் - என்னபெற்ற சாமியளா
எளங்கொடியோர் சந்திகளா - எனக்கு

வாய்க்கா வெட்டி வரப்பு வெட்டி
வண்ணழக்கத் தோப்புவெட்டி - என்னப்பெத்த சாமியா
வண்ணழக்கத் தோப்புவெட்டி - நாங்க
வாழப்பொதவு வெச்சு - என்னப்பெற்ற ஐயா
வாழப்பொதவு வெச்சு - என்னப்பெற்ற சாமிக்கு - இந்த
வாழய வெட்டலாமா
வரிசராச ஆளாம - நீங்க
வைகுந்தம் போய்ச் சொன்னிங்க - என்னப்பெத்த சாமியளா
எளங்கொடியே ராசவெல்லாம் - சாமி உங்களுக்கு
சரபோட்டு நீர்பாய்ச்சி - ஒரு
கதிர வெளயவெச்சு - உங்களுக்கு
கதுர வெளயவெச்சு
கருவாழ தோப்புவெச்சு - நீங்க
கதிர கணுக்காமலே -ஒரு
கருவாழய வெட்டாமலே - என்னப்பெத்த ராசா
கனராசா ஆளாமலே - நீங்க
கைலாசத்தப் போனிங்களே

## 181. உறுத்தா மெத்தை தேடி

தனபாக்கியம், 47
எம்.ஜி.ஆர். நகர்
வாழவந்திநாடு

எட்டுப் பவுனெடுத்து - என்னப்பெத்த அப்பா உனக்கு
இருக்கக் குறிஞ்சிபண்ணி - இன்னிக்கு
இருந்தா உறுத்துதுன்னு
இங்கிருந்தா காந்துதுன்னு - என்னப்பெத்த அப்பா உனக்கு
எமலோகப் பஞ்சுமெத்தெ
இருக்கப் பதமாச்சோ - இன்னிக்கு 1
பத்துப் பவுனெடுத்து - என்னப்பெத்த அப்பா உனக்குப்
படுக்கக் குறிஞ்சிபண்ணி - இன்னிக்குப்
படுத்தா உறுத்துதுன்னு
பக்கமிருந்தா காந்துதுன்னு - இன்னிக்குப்
பரலோகப் பஞ்சுமெத்தெ
படுக்கப் பதமாச்சோ! 2

## 182. பொன்னா கொற தீருலய்யா

தனபாக்கியம், 47
எம்.ஜி.ஆர். நகர்
வாழவந்திநாடு

தங்க எலுமிச்சங்கா - என்னப்பெத்த அப்பா
தனிமரத்து நாரத்தங்கா - இன்னிக்குத்
தங்காளுக்கு வேணுமின்னு - நீங்க
தழையொதுக்கிக் காயறுத்தோம் - எனக்குத்
தழயிலியும் ஒருநாகம் - இன்னிக்குத்
தங்களத் தீண்டுனதும் - என்னப்பெத்த அப்பா எனக்குத்
தங்கச் சிறுகாடு - எனக்குத்
தணலுட்டு வேவுதுன்னோ - என்னப்பெத்த அப்பா நீங்க
தணல அமிக்க
தங்க விசிறிகொண்டு
தனிச்சொம்புத் தண்ணிகொண்டு - நீ பெத்த பொன்னாளுக்குத்
தணலமிக்கப் போனீங்கனா - எனிக்குத்
தணலு அமியலய்யா - என்னப்பெத்த அப்பா
தங்கா கொறதா தீருலய்யா - எனக்கு 1

பொன்னு எலுமிச்சங்கா - என்னப்பெத்த அப்பா
புதுமரத்து நாரத்தங்கா - இன்னிக்குப்
பொன்னாளுக்கு வேணுமின்னு - நீங்க
பூவொதுக்கிக் காயறுத்தோம் - எனக்குப்
பூவுலயும் ஒருநாகம் - நீ பெத்த
பொன்னாளத் தீண்டுனதும் - இன்னிக்குப்
பொன்னு சிறுகாடு - என்னப்பெத்த அப்பா
பொகயுட்டு வேவுதுன்னோ - நாங்க
பொன்னு விசிறிகொண்டு - என்னப்பெத்த அப்பா நீங்க
புதுச்செம்பு தண்ணிகொண்டு - நீங்க
பொவயமிக்கப் போனீங்கன்னா - எனக்குப்
பொவயு அமியலய்யா - என்னப்பெத்த அப்பா நீ பெத்த
பொன்னா கொற தீருலய்யா - எனக்கு 2

நாலு புளியமரம் - என்னப்பெத்த அப்பா எனக்கு
நாப்பத்தெட்டுப் பள்ளிக் கொடம் - இன்னிக்குக்
கட்டுக்கரும்பு வரும்
காவேரித் தீத்தம் வரும் - எனக்குப்
பொட்டியில பூவுவரும் - என்னப்பெத்த அப்பா எனக்குப்
பொறந்தெடத்துக் கோடிவரும் - இன்னிக்குக்
கோடிவந்து மேல்விழுந்தா - என்னப்பெத்த அப்பா இன்னிக்கு
ஊருலுள்ள சனங்களெல்லாம்
ஆருடைய கோடியின்னு - இன்னிக்குப்
பொறந்தெடத்துக் கோடியின்னு - இன்னிக்குப்
பூமி கிடுகிடுங்கும் பூலோகம் ஓசையிடும் - எனக்குப் 3

பங்குனி மாசத்தில - என்னப்பெத்த அப்பா எனக்குப்
பவளத்தேர் ஓடயில - எனக்கு
பட்டு இல்லையுன்னு
பதறி அழுதனின்னா - நீங்க
பட்டு எறநூறு - என்னப்பெத்த அப்பா
பவுனுநவமுந்நூறு - நாங்க
பட்ட எடுத்துடுத்தி - என்னப்பெத்த அப்பா நாங்க
பவுனுநவ மேல்பூட்டி - நாம் பொறந்த
பட்டணமே வந்தனின்னா - இன்னிக்குப்
பட்டணத்து உள்ளவுங்க - இந்தப்
பட்டுவெல என்னான்னா - எனக்குப்
பட்டுவெல தெரியிலம்மா - என்னோட

பாண்டியனக் கேட்டுக்க - இன்னிக்கு
பட்டணத்து உள்ளமழ - எனக்குப்
பவளமழ பேஞ்சாலும் - இன்னிக்குப்
பட்டு நனயிலய்யா - நீங்கபோட்ட
பவுனுநவ மங்குலய்யா - எனக்குச் 4
சித்திர மாசத்திலே - என்னப்பெத்த அப்பா எனக்குச்
செல்லத்தேர் ஓடயில - நாங்க
சீலதா இல்லயின்னு - நாங்க
சிணுங்கி அழுதமின்னா - என்னப்பெத்த அப்பா எனக்கு
சீல எறநூறு சிறுநவயும் முந்நூறு - நாங்க
சீல எடுத்துடுத்தி - என்னப்பெத்த அப்பா இன்னிக்குச்
சிறுநவய மேல்பூட்டி - நா பொறந்த
சீரங்கமே வந்தனின்னா - இன்னிக்குச்
சிரங்கத்து உள்ளவுங்க - உங்க
சீலவெல என்னான்னா - எனக்குச்
சீலவெல தெரியிலம்மா - என்னோட
சீமானக் கேட்டுக்க - இன்னிக்குச்
சீரங்கத்து உள்ளாயில - எனக்குச்
செல்லமழ பேஞ்சாலும் - இன்னிக்குச்
சீலநனயிலம்மா - நீங்கபோட்ட
சிறுநவயும் மங்குலம்மா 5

## 183. மலரெடுத்து மாலைகட்டி

**தனபாக்கியம், 47**
**எம்.ஜி.ஆர். நகர்**
**வாழவந்திநாடு**

செவப்பு நல்லா
தலவாணியாம்
தலவாணியாம்

சீரங்கத் தார்
கச்சேரியாம்
கச்சேரியாம்

சின்னமக(ள்)
வாராரென்று
வாரா ரென்று

சீமயில பயிராகும்
பயிராகும்

சிண்டுமல்லி
பூவாகும்
பூவாகும்

சிண்டுமல்லி
மலரெடுத்து
மலரெடுத்து

தினுசுக் கொரு
மாலெகட்டி
மாலெகட்டி - உங்க

சிவப்பான
மேனியில
மேனியில

செவ்வரளி
மாலையிட்டு
மாலையிட்டு

திரும்பி நல்லா
அழுதமின்னா
அழுதமின்னா - நீங்கபோற

காடு நல்லா
வெளிச்சமுண்டு
வெளிச்சமுண்டு - இந்த

கயிலாசம்
மோ(ட்)சமுண்டு
மோசமுண்டு

*இறந்தவரின் இளையமகள் சீரெடுத்து அழுதுவரும்போது பாடுவது.*

# 184. வெம்புவது யாரறிவார்?

பழனியம்மாள், 40
விரகனூர்ப்பட்டி
சேலூர் நாடு

கத்திரிக்கா பச்சநெறம் - என்னப்பெத்த அம்மா என்னோட
கருணனோட தங்கநெறம் - எனக்குஇப்போ
கத்திரிக்கா பச்சநெறம் - என்னோட அம்மா எனக்கு
கருணனோட பாத்திரமா - நா
கழுவி முழுவியல்லோ - என்னோட
கருணருக்குச் சாதமிட்டுக்
கடவீதி போனமின்னா - இந்தக்
கடவீதிப் பெண்களெல்லாம்
கவலயத்து வாராம்பா - நா
கத்திரிப் பிஞ்சாட்டம்
கசயிறது யாரறிவா? - நா 1

வெள்ளிரிக்கா பச்சநெறம் - எனக்குவந்த
வீமனெல்லாம் தங்கநெறம் - நா
வெளக்கிக் கழுவியல்லோ - எனக்குவந்த
வீமருக்குச் சாதமிட்டு
வீதிவழி போனமின்னா - இந்த
வீதியில சனங்களெல்லாம்
வெசனமத்து வாராம்பா - நா
வெள்ளிரிப் பிஞ்சுபோல
வெம்பறது யாரறிவா? 2

## 185. சாவும் பள்ளம்

பழனியம்மாள், 40
விரகனூர்ப்பட்டி
சேலூர் நாடு

ஆன எறங்கு எடம் - என்னப்பெத்த அப்பா எனக்கு
அரிய எடம் மாண்ட எடம் - எனக்கு
மாண்டவுங்கோ மாண்டாலும் - எனக்குவந்த
மன்னரிருந்தாப் போதுமின்னே 1

குதிர எறங்கும் பள்ளம்
கோடிசனம் சாவும் பள்ளம்
செத்தவுங்க செத்தாலும் - என்னோட
சீமா(ன்) இருந்தா போதுமின்னே 2

## 186. நிறங்குலைந்தேன்

பழனியம்மாள், 40
விரகனூர்ப்பட்டி
சேலூர் நாடு

கட்டு பொஸ்தகமா - என்னப்பெத்த என்னப்பா எனக்கு
கண்ணியமா சாதகமா
கட்டு பொஸ்தகத்த
கண்ணணியமா சாதகத்த - என்னப்பெத்த அம்மாளும் அப்பனும்
காசிக்குக் கொண்டுபோயி
கண்குளுரப் பாத்திருந்தா - எனக்குக்
காசி கெடச்சிருக்கும்
கால்தடமுஞ் சிக்கிருக்கும் - என்னப்பெத்த அப்பா எனக்கு
கட்டு பொஸ்தகத்த
கண்ணியமா சாதகத்த - நீங்க
காசியில கொண்டுபோயி
கண்குளுரப் பாக்காம - எனக்குக்
காசி கெடைக்கிலியே
கால்தடமுஞ் சிக்கிலியே - நீபெத்த
கள்ளி நெறங்கொலஞ்சே(ன்) 1

மடுப்பு பொஸ்தகமா - என்னப்பெத்த என்னப்பா எனக்கு
மங்கையம்மா சாதகமா - நீங்க
மாளியிலே கொண்டுபோயி
மனங்குளுரப் பாத்திருந்தா - எனக்கு
மாளி கெடச்சிருக்கும் - நீங்க
மதிச்ச எடங் கெடச்சிருக்கும் - நீங்க
மடுப்பு பொஸ்தகத்த
மங்கையம்மா சாதகத்தே - நீங்க
மாளியிலே கொண்டுபோயி - என்னப்பெத்த அப்பாவும் அம்மாவும்
மனங்குளுரப் பாக்காம - எனக்கு
மாளி கெடைக்கிலியே
மதிச்ச எடஞ் சிக்கிலியே 2

## 187. தென்னம்பூ மின்னல்

பழனியம்மாள், 40
விரகனூர்ப்பட்டி
சேலூர் நாடு

வடக்கித்தி சன்னலிலே - என்னப்பெத்த என்னம்மா எனக்கு
வாலம்பு மின்னலலு - எனக்கு
மானுவந்து கூடுகட்டும்
மயிலுவந்து பூசபண்ணும் - நா
மானுக்கு மானளந்தே - என்னப்பெத்த தாயாரே
மலைக்குவர என்னப்பெத்த தாயெழந்தே - எனக்குத் 1

தெக்கத்தி சன்னலலே
தென்னம்பூ மின்னலிலே - எனக்குத்
தேனுவந்து கூடுகட்டு(ம்)
தெய்வம்வந்து பூசபண்ணு(ம்) - நா
தேனுக்குத் தேனளந்தே - என்னப்பெத்த அம்மா நா
திரும்பிவரத் தாயெழந்தே - எனக்குக் 2

கருங்கல்லு வீடுன்னு- என்னப்பெத்த என்னப்பா எனக்குக்
கனத்த பொழப்புஇன்னு - நீபெத்த
கள்ளிய சம்மதிச்சா -நா
கள்ளிபோயிப் பூந்தொடனே - என்னப்பெத்த மாதாவே எனக்கு

கருங்கல்லு வீடுமில்லே
கனத்தோ பொழப்புமில்லே - எனக்குவந்த
கருணருக்கோ வேலயில்லே - நீபெத்த
கள்ளி நெறங்கொலஞ்சே - எனக்கு 3

செங்கல்லு வீடு இன்னு - என்னப்பெத்த மாதாவே எனக்குச்
சிறியோ பொழப்பூன்னு - நீபெத்த
செல்லத்தே மாலயிட்டே - நா
செல்லம்வந்து பூந்தொடனே - எனக்குச்
செங்கல்லு வீடுமில்லே - எனக்குச்
சிறியோ பொழப்புமில்லே - எனக்குவந்த
சீமனுக்கும் வேலயில்லே - நீபெத்த
செல்லி நெறங்கொலஞ்சே 4

## 188. பட்டு நனையுதய்யா

பழனியம்மாள், 40
விரகனூர்ப்பட்டி
சேலூர் நாடு

பட்டே எடுத்துடுத்தி - என்னப்பெத்த என்னப்பா நா
பவுனுநவ[1] மேல்பூட்டி - நாபிறந்த
பட்டணமே போனமின்னா - எனக்குப்
பட்டணத்தே பேயுமழ - எம்
பாண்டியனார் இருக்குமட்டும் - எனக்குப்
பட்டு நனயிலியே - நா போட்டிருக்கும்
பவுனு நவ மங்காது - எம்
பாண்டியனார் போய்மடிய - நா இன்னிக்குப்
பட்டணத்தே பேயிமழ - எனக்குப்
பட்டு நனயுதய்யா - நா போட்டிருக்கும்
பவுனுநவ மங்குதய்யா - நா 1

சீல எடுத்துடுத்தி - என்னப்பெத்த என்னப்பா நா
சிறுநவய மேல்பூட்டி - நா பொறந்த
சீமைக்குப் போனமின்னா - எனக்குச்
சீமையில பேயுமழ - எனக்குச்

சீலநனயாது - எனக்குப் போட்டிருக்குஞ்
சிறுநவயும் மங்காது - எனக்குச்
சீமானார் போய்மடியோ - எனக்குச்
சீமயில பேயுமழ
சீல நனயுதய்யா - எனக்குச்
சிறுநவயும் மங்குதய்யா 2

[1] நகை

## 189. மணிவிளக்குச் சாய்ந்தது

பழனியம்மாள், 40
விரகனூர்ப்பட்டி
சேலூர் நாடு

கோட்ட[1] கருவப்பிள்ளே - என்னப்பெத்த என்னப்பா நா
கொண்டுவந்த தென்னம்புள்ளே - நீ இன்னிக்குக்
குயிலா பொழப்பேன்னு - எனக்குக்
குறுக்கே செவுரு[2] வெச்சி - நீபெத்த
குயிலாள நாட்டினிங்க - எனக்கு
கோட்ட இருண்டாது[3]
கொடிவெளக்கு சாஞ்சாது[4] - நீபெத்த
குயிலா அழியறம்மா 1

மதுர கருவப்பிள்ளே - என்னப்பெத்த என்னம்மா நா
வாங்கிவந்த தென்னம்பிள்ளே - நீபெத்த
மயிலா பொழப்பேன்னு - எனக்கு
மருவ செவுரு வெச்சி - நீ பெத்த
மயிலாள நாட்டினிங்க - இன்னிக்கு
மாளி[5] இருண்டாது
மணிவெளக்குச் சாஞ்சாது - நீபெத்த
மயிலா அழியறம்மா 2

[1] கோட்டை [2] சுவர் [3] இருண்டது [4] சாய்ந்தது [5] மாளிகை

## 190. இது குயிலாள் விடும் கண்ணீர்

பழனியம்மாள், 40
விரகனூர்
சேலூர் நாடு

ஆன சமுக்காளம் - என்னப்பெத்த என்னப்பா எனக்கு
அஞ்சுலட்சம் பஞ்சாங்கம் - நா
அல்லியோட சாதகத்தெ
ஆள்தெரிஞ்சு பாக்காம - நா
அல்லிவிடுங் கண்ணீரு
ஐயிருமல சுத்தியல்லோ - ரண்டு
அரும்புக்கட வந்திறங்கும் - இந்த
அரும்பெடுக்க வாரவுங்கோ
ஆத்துத் தண்ணியிம்பாங்க - இது

ஆத்துத் தண்ணி இல்லையம்மா - நா
அல்லிவிடுங் கண்ணீரு 1

குதிரெ சமுக்காளம்
கோடிலட்சம் பஞ்சாங்கம்
குயிலாளோட சாதகத்த
கொண்டறிஞ்சு பாக்காம - நா
குயிலாவுடுங் கண்ணீரு
கொல்லிமல சுத்தியல்லோ - ரண்டு
கொழுந்துகட வந்திறங்கும் - இந்த
கொழுந்தெடுக்க வாரவுங்கோ
கொளத்துத் தண்ணி இம்பாங்க - இது

கொளத்துத்தண்ணி இல்லையம்மா - நா
குயிலாவிடுங் கண்ணீரு 2

குத்தும் புழுங்கரிசி
கோரட்டு[1] பச்சரிசி - நா

கொழுந்து ஒரு திண்ணையிலே
குயிலா ஒரு திண்ணையிலே - நா
கொழுந்து மலரவிட்டே - என்னப் பெத்த அம்மா நீ பெத்த
குயிலாள கூறவிட்டே
அல்லும் புழுங்கரிசி
ஐக்கோட்டு[2] பச்சரிசி - நா
அல்லியொரு திண்ணயிலே
அரும்புஒரு திண்ணயில - நீங்க
அரும்பு மலரவெச்சே - நீபெத்த
அல்லியச் கூறயிட்டே 3

*1,2-கோர்ட், ஹைக்கோர்ட் (ஆங்கிலச் சொற்கள்)*

## 191. பேசும்; ஏசும்

பழனியம்மாள், 40
விரகனூர்ப்பட்டி
சேலூர் நாடு

கோட்ட கறுப்புச்சீல - என்னப்பெத்த என்னப்பா எனக்குக்
கொடி கொடியா முந்தாணி - நா
கொஞ்சி உடுத்தியல்லோ
கோட்டைக்குப் போனா - நா
கொண்டவனத் தோத்த
கொடும்பாவி வாராளுன்னு
கூட்டம் போட்டுப் பேசுவாங்க 1

மருது கறுப்புச்சீல
மல்லியப்பூ முந்தாணி - நா
மடிச்சி உடுத்தியல்லோ - நாபொறந்த
மாளி(கை)க்கு வந்தமின்னா
மன்னவனத் தோத்த
மாபாவி வாரான்னு
மட்டம்போட்டுப் பேசுவாங்க. 2

## 192. சம்மதமா?

பழனியம்மாள், 40
விரகனூர்ப்பட்டி
சேலூர் நாடு

ஊசி பெருங்கோர - என்னப்பெத்த அப்பா எனக்கு
உக்கழுத்துப் பொம்பதைக்கம் - எனக்கு
ஊராரே மின்னவெச்சி
உடம்பொறப்பெ பின்ன வெச்சு - எந்தாலி
உருக்கிக் கழட்டினாலும்
ஊராருக்குச் சம்மதமா? - எனக்கு 1

நாட்டுப் பெருங்கோர
நடுக்கழுத்து நற்தாலி - எனக்கு
நாட்டர மின்னவெச்சு
நடுப்பொறப்பப் பின்னவெச்சு
நறுக்கிக் கழட்டுனாலும் - உங்க
நாட்டுக்குச் சம்மதமா? 2

## 193. தாசிவெச்ச கைமருந்து

பழனியம்மாள், 40
விரகனூர்ப்பட்டி
சேலூர் நாடு

செல்லி நெருப்புப்பெட்டி - என்னப்பெத்த என்னப்பா எனக்கு
வீமர்கட பீடிக்கட்டு - எனக்கு
வேசியென்ன சொன்னாரோ - எனக்குவந்த
வீமரென்ன கேட்டாரோ - இந்த
வேசிவெச்ச கைமருந்து - என்னப்பெத்த என்னப்பா எனக்கு
வீசிருச்சே ரேகமெல்லாம்[1] - எனக்குத் 1

தங்க நெருப்புப்பெட்டி - என்னப்பெத்த என்னப்பா எனக்கு
தருமர்கட பீடிக்கட்டு - இந்த
தாசியென்ன சொன்னாரோ
தருமரென்ன கேட்டாரோ - இந்த
தாசி வெச்ச கைமருந்து
தாக்கிருச்சே ரேசமெல்லாம் 2

*[1] திரேகமெல்லாம்*
*கணவன் மருந்திட்டுக் கொல்லப்பட்டான் என்று பாடுவது.*

## 194. தன்னை மறப்பாள்

பழனியம்மாள், 40
விரகனூர்ப்பட்டி
சேலூர் நாடு

நெத்தி புருவத்துக்கும்
நெத்தி புருவத்துக்கும் - என்னப்பெத்த என்னப்பா அவுரு
நெஞ்சிலுள்ள தேமலுக்கும் - அவ
நீலகிரித் தேவிடியா
நின்னா மறந்திருப்பா
நேரங்கண்டா கையெடுப்பா - அவுரு
கண்ணு புருவத்துக்கும்
கழுத்திலுள்ள தேமலுக்கும்
கைலங்கிரித் தேவடியா
கண்டா மறந்திருப்பா
காலங்கண்டா கையெடுப்பா.

## 195. பாறப்பொடி நுணுக்கி

பழனியம்மாள், 40
விரகனூர்ப்பட்டி
சேலூர் நாடு

பாறப் பொடி நுணுக்கி - என்னப்பெத்த என்னப்பா
பவுனழிச்சு மாடிகட்டி - நா
பவுனழிச்ச மாளியில - ஒரு
பால்பூச ஆவுதுன்னா
பாங்குடனே எம்பொறப்பு
படைய அனுப்பிருந்தா - நா
பணத்தே மடியிலுட்டு
பழந்தேங்கா தட்டங்கொண்டு - நாம்புறந்த
பட்டணமே போனமின்னா - என்னோட பொறந்த புறவி எந்தம்பி
எனக்குவந்த
பத்தாவே[1] கைகுலுக்கி

பத்தாவே கைகுலுக்கி - அக்காநீ
பாலக் குடியக்கா
பசியாறிப் போவுமின்னா - நா
பாலக் குடிக்கவல்லே - உங்கவீடு
பசியாறிப் போகவல்லே - நீங்க
கண்மறஞ்ச நாளக்கி - உங்கமாளிக
காலுவைக்க அஞ்சுரைய்யா - நா 1

காரப் பொடி நுணுக்கி - என்னப்பெத்த அப்பா
காசழிச்சு மாளிகட்டி - நீங்க
காசழிச்ச மாளிகையில
கனப்பூச ஆவுதுன்னு - என்னோட
கருத்துடனே எம்பொறப்பு
கடயோல அனுப்பிருந்தா(ன்) - நா இங்க
காச மடியவுட்டு
கைநெறயத் தட்டங்கொண்டு - எனக்குவந்த
கணவர மின்னனுப்பு - நா
கள்ளிவந்து வந்தனின்னா - எனக்குவந்த
கருணரக் கைகுலுக்கி - எம்பொறவி தம்பிநீ
கருணரக் கைகுலுக்கி
காப்பி குடியுன்னா - நா இங்கே
காப்பி குடிக்கவல்லே - என்னப்பெத்த அப்பாநீங்க
கண்மறஞ்ச நாளிக்கெல்லாம் - உங்கவாச(ல்)
காலுவைக்க அஞ்சுரைய்யா. 2

[1] *பார்த்தாவை - கணவரை*

## 196. படமும் வந்து பேசுமோ

**தனபாக்கியம், 47**
**எம்.ஜி.ஆர். நகர்**
**வாழவந்திநாடு**

பச்சக்கல்லு மங்கிலியம் - என்னப்பெத்த அம்மா எனக்கு
பவுனெழச்ச தாயத்து - என்னோட
பாண்டியரா இருக்குமட்டும் - என்னப்பெத்த அம்மா

பதறி அழுவலம்மா - எனக்குப்
பவுனுநவ மங்குலம்மா - என்னோட
பாண்டியரா போய்மடிய - என்னப்பெத்த அம்மா
பதறி அழுவறம்மா - எனக்குப்
பவுனுநவ மங்குதம்மா - என்னோட
சின்னப் பொறப்பிருந்து - அம்மா நீங்க
பதறி அழுவாதம்மா
பவுனுநவ மங்காதம்மா - உன்னோட
பாண்டியரப் போலவல்லோ
படமெழுதித் தாரமின்னு - அண்ணா எனக்குப்
படமும்வந்து பேசுமாண்ணா
பாங்கிகொற தீருமாண்ணா - எனக்குச் 1

செவப்புக்கல்லு மங்கிலியம் - என்னப்பெத்த அம்மா எனக்கு
சிறுநவயும் தாயித்து - என்னோட
சீமானிருக்கு மட்டும் - என்னப்பெத்த அம்மா நாங்க
செதறி அழுவலம்மா - எனக்குச்
சிறுநவயும் மங்குலம்மா - என்னோட
சீமானப் போய்மடிய - நாங்க
செதறி அழுவுறம்மா
சிறுநவயும் மங்குதம்மா - என்னோட 2

சின்னப் பொறப்பிருந்து - நீங்க
செதறி அழுவாதம்மா
சிறுநவயும் மங்காதம்மா - உன்னோட
சீமானப் போலயில்ல - நா
செலயெழுதித் தாரமின்னா - அண்ணா எனக்கு
செலயும்வந்து பேசுமாண்ணா - என்னோட
செல்லி கொற தீருமாண்ணா 3

கோட்ட கறுப்புச்சீல - எனக்கு அங்க
கொடி கொடியா முந்தாணி - நாங்க
கொஞ்சி உடுத்தியல்லோ - நாம்பொறந்த
கோட்டைக்குப் போனனின்னா - இன்னிக்குக்
கோட்டையில உள்ளவங்க
கொண்டவனத் தோத்த

கொடும்பாவி வாரான்னு
கூட்டம் போட்டுத்தா பாப்பாங்க - எனக்கு 4
மதுர கறுப்புச்சீல - என்னப்பெத்த அம்மா எனக்கு
மல்லியப்பூ முந்தாணி - நா இத
மடிச்சு உடுத்தியல்லோ - நாம்பொறந்த
மருதைக்குப் போனனின்னா
மருதயில உள்ளவங்க - இந்த
மன்னவனத் தோத்த
மாபாவி வாரான்னு
மரமேறிப் பாப்பாங்க 5

## 197. பந்தயம் வெல்லவில்லை

தனபாக்கியம், 47
எம்.ஜி.ஆர். நகர்
வாழவந்திநாடு

செட்டி எளவேட்டி - என்னப்பெத்த அம்மா
சீரங்கத்து மல்வேட்டி - எனக்கு
எட்டா மடிச்சியல்லோ - இன்னிக்கு
இருபக்கமுங் குஞ்சமுட்டு - ஏ
வில்லு செயித்தியிங்குன்னு - நீங்கபோட்ட
வீரியங்க வெல்லுமுன்னு - என்னப்பெத்த என்னம்மா
வெள்ளியில ஆலாத்தி - நா இன்னிக்கு
வீதியில வெச்சிருந்தே - இன்னிக்கு
வில்லு செயிக்கிலய்யா - நீங்க போட்ட
வீரியங்க வெல்லுலய்யா - நா இன்னிக்கு
வெள்ளியில ஆலாத்தி - என்னப்பெத்த அம்மா நா
வீதியில உட்டெறிஞ்சே(ன்) 1

பாப்பா(ன்) எளவேட்டி - இன்னிக்கு என்னப்பெத்த என்னம்மா
பட்டணத்து மல்வேட்டி - நாங்க
பத்தா மடிச்சியல்லோ
பலபுறமுங் குஞ்சமிட்டு - ஐயோ
பந்த செயிப்பியுங்குன்னு - நீங்கபோட்ட

பந்தயங்க வெல்லுமுன்னு - நாங்க இந்த
பவுனால ஆலாத்தி - என்னப்பெத்த அம்மா
பாதயில வெச்சிருந்தோம் - இன்னிக்குப்

பந்த செயிக்குலய்யா - நீங்கபோட்ட
பந்தயங்க வெல்லுலய்யா - நாங்க இன்னிக்குப்
பவுனாலே ஆலாத்தி - இன்னிக்குப்
பாதயில உட்டெறிஞ்சே(ன்) 2

## 198. சேதாரமானது

தனபாக்கியம், 47
எம்.ஜி.ஆர். நகர்
வாழவந்திநாடு

மாங்கா புளிக்கொழம்பு - என்னப்பெத்த அம்மா
மாம்பழக் கச்சாய்
வடக்கத்து பச்சியல்லாம் - நம்ம
வாசவந்து ஆறுதம்மா - நா இந்த
வாசலில பூத்தமல்லி
வாடாத ரோசாப்பூ - என்னப்பெத்த அம்மா நாங்க இந்த
வாசவர அஞ்சுறம்மா - எனக்குத் 1

தேங்காப் புளிக்கொழம்பு - என்னப்பெத்த அம்மா எனக்குத்
தேம்பாலக் கச்சாயம் - இந்த
தெக்கத்துப் பச்சியெல்லாம் - நம் வாசனைக்குத்
தின்னுகள ஆறுதம்மா - நா இந்த
திண்ணயில பூத்தமல்லி
தேடாத ரோசாப்பூ - நம்ம வாசனைக்குத்
திண்ணவரத்தா அஞ்சுறனே 2

மலையோரம் தக்காளி - என்னப்பெத்த அம்மா எனக்கு
மாசம் ஒரு காய்காய்க்கும் - நீபெத்த
மயிலா பொழப்பான்னு - நீங்க
மாடு குடுத்திங்கம்மா
மறுநவயுந் தந்தீங்கம்மா - நா இந்த

மன்னவெ புத்தியாலே - என்னப்பெத்த அம்மா எனக்கு
மாடு அடமானம் - என்னப்பெத்த அம்மா எனக்கு
மறுநவயுஞ் சேதாரம் - எனக்குச் 3

செடியோரந் தக்காளி - என்னப்பெத்த அம்மா எனக்குத்
தேசமொரு காய்காய்க்கும் - நீபெத்த
செல்லம் பொழைக்குமின்னு - நீங்க
சீரு குடுத்தீங்கம்மா
சிறுநவயுந் தந்தீங்கம்மா - நா இந்த
சீமானோட புத்தியாலே - எனக்குச்
சீரு அடமானம்
சிறுநவயுஞ் சேதாரம் 4

## 199. கைவிலங்கு போட்டதய்யா

தங்கம்மாள்,55
சின்னக்கவரப்பட்டி
அரியூர்நாடு

ஈர மயிருணந்தி - நாங்க
இக்கணமா கணவரே பல்லவித்து - ராசா
இக்கணமா புல்லவித்து - நீங்க
சீனிக்கொடி ஒரு பள்ளத்தில - ராசா நீங்க ஒரு
சீட்டாட்டம் ஆடப்போனா - உங்களுக்குச்
சீட்டு மறந்ததய்யா - ராசா உங்களுக்குச்
சிறுவிலங்கு போட்டாங்கையா - ராசா உனக்கு

காஞ்ச மயிருணத்தி - நாங்க ஒரு
காயலுக்கு பட்டுடுத்தி - ராசா உங்களுக்கு
காயலுக்கு ஒரு பட்டுடுத்தி - நீங்க ஒரு
காஞ்சிக் கொடி ஒரு பள்ளத்தில - நீங்க
காசாட்டம் ஆடினீங்க - உங்களுக்குக்
காசுகுத்தம் வந்துதய்யா - உங்களுக்குக்
கைவிலங்கு போட்டதய்யா

எண்ணிவந்த மந்திரியா - நீங்க
இளநாட்டு சீமிர்களா - நாம்ம
செஞ்சி மலயவிட்டு - நீங்க
சீமராசா போனீங்களா - உனக்குவந்த
தேவியோ மொழங்குதய்யா - நா
தேவிபண்ண சீமானே வாடுறய்யா

கொத்து மயிருணத்தி - நா
கூந்தாலே விரிச்சுவிட்டு - இங்கு
நாம்பொறந்த ராசகோட்டயிலே - உனக்குவந்த
குயிலாயே பொலம்புறைய்யா - இந்தக்
கொடுமயெல்லாம் அலச்சிலய்யா - எங்களுக்குக்
கொடுமயே தீருலய்யா - நீ
ஐயோ கொடுமதீர - நீங்க
அருச்சணனா சாமிகளா - எனக்கு
கைநாட்டு சீமிர்களா

தங்கத்தால தட்டு - எனக்கு
தாம்பாளமே முன்னிருக்கும் - நா
தாம்பளத்தே தளிர்வைத்து - என்னு
தரிமரும் தேவியளா - நாம்பொறந்த
தங்கதடம் போனமின்னா - இந்தத்
தருமுரு குளிக்குந்தண்ணி - இந்தத்
தருமரு தண்ணியல - இங்க
எனக்குவந்த ராசாவே - உங்களுக்கு
தங்கபடி மிதிக்காதேம்பா - உங்களுக்குத்
தாம்பளமே எறக்குமின்னா - நா
தாம்பளத்தே எறக்கிராட்டு - நா
தங்கக் கொடத்திலே - இந்தத்
தருமேரு குளிக்குந்தண்ணி - நா
தங்கக் கொடத்தில - நா
தனிச்சேயே உள்ளபோயி -இந்தத்

தருமேரு சொன்னாது - நீ
தண்ணியே மோக்காத்தம்பா - உனக்குத்
தாந்தவரம் தொங்கமின்னா - நா
தங்கோ மனவாரி - எனக்குவந்த
தருமோரே இணங்கவிட்டு - நா
தவிக்கவெச்சு பாக்கிறீங்க - நீ
என்னபெத்த சாமியெல்லாம் - நீ
எளங்கோடி ராசாவெல்லாம் - எனக்கு
என்னவரம் கொடுத்திங்களோ - நா
பாவியா பதறுறே(ன்) - இந்தப்
பாலபோகும் ஒரு வாசலில -நாங்கவொரு
பாவிபொண்ணா வாடுறம்பா

## 200. சனம் சொல்லும்

தங்கம்மாள், 55
சின்னக்கவரப்பட்டி
அரியூர் நாடு

வேட்டிய வெளுத்துக்கட்டி - எங்க
மாலயிட்ட மன்னவரே - நா
வெளியீல போனாலும் - சாமி
வெளியீல உள்ளசனம் - சாமி
வெள்ளையட்டின்னு சொல்வாங்க - எங்களுக்கு
வீதின்னா நடுக்கமாவும்- எங்களுக்கு
விசனங்களே கொன்னுடுமா - சாமி
தாலிவெச்ச தருமீரே - நா
தாலிவெச்ச தருமரெல்லாம் - நா
தாலி சரட்டளந்து - தருமரே நா
தவந்ததொரு பூவளந்தே - நா
தருமூரே நானளந்தே - என்ன 1

மாலயிட்ட மன்னவரே - சாமி
மங்கயளா வாருறய்யா - சாமி
கூறளந்து கொட்டளந்து - நா ஒரு
கொடம்நெறஞ்ச பூவளந்தே - நாங்க
குந்தவரே எழுந்தபாவி - நா

கொடும பெற்றே வாடுறமே - நா
கந்தெ எடுத்துக்கட்டி - சாமி நா
காதத்திலே போனாலுமே - இந்த
காதத்திலே உள்ளசனம் - எங்கள ஒரு
கம்மனாட்டின்னு கொல்லுவாங்கோ - சாமி நா
கவலபட்டு நில்லுறம்மா - நாங்க
ஐயோ திருவுளத்தே 2

## 201. என்ன செய்வேன்?

பழனியம்மாள், 40
விரகனூர்ப்பட்டி
சேலூர் நாடு

கருங்கல்லுக் கட்டடமா - என்னப்பெத்த என்னப்பா
காசிராசா பட்டணமா - இன்னிக்கு
கண்டா நெழலாகும்
கரண்டு[1] வெச்சாத் தண்ணிவரும் - எனக்கு
கரண்டு வெச்ச தண்ணியில - என்னப்பெத்த என்னப்பா எனக்கு
காயிதங்க மேல் மெதக்கும் - இன்னிக்கு
காயிதத்த வாசிக்க - எனக்குக்
கருணச் சிறுவயசு - எங்
கண்ணையா என்ன செய்வே? 1

பச்சக்கல்லுக் கட்டடமா - என்னப்பெத்த அப்பா எனக்கு
பாசிராசா பட்டணமா - நா
பாத்தா நெழலாகும்
பைப்பு[2] வைச்சாத் தண்ணிவரும் - நா
பைப்பு வைச்ச தண்ணியில - ரண்டு
பத்திரங்க மேல்மெதக்கும் - எனக்குப்
பத்திரத்த வச்சபணம் - எனக்கு
பாலஞ் சிறுவயது - நா
பார்வதியா என்ன செய்வே? 2

[1,2] *மின்சாரம், குழாய் (ஆங்கிலச் சொற்கள்)*

## 202. பட்ட வேங்கை

பழனியம்மாள், 40
விரகனூர்ப்பட்டி
சேலூர் நாடு

காலக் கருக்கலுக்கும்
கருமானம் மின்னலுக்கும் - எனக்குக்
கரடிவந்து மேயுதுன்னு - ரண்டு
கள்ளவந்து சொன்னானே - நா
கருமருந்தக் கைலெடுத்துக்
கரடிசுடப் போனமுன்ன
கரடிமேல பாய்ஞ்சகுண்டு
கரடிமேல பாயாதே - எங்
கருணர்மேல பாஞ்சிச்சே 1

வெள்ளக் கருக்கலுக்கும்
வெறுமானம் மின்னலுக்கும் - எனக்கு
வேங்கவந்து மேயுதுன்னு
வேடவந்து சொன்னானே - நா
வெடிமருந்தே கையெழுத்து
வேங்கசுடப் போனமின்னா - அந்த
வேங்கமேல போட்டகுண்டு
வேங்கமேல படாதே - என்
வீமர்மேல பட்டிருச்சே 2

## 203. கருங்குருவி நாடுதய்யா

பழனியம்மாள், 40
விரகனூர்ப்பட்டி
சேலூர் நாடு

காசிக்கு அந்தப்பக்கம்
காசிக்கு அந்தப்பக்கம்
கருமலக்கு இந்தப்பக்கம் - என்னப்பெத்த அப்பா எனக்கு
காசிராசா கட்டிவெச்சே
காசாடு மண்டவமாம் - இன்னிக்கு

காசிராச இருக்குமட்டும்
காக[1] நனையாது
கருங்குருவி நாடாது - இன்னிக்கு
காசிராசா போய்மடிய
காக நொழதய்யா[2]
கருங்குருவி நாடுதய்யா - எனக்குச் 1

செஞ்சிக்கு அந்தப்பக்கம்
சிறுமலக்கும் இந்தப்பக்கம் - எனக்குச்
செஞ்சிராசா கட்டிவெச்ச
சீட்டாடும் மண்டகமா - எனக்கு
செஞ்சிராசா இருக்குமட்டு
சிட்டு நொழயாது
சிறுங்குருவி நாடாது - எனக்கு
செஞ்சிராசா போய்மடிய
சிட்டு நொழயுதய்யா
சிறுகுருவி நாடுதய்யா 2

*தந்தை, தாய் இறப்புக்குப் பொதுவாகப் பாடுவது என்று திருமதி. பழனியம்மாள் குறிப்பிட்டார். கணவனுக்காகப் பாடுவது போல் தெரிகிறது.*

*[1] காகம் [2] நுழைகிறது*

## 204. உங்கவல்லே

**தனபாக்கியம், 47**
**எம்.ஜி.ஆர். நகர்**
**வாழவந்திநாடு**

நாலு புளியமரம் - என்னப்பெத்த அம்மா இன்னிக்கி
நாப்பத்தெட்டுதா பள்ளிக்கூடம் - இன்னிக்குக்
கட்டுக் கரும்புவரும் - என்னப்பெத்த அம்மா இன்னிக்கு
காவேரித் தீத்தம்வரும் - இன்னிக்குப்

பொட்டீல பூவுவரும் - இன்னிக்குப்
    பொறந்தகத்துக் கோடி வரும்
நீ வந்தது போதுமம்மா - நீ
    வாழநெலசாயும் வடபொறமாத் தள்ளி நில்லு - நா

உங்கவல்லெ[1] திங்கவல்லெ - என்னப்பெத்த அம்மா
    உங்க வீட்டுக்கு ஒறவாடி நானும்வல்லெ - எங்க
ஆயிஅப்பே கட்டிவச்சிவச்ச
    நல்ல பலமரமும்
    நடவாசக் கட்டடமும்
    நாம்பாக்க வந்தனம்மா - இன்னிக்கு
வந்தது போதுமம்மா - இன்னிக்கு
    வாழநெலசாயும் வடபொறமாத் தள்ளிநில்லு

*கணவன் மடியப் பிறந்தகம் வரும் பெண், தன்னை ஏற்க மறுக்கும் அண்ணியிடம் சொல்லிப் புலம்புவது.*

*[1] உண்ண வரவில்லை, தின்ன வரவில்லை.*

## 205. குழந்தை வளர்க்கவில்லை

பழனியம்மாள், 40
விரகனூர்ப்பட்டி
சேலூர் நாடு

மஞ்சங்கா பில்லறுத்து - என்னப்பெத்த அப்பனுக்கு
மலயோரம் வூடுகட்டி - எனக்கு
மனபாக்க வாரவுங்கோ
மைந்தனெங்கன்னு கேட்டாங்கோ - நா
மைந்த வளத்திலியோ
மத்தவரம் வாங்குலயோ - நா
மரிச்சி என்ன சொல்லுவனோ - நா 1

குஞ்சங்கா பில்லறுத்து
குயிலோரம் வூடுகட்டி - எனக்கு
குயில்பாக்க வாரவுங்கோ - உனக்கு
கொழந்த எங்க இம்பாங்க - நா
கொழந்த வளத்திலியோ
கொஞ்சவரம் வாங்கிலியோ
குறிச்சு என்ன சொல்லுவனோ 2

## 206. கரூர் மல்வேட்டி

பழனியம்மாள், 40
விரகனூர்ப்பட்டி
சேலூர் நாடு

ஓடறுத்து வீடுகட்டி - என்னப்பெத்த என்னப்பா
ஒயரிழுத்த[1] மச்செழுப்பி - இன்னிக்கு
ஓடறுத்த வீட்டிலியும்
ஒயரிழுத்த மச்சிலியும் - எனக்கு
உடுத்துங் கதர்வேட்டி
உள்ளுரு மல்வேட்டி - நீங்க

உடுத்து வெளியவந்தா - நா
ஒசந்த பொறப்பும்பே
ஒறையூரு வக்கிலும்பே - நா 1
கல்லறுத்து வீடுகட்டி - என்னப்பெத்த என்னப்பா எனக்கு
கரண்டிமுத்த மச்செழுப்பி
கரண்டிமுத்த மச்சீல
கட்டுங் கதர் வேட்டி
களுரு மல்வேட்டி - நீங்க
கட்டி வெளியவந்தா - நா
கனத்த பொறப்பும்பே
களுரு வக்கிலும்பே 2

[1] *வயர் - ஆங்கிலச்சொல்.*

## 207. பிறந்தவீடு வெறுத்தது

குப்பாமி, 42
சித்தூரணிப்பட்டி
வாழவந்திநாடு

பத்தூல ஒருபொறப்பே - ஐயா நா
பவளக் கொடிப்பொறப்பே - நா
பத்துநா காணாட்டி - அம்மா நா
பாவா தடம்பாப்பே
பார்வதியே நாள்கேப்பே - எனக்கு 1
எட்டூல ஒருபொறப்பு
எலந்தக் கொடிப்பொறப்பு -நா
எட்டுநா காணாட்டி - ஐயாநா
எட்டித் தடம்பாப்பே
ஈஸ்பரியே நாள்கேப்பே 2

ஆரஞ்சு நாள்கௌரு
அருமுள்ள எம்பொறப்பே - நீ
அடுத்தவா பேச்சக்கேட்டு
என்னரும மறந்தீயா? - எனக்கு
அனுப்புஞ்சீரு நிறுத்தினியா? 3

கேடறிஞ்சு நாள் கெளரு
கொணமுள்ள எம்புறப்பே - நீ
கொண்டவா பேச்சக்கேட்டு
கோணத்த மறந்தீயா - எனக்கு
குடுக்குஞ்சீரு நிறுத்தினியா? 4

கத்திரியும் பாவயும் - நாங்க
கலந்தமே பாத்தீல - நம்ம
கணக்கிருக்க தேவிவந்து - எனக்குக்
கசந்துதே பொறந்தெடம் - நாங்க 5

வெள்ளிரியும் பாவயும் - நாங்க
வெளஞ்சமே பாத்தீல - எங்க
வீமருக்குத் தேவிவந்து - எனக்கு
வெறுத்துதே பொறந்தெடம் 6

புளூவு சரட்டு[1] போட்டு - அண்ணா நீ
புதுப்பேனா கைப்புடிச்சு - நீங்க
பொன்னுமஞ்சி காட்டிக்கு
புகழ் படிக்கப் போனது - நா
பொன்னாளொட சஞ்சலத்த - அண்ணா நா
பொருத்தமா சொல்லீட்டா - அங்க
புளூவு சரட்டு மங்கும்
புதுப்பேனா கைநழுவும் 7

சலவு சரட்டுப்போட்டு
தனிப்பேனா கைலெடுத்து - எம்பொறப்பு
தனிப்பேனா கைலெடுத்து
தங்கமஞ்சி காட்டிக்கு - எனக்குத்
தமிழ்படிக்கப் போனது - நா
தங்களொட சஞ்சலத்தே - அண்ணா நா
தனியே நின்னு சொல்லீட்டா - உங்களுக்குச்
சலவு சரட்டு மங்கும் - அண்ணா
தனிப்பேனா கைநழுவும் 8

[1] *நீலநிறச்சட்டை (ஆங்கிலச் சொற்கள்)*

## 208. சிரசில் போட்ட எழுத்து

தங்கம்மாள், 55
சின்னக்கவரப்பட்டி
அரியூர்நாடு

காட்டுகளா இங்க குருவிகளா - இங்க
கானகத்துப் பச்சிகளா
என்னப் பெத்தஇங்க சாமிகளா
எம்பொறவி எங்க தம்பிகளா - இங்க
எளநாட்டுக்கு இங்க ராசோவளா
எம்பொறப்பு இங்க ராசோவளா - இந்த
கானகத்து இந்த பச்சிகளா - ஒரு
கண்டகனி இங்க தின்னுவிங்க
என்னொடய இங்க சாமீயிக்கு
எம்பொறவி தம்பியளா - இங்க
கானகமே இங்க போயிருந்தா - என்னோட
பொறந்த கருணாரல்லாம் கண்டாலுமே - நீங்க
கண்டகனி சாமி தின்னவிங்க - ஒரு
கண்டசேதி இங்க சொல்லுங்களே

எம்பொறவி இங்க தம்பியிருக்கு - அம்மா
காட்டுகளா குருவிகளா - நா
கானகத்து இங்க பச்சிகளா - நாங்க
கண்டகனி இங்க தின்னுவிங்க - அம்மா
கானகமே சாமி போனோமம்மா - உன்னோட பொறந்த
காராளர நாங்க கண்டோமம்மா - நாங்க
கண்டசேதி நாங்க சொன்னோமம்மா - நாங்க
கண்டசேதி நாங்க சொன்னோமம்மா - உன்னோட பொறந்த
காராளரே அவுங்க சொன்ன சொல்லு - அதே
கன்னியளே அது தலயெழுத்து - அவுங்களுக்குக்
கடெசியிலேயே அது போட்டெழுத்து - என்னோட பொறந்த

கருணயரே அது சொன்னாங்களோ
செவப்புகளே குருவிகளே எங்களுக்குச்
சீரங்கத்துச் சாமி பச்சிகளே - நீங்க
செல்லக்கனி நீங்க தின்னவிங்க - நீங்க
என்னப் பெற்ற நீங்க சாமியளா - அம்மா
எம்பொறவி சாமி தம்பிக்குத்தா - நீங்க
சீமயிக்கு நீங்க போனீங்கன்னா - ஒரு
சேதியில அம்மோ சொல்லுங்கம்மோ- நா 1

சின்ன நல்ல குருவிகளா-நா
செவப்புகள ஒரு பச்சிகளா - அம்மா நா
செல்லக்கனி நீங்க தின்னவிங்க - நாங்க
சீமயிக்கு அம்மா போனோமின்னா - உன்னோட பொறந்த
சீராளர அம்மா கண்டோம்மன்னா - நா
சீராளர சாமி கண்டோம்மன்னா - உங்களுக்கு ஒரு
சேதியளே அம்மா சொல்லும்மேன்னா
என்னே பெற்ற சாமியெல்லாம் - இங்க
எம்பொறவி இங்க தம்பியிக்குத்தா- அம்மா

சீமையிக்கு அம்மா போனோம்மா - உன்ன
சீராளர நாங்க கண்டோமம்மா - அவுங்க
சீராளரே அம்மா சொன்னசொல்லு- எங்களுக்குச்
செல்லி நல்லா தலயெழுத்து - அம்மா
சிரசிலியே இங்க போட்டெழுத்து

என்னயடா எங்க தம்பியலா
எளநாட்டுச் சாமியளா - இங்க
எம்பொறவி இங்க தம்பியளா - நீங்க
எந்தசீம சாமி போனயிலா
எம்பொறவே இங்க காசுராசா
என்னப் பெத்தவேனும் அங்க சாமியளும் - இந்த
எம்பொறப்பு இங்க தம்பியளே - நம்ம

## 211. மதுரை வக்கீல்

பழனியம்மாள், 40
விரகனூர்ப்பட்டி
சேலூர் நாடு

கொயிலு[1] எளவா(ை)ழ - என்னப்பெத்த என்னம்மா
கொயிலு மல்லிப்பூ வாழ - எனக்குக்
குயிலா நடக்குந்தடம் - நீபெத்த
குயிலாளுக்கு வேறதடம் - நா
குயிலாளக் கொலசெய்ய
வடக்கக் குறவாரும்
வடமதுரக் கள்ளாரும்
கூட்டம்போட்டுப் பேசினாங்க - என்னக்
குயிலாளக் கண்டொடனே
குயிலு பொறவியம்மா
கோவிலந் தங்கையம்மா - உன்னோடபொறந்த
கோவிலம்பேர் என்னன்னா - நா
கோட்ட சருக்குளுன்னே[2]
கொடிமதுர வக்கிலுன்னே - நா 1

மயிலு எளவாழ
மயிலுநதிப் பூவாழ
மயிலா நடக்குந்தடம் - நா
மயிலாளக் கொலசெய்ய
வடக்க கள்ளாரும்
வடமதுரக் கொறவாரும்
மட்டம்போட்டுப் பேசுனானுக - என்ன
மயிலாளக் கண்டோனே
மானு புறவியம்மா
மன்னவ தங்கயம்மா - உன்னோட பொறந்த
மன்னவ பேர் என்னான்னா - நா
மதுர வக்கிலுன்னே
மாமதுர சருக்குளுன்னே 2

[1] குயிலு [2] சர்க்கிள்

## 212. பார்ப்பது எந்தக்காலம்?

பழனியம்மாள், 40
விரகனூர்ப்பட்டி
சேலூர் நாடு

சிட்டுக் குருவிகளே
சிறுநாட்டுப் பட்சிகளே - நீங்க
சீமிக்குப்[1] போனிங்களா
செவந்தகனி தின்னிங்களா - நா
செல்லத்தோட பொறந்த
சீமனக்[2] கண்டிங்களா? - அம்மா நாங்க
சிட்டுங் குருவிங்களும்
சிறுநாட்டுப் பட்சிங்களும்
சீமக்குப் போனமம்மா
சிவந்தகனி தின்னமம்மா - உன்னோட பொறந்த
சீமனப் பாக்குலம்மா - நா
சீமனப் போலயிலும்
சிலயெழுதித் தரன்னா
சீமானப் போலச்
சிலயெழுதிக் கொடுத்தாலும் - என்னோட
சீமானப் பாக்குறது எந்தக்காலம்? - எனக்குக் 1
காக்கா குருவிகளே
கருநாட்டுப் பட்சிகளே - நீங்க
காசிக்குப் போனிகளா
கடஞ்சகனி தின்னிங்களா
கள்ளியொட பொறந்த ஒரு
கருணனையுங்[3] கண்டிங்களா? அம்மா நாங்க
காசிக்குப் போனமம்மா
கடஞ்சகனி தின்னமம்மா - நா
கள்ளியொட பொறந்த
கருணனையும் பாக்குலம்மா - நா
கருணனப் போலயிலும் ஒரு
படம்புடிச்சித் தாரனின்னா - நீங்க இப்போ
கருணனப் போல ஒரு
படம்புடிச்சித் தந்தாலும் - அம்மா எங்
கருணன எந்தக்காலம் பாப்பமம்மா? 2

[1] சிமைக்கு [2] சீமான் [3] கர்ணன்

## 213. பக்கமிருந்தால் போதும்

பழனியம்மாள், 40
விரகனூர்ப்பட்டி
சேலூர் நாடு

எள்ளு எளம்பொறப்பு
இம்பமுள்ள[1] எம்பொறப்பு
எட்டுநா காணாட்டி
எட்டவழி பாக்கு(ம்)
எட்ட இருந்தா(ப்) போதுங்கு(ம்) 1
பச்ச பசும்பொறப்பு
பாசமுள்ள எம்பொறப்பு - நா
பத்துநா காணாட்டி
பக்கம் வழி பாக்கும்
பக்கமிருந்தாப் போதுங்கும் 2

[1] *இன்பமுள்ள*

## 214. தப்பவிட்டோம்

துறையூர் சின்னம்மா, 85
எம்.ஜி.ஆர். நகர்
வாழவந்திநாடு

எனக்கு -
குண்டுமல்லிக் கொடிமணியாம்
கூடப் பொறந்த மல்லி - நா(ன்)
கூட்டிப் பறிக்காதே - நாங்க
கொடியளே தப்பவுட்டோம் - எம்மா 1

சிண்டுமல்லிச் செடிமணியாம் - நா(ன்)
சேந்து பொறந்த மல்லி - நாங்க
சேத்துப் பறிக்காதே - நாங்க
செடியோட உட்டுட்டமே 2

# 215. தீராத கண்ணீா்

பழனியம்மாள், 40
விரகனூர்ப்பட்டி
சேலூர் நாடு

வண்ணக் கொடிக்காலாம் - என்னப்பெத்த அப்பா எனக்கு
வரிக்கோம்பு[1] வெத்தலயாம் - நா(ன்)
வண்ணப் பொறப்பிழந்தே(ன்) - என்னப்பெத்த மாதாவே நா
வயசிலயே தாயெழந்தே(ன்) - நா 1

சின்னக் கொடிக்காலாம் - என்னப்பெத்த மாதாவே எனக்குச்
சிறுகாம்பு வெத்தலயாம் - நா
சின்னப் பொறப்பிழந்தே(ன்) - என்னப்பெத்த அப்பா நா
சிறிசிலயே தாயெழந்தே(ன்) 2

மாங்கா உருண்டோடும் - என்னப்பெத்த மாதாவே எனக்கு
மைந்தன்தேர் ஓடிவரும் - நா என்னோட
மன்னவரே பெத்தெடுத்த மாடா கிளிப்பலவே[2]
மானி[3]விட்டுப் போகுதுன்னா - நீ தேடிய மருமவ எனக்கு
மனக்கவல ரம்பவைய்யா 3

தேங்கா உருண்டோடும் - என்னப்பெத்த என்னப்பா எனக்கு
செல்லத்தேர் ஓடிவரும் - நா (வாசலுக்குச்
தேடிய ராசாவே - நீபெத்த மருமவ எனக்குச்
சீமவிட்டுப் போறங்கினா - எனக்குச்
சிறுகவல ரம்பவைய்யா 4

செஞ்சிமல மேல - என்னப்பெத்த மாதாவே எனக்கு
செவப்பு ரோசா பூத்திருக்கும் - நா
செவப்பு ரோசா வாசத்துக்கும் - என்னப்பெத்த என்னப்பா
சேலத்து ராசாமவ(ன்)
சேர்ந்துவந்து மாலயிட்டா - நா

## 216. வீசிவரும் பல்லக்கு

பழனியம்மாள், 40
விரகனூர்ப்பட்டி
சேலூர்நாடு

தங்கப் பனமரமா - என்னப்பெத்த தேடிய ராசாவே
தங்கப் பனமரமா
தவந்துவரும் பல்லாக்கு - எனக்கு
தருமரோட தாயாரு
தனிப்பட்டுப் போறதென்ன - எனக்கு
தடத்த ஒதுக்கிருங்கோ
தடத்துக்கு ஒரு வாணம்
தனிவாணம் விட்டிருங்கோ - இன்னிக்கு 1

வெள்ளிப் பனமரமா
வெள்ளிப் பனமரமா
வீசிவரும் பல்லாக்கு - என்னோட
வீமரோட தாயாரு
வெளிப்பட்டு போறாறம்மா - இன்னிக்கு
வீதிய ஒதுக்கிருங்கோ
வீதிக்கு ஒருவாணம்
வெடிவாணம் விட்டிருங்கோ 2

## 217. மனக்கவல ரம்பவய்யா

பழனியம்மாள், 40
விரகனூர்ப்பட்டி
சேலூர் நாடு

தேங்கா உருண்டோடும் - என்னப்பெத்த அம்மா எனக்குச்
செல்லத்தேர் ஓடிவரும் - எனக்குச்
சீமானப் பெத்தெடுத்தோ
செல்லங் கிளிபழவ - நீங்க
சீம விட்டுப் போறிங்கன்னா - நீங்க
தேடிய மருமவளுக்குச்
சிறுகவல ரம்பவய்யா - எனக்கு 1

மாங்கா உருண்டோடும்
மைந்த தேர் ஓடிவரும் - நா
மன்னவரப் பெத்தெடுத்தோ
மாடங் கிளிப்பழவ
மாளிவிட்டுப் போறிங்கன்னா - நீங்க
தேடிய மருமவளுக்கு
மனக்கவல ரம்பவய்யா. 2

## 218. மாலை பொருத்தமில்லை

தங்கம்மாள், 55
சின்னக்கவரப்பட்டி
அரியூர் நாடு

தாயாருடன் புறந்த தாய்மாமா சாமியளா - எந்
தாய்மாம சாமியளா - எனக்குத்
தாலி பொருத்தமின்னா - எனக்குத்
தாய்மாம சொந்தமின்னா - எந்

தாயாருடன் புறந்த தாய்மாமா சாமியளா - எனக்குத்
தாலி பொருத்தமில்ல - எனக்குத்
தாய்மாமஞ் சொந்தமில்ல
மாதாள் பொறந்த எடம் - எனக்கு
மாமனார் சொந்தமின்னா - எனக்கு
மால பொருத்தமாவும்
மாமனாருடைய சொந்தமாவும் - தங்களுக்கு
மால பொருத்தமில்ல - எனக்கு
மாமனோட சொந்தமில்ல

## 219. தூரப்போய் அழு

பழனியம்மாள், 40
விரகனூர்ப்பட்டி
சேலூர் நாடு

தூரத்தில மாமவீடு - என்னப்பெத்த அப்பா எனக்கு
தொரக்கா மேமாடி - நா
தூவழியே பெத்தசெல்வம் - நா

தூணுமே(ல்) நின்னழுதா - எனக்குத்
தூணுக்கு ஒடயாளி
தூணெடுக்கும் பங்காளி - நீ
தூணவிட்டு நின்னு
தூரப்போய் அழுவுன்னா - நா 1

கடக்கத்துல மாமவீடு
கடக்கா மேமாடி - நா
கடவழியே பெத்த செல்வம்
கதவுமே நின்னழுதா - எனக்கு
கதவுக்கு ஒடயாளி
கதவெடுக்கும் பங்காளி
கடக்கப்போயி நின்னுன்னா 2

## 220. சொந்தமில்லை

பழனியம்மாள், 40
விரகனூர்ப்பட்டி
சேலூர் நாடு

அத்தவூட்டு மாடியிலே - என்னப்பெத்த அப்பனுக்கு
ஆரங்கட்டித் தூங்கயிலெ
ஆறாம் பொருத்தமில்லெ - எனக்கு
அத்தமவ(ன்) சொந்தமில்லே - எனக்கு

மாமவீட்டு மாடியிலே
மாளிகட்டித் தூங்கயிலே - எனக்கு
மால பொருத்தமில்ல
மாமமவஞ் சொந்தமில்லே.

## 221. உங்க பொட்டு

பழனியம்மாள், 40
விரகனூர்ப்பட்டி
சேலூர் நாடு

பொழுது கெளம்பிவரும் - என்னப்பெத்த என்னப்பா
பொன்னேரு மின்னவரும் - எனக்குப்
பங்காளி மாம(ன்) வந்து

பவுனுரச்சுப் பொட்டு வச்சா - நா
நெத்தி எரியுதும்பே
நெறக்கிலியே உங்கபொட்டு - எனக்குத்
தாயோட பொறந்த
தாய்மாம வந்தல்லவோ
தரையொறச்சுப் பொட்டுவச்சா
நெத்தி குளுந்துதய்யா
நெறந்ததய்யா உங்கபொட்டு.

## 222. பின்னால் வரும் பேத்தி

பழனியம்மாள், 40
விரகனூர்ப்பட்டி
சேலூர் நாடு

சனிக்கெழம ஊத்துந்தண்ணி - என்னப்பெத்த அப்பா எனக்கு
சலதார போய்ப்பாயும் - எனக்கு
சலதாரத் தண்ணியில - ரண்டு
தங்கரளி பூத்திருக்கும் - நா
தங்கரளிப் பூவெடுத்து - ரண்டு
தங்கரதம் சோடிச்சோம்
தங்கரதம் உள்ளாள
தங்கரதம் உள்ளாள - நா
தனிப்பேத்தி பின்னாலே - நா 1

பொதங்கெழம ஊத்துந்தண்ணி - என்னப்பெத்த அம்மா எனக்கு
பொழக்கட போய்ப்பாயும் - நா
பொழங்கடத் தண்ணியில - ரண்டு
பூவரளி பூத்திருக்கும் - நா
பூவரளிப் பூவெடுத்து - ரண்டு
பொன்னுரதஞ் சோடிச்சே - இப்போ
பொன்னுரதம் உள்ளாளே - நீபெத்த
பொண்பேத்தி பின்னாலே 2

[1] புழைக்கடை

## 223. சத்தம்போட்டு அழுவாதிங்க

பழனியம்மாள், 40
விரகனூர்ப்பட்டி
சேலூர் நாடு

தங்க வூடுவந்துல்ல - எங்கப்பா
தங்காளுக்கு ஏத்ததளம்
தங்கா மனஞ்சலிச்சு
தின்னுட்டு வூடுவந்தா - நீங்க
சத்தம்போட்டு அழுவாதீங்க - நம்ப
சருக்காருக்கு நாயமில்ல - நாங்க 1

பொன்னு வூடுவந்தல்ல - நீங்க
பொன்னாளுக்கு ஏத்ததளம் - நாங்க
பொன்னா மனஞ்சலிச்சு
தின்னுட்டு வூடுவந்தா - நீங்க இன்னிக்கு
சத்தம்போட்டு அழுவதில்ல - நம்ம
சருக்காருக்கு நாயமில்லே 2

*அரளிக்கொட்டையைத் தின்றுவிட்டுச் சாகும்போது பாடுவது என்று திருமதி.பழனியம்மாள் குறிப்பிட்டார்.*

## 224. தங்க சைக்கிள் வண்டி

இளங்குமரன், 36
மாணிக்கம், 35
எம்.ஜி.ஆர். நகர்
வாழவந்திநாடு

தங்க சைக்கிள் வண்டி
தடந்தடமாப் போகுவண்டி
தடமுஞ் சருக்காரு - வரும்
தங்கவண்டி நம்முளுது - எனக்குத்
தங்கவண்டிக் குள்ளவரும்
தருமரெல்லாம் எம்பொறப்பு - எனக்கு
பாலக் கறந்திடுங்க
பால்காப்பி போட்டுடுங்க - இன்னிக்குப்
படும் பாதிரத்தெ சொல்லிவாறே

*உடன்பிறந்தோன் இறப்புச் செய்தி கேட்டுச் சகோதரி வரும்போது பறை கொட்டுவோர் பாடுவது. ஒருவர் ஓரடியைப் பாட மற்றவர் 'சபாஷ்' என்று கூறுகிறார்.*

## 225. மாரப் பாட்டு

மாணிக்கம், 35
இளங்குமரன், 36
பாலசுப்பிரமணியம், 26
பிரபு, 21
எம்.ஜி.ஆர். நகர்
வாழவந்திநாடு

ஐயோங் கையோ[1]
ஐயோங் கையோ 1

வையகத்தே - சிவனே
வையகத்தே - சிவனே
வையகத்தே - பொல்லாத

சொப்பனங்க - சிவனே
சொப்பனங்க - சிவனே
சொப்பனங்க - முட்டத்திலே 2

நிக்குமரம் - சிவனே
நிக்குமரம் - சிவனே
நிக்குமரம் - முள்முருங்கமரம்

சாயக்கண்டே - சிவனே
சாயக்கண்டே - சிவனே
சாயக்கண்டே - மம்பட்டி தா 3

கார ரெல்லாம் - சிவனே
கார ரெல்லாம் - சிவனே
காரரெல்லாம் - மண்ணவெட்ட
கண்டங்கின(ம்) - சிவனே
கண்டங்கின - சிவனே
கண்டங்கின - கொந்தாள 4

கார ரெல்லாம் - சிவனே
கார ரெல்லாம் - சிவனே
கார ரெல்லாம் - குழிவெட்ட
கண்டங்கின(ம்) - சிவனே
கண்டங்கின - சிவனே
கண்டங்கின - பாடுபட்டு 5

சூடுபோட்டு - சிவனே
சூடுபோட்டு - சிவனே
சூடுபோட்டு - பணத்த நல்ல

பொதச்சு வெச்சு - சிவனே
பொதச்சு வெச்சு - சிவனே
பொதச்சு வெச்சு - கூடுவிட்டுக் கூடு 6

பாயயில - சிவனே
பாயயில - சிவனே
பாயயில - கூப்பிடுதா

கோடிப்பணம் - சிவனே
கோடிப்பணம் - சிவனே
கோடிப்பணம் 7

[1] *ஐயோ ஐயோ*

*இறந்தவர் உடலைத்தேருக்கு எடுத்துச் செல்லும்போது பறைகொட்டுவோர் பாடும் பாடல். ஒருவர் ஒரு பத்தியைப் பாட மற்றவர்கள் அதனைத் திரும்பப் பாடுகின்றனர்.*

## i. நாட்டுக்கட்டு - 1

குட்டியாண்டி சின்னக்குட்டி, 57
மேக்கலாந்துறை
சேலூர் நாடு

அந்தக்காலத்தில் வந்து கருமலயில குடியிருந்தாங்க அண்ணன் தம்மி மூணு பேரு. மூணுபேரு குடியிருந்ததினாலே அவுங்க வேட்ட மார்க்கம் போயிட்டாரு. வேட்டைமாக்கம் போனதுனாலே, காட்டுக்கு போன வாக்குல, மழை அதிகமாப் பேஞ்சு அதிகமின தண்ணி வந்திருச்சு. அந்தத் தண்ணி வந்ததுனாலே இவுங்க மூணுநாள் ஆனபொழுதும்வூட்டுக்கு வரவில்லை. அதுக்கும் பிறபாடு, வீட்டிலிருந்த பெஞ்சாதி என்ன செஞ்சாங்கன்னு கேட்டா, நம்ம புருசன் காட்டுக்குப் போனவரு இறந்துதான் போயிட்டாரு அப்படின்னு சொல்லி அவுங்க கழுத்தில போட்டிருந்த தாலிய எடுத்துத் தண்ணிப்பானையில அவுத்துப் போட்டுட்டு, அப்பன் வூடு சென்றுவிட்டாரு. அந்த பொம்பளைங்க சென்டதினால அந்த நாய் வந்து வுழுந்து பொறண்டு வூட்டுக்கு வந்துருத்து. நம்ம மன்னவன் இல்லை உயிரோடு இல்ல அவுரு செத்து போயிட்டாருன்னு தாலியை அவுத்துத் தண்ணிப்பானையில போட்டுட்டு, அவுங்க அப்பன் வூடு போயி சேந்து போனாங்க. இவுங்க மூணு நாளு தண்ணி குறஞ்ச உடனே அங்கிருந்து வந்தாங்க வந்து பார்க்கும்போது வூடு சாத்தியிருந்தது. தண்ணித்தாகம் அதிகமான தாகம். ஊட்டைத் தொறந்து தண்ணிய மோண்டு குடிக்கும்போது அந்தத் தாலியாகப்பட்டது நகுக்கிய வந்து தட்டுப்பட்டுது. என்னடான்னு எடுத்துப் பாக்கும்போது அது அந்தத் தாலி நாக்கில தாலியாகிப் போச்சு. என்னடான்னு பாக்கும்போது வீட்டில பெஞ்சாதி இல்ல. அவ தாலியை எடுத்துத் தண்ணிப்பானையில போட்டுட்டுப் போயிட்டா. இன்னிமேலு இந்த ஊரில நம்ம இருக்கக் கூடாதுன்னு அவுங்க அண்ணேந்தம்பி மூணுபேரும் ஒங்களக்கூட்டினு ஒரேயடியா அந்த ஊரு விட்டு ஊரு வந்தாங்க. வந்ததுனால இடவழியா வந்து தங்கச்சிய இந்தத் தொட்டியருக்குக் ஆவாரங்காட்டில பச்சக் குடுசு போட்டுத் தொட்டியருக்கு கட்டிக் குடுத்துட்டு அவுங்க அங்க இருந்திட்டு வந்திட்டாங்க. வரம்போது அதுனாலதா இன்னிக்குக் கூடயும் தொட்டியத் தெருவுக்குப் போனா கட்டிலை மல்லாத்தித்தான் இன்னிக்கும் போடுவாங்க. உக்காரர மாதிரிப் போடமாட்டாங்க. யாரு அந்தப் பொம்பளைங்க. என்ன இந்த மாதிரிக் கட்டிக்குடுத்திட்டு வந்தியே அப்படின்னு நெலவரத்த வெச்சு.

அதுனால அண்ணந்தம்பி மூணுபேரும் கலியபெருமா(ள்) கோவிலுக்கு; காஞ்சிபுரம் கோவிலுக்கு என்ன பண்ணினாங்கன்னா இவுங்க அதுக்கு அணிவிட, பணிவிட செஞ்சு கோயிலுக்குத்திரி வெளக்குப் போட்டு அந்தத் திரிவெளக்க அப்படியே வெச்சுப்போட்டு வுட்ட இழுத்துக் கதவ இழுத்துச் சாத்தீட்டு, அன்னக்கி என்ன சொன்னாங்கன்னா நாங்க அண்ணந்தம்பி மூணுபேரும் என்னக்கி வந்து இந்தப்பூட்ட தொறக்கிறமோ அன்னிக்கித்தான் இந்தப் பூட்ட தெறக்கணும்னு சத்தியத்தைச் சொல்லிப்பிட்டாங்க. சொன்னதினால இப்ப வந்து அந்த அணணன் தம்பி மூணுபேரும் என்னக்கிப் போயி தெறக்கிறாங்களோ காஞ்சிபுரத்தில அன்னக்கித்தான் அந்தப்பூட்டு தொறக்கும். எண்ணல்லாது திரிவெளக்கு எரியுது காஞ்சிபுரம், பச்சத்தண்ணி வெளக்கு பாங்கா எரியுது காஞ்சிபெரத்தில. அது அப்படியே இருக்கும்போது அங்கிருந்து வந்து எடச்சி குளத்த ஒடச்சி வந்த நாடு இது. கவாரி ஆத்துல கத்தி கழவி வந்த நாடு. அங்கருந்து வந்து அண்ணந்தம்பி மூணுபேரும் வந்து சேந்தமங்கலம் வந்து சேந்தமங்கலம் பெருமா கோயிலிலே வந்து அந்தச் சலவைக்கல்ல அடிச்சுப்போட்டு, அந்தச்சலவைக் கல்லு மேல மூணுபேரும் குந்தி எளப்பாறி அந்த சாமிக்கு அணிவிட பணிவிட அந்தப் பெருமாளுக்குச் செஞ்சுட்டு அங்கருந்து ஒரேயடியா ராமகிரிப்பேட்டை போனாங்க. ராமகிரிப் பேட்டையில போய் அந்தக் கரிய பெருமாளுக்கு கொப்பம் பட்டியிலே கொடியேத்தி, சிந்தாதிரிப்பேட்டையிலே தேரு சிங்காரிச்சு, அந்தத் தேரக் கரியபெருமாளுக்கு அண்ணன் தம்பி மூணுபேரும் ஓட்டுனாங்க. ஓட்டுன பிற்பாடு அண்ணன் தம்பி மூணுபேரும் அந்தப் பெரியண்ணன் பெரிய மலைக்குப் பிரிஞ்சு போயிட்டாரு, சின்னண்ணன் பச்சமலைக்குப் பிரிஞ்சு போனாரு, நடு அண்ணன்தான் கொல்லிமல. அன்னிக்கி அறிவருகும்போது

மிதி கல்லுத்தடத்தோட மிதிச்சு வந்த நாடு
படிகல்லுத்தடத்தோட புடிச்சு வந்த நாடு
ஓராணிப் பாறையில ஒரு கடம குத்தி
ஒண்ணா வகுந்து வந்த நாடு
இரண்டாணி பாறையிலே இரண்டு கடமகுத்தி
இரண்டா வகுந்து வந்த நாடு
அங்கிருந்து அடுக்கம் புள்ளமாதிக்கு
அடுக்கம் வந்தாங்க, அடுக்கம் வந்த பிற்பாடு
அடுக்கம் குண்டணி வந்த பிற்பாடு
கொஞ்ச நாள் ஆண்டிருந்தாங்க
அதுல அதிகமான சனத்தொகை ஆகிப்போச்சு
அடுக்கம் புள்ள மாதி இருக்கும்போது
அதிகமான சனத்தொகை ஆனபிற்பாடு

அடிகுண்டடணி கௌ முந்நூத்தி அறவதா பிரிஞ்சு,
கொல்லிமலை மேல வந்து, நாட்டை வந்து
இந்தக் கொல்லிமலை நாட்டை ஏழு ரெண்டு
பதினாலு நாட்டாப் பிரிச்சு, இந்த நாட்டாப் பூரா
அங்கங்க ஒதுக்கிவிட்டு நாங்க வந்து
இந்தச் சேலூரு வளப்பூருதான் எல்லா நாட்டுக்கும்

தலைமையா பெரியவனா வந்து இந்த இடத்திலே சேலூர், வளப்பூர்னு மண்ணுகட்டி நாங்க எல்லை ஓடிச் சம்பாரிச்சு, இப்ப சேலூரு வளப்பூரு ரெண்டு நாடுதான் கொல்லிமலைக்கும் முக்கியமான ஐஞ்சு அதிகாரத்துக்கும் ஏற்பட்ட ஊரு. ஆண்டுவரோம் இப்ப நாட்டுல.

இந்தச் சேலூர் நாட்டுல அந்தக்காலத்திலே ஆளம்போது 18 கரக்காரன் ஆண்டு வந்தாங்க. இந்தச் சேலூர் நாட்டுல ஆளம்போது, இத்தியப்புக் கவுண்டன், அத்தியப்புக் கவுண்டன், பூச்சிக்கவுண்டன், மூணுபேரு பொறந்தாங்க. மூணுபேரும் ஆண்டு இருக்கும்போது அவுங்க 18 கரக்காரங்களுக்கு அரசு செலுத்திக்கிட்டிருந்தாங்க. அப்பஅரசுச் செலுத்தும்போது அறப்பளீஸ்வரன் கோவிலுக்குத் தேர் நடந்துக்கிட்டிருந்தது. அப்ப இவுங்கபோய் எழுகட்டு புளியமாரு வெட்டினு வரச்சொல்லி அரசு செலுத்தினவன் இத்தியப்புக் கவுண்டன், அத்தியப்புக் கவுண்டன், குடியானவங்களெல்லாம் கட்டி வைச்சு அடிச்சு புளியமாரல அடிச்சதுனால நாங்க பதானட்டுக் கரக்காரனா இருந்தவ எழுத்து இருந்தவ எட்டுக்கரக்காரங்க. பய்ந்து ஓடுனவங்க பத்துக்கரக்காரன் வளப்பூர்நாடு. இன்னிக்கி இந்த வளப்பூர், சேலூர்தான் வந்து கூடப்பொறந்த அண்ணந்தம்பி மாதிரி இப்ப அரசு செலுத்தறோம். ஐஞ்சு அதிகாரம் குதிரை கொடையோட எல்லாச் செல்வாக்கு அவுங்களுக்குத் தான்.

இந்தச் சேலூர் நாட்டுல அதிகாரம் செலுத்தி இருக்கும்போதுகொங்கலாக்கவுண்டன், பூச்சி, இத்தியப்புக் கவுண்டன், அத்தியப்புக் கவுண்டன் மகன்தான் கெங்கயர் கவுண்டன். அவ(ன்)ங்க அரசு செலுத்தியிருக்கும்போது இந்தப் பதினெட்டு கரக்காரனுக்கும் வந்து உண்டான ஞாயம் பேசுறது அடிக்கிறது, ஒதைக்கிறது சகலமும் ரொம்ப இமிச பொறுக்க முடியாமல, 18, 17 கரைக்காரங்களும் சேர்ந்து செரி என்னடா இந்தமாதிரி அடிக்கிறான், ஒதைக்கிறான் இம்மாதிரி இதெல்லாம் பண்ணினா எத்தன நாளைக்கி எத்தனை நாளைக்குடா நம்ம துன்பம் பொருக்க முடியாதுங்கிறதை வைச்சு, இந்த 17 கரைக்காரங்களையும் இந்த (கொங்காக் கவுண்டன் - சக்கரவர்த்தி கொலம்) சேர்ந்து பேசி ரவைக்கு ரவையாக வூட்ட இழுத்துச் சாத்திநெருப்பு வைச்சுப்பிட்டாங்க. இமிச பொருக்க

மாட்டாம 17 கரைக்காரங்களும் சேர்ந்து கூட்டம் பேசித் தீர்மானம் பண்ணி, இன்னிக்கி நைட்டில கொளுத்தலாம்னு சொல்ல அந்தப் பொம்பளைங்க தண்ணிக்குப் போகும்போது யாருக்கிட்டேயும் சொல்லக் கூடாதுன்னு இந்த 17 கரைக்காரனும் சொல்லாட்டாங்க.

கொங்காக் கவுண்டன் மனைவி ராத்திரி சாகப் போறாங்களேண்டு பொம்பளைங்க சொல்லி கதவ சாத்திட்டு பேனு ஈருகுளி போட்டு உருவீட்டு இருந்த நேரத்திலே ராத்திரி மாதிரி கரெக்டா 12 மணியளவு நேரத்துல அந்தம்மா பொறையூடு பக்கத்திலே புடலங்கொடி மடுகையிலே போயி அந்தம்மா ஒளிஞ்சுகிச்சு. 17 கரக்காரங்களும் வருதுவுட்டு நெருப்பு வெச்சிப்புட்டாங்க. வச்சு வீடு எரிஞ்சு அந்தக் கொங்கலா கவுண்டன் செத்துப் போயிட்டான். அப்ப அந்தம்மா என்ன பண்ணிருச்சு, நேரா அந்தம்மா அடுக்கத்திலிருந்து திண்ணனூர் வளர்ப்புரம் மாமனார் வீட்டுக்கு வந்து பனிரெண்டு மணிக்கு மேல எழுப்பும்போது வீடு தெறக்கமாட்டேன்னுட்டாங்களாம். தாயும் தகப்பனும் இப்படி 17 காரைக்காரனும் புருசன நெருப்பு வைச்சுக் கொளுத்தீட்டாங்க நாம் மகதான் வந்திருக்கேன் கதவத் தெறன்னு சொன்ன பிற்பாட்டு கதவைத் திறந்து வைச்சிருந்திருக்காங்க. மாசமா இருந்திருக்கு அது. மாசமா இருக்கிற நேரத்திலே மலை அடிலே ஒரு சுரங்கமா வெட்டி 17 கரைக்காரனுக்கு தெரியாம சோறு தண்ணி குருத்திக்கிட்டிருந்து அதன் புறப்பாடு பையன் பொறந்திருக்கான். பையன் பொறந்தவுடனே 17 கரைக்காரனும் சேலூர் நாட்டுல ராஜாவை ஒளிச்சிட்டோம் இனிமே சர்க்கரவர்த்தி காரங்கன்னு பேர் சொல்லுறதுக்கு யாருமே இல்லை. இனிமே நம்மதான் 17 கரைக்காரனும் நாட்டை ஆளுனும்ங்கிற எண்ணத்திலே முடிவு பண்ணியிருந்திருக்கிறான். அப்ப பெரும்பலிக்கு வேட்டை நட்டியிருந்தாங்களாம். 7 நாள்ல வேட்டை கட்டி முடுக்கிப் பாக்கும்போது பெரும்புலிய வேட்டகுத்த முடியல. அதுக்கு மேல பொண்ணோட அப்பா வந்துபேர என்ன சொல்லிருக்கான் ஏட்வாட் சக்கரவர்த்தி இங்கிருக்கிறது தெரியாதாவேட்டைக்குப் போகனும்னு சொல்லிருக்கிறான். தாத்தா 17 கரைக்காரனும், கொன்னுடுவாங்கன்னு சொல்லிருக்கிறார். அதெல்லாம் முடியாது நான் வந்தேதான் ஆகனும் அப்படினுருக்கிறான். அப்ப சீரங்கிராய்கிட்டப் பெரும்புலி வளைச்சுக்கிட்டு இருந்தாங்களாம். அப்ப இந்தப் பையனைத் தூக்கிட்டுப் போய் வைச்சுக்கிட்டு இருக்கிறாராம். 17 கரைக்காரன் 7 நாள் அந்த வேட்டை சுத்திக்கிட்டு இருக்கும்போது இந்தப்பையன் போய் ஏட்வாட் சக்கரவர்த்தி நாங்க இருக்கிறது தெரியாதா புலி போய் படுன்னு சொன்னானாம். புலி போய் படுத்திருச்சாம். பக்கத்திலிருந்து ஆகா எதிரியை ஒழிச்சிட்டுதா இருக்கோம் வந்திட்டான அப்பிடின்னு சொல்லி அந்தப்பையன்

தொறத்தீருக்காங்க. அப்பறமேலுதா அந்தப்பாட்டன் என்ன பண்ணீட்டாரு வாயில போட்டிருந்த பொகையிலய மகன் பையன் இல்ல; மகவயித்துப் பையன் அப்படின்னு சொல்லீட்டு வெத்தலைய கக்கிக் குடுத்துட்டாரு. அத எடுத்து வாயில போட்டுட்டான்.

புலிகுத்தி அதெல்லாம் செஞ்சுட்டுத் திரும்பச் சக்ரவர்த்தி வீட்டு ஆளுங்க இருக்காங்கன்னு இந்தப் பையனைத் தீர்த்து கட்டலாம்னு சொல்லிப் பெரிய கட்டு தொல்ல பண்ணீருக்கான். பின்ன அந்தப் பையனைப் பழயா பாளயத்தில கொண்டுபோய் வைச்சு இருந்தாங்களாம். அங்க சொந்தக்காரவங்க வீட்டில இருந்து படிச்சிக்கிட்டு இருக்கிற நேரத்திலே 17 கரைக்காரனும் பழையபாளையத்திலேபோயி 17 கரக்காரனம் போக ஆரம்பிச்சானாம். பளையபாளையத்திலிருந்து சொந்தக்காரங்க இருந்து மதுரையிலே போய் வைச்சுருந்தாங்களாம்.

மதுரையில போய்தான் படிச்சு வித்தை, சண்டை, சச்சரவு எல்லாம் செஞ்சு எல்லாம் பழகி, சீட்டு எழுதியிருந்தானாம், அறப்பளியாண்டி கோயிலுக்கு மதுரையிலிருந்து ராஜா வரார் தேர் ஓட்டுறதுக்கு ஊர் நாட்டுக்கு ஆடி 18 திருவிழா ஒட்ட வறேன். 17 கரைக்காரனையும் கோயிலுக்கு வரச்சொல்லுன்னு சொல்லி சொல்லிட்டாங்களாம். மதுரையிலிருந்து வந்து பழைய பாளையம் வந்து, சொல்லாம்பாளையம் வந்து, சேலூர் மந்தையிலிருந்து சாரி, கொடை, குதிரையெல்லாம் சேத்து எடுத்திக்கிட்டுப் போய் தேர் ஓட்டுனாங்களாம். 18 கட்டு புளியமார் வெட்டி வச்சுருந்து தேங்காய் ஒடைச்சு, தேங்காய் சில்லோட 18 கரைகாரரையும் சாத்து சாத்துனு சாத்துனாங்களாம். புளிய வளார்லேயே அடி. அதான் பயந்து ஓடுனவங்கல்லாம் 10 கரைக்காரங்க வளப்பூர் நாடு. எதுத்து வந்தவின் 8 கரைக்காரங்க சேலூர்நாடு. அடிக்கும்போது அடிதொடையில வளப்பூருல இருக்கிற ஆளுக கறி எடுத்துக்கிட்டு எடுத்திருப்பாங்க. அந்த காலத்திலே எளிய வெளிரில அடித்தொடை கறிய எடுத்திருப்பாங்க. கறியோட தேங்கத்துண்டையும் கொடுத்து அனுப்பிச்சாங்களாம். பயந்து ஓடுன பத்து கரக்கானும் வளப்பூர் நாட்டுக்காரன். எதுத்துவந்த எட்டுக்கரக்காரன் சேலூர்நாட்டை ஆளறான். பெரிய கரக்காரன் சக்கரவர்த்தி வூடு சேலூர் நாடு.

## ii. நாட்டுக்கட்டு - 2

அம்பலசீரங்கன், 57
சேத்துப்பிலாப்பட்டி
திண்ணனூர்நாடு

கொல்லிமலை சின்னண்ணன், பெரியண்ணன், நடு அண்ணன் மூணுபேரும் தென்காஞ்சிவிட்டு வடகாஞ்சி வரும்போது இடவெளியில பொண்டாட்டி புள்ளைங்க மூணு அவுங்க நாலுபேரும் ஒரு பொண்ணொன்னு அஞ்சு பேரும் ஒரு இடைவெளில பசியாகி ஒரு தென்னை மரத்தடியில ஒக்காந்தாங்க. அப்ப ஒக்கார்ற நேரத்தில வந்து நெல்லறுத்தாங்களாம். நெல்லறுக்கும்போது அந்த நெல் இதல கூலிசெஞ்சு வந்து வாங்கி உள்ளங்கை வந்து செக்காகவும் ஆள்காட்டி விரல் ஒலக்கையாகவும் குத்தி அதுவந்து புள்ளங்களுக்கு அந்தத் தேங்கா ஓடு சட்டியாகவும் தேங்கா ஓடு வந்து அடுப்பாகவும் அப்படியாக உபயோகப்படுத்தி அப்படி வந்து மக்களக் காப்பாத்தி விடக் காஞ்சிக்கு வந்தாரு. வடகாஞ்சிலெருந்து மறுபடியும் கொல்லிமலைக்கு தம்பம்பட்டி வழியாகச் சென்று அங்கக் கலியபெருமாள் கோயிலின்னு உபயோகப்படுத்தி கொல்லிமலைக்குச் சென்றாரு. அப்பத் தங்கச்சிய வந்து தொட்டிய நாயக்கருக்குக் கல்யாணம் பண்ணிக் கொடுத்திட்டாங்க. அவுங்க மூணு பேருதான் கொல்லிமலைக்கு வந்தது. கொல்லிமலைக்கு வந்து கொல்லி மலையிலே நாலுபக்கமும் சுத்திப்பாக்கவும் அறப்பளீஸ்வரன் கோயிலுக்குப் போனாங்களாம். அவுங்க மூணுபேரும் போயி அந்த ஈஸ்வரனை ஒரு கல்லெடுத்து நீதான் மொட்டையாண்டி ஈஸ்பரன் ஆதிக்கு எழுந்தவரு அப்படின்னு அவுங்க மூணுபேரும் நட்டுட்டு மறுபுடி தெக்க வெகுதூரம் சென்றாங்களாம். அப்ப ஓரி மன்னன் குதிரைமேல ஏறிக்கிட்டு நீ யார்ரா அப்படின்னு கேட்டானாம். சேட்டூர் அழியாநிலையில அப்பக் கேக்கும்போது அப்ப நாங்கதான் கொல்லிமலையப் பாக்க வந்துருக்கிறோம் சின்னண்ணன், பெரியண்ணன் அப்பிடின்னும்போது நீங்க என்னடா பாக்குறது நான்தான் கொல்லிமலைய ஆண்டு அனுபவித்து வரேன். உனக்கு இங்குச் சைவுகரியமுமில்லை சுதந்திரமுமில்லை அப்படின்னு அவனும் குதிரையிலிருந்தானாம் சின்னண்ணன் குதிரைலருந்தானாம். அப்ப நேரத்துக்கு யுத்தமாகி அந்த ஓரிமன்னனை இவரு அம்புனால் போட்டு அவனைக் கொன்று விட்டார். கொன்றுவிட்டு கொல்லிமலை பாதிநாட்டை அண்ணார்கிட்ட வந்து அறப்பளீஸ்வரன் கோயில் நதில ஒக்காந்திட்டிருந்தாங்காளாம் நடு அண்ணனும் பெரியண்ணனும். அப்பச் சின்னண்ணன் ஓரி மன்னன் கொல்லிமலைய ஆண்டான் அவனைக் கொன்றுவிட்டேன் நமக்குதான் இனிமே இந்த நாடு சுதந்திரம் அப்படின்னு பல வளர்களெல்லாம் சுற்றினாங்க. பல ஊர்களெல்லாம் சுற்றி மறுபடி சென்று மறுபடி எங்க போனாங்க ஊர் ஊராகச் சென்று நாடு, ஊர், கிராமம் இதுகளெல்லாம் உற்பத்தி

பண்ணாங்க. மறுபடி அதெல்லாம் பண்ணிட்டு மறுபடி கீழே தம்மம்பட்டி சென்றாங்க. மறுபடி இறங்கிட்டாங்க. இறங்கி மறுபடி மேல நாம் சுத்திப்பாத்திட்டு வந்திட்டோம். நம்ம தாய் ஒண்ணு இருக்கிறது. அது எந்த வழியிலெ செய்ஞ்சு வெக்கலாம் அப்படின்னு சொல்லி தால வந்து ஒரு பதுமையாகச் செய்ஞ்சு அம்மா நீ இதே நதியில இரு தம்பம்பட்டியில இரு. கோயில் பக்கமா இரு. நாங்க மீண்டும் ஒருமுறை கொல்லிமலை போய் சுத்திப்பார்த்து வறோம் அப்பிடீன்னு சேந்தமங்கலம் சென்று ஒரு கல்ல வந்து செலயா எழுதி கழுத்திப் போட்டுட்டான். கழுத்திப் போட்டுட்டு மறுபடி தம்மம்பட்டிக்கு வந்து விட்டாங்க. அப்ப சேட்டூர் அழியாநிலயல வந்து ஓரி மன்னனைக் கொன்றுவிட்டேன். அங்கு வீரர்கள் யாருமே இல்ல கொல்லிமலையில யாருமே நம்மள எதுப்பார் இல்ல. தேவர்தான் இருக்கிறாங்க அப்படின்றதுக்காக அவங்க தம்மம்பட்டியில தாய்லாம் சொல்லிக் கொண்டாங்க. தாய் வந்து அம்பா நன்மையாயிருந்தால் நாட்டைப்போய் பாரு. கொல்லிமலையில நம்ம எப்படிக் கொடிகட்டி ஆளலாம். மக்களை எப்படி உற்பத்தி பண்ணலாம் அப்படின்னு தாய் சொன்ன மொறப்படி மறுபடி கொல்லிமலைக்கு ஏறுறாங்க. கொல்லிமலைக்கு வந்து மிதிகல்லுத்தடம்னு ஒரு தடம், குதிகல்லத்தடன்னு ஒரு தடம், அந்த வாழக்கோம்பை வழியாகச் சென்று மறுபடி வந்து வந்துஇங்க கொல்லிமலயில இறங்குனாங்க. இறங்கும்போது அடி குண்டணி கௌமுன்னுத்தி அறுபதுன்றதாக ஒரு பேரு பட்டல்பேரு எழுதி அந்த மத்தல அடிகுண்டணி கௌமுந்நூத்தி அறுபதுன்னு அவுங்க ஒரு விலாசம் எழுதி ஒரு கல்லுல செலயாக நிறுத்தீட்டு மறுபடி சென்றாங்க. சென்று மறுபடிக் கொல்லிமலயில இன்றுசுத்திப்போம்னு சகல ஊர்களெல்லாம் சுத்தி ஓடிப்பார்த்து, சில விஞ்ஞானங்களெல்லாம் பார்த்துட்டு மறுபடி வந்துச் சீக்குப்பாறைப் பட்டியிங்கிற ஊரு ஒண்ணு இருக்கிறது. அங்க சீக்குப்பாறைப்பட்டில வந்து நின்று பாத்தாங்க. அப்போ நெலக்காடு தெறிஞ்சது. அப்ப நேரான காவேரியாறு ஓடுது சின்னம்மா கோவில்பாரு சீக்குப் பாறை வளவு சோக்கைப்பாரு அப்படின்றதுக்காக அவங்க முன்னே எழுதி அந்த பலாண்டுருக்கு ஒரு இடம் கொடுக்கலாம். அப்படின்றதுக்காக வழி செஞ்சிட்டு அவங்க மறுபடிவந்து ஊரக்கூட்டி சீமையைக்கட்டி, நாட்டைக்கட்டி, சின்னண்ணன் இந்தக் கொல்லிமலையிலே இருந்து ஓசந்தது கொல்லிமல தாந்தது பள்ளம் அப்படின்றதுக்காக அவுங்க நிறுத்தீட்டு, அப்பா வந்து பெரியண்ணனைப் பெரியமலைக்குப்போ, சின்னண்ணனைக் கொல்லிமலையில இரு, நடு அண்ணனைப் பச்சமலைக்குப் போன்றதுக்காக அவுங்க விலாசம் எழுதி இந்தக் கொல்லிமலைய சின்னண்ணன் தான் ஆண்டு அனுபவித்து அவருடைய விலாசம் இப்பவந்து கொல்லிமலை 14 நாடும் அவருடைய நன்றி கொண்டு, அவருடைய ரத்தத்தினுடைய வாங்கிக்கொண்டுஅவருக்கு வந்து பிறப்பிச்சு அவருக்கு வந்து 14 நாடு, 250கிராமம், அவங்க ஜனத்தொகை 37,000 ஜனத்தொகை ஓடிட்டுருக்கிறது.

# iii. பாடியோர் குறித்து...

| பெயர் | வயது | கல்வி | பிறந்த இடம் | இடப் பெயர்ச்சிக் காரணம் | வாழும் ஊர், நாடு | பாடல் கற்ற வகை | இத்தொகுப்பில் பாடிய பாடல் எண்கள் |
|---|---|---|---|---|---|---|---|
|  சினுப்ப தங்கராஜ் | 45 | 8 | சீக்குப்பாறை | - | சீக்குப்பாறை வாழவந்தி | தோழர்கள் | 50 |
|  சினுப்ப தேவராஜன் | 55 | - | பெருங்கிராய்ப் பட்டி | - | பெருங்கிராய்ப் பட்டி வாழவந்தி | மூத்தவர் | 30, 33, 34, 54, 55 |
|  சினுப்ப சீனிவாசன் | 45 | - | பெருங்கிராய்ப் பட்டி | - | பெருங்கிராய்ப் பட்டி வாழவந்தி | மூத்தவர் | 35,51 |

| பெயர் | வயது | கல்வி | பிறந்த இடம் | இடப் பெயர்ச்சிக் காரணம் | வாழும் ஊர், நாடு | பாடல் கற்ற வகை | இத்தொகுப்பில் பாடிய பாடல் எண்கள் |
|---|---|---|---|---|---|---|---|
|  சால கொங்கன் | 70 | - | சித்தூரணிப்பட்டி | - | சித்தூரணிப்பட்டி வாழவந்தி | மூத்தவர், உறவினர் | 13, 16, 32, 36 |
|  கோப்பய செல்லப்பன் | 60 | - | சித்தூரணிப்பட்டி | - | சித்தூரணிப்பட்டி வாழவந்தி | மூத்தவர் | 13, 16 |
|  சால செல்லத்துரை | 30 | - | சித்தூரணிப் பட்டி | - | சித்தூரணிப் பட்டி வாழவந்தி | மூத்தவர் | 36 |

| பெயர் | வயது | கல்வி | பிறந்த இடம் | இடப் பெயர்ச்சிக் காரணம் | வாழும் ஊர், நாடு | பாடல் கற்ற வகை | இத்தொகுப்பில் பாடிய பாடல் எண்கள் |
|---|---|---|---|---|---|---|---|
|  சினுப்ப சின்னமுத்து | 65 | - | பெருங்கிராய்ப் பட்டி | - | பெருங்கிராய்ப் பட்டி வாழவந்தி | மூத்தவர் | 55 |
|  கோப்பய ராஜு | 42 | - | ஏ. தண்ணி மாத்திப் பட்டி | - | ஏ. தண்ணி மாத்திப் பட்டி வாழவந்தி | மூத்தவர் | 36 |
|  சடக்க குழந்தையம்மாள் | 75 | - | ஏ. தண்ணிமாத்திப் பட்டி | - | ஏ. தண்ணிமாத்திப் பட்டி வாழவந்தி | மூத்தவர் மூலம் | 17, 18, 28, 38, 99, 104 |

| பெயர் | வயது | கல்வி | பிறந்த இடம் | இடப் பெயர்ச்சிக் காரணம் | வாழும் ஊர், நாடு | பாடல் கற்ற வகை | இத்தொகுப்பில் பாடிய பாடல் எண்கள் |
|---|---|---|---|---|---|---|---|
|  கல்தொட்டி குப்பாயி | 42 | - | கடம்பூர் சத்திய மங்கலம் | திருமணம் | சித்தூரணிப் பட்டி வாழவந்தி | மூத்தவர், உறவினர் | 9, 123, 124, 137, 149, 150-152, 155, 178, 207 |
|  பாலசுப்பிரமணியம் | 26 | - | எம்.ஜி.ஆர். நகர் | | எம்.ஜி.ஆர். நகர் வாழவந்தி | தோழர்கள் | 225 |
|  பிரபு | 21 | - | எம்.ஜி.ஆர். நகர் | - | எம்.ஜி.ஆர். நகர் வாழவந்தி | தோழர்கள் | 225 |

| பெயர் | வயது | கல்வி | பிறந்த இடம் | இடப் பெயர்ச்சிக் காரணம் | வாழும் ஊர், நாடு | பாடல் கற்ற வகை | இத்தொகுப்பில் பாடிய பாடல் எண்கள் |
|---|---|---|---|---|---|---|---|
|  இளங்குமரன் | 36 | - | எம்.ஜி.ஆர். நகர் | - | எம்.ஜி.ஆர். நகர் வாழவந்தி | மூத்தவர், தோழர்கள் | 224, 225 |
|  மாணிக்கம் | 35 | - | எம்.ஜி.ஆர். நகர் | - | எம்.ஜி.ஆர். நகர் வாழவந்தி | மூத்தவர், தோழர்கள் | 224, 225 |
|  துறையூர் சின்னம்மா | 85 | - | துறையூர் | - | எம்.ஜி.ஆர். நகர் வாழவந்தி | தகப்பனார், தோழர்கள் | 7, 41-43, 65, 69, 70, 74, 75, 79, 128, 133-135, 138, 148, 158, 214 |

| பெயர் | வயது | கல்வி | பிறந்த இடம் | இடப் பெயர்ச்சிக் காரணம் | வாழும் ஊர், நாடு | பாடல் கற்ற வகை | இத்தொகுப்பில் பாடிய பாடல் எண்கள் |
|---|---|---|---|---|---|---|---|
|  தனபாக்கியம் | 47 | - | எம்.ஜி.ஆர். நகர் | - | எம்.ஜி.ஆர். நகர் வாழவந்தி | தாய், தோழர்கள் | 65, 76-78, 160, 176, 177, 181-183, 196-198 |
|  கன்னடைய சின்னக்காளி | 75 | - | கூச்சக்கிராய்பட்டி | - | கூச்சக்கிராய்ப் பட்டி, வாழவந்தி | தோழர்கள் | 12, 15, 45, 47 |
|  கன்னடைய காளிமுத்து | 59 | - | கரையங்காடு | - | கரையங்காடு வாழவந்தி | தோழர்கள் | 44 |

| பெயர் | வயது | கல்வி | பிறந்த இடம் | இடப் பெயர்ச்சிக் காரணம் | வாழும் ஊர், நாடு | பாடல் கற்ற வகை | இத்தொகுப்பில் பாடிய பாடல் எண்கள் |
|---|---|---|---|---|---|---|---|
|  சொல்ல திருமன் | 60 | - | மாதா கோயில் | - | மாதா கோயில் திண்ணனூர் | மூத்தவர் | 45 |
|  அம்பல சிரங்கன் | 57 | - | சேத்துப்பலா | - | சேத்துப்பலா திண்ணனூர் | மூத்தவர் | பி.இ. நாட்டுக்கட்டு-2 |
|  தேவண்ட பார்வதி | 25 | 3 | விரகனூர் | திருமணம் | வாசலூர் திண்ணனூர் | தோழியர் | 132 |

| பெயர் | வயது | கல்வி | பிறந்த இடம் | இடப் பெயர்ச்சிக் காரணம் | வாழும் ஊர், நாடு | பாடல் கற்ற வகை | இத்தொகுப்பில் பாடிய பாடல் எண்கள் |
|---|---|---|---|---|---|---|---|
|  சொல்ல செல்லம்மாள் | 50 | - | சோளக்கிராய் | திருமணம் | பள்ளக்குழி சேலூர் | மூத்தவர் தோழியர் | 4, 126 |
|  கல்தொட்டி செல்லம்மாள் | 45 | 1 | வாசலூர் | திருமணம் | பள்ளக்குழி சேலூர் | மூத்தவர் தோழியர் | 63, 117, 118, 129, 139 |
|  குட்டியாண்டி சின்னக்குட்டி | 50 | - | மேக்கலாந்துறை | - | மேக்கலாந்துறை சேலூர் | மூத்தவர் | 73, பி.இ. நாட்டுக்கட்டு-1 |

| பெயர் | வயது | கல்வி | பிறந்த இடம் | இடப் பெயர்ச்சிக் காரணம் | வாழும் ஊர், நாடு | பாடல் கற்ற வகை | இத்தொகுப்பில் பாடிய பாடல் எண்கள் |
|---|---|---|---|---|---|---|---|
|  பச்சன கீதா | 20 | - | மேக்கலாந்துறை | - | மேக்கலாந்துறை சேலூர் | தோழியர் | 112-114 |
|  பச்சன ஜெயம்மாள் | 26 | - | மேக்கலாந்துறை | - | மேக்கலாந்துறை சேலூர் | தோழியர் | 97 |
|  சக்கரவர்த்தி தனபாக்கியம் | 25 | - | மேக்கலாந்துறை | - | மேக்கலாந்துறை சேலூர் | தோழியர் | 6, 112-114 |

| பெயர் | வயது | கல்வி | பிறந்த இடம் | இடப் பெயர்ச்சிக் காரணம் | வாழும் ஊர், நாடு | பாடல் கற்ற வகை | இத்தொகுப்பில் பாடிய பாடல் எண்கள் |
|---|---|---|---|---|---|---|---|
|  வாலியாண்டி செந்தாமரைச்செல்வி | 23 | - | மேக்கலாந்துறை | - | மேக்கலாந்துறை சேலூர் | தோழியர் | 97, 108-111 |
|  கணேசன் | 42 | 5 | விரகனூர் | - | சேலூர் கஸ்பா சேலூர் | மூத்தவர் | 31 |
|  செல்லம்மாள் | 60 | - | சேலூர் கஸ்பா | - | சேலூர் கஸ்பா சேலூர் | மூத்தவர் | 37,39, 116 |

| பெயர் | வயது | கல்வி | பிறந்த இடம் | இடப் பெயர்ச்சிக் காரணம் | வாழும் ஊர், நாடு | பாடல் கற்ற வகை | இத்தொகுப்பில் பாடிய பாடல் எண்கள் |
|---|---|---|---|---|---|---|---|
|  சரஸ்வதி | 47 | - | கோடங்கிப்பட்டி எருமைப்பட்டி | திருமணம் | விரகனூர் சேலூர் | மூத்தவர் | 47, 64, 119, 121, 127 |
|  சம்பூரணம் | 27 | - | முசிறி | திருமணம் | விரகனூர் சேலூர் | தாலாட்டுப் பாடல் புத்தகம் | 120 |
|  அரசாயி | 55 | - | சேலூர் | திருமணம் | விரகனூர் சேலூர் | மூத்தவர் | 1,40,122 |

| பெயர் | வயது | கல்வி | பிறந்த இடம் | இடப் பெயர்ச்சிக் காரணம் | வாழும் ஊர், நாடு | பாடல் கற்ற வகை | இத்தொகுப்பில் பாடிய பாடல் எண்கள் |
|---|---|---|---|---|---|---|---|
|  ஜெகந்நாதன் | 20 | - | விரகனூர் | - | விரகனூர் சேலூர் | மூத்தவர் | 26 |
|  பழனியம்மாள் | 40 | - | வாழவந்தி | திருமணம் | விரகனூர் சேலூர் | தோழியர் | 8, 27, 125, 157, 161-175, 184-195, 201-203, 205, 206, 210-213, 215-217, 219-223 |
|  குட்டியாண்டி சிவகாமி | 40 | 5 | நெடுங்காப்புளி | திருமணம் | வெண்டலப் பாடி சேலூர் | மூத்தவர் | 3,5 |

| பெயர் | வயது | கல்வி | பிறந்த இடம் | இடப் பெயர்ச்சிக் காரணம் | வாழும் ஊர், நாடு | பாடல் கற்ற வகை | இத்தொகுப்பில் பாடிய பாடல் எண்கள் |
|---|---|---|---|---|---|---|---|
|  சக்கன சின்னம்மாள் | 34 | - | அரிப்பலாப்பட்டி | - | அரிப்பலாப்பட்டி தேவானூர் | மூத்தவர் தோழர்கள் | 98 |
|  சக்கன பிடாரி அம்மாள் | 30 | - | அரிப்பலாப்பட்டி | - | அரிப்பலாப்பட்டி தேவானூர் | மூத்தவர் தோழர்கள் | 130, 131 |
|  சக்கன திருமாக்கவுண்டர் | 70 | - | அரிப்பலாப்பட்டி | - | அரிப்பலாப்பட்டி தேவானூர் | தோழர்கள் | 23 |

| பெயர் | வயது | கல்வி | பிறந்த இடம் | இடப் பெயர்ச்சிக் காரணம் | வாழும் ஊர், நாடு | பாடல் கற்ற வகை | இத்தொகுப்பில் பாடிய பாடல் எண்கள் |
|---|---|---|---|---|---|---|---|
|  சில்லாலி மூலிகை செல்வராஜ் | 37 | 6 | குளவங்கிராய் | - | அ. கோயில் வளப்பூர் | மூத்தவர் | 20, 29, 48, 53, 56-58, 60, 71, 80 |
|  கொளப்பாண்டி மலையசாமிக்கவுண்டர் | 39 | 5 | பெரியகோவிலூர் | - | பெரியகோவிலூர் வளப்பூர் | கரும்பூர் பொன்னுசாமி | 20, 21, 25, 29, 49, 53, 56, 58, 61, 62, 71, 80 |
|  சக்கரவர்த்தி ஈஸ்வரி | 14 | 8 | பெரிய கோவிலூர் | - | பெரியகோவிலூர் வளப்பூர் | மூத்தவர் | 82, 88, 93 |

| பெயர் | வயது | கல்வி | பிறந்த இடம் | இடப் பெயர்ச்சிக் காரணம் | வாழும் ஊர், நாடு | பாடல் கற்ற வகை | இத்தொகுப்பில் பாடிய பாடல் எண்கள் |
|---|---|---|---|---|---|---|---|
|  கொறுக புஷ்பா | 23 | 6 | விளாரம் | திருமணம் | பெரிய கோவிலூர் வளப்பூர் | மூத்தவர் | 66, 94, 95, 107 |
|  சைய செல்வம் | 29 | 8 | பெரிய கோவிலூர் | - | பெரிய கோவிலூர் வளப்பூர் | நாடகப் பயிற்சி | 67, 80 |
|  சுரடய சின்னசாமி | 28 | 1 | பெரிய கோவிலூர் | - | பெரிய கோவிலூர் வளப்பூர் | தோழர்கள் | 67, 80 |

| பெயர் | வயது | கல்வி | பிறந்த இடம் | இடப் பெயர்ச்சிக் காரணம் | வாழும் ஊர், நாடு | பாடல் கற்ற வகை | இத்தொகுப்பில் பாடிய பாடல் எண்கள் |
|---|---|---|---|---|---|---|---|
|  சுரடய லலிதா | 16 | 9 | பெரிய கோவிலூர் | - | பெரிய கோவிலூர் வளப்பூர் | மூத்தவர் | 83, 84. 88, 89, 93 |
|  சூரியாண்டி சின்னமணி | 17 | 6 | பெரியகோவிலூர் | - | பெரியகோவிலூர் வளப்பூர் | தோழியர் | 19, 68, 82, 83, 90, 91 |
|  சூரியாண்டி இளையான் | 26 | 9 | பெரியகோவிலூர் | - | பெரிய கோவிலூர் வளப்பூர் | தோழர்கள் | 24, 59, 80 |

| பெயர் | வயது | கல்வி | பிறந்த இடம் | இடப் பெயர்ச்சிக் காரணம் | வாழும் ஊர், நாடு | பாடல் கற்ற வகை | இத்தொகுப்பில் பாடிய பாடல் எண்கள் |
|---|---|---|---|---|---|---|---|
|  வாலியாண்டி சகுந்தலா | 20 | 3 | விளாரம் | திருமணம் | பெரியகோவிலூர் வளப்பூர் | தோழர்கள் | 94, 95, 101, 102, 103, 105, 106 |
|  கடத்த முத்துசாமி கவுண்டர் | 65 | - | நெல்லுக்குழி | - | நெல்லுக்குழி வளப்பூர் | நாடகப் பயிற்சி | 11 |
|  கடத்த ஜெயலலிதா | 12 | 7 | ஊர்ப்புறம் | - | ஊர்ப்புறம் வளப்பூர் | தோழியர் | 92 |

| பெயர் | வயது | கல்வி | பிறந்த இடம் | இடப் பெயர்ச்சிக் காரணம் | வாழும் ஊர், நாடு | பாடல் கற்ற வகை | இத்தொகுப்பில் பாடிய பாடல் எண்கள் |
|---|---|---|---|---|---|---|---|
|  கடத்த கீதா | 11 | 6 | ஊர்ப்புறம் | - | ஊர்ப்புறம் வளப்பூர் | தோழியர் | 92 |
|  கடத்த மைதிலி | 6 | 1 | ஊர்ப்புறம் | - | ஊர்ப்புறம் வளப்பூர் | தோழியர் | 92 |
|  சுரடைய பாலைய்யா | 52 | 5 | குட்டுக்கிராய் | - | குட்டுக்கிராய் வளப்பூர் | மாத்திரி வளவு சில்லாலி துரைசாமி | 46, 52 |

| பெயர் | வயது | கல்வி | பிறந்த இடம் | இடப் பெயர்ச்சிக் காரணம் | வாழும் ஊர், நாடு | பாடல் கற்ற வகை | இத்தொகுப்பில் பாடிய பாடல் எண்கள் |
|---|---|---|---|---|---|---|---|
|  சோத்த மலைய கவுண்டர் | 60 | - | பனஞ்சாட்டுப் பட்டி | - | பனஞ்சாட்டுப் பட்டி, அரியூர் | தோழர்கள் | 22 |
|  சோத்தசின்னக் குழந்தையன் | 30 | - | பனஞ்சாட்டுப் பட்டி | - | பனஞ்சாட்டுப் பட்டி அரியூர் | தோழர்கள் | 140-147 |
|  சோத்த சின்ன வெள்ளையன் | 30 | - | பனஞ்சாட்டுப் பட்டி | - | பனஞ்சாட்டுப் பட்டி அரியூர் | தோழர்கள் | 140-147 |

| பெயர் | வயது | கல்வி | பிறந்த இடம் | இடப் பெயர்ச்சிக் காரணம் | வாழும் ஊர், நாடு | பாடல் கற்ற வகை | இத்தொகுப்பில் பாடிய பாடல் எண்கள் |
|---|---|---|---|---|---|---|---|
|  தெத்துப்பிள்ளை தங்கம்மாள் | 55 | - | மேல்கலிங்கம் | திருமணம் | சின்னக் கவரப்பட்டி அரியூர் | தோழியர் | 53, 154, 156, 159, 179, 180, 199, 200, 208, 209, 218 |
|  கல்தொட்டி அறப்பளி கவுண்டர் | 80 | - | நத்துக்குழி | - | நத்துக்குழி குண்டூர் | மூத்தவர் | 10, 14 |
|  வெள்ளண்ட பிடாரன் | 65 | - | நத்துக்குழி | - | நத்துக்குழி குண்டூர் | மூத்தவர் | 14,49,62,72,81 |

| பெயர் | வயது | கல்வி | பிறந்த இடம் | இடப் பெயர்ச்சிக் காரணம் | வாழும் ஊர், நாடு | பாடல் கற்ற வகை | இத்தொகுப்பில் பாடிய பாடல் எண்கள் |
|---|---|---|---|---|---|---|---|
|  கல்தொட்டி தங்கராஜ் | 29 | | நத்துக்குழி | - | நத்துக்குழி குண்டூர் | தோழர்கள் | 72 |
|  தோட்டப்ப பொன்னுசாமி | 48 | | நத்துக்குழி | - | நத்துக்குழி குண்டூர் | தோழர்கள் | 10 |
|  வெள்ளாண்ட கண்ணகி | 12 | 6 | திருப்புளி | - | நத்துக்குழி குண்டூர் | மூத்தவர் | 87, 96 |

| பெயர் | வயது | கல்வி | பிறந்த இடம் | இடப் பெயர்ச்சிக் காரணம் | வாழும் ஊர், நாடு | பாடல் கற்ற வகை | இத்தொகுப்பில் பாடிய பாடல் எண்கள் |
|---|---|---|---|---|---|---|---|
|  மண்ணக்கொண்ட புவனேஸ்வரி | 10 | 5 | நத்துக்குழி | - | நத்துக்குழி குண்டூர் | மூத்தவர் | 87 |
|  பருத்திக்குடிய சந்திரா | 15 | 5 | நத்துக்குழி | - | நத்துக்குழி குண்டூர் | மூத்தவர் | 87 |
|  பருத்திக்குடிய கலைமணி | 14 | - | நத்துக்குழி | - | நத்துக்குழி குண்டூர் | மூத்தவர் | 87 |

| பெயர் | வயது | கல்வி | பிறந்த இடம் | இடப் பெயர்ச்சிக் காரணம் | வாழும் ஊர், நாடு | பாடல் கற்ற வகை | இத்தொகுப்பில் பாடிய பாடல் எண்கள் |
|---|---|---|---|---|---|---|---|
|  வெள்ளண்ட சாந்தி | 16 | 5 | நத்துக்குழி | - | நத்துக்குழி குண்டூர் | மூத்தவர் | 85-87 |
|  தூண்டிய சந்திரன் | 22 | | தேனூர் | - | தேனூர் குண்டூர் | தோழர்கள் | 49, 61,62 |
|  தெல்லிய வெள்ளையம்மாள் | 70 | | ஆலேரிப்பட்டி | - | ஆலேரிப்பட்டி ஆலத்தூர் | மூத்தவர் | 115, 136 |
|  சரஸ்வதி | 27 | - | நரியன்காடு | - | நரியங்காடு சித்தூர் | தோழியர் | 2, 100, 130-132 |

# iv. பாடல் திரட்டுக் குறித்த தகவல்கள்

| திரட்டியோர் | திரட்டிய பாடல் எண்கள் |
|---|---|
| முனைவர் லி. வேதவல்லி | 7,8,11 - 13, 15 -18, 30-36, 38,41-43, 45-47, 51,52, 54, 65, 68 - 70, 74 - 79, 82 - 84, 88 -91, 93, 99, 104, 125, 128, 133 - 135, 138, 141, 148, 153, 154, 156 - 177, 179 - 206, 208 |
| எ.தே. இஸ்ரேல் ஆலிவர் கிங் | 1 - 6, 9, 10, 14, 19 - 29, 37, 39, 40, 44, 48-50, 53, 55 - 64, 66, 67, 71- 73, 80, 81, 85 -87, 92, 94 -98, 100 -103, 105 - 124, 126, 127, 129 - 132, 136, 137, 139, 149 - 152, 155, 178, 207 |

| நாடு | திரட்டிய ஊர் | பாடல் எண்கள் |
|---|---|---|
| I வாழவந்தி நாடு | 1. செம்மேடு | 50 |
| | 2. எம்.ஜி.ஆர். நகர் | 6, 7, 41 - 43, 65, 69, 70, 74, 76 - 79, 128, 133, 134, 138, 148, 158, 160, 176, 177, 181 - 183, 196 - 198, 204, 214, 224, 225 |
| | 3. பெருங்கிராய்ப்பட்டி | 30, 33 - 35, 51, 54, 55 |
| | 4. ஏ. தண்ணிமாத்திப்பட்டி | 17, 18, 28, 38, 99, 104, 135 |
| | 5. சித்தூரணிப்பட்டி | 9, 13, 16, 32, 36, 123 - 125, 137, 149 - 152, 155, 178, 207 |
| | 6. கூச்சக்கிராய் | 12, 15, 45, 47 |
| | 7. கரையங்காடு | 44 |
| II திண்ணனூர்நாடு | 8. சேத்துப்பலாப்பட்டி | பின்னிணைப்பு - 2 |
| III சேலூர் நாடு | 9. பள்ளக்குழி | 4, 63, 64, 117, 118, 126, 129, 139 |
| | 10. மேக்கலாந்துறை | 37, 41, 73, 97, 108 - 114, 116, பின்னிணைப்பு -1 |
| | 11. சேலூர்க்கஸ்பா | 31 |
| | 12. விரகனூர்ப்பட்டி | 1, 8, 26, 27, 40, 119, 120 - 122, 127, 157, 161 - 175, 184 - 195. 201 - 203, 205, 206, 210 - 213, 215 - 217, 219, 220 - 223 |
| IV தேவானூர்நாடு | 13. அட்டையாத்துச்சோலை | 23 |
| V வளப்பூர் நாடு | 14. பெரியகோவிலூர் | 19 - 22, 24, 25, 29, 48, 53, 56 - 62, 66 - 68, 71, 80, 82 - 84, 88, 90, 91, 101 - 103, 105 - 107 |
| | 15. ஊர்ப்புறம் | 92 - 95 |
| | 16. குட்டுக்கிராய்ப்பட்டி | 46, 52 |
| | 17. நெல்லுக்குழி | 11 |
| VI அரியூர் நாடு | 18. மேல்கலிங்கம் | 153, 154, 156, 199, 179, 180, 199, 200, 208, 209, 218 |
| | 19. பனஞ்சாட்டுப்பட்டி | 22, 140 - 141 |
| VII குண்டூர் நாடு | 20. நத்துக்குழிப்பட்டி | 10, 14, 49, 72, 81, 85 - 87, 96 |
| VIII ஆலத்தூர் நாடு | 21. ஆலேரிப்பட்டி | 115, 136 |
| | 22. சென்னை-காட்டுப்பாக்கம் | 2, 3, 5, 98, 100, 130, 131, 132 |